தமிழ் ஒருமொழி அகராதிகளின் அமைப்பு மாற்றமும் வளர்ச்சியும்

இரா. திருநாவுக்கரசு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

தமிழ் ஒருமொழி அகராதிகளின் அமைப்பு மாற்றமும் வளர்ச்சியும்

முனைவர் இரா. திருநாவுக்கரசு
உதவிப் பேராசிரியர் (பணி நிறைவு)
அகராதியியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-451-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 408

நூல் : தமிழ் ஒருமொழி அகராதிகளின் அமைப்பு மாற்றமும் வளர்ச்சியும்

ஆசிரியர் : முனைவர் இரா. திருநாவுக்கரசு

மொழி : தமிழ்

பொருள் : அகராதி

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2046, ஆவணி (செப்டம்பர் 2015)

பக்கம் : 184 + 8

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1000

விலை : உரூ. 190.00

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முனைவர் க. பாஸ்கரன் தமிழ்ப் பல்கலைக்கழகம்
துணைவேந்தர் தஞ்சாவூர் - 613 010

அணிந்துரை

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியம். தமிழ் மொழியின் சிறப்பை, தொன்மையை ஆய்வதும், அதன் இலக்கிய, இலக்கணச் செழுமையை வெளிக்கொணரவும் பயன்படுவன அகராதி கள், நிகண்டுகள் எனும் 'பா' வடிவிலான சொற்பொருள் காணும் வழக்கம், இன்று பல்வேறு அகராதிகளைக் கொண்டு எளிமையாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் வளர்ந் துள்ளது. ஐரோப்பியர்களின் வருகையால் தமிழில் அகராதி கள் தோற்றம் பெற்றன என்று பரவலாகப் பேசப்படினும் தொல்காப்பிய இடையியலும், உரியியலும் சொற்பொருள் கூறும் அமைப்பிலேயே உள்ளதை உணர முடியும். தொல் காப்பியத்தை அடுத்து நிகண்டுகள் தோன்றி தமிழ்ச் சொற் பொருளை வளப்படுத்தின. எனவே, சொற்களுக்கு நேரடி யாகப் பொருள் கொள்ளும் அமைப்பை ஐரோப்பியர்கள் தோற்றுவித்தனர் என்பதைத் தெளியலாம்.

முன்னைப் பழஞ்சொல்லை இன்றைய நவீன உலகம் புரிந்துகொள்ளத்தக்க வடிவில் கலைக்களஞ்சியங்கள், பல் வேறுபட்ட அகராதிகள் ஆகியவற்றை உருவாக்குவது மிகப் பெரும் தேவையாக உள்ளது. அது மட்டுமல்லாமல் அவ் வாறு காலந்தோறும் வெளிவரும் அகராதிகளை ஆய்ந்து அவற்றின் விடுபாடுகளை வெளிக்கொணர்வதும், அகராதி களின் அமைப்பு, மாற்றம், வளர்ச்சி முதலியவற்றை அவ்வப் போது பதிவு செய்வதும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வித் திடும். அவ்வகையில் முனைவர் இரா. திருநாவுக்கரசு

அவர்கள் உருவாக்கியுள்ள ‘தமிழ் ஒருமொழி அகராதிகளின் அமைப்பு மாற்றமும் வளர்ச்சியும்’ என்னும் நூல் பாராட்டிற் குரியது.

மொழியும் அகராதியும் எனும் இயல் அகராதிகளைப் பற்றிச் சுருக்கமானதாகவும் தெளிவாகவும் விளக்குவதாக அமைந்துள்ளது. இவ்வியல் அகராதி தொடர்பாக ஆய் வோர்க்கும், இத்துறையில் அறிமுக நிலையில் உள்ளவர் களுக்கும் மிகச்சிறந்த கையேடாக இருக்கும் என்பதில் ஐய மில்லை. தொடர்ந்து அகராதிகளின் அமைப்பில் பல்வேறு பட்ட நிலைகளை நூலாசிரியர் தெளிவாகச் சுட்டுகிறார். அக ராதிகளின் இருவேறு அமைப்புகளை விளக்கித் தற்காலத்தில் பெரிதும் பயன்படுத்தப்படும் அமைப்பு இரண்டைச் சான்று களோடு தந்திருப்பது சிறப்பிற்குரியதாம். மேலும், அகராதி களில் காணப்படும் குறியீடுகள், வரைபடங்கள், அட்ட வணைகள் ஆகியவற்றின் பயன்பாட்டையும் இந்நூல் சிறப் பாக விளக்கியுள்ளது குறிக்கத்தக்கதாம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தரமான நூல் வெளி யீடுகளின் வரிசையில் முனைவர் இரா. திருநாவுக்கரசு அவர் களின் ‘தமிழ் ஒருமொழி அகராதிகளின் அமைப்பு மாற்றமும் வளர்ச்சியும்’ சிறப்பிடம் பெறும் என்பதில் ஐயமில்லை. இதற்கென இந்நூலாசிரியரைப் பாராட்டி மகிழ்கிறேன்.

ஆய்வாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பயன் பெறும் வகையில் அரும்பெரும் செய்திகளை உள்ளடக்கிய இந்நூலை தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு மகிழ்ச்சியுடன் வழங்குவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமையடை கிறது. இந்நூலை வாங்கிப் பயன்பெறுமாறு வேண்டு கிறேன்.

10.09.2015
தஞ்சாவூர்.

க.பாஸ்கரன்

முன்னுரை

மொழி காலந்தோறும் மாற்றமடைந்து வருகின்றது. எளிதாக மாற்றம் பெறும் மொழிக்கூறுகளில் சொற்றொகுதியும் (Vocabulary) ஒன்று. சொற்றொகுதியில் இடம்பெறும் சொற்களின் எண்ணிக்கையிலும் சொற்களின் பொருள்களிலுமே மாற்றங்கள் எளிதாக நிகழ்கின்றன. மொழி வளர்ச்சி அடைய அடையப் பழைய சொற்கள் வழக்கிழந்து, பல புதிய சொற்கள் தோன்றும். அல்லது பழைய சொற்கள் புதிய பொருள்களைப் பெறும். மாற்றம் பெற்று வரும் மொழியினைக் காத்து நிற்கும் கருவூலங்களாக விளங்குபவை நோக்கு நூல்களாகும். அவற்றினுள் அகராதிகள் முக்கிய இடம் பெறுகின்றன. அகராதிகள் மொழி வளர்ச்சியைப் பேணிக்காப்பது மட்டுமன்றி, மொழியின் வளர்ச்சிக்கும் பெருந்துணை செய்கின்றன. மொழிகளில் அகராதிகளின் தேவையானது இன்று பெரிதும் உணரப்பட்டு வருகின்றது.

அகராதிச் சொற்பொருள் மற்றும் அகராதித் தொகுப்புப் பற்றிய செய்திகளைத் தருவது அகராதியியலாகும். அகராதியியல் பல்வேறு துறைகளுடன் தொடர்புடையது. இது மொழியியல், சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், தத்துவவியல், உளவியல் போன்றவற்றுடன் தொடர்புடையது. மொழியியலின் தாக்கம் இத்துறையில் மிக அதிகம். எனவேதான் அகராதியியலைப் பயன்பாட்டு மொழியியலின் ஒரு கூறாகக் கருத வேண்டிய நிலையுள்ளது. மொழியியலின் பல்வேறு பிரிவுகளான ஒலியியல், ஒலியனியல், உருபனியல், பொருண்மையியல், சமுதாய மொழியியல், தொடரியல், உளவியல், மொழியியல், வரலாற்று மொழியியல், கணிப்பொறி மொழியியல் என்பன அகராதித் தயாரிப்பின் பல்வேறு படிநிலைகளுக்கு முக்கியமான பங்காற்றுகின்றன.

வட்டார வழக்குச் சொற்களைத் தெரிவு செய்வதிலும், பேச்சு வழக்குச் சொற்களைக் கண்டறிந்து விளக்கும்

நிலையிலும், ஒப்புருச் சொற்களையும், பலபொருள் சொற் களையும் பிரித்தறியும் பொழுதும் ஒலியியலும் ஒலியனிய லும் பயன்படுகின்றன. அகராதிச் சொற்களைத் தெரிவு செய்து அவற்றின் அடிப்படை வடிவத்தை முடிவு செய்வ திலும், இலக்கணச் சொற்களை விளக்குவதிலும் உருபனிய லும் தொடரியலும் மிகுந்த பங்காற்றுகின்றன. சொற் பொருளை முடிவு செய்து, பொருள்களை வரிசைப்படுத்தும் நிலையிலும், ஒப்புருச் சொற்களின் பதிவமைப்பிலும் உள வியல் மொழியியல் முக்கிய பங்காற்றுகின்றது. சொற்களின் சொல் மூலங்களைக் கண்டறியும் நிலையில் வரலாற்று மொழியியலும் சமுதாய மொழியியலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாகப் பொருள் தரும் குறிப் புப் பொருள் சொற்களைத் தெரிந்து கொள்வதில் சமுதாய மொழியியல் தக்க இடத்தினைப் பெற்றுள்ளது. சொற்களைத் திரட்டும் பணியிலும் பின் அகராதித் தொகுப்பிலும் கணிப் பொறி மொழியியலின் பங்கு அளவிடற்கரியது. இதுகாறும் கண்டவற்றால் அகராதியியல் பயன்பாட்டு மொழியியலைச் சார்ந்த ஒரு துறை என்பதை நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய சிறப்பு மிக்க அகராதிகளால் தமிழ் மொழியும் வளர்ச்சியடைந்து வருவதை இன்று நம்மால் அறிய முடி கிறது.

அறிவியல் முறையிலான அகராதிப் பணிகள் தற் காலத்தில்தான் தமிழ்மொழியில் தொடக்கம்பெற்றன. தமி ழில் அகராதிகள்தான் காலத்தால் பிந்தினவே அன்றி அக ராதிப் பணிகள் அல்ல. தமிழில் தொல்காப்பியம் முதல் புதிய தமிழ் அகராதி வரையில் பல்வேறு நிலைகளில் அகராதிகள் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. தமிழில் 1959இல் வெளியான வையாபுரிப் பிள்ளையின் 'அகராதி நினைவுகள்' என்னும் நூலே அகராதியியலின் முதல் நூலாகும். எனினும் இந் நூலுக்கு அடிப்படையாக அமைந்தது வையாபுரிப் பிள்ளை யின் தலைமையில் தொகுக்கப்பெற்ற 'சென்னைப் பல் கலைக்கழகப் பேரகராதி' (Tamil Lexicon) பணியாகும். இவ்

வகராதியில் தமிழ் அகராதி வரலாறு குறித்த சிறந்ததொரு முன்னுரைப் பகுதி இடம் பெற்றுள்ளது. கி.பி. 1965இல் சுந்தர சண்முகனார் 'தமிழ் அகராதிக்கலை' என்னும் அரிய நூலினை வெளியிட்டார். தமிழில் அகராதிக்கலை என்னும் அரிய சொல்லை அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும். இந்நூலில் தமிழ் அகராதிகளின் வளர்ச்சியும் வரலாறும் கால வாரியாக விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பிய உரியியலின் அமைப்பு, நிகண்டுகளின் தோற்றம், அமைப்பு, வரலாறு ஆகியவை பற்றிய செய்திகள் இந்நூலில் விரிவாக இடம் பெற்றுள்ளன. எனினும் இந்நூலில் நிகண்டுகளுக்குக் கொடுத்துள்ள இடம் தமிழ் அகராதிகளுக்குக் கொடுக்கப்பட வில்லை என்றே கூறலாம். இதனையடுத்துக் கா. மீனாட்சி சுந்தரம் (1979) என்பவரின் ஆய்வேட்டின் ஒரு பகுதியில் ஐரோப்பியர்கள் தமிழ் அகராதியியலுக்குச் செய்த தொண்டு விரிவாக விளக்கப்பெற்றுள்ளது. வ. ஜெயதேவன் தமிழ் அக ராதியியலை முதன் முதலாக முனைவர் பட்ட ஆய்விற்குத் தெரிவு செய்தார். இவ்வாய்வேடு 1985இல் 'தமிழ் அகராதி யியல் வளர்ச்சி' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந் துள்ளது. அகராதியியல் ஆய்வு தொடர்பான சிறு பட்டியலும் இதில் இடம்பெற்றுள்ளது. அடுத்து, சூ. இன்னாசி சதுரகராதி யின் பதிப்புப் பற்றிய முனைவர் பட்ட ஆய்வினை மேற் கொண்டார். இவ்வாய்வேடும் 'சதுரகராதி ஆராய்ச்சி' என் னும் நூலாக வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து இரா. திரு நாவுக்கரசு என்பவர் அகராதியியல் தொடர்பாகத் 'தமிழ் அக ராதிகளில் சொற்பொருள் வளர்ச்சி' (1995) என்னும் தலைப் பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டார். இது தமிழ் அகராதிகளின் வளர்ச்சி மாற்றத்தினை விரிவாக விளக்கியுள்ளது.

அகராதியியல் தொடர்பான கட்டுரைகளும் பிற்காலத் தில் வெளிவரத் தொடங்கின. தா.வே. வீராசாமி கட்டுரைகள் பல அடங்கிய 'அகராதிக்கலை' என்னும் நூலை வெளியிட் டார். மேலும், க. பாலசுப்பிரமணியன், பா.ரா. சுப்பிரமணி

யன், பெ. மாதையன், எச். சித்திரபுத்திரன் போன்றோர் அகராதியியலிலும் சொற்பொருண்மையியலிலும் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். இவை மட்டுமின்றி அகராதியியலை உள்ளடக்கிய நிகண்டுகள் பற்றிய ஆய்வும், சொற்பொருண்மை பற்றிய ஆய்வும் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை பற்றிய அனைத்துச் செய்திகளையும் தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையில் இரா. திருநாவுக்கரசு வெளியிட்டுள்ள 'தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல்' என்னும் நூலின்வழி அறிந்து கொள்ளலாம்.

தொடக்கத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மட்டும் அகராதியியல் தொடர்பான தலைப்புகளில் ஆய்வாளர்கள் ஆய்வினை மேற்கொண்டனர். ஆனால், இன்று அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் அகராதியியல் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் தமிழ் அகராதியியலின் வளர்ச்சியினை அறிந்து கொள்ள முடியும். முன்னர்க் கூறியதுபோல் தமிழ் அகராதியியல் படிப்படியாக வளர்ந்து தற்போதுள்ள நிலையை எட்டியுள்ளது. இதுவரையில் வெளிவந்த நூல்கள் வரலாற்று நிலையிலான ஆய்வுக்கே முன்னுரிமை கொடுத்துள்ளன. தமிழ் அகராதிகளில் சொற்பொருளின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவேதான், ஒருமொழி அகராதிகளில் மேற்கொள்ளும் இவ்வாய்வு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் சிறப்பாகத் தமிழ் அகராதியியல் வளர்ச்சிக்கும் துணை நிற்கும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். அதனால்தான் இத்தலைப்புத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தொல்காப்பியமும் நிகண்டுகளும் சதுரகராதி முதல் புதிய தமிழ் அகராதி வரையிலான ஒருமொழி அகராதிகளும் தரவுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதல் பகுதியில் உலக மொழிகளில் அகராதியின் வளர்ச்சி வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் அகராதியின் தோற்றத்திற்குத் தொல்காப்பியமும் நிகண்டுகளும் எந்த வகையில் துணை நின்றன என்பது ஆராயப்பட்டுள்ளது. தமிழ் ஒரு மொழி அகராதிகளின் அமைப்பு மாற்றமும் காலமும் குறிப்பும் அடுத்த பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியானது சொற்பொருள் வளர்ச்சி நிலையைப் பற்றியதாக அமைந்துள்ளது. ஒருமொழி அகராதிகளில் அகராதிப் பதிவுகள் எவ்வாறு மாற்றமடைந்து வளர்ச்சியடைந்துள்ளன என்பதை விளக்குவதாக இவ்விறுதிப்பகுதி விளங்குகின்றது. முடிவுரையில் இவ்வாய்வு குறித்தான அனைத்து முடிவுகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள் துணைநூற்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையில் குறுங்கால ஆய்வுத் திட்டத்தில் ஆய்வு செய்ய அனுமதி அளித்த தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் **க. பாஸ்கரன்** அவர்களுக்கும் பதிவாளர் முனைவர் **சே. கணேஷ்ராம்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேடு சிறப்புற நடந்தேற வாய்ப்பளித்தும், ஆய்வுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கிய அகராதியியல் முன்னாள் துறைத்தலைவர் முனைவர் எச். சித்திரபுத்திரன் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஆய்வின்போது வேண்டிய உதவிகளை வழங்கிய அகராதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மா. பார்வதியம்மாள் அவர்களுக்கும் முனைவர் பட்ட

ஆய்வாளர் திரு ந. இரஞ்சன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு உதவிய தமிழ்ப் பல் கலைக்கழகப் பதிப்புத்துறை துணை இயக்குநர் முனைவர் **ஞா. பழனிவேலு** அவர்களுக்கும், பதிப்பகத்தில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் என் நன்றி என்றென்றும் உரியது.

இந்த ஆய்வு சிறப்புற நடைபெற ஒத்துழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

- இரா. திருநாவுக்கரசு

பொருளடக்கம்

1.	மொழியும் அகராதியும்	1
2.	தொல்காப்பியமும் நிகண்டும்	25
3.	அமைப்பு மாற்றம்	89
4.	சொற்பொருள் வளர்ச்சி	111
	முடிவுரை	165
	துணைநூற்பட்டியல்	

இயல்–1
மொழியும் அகராதியும்

உயிரினங்களின் தோற்றம் பரிணாம வளர்ச்சியால் உரு வானது. இருப்பினும் மொழியின் தோற்றமும் பரிணாம வளர்ச்சி யால் உண்டானதா? என்பது சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆரம்பகால மனிதன் முதலில் ஓசைகளைப் பயன்படுத்தியும் சைகைகளைப் பயன்படுத்தியும் தனது கருத்தைப் பரிமாற்றம் செய்து கொண்டான். சைகை, ஒலி, எழுத்து, சொல்... என்ற பரிணாமத்தினால் மொழி தோன்றியிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் எழுத்து என்பது சொல், தொடர் போன்றவை தோன்றிய பின்புதான் தோன்றியுள்ளது என்பதில் ஐயமில்லை. எனவே, பரிணாம வளர்ச்சிக் கோட்பாடானது மொழிக்குப் பொருந்தாது.

பண்டைக்கால மனிதன் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க ஆரம்பத்தில் ஒலிக்குறிப்புச் சொற்களையும் சைகையினையும் பயன்படுத்தினான். பின் ஓவியங்கள், படங்கள் வரைந்து தன்னு டைய கருத்தினை வெளிப்படுத்தினான். இறுதியில் சொல், தொடர் போன்றவை தோற்றம் பெற்றன. ஒலிகள் பல இணைந்த சொற்கள் பொருள் உணர்த்துகின்ற நிலையில் மொழி எனப்பட்டது. மனிதன் தன் உறையுள், உணவு ஆகியவற்றிக்காகப் பல்வேறு இடங்களில் குடியேறத் தொடங்கினான். இவ்வாறு ஒவ்வொரு பகுதியினரும் இனத்தவரும் வேறுவேறான சூழலில் மொழியைப் பேசினமையால் உலகில் பல மொழிகள் தோன்றலாயின.

பொருட்களை மட்டும் அறியும் அறிவு ஊமைக்கு உள்ளது. மொழி வளர்ச்சி இல்லாமையால் மேலும் அறிவை வளர்க்க வாய்ப்பில்லை. மக்கள் பேச்சுடன் நிற்காமல் எழுத்துமுறை கற்றுச்

சொற்களை மிகப் பயன்படுத்தத் தொடங்கிய பிறகே அறிவு விரைவாக வளரலாயிற்று. மொழியின் தோற்றம் மனிதனின் தோற்றத்தோடு இயைந்தது; இன்ன காலத்தில் தோன்றியது என்று ஆராய்வதற்கு எட்டாத தொன்மையுடையது. அதன் தொன்மை யோடு ஒப்பிட்டு நோக்கினால் எழுத்தின் தோற்றம் மிகப் பிந்தியது. நேற்றுத் தோன்றிய நாகரிகக் கருவியைப் போன்றது என்று மு.வரதராசன் மொழி குறித்துக் கூறியுள்ளார் (மொழி வரலாறு, ப. 320). உலகில் பல்வேறு பட்ட மொழிகள் தோன்றியுள்ளன. எனினும் செம்மொழி என்னும் மதிப்பைப் பெற்ற மொழிகள் சில உள்ளன. கிரேக்கம், இலத்தீன், வடமொழி போன்றவை செம்மொழி என்னும் மதிப்பைப் பெற்றாலும் இன்றுவரை செம்மொழி என்னும் மதிப்பைப் பெற்று இளமையோடு இருக்கும் மொழி எது? என்றால் தமிழைத் தவிர வேறில்லை எனலாம்.

மொழியின் இன்றியமையாத அடிப்படைக் கூறு சொல்லா கும். மொழியியல் அடிப்படையில் கூறவேண்டுமானால், ஒரு மொழியில் பொருள் தரக்கூடிய மிகச் சிறியதான கூறு உருபு எனப்படும். தமிழில் எல்லாச் சொற்களுக்கும் பொருள் உண்டு. பொருள் தரவில்லை என்றால் அதற்குச் சொல் என்று பெயரில்லை. சொல்லும் பொருளும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் எனலாம். ஒரு நாட்டின் வளர்ச்சியானது அந்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதைப்போலவே, ஒரு மொழியின் வளர்ச்சியும் அம்மொழியைப் பேசுகின்ற மக்களின் வாழ்க்கை, நாகரிகம், சொல்லாக்கம், நூலாக்கம் என்பனவற்றின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைகின்றது.

மொழி காலந்தோறும் வளர்ந்து வருவதால் அதன் அகம் மற்றும் புற அமைப்புகளில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. எளிதில் மாறும் மொழி அமைப்பில் சொற்றொகுதியும் ஒன்று. இது இரண்டு நிலைகளில் வளர்ச்சி அடைகின்றது. 1. உயர்நிலை வளர்ச்சி *(Vertical Growth)*, 2. இடைநிலை வளர்ச்சி *(Horizontal Growth)*. உயர்நிலை வளர்ச்சியில் சொற்களின் எண்ணிக்கையில் பெருக்கம் ஏற்பட ஏற்பட, கிடைநிலையில் பொருட்களின் தன்மையிலும்

பல்வேறு மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்பு உண்டாகிறது. சொற்களின் பெருக்கமும் பொருட்களின் விரிவும் ஒரு வரன்முறைக்கு உட்பட்டவையல்ல என்பதால் அவற்றைத் தொகுத்துப் பாதுகாக்கும் பணி அறிஞர்களுக்குரியதானது. முதலில் இப்பணி உலகில் யாரெல்லாம் தொடங்கினார்கள்? தமிழுக்கு இப்பணியை யார் முதலில் செய்தார்? என்பன போன்ற பல வினாக்களுக்கும் விடை காண்பதே இவண் நோக்கம்.

ஐரோப்பிய மொழிகளில் அகராதி வளர்ச்சி

ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு மொழிகள் வழங்கி வருகின்றன. எனினும் அவற்றுள் பழமை வாய்ந்த மொழிகளாகக் கருதப்படுபவை இலத்தீன், கிரேக்கம் என்பனவாகும். ஐரோப்பிய நாடுகளில் சொற்பொருள் கூறும் பணி இலத்தீன் மொழியில்தான் முதன் முதலில் தோன்றியது எனலாம். பழங்காலத்தில் கிரேக்கம், உரோம் முதலிய பகுதிகளில் ஆவணங்கள் சுவடிகளில் படியெடுக்கப் பட்டன. படிப்பவர்களும், படியெடுப்பவர்களும் சுவடிகளின் ஓரங்களிலும், வரிகளுக்கு இடையிலும் (Inter Linear Speace) அரிய சொற்களுக்குரிய பொருளை எளிய சொற்களால் குறிக்கத் தொடங்கினர். இந்தப் பழக்கம் விரிவடைந்து சொற்பொருளின் அளவு பெருக்கமடையத் தொடங்கியது. ஓரங்களிலும் வரிகளின் இடையிலும் எழுதப்பட்ட இம்முறை, பல்வேறு தொகுப்புப் பணிகளின் வழி அகராதிகள் தோன்றி வளர்ச்சி அடைந்திட அடிகோலியது என்கிறார் வ. ஜெயதேவன் (1977:99).

இலத்தீன் மொழி வழக்கிழக்க, பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் போன்ற மொழிகளால் இலத்தீன் சொற்களுக்குப் பொருள் கூறப்படும் நிலை ஏற்பட்டது. இவ்வகையான சொற்பொருள் விளக்கத்தில் சிறுசிறு சொற்றொகுதிகள் தோன்றின. இவற்றில் அகரநிரல் பின்பற்றப்படவில்லை. கி.மு. 7ஆம் நூற்றாண்டில் மத்திய மெசபடோமியாவில் தோன்றிய ‘அக்காடியன்’ (Akkadian) சொற்றொகுதிதான் உலகில் தோன்றிய முதல் சொற்றொகுதியாகும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவராகக் கருதப்படும் ‘அரிஸ்டோ பேன்சு’ (Aristo Phanes) என்பவரே முதல் அகராதிக்

கலைஞர் எனப் போற்றப்படுகின்றார் என வ. ஜெயதேவன் கூறுகின்றார் (1977:100). கி.பி. முதல் நூற்றாண்டிற்குப் பிறகு 'பாம்பிளஸ்' மற்றும் பல அறிஞர்களால் தொகுக்கப்பட்ட சொற்றொகுதிகள் உருவாயின. எனினும் அப்போலியன்சு என்பவரின் 'ஹோமாரிக் கிளாசரி' எனும் நூலே முதல் அகராதியாகும் தகுதியைப் பெற்றது. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் 'அட்டிசிஸ்ட்' (Atticists) என்ற குழுவினரால் தொகுக்கப்பட்ட சொற்றொகுதி சிறப்பு வாய்ந்திருந்தது (Encyclopaedia Britannica, Vol. 5:714-715). அதே நூற்றாண்டைச் சேர்ந்த ஜுலியஸ் போலக்சு என்பவர் இலத்தீன் முகட்டுறைப் பெயர்களைத் (Attic Words) தொகுத்து வெளியிட்டார். கி.பி. 5ஆம் நூற்றாண்டில் 'ஹைசிசஸ்' (Heisychus) என்பவரால் சொற்றொகுதி ஒன்று தொகுக்கப்பட்டது. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் இலத்தீன் ஆங்கில 'கோர்பஸ் கிளாஸரி' ஒன்று தொகுக்கப்பட்டது. இதுவே ஆங்கிலத்தில் மிகத் தொன்மையாகக் கருதப்படும் இருமொழி அகராதியாகும் (Encyclopaedia Britannica,Vol.5:715).

கி.பி. 1225இல் ஜான் கார்லண்டு என்பவர் இலத்தீன் சொற்றொகுதி ஒன்றை வெளியிட்டார். இவருக்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின் பீட்டர் பெர்கோரியசு என்பவர் 'இலத்தீன் பைபிள் அகராதி' ஒன்றை வெளியிட்டார். கி.பி. 1502இல் 'அம்பிரோஜியோ கலிபினோ' (Ambrogio Calepeno) என்பவர் பல்வேறு மொழிகளை உள்ளடக்கிய சொற்றொகுதியை வெளிட்டார். இதன் அடியாய் அகராதியைக் குறிக்க 'Calepin' என்னும் சொல் அக்காலகட்டத்தில் நிலவி வந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. கி.பி. 1530இல் 'ஆங்கில பிரெஞ்சு சொற்றொகுதி' ஜான்பால் சிக்கிரேவ் என்பவரல் உருவாக்கப்பட்டது. கி.பி. 1538ஆம் ஆண்டில் தாமஸ் எலியட்டின் இலத்தீன் ஆங்கில அகராதியை, தாமஸ் கூப்பர் என்பவர் விரிவுபடுத்திப் பெரிய அளவிலான சொற்றொகுதியாகக் கி.பி. 1547இல் வெளியிட்டார். தாமஸ் எலியட் என்பவரால்தான் 'Dictionary' என்னும் சொல் முதன் முதலில் வழங்கப்பட்டது எனலாம். இந்தச் சொல் பல்வேறு மாற்றங்களைக் கடந்த பிறகுதான் உருவானது. Saying>Dictio> Dictionarious>Dictionarium> Dictionary. இன்று Dictionary என்ற சொல்லே நிலை பெற்றுவிட்டது. நாளை இச்சொல் வீழ்ந்து புதுச் சொல்

உருவாகலாம். கி.பி. 1552இல் ரிச்சர்டு ஹியூலோயெட் (Richard Huloet) என்பவர் 26,000 சொற்களைக் கொண்ட சிறந்த அகராதி ஒன்றைத் தொகுத்தார்.

பல அகராதி வல்லுநர்கள் இலத்தீன் மொழியில் சிறந்த அகராதிப் பணிகளை வெளிக்கொணர்ந்தனர். அனைவரும் தங்கள் அகராதிகள் சிறந்தவையாக வெளிவரவேண்டும் என்று கருதி, பல சிறப்பு அம்சங்களை அவற்றில் உள்ளடக்கினர். இதன் விளைவாக அகராதியில் அதிக மொழிகளைச் சேர்க்கலாயினர். இதனடிப் படையில் ஜான் பேவல்ஸ் (John Bavels) என்பவருடைய 'An Alverie: or Trible Dictionarie in English, Latin and French' (1973) எனும் அகராதி ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு எனும் மூன்று மொழிகளைக் கொண்டு வந்துள்ளது. இதற்குப்பின் ஆங்கில அகராதிகள் பல தோன்றி வளர்ச்சியடைந்தன.

ஆங்கில அகராதி வரலாற்றில் முக்கியமான படிநிலையாக விளங்குவது 'ஆங்கிலம்–ஆங்கிலம் சொற்றொகுதி' ஆகும். கி.பி. 1530இல் வில்லியம் டின்டேல் (William Tyndale) என்பவரால் தொகுக்கப் பெற்ற 'ஆங்கில–ஆங்கிலச் சொற்றொகுதிதான்' முதன் முதல் தோன்றிய ஆங்கிலச் சொற்றொகுதியாகும். இக்காலகட்டத்தில் பள்ளி ஆசிரியர்கள் ஆங்கில அகராதியை உருவாக்குவதில் ஆர்வம் காட்டினர். அவர்களில் முக்கியமானவர்களாகக் கருதப்படுபவர்கள் ரிச்சர்டு முல்காஸ்டர், எட்மன்ட் கட் ஆகியோர். எட்மன்ட் கட் என்பவர் கி.பி. 1596இல் ஒரு சொற்பட்டியலை வெளியிட்டார். இப்பட்டியலே ஆங்கில அகராதி உருவாக்கத்திற்கு அடிகோலியது எனலாம். கி.பி. 1604இல் முதல் ஆங்கில அகராதி வெளியானது. இதனை ராபர்ட் கௌட்ரே என்பவர் தொகுத்தார். இவ்வகராதி ஆங்கிலத்தில் வழங்கும் ஹீப்ரு, பிரெஞ்சு, இலத்தீன், கிரீக் போன்ற மொழிகளை விளக்குவதாக அமைந்துள்ளது. கி.பி. 1610ல் ஜான் புல்லோகன் An English Explositor என்னும் அகராதியை உருவாக் கினார். இவ்விரு அகராதிகளும் சிறப்புடையனவாக விளங்குகின்றன. கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கில அகராதிகள் பல தோன்றின. கி.பி. 1702இல் அகராதித் தொகுப்பை முழுநேரப் பணியாகக் கொண்டு ஜான் கொஸ்ஸி என்பவர் A New English Dictionary

என்னும் அகராதியை உருவாக்கினார். கி.பி. 1721இல் நதானியெல் பெய்லி வெளியிட்ட அகராதி எளிய சொற்களையும் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய வழக்குச் சொற்களையும் உள்ளடக்கிய முதல் ஆங்கில அகராதியாகத் திகழ்கிறது. சொற்களின் வரலாற்றைக் காட்டுவதே இவ்வகராதியின் முதன்மையான நோக்க மாகும்.

ஆங்கில அகராதியின் தந்தை என்று போற்றப்படும் சாமுவேல் ஜான்சனின் ஆங்கிலப் பேரகராதிக்கு, பெய்லியின் அகராதி பல வழிகளில் அடிகோலியது எனலாம். கி.பி. 1746இல் ஜான்சனின் 'அகராதித் திட்டம்' உருவாக்கப்பட்டது. 1755இல் வெளியான இவ்வகராதி 43,500 சொற்களையும் 1,18,000 மேற்கோள்களையும் கொண்டுள்ளது. இம்மேற்கோள்கள் பொருளைப் பிரித்தறியப் பெரிதும் பயன்பட்டன. இவ்வகராதியில் Take என்ற செயப்படு பொருள் குன்றா வினைக்கு 118 பொருள்களும், Take என்ற செயப்படு பொருள் குன்றிய வினைக்கு 28 பொருள்களுமாக மொத்தம் Take என்ற சொல்லுக்கு மட்டும் 146 பொருள்கள் கொடுக்கப் பட்டுள்ளன. தலைச்சொற்களின் சொற்பிறப்புகளும் காட்டப் பட்டுள்ளமை இவ்வகராதியின் தனிச்சிறப்பாகும். இவ்வகராதி 19ஆம் நூற்றாண்டு வரை பெரும் வரவேற்பைப் பெற்றுத் திகழ்ந்தது (Encyclopaedia Britannica, Vol 5:714-715). கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வெளியான வெப்ஸ்டரின் ஆங்கில வழக்குகள், எழுத்து ஒலிப்பு, கலைச்சொற்கள் முதலிய அகராதிச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. கி.பி. 1909இல் வெப்ஸ்டரின் முதல் அனைத்துலகப் பேரகராதியும், 1931இல் இரண்டாவது பேரகராதி யும், 1962இல் மூன்றாவது பேகராதியும் நீண்டகால இடை வெளிக்குப் பின் வெளிவந்துள்ளன. உலகின் எந்த அகராதியும் வெப்ஸ்டரின் மூன்றாவது அனைத்துலகப் பேரகராதி போன்று திறனாய்வுக் கருத்துக்களைப் பெற்றதில்லை என்று கூறலாம். உலகின் சிறந்த அகராதியான ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதிப் பணி கி.பி. 1888இல் தொடங்கப்பட்டது. கி.பி. 1928 வரை இப்பணி தொடர்ந்தது. முதல் தொகுதி வெளிவர ஏறத்தாழ 20 ஆண்டுகள் ஆயின. இவ்வகராதியில் ஏறத்தாழ 4,14,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. பொருள்கள் வரலாற்று அடிப்படையில் காலக் குறிப்புடன் தரப்பட்டுள்ளன. ஏராளமான மேற்கோள்களும் இடம் பெற்றுள்ளன. காட்டாக CAPTAIN என்ற சொல்லுக்கு

மட்டும் 65 மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. மேற்கோள்களின் வழி இச் சொல்லின் 500 ஆண்டு கால வரலாறு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் சொல்லின் இலக்கணக் குறிப்பு, சொல் மூலம், விளக்கக் குறிப்பு, குறுக்கு நோக்கிடு போன்ற பல பொருள் விளக்க உத்திகளும் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது. எல்லா வகையிலும் இது சிறந்ததொரு அகராதியாகத் திகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து பலவகையான ஆக்ஸ்போர்டு அகராதிகள் தோற்றம் பெற்றன.

வடமொழி அகராதி வளர்ச்சி

உலகமொழிகளில் பழமையும் சிறப்பும் வாய்ந்த மொழிகளுள் வடமொழியும் ஒன்று. வடமொழியில் சொல்லுக்குப் பொருள் கூறும் நெறி வேதத்தின் ஒரு பகுதியாகவே தோன்றி வளர்ந் துள்ளது. 'சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் எனும் ஆறு பிரிவுகள் வேதத்தின் உறுப்புகளாகும்' என்று வ.ஜெயதேவன் கூறுகிறார் (1977:100). இவற்றுள் நிருத்தம் என்பது யாஸ்கரால் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது. நிருத்தம் மூன்று காண்டங்களைக் கொண்டது.

நிருத்தம்

- **நைகண்டுகம்** → **நிகண்டு** → (ஒருபொருட் பன்மொழி)
- **நைகமம்** → **நிகமம்** → (பலபொருளொரு சொல்)
- **துவைதம்** → **தெய்வம்**

நிருத்தத்தின் முதலிரு காண்டங்களில் முறையே ஒருபொருட் பன்மொழிகளும் (Synonyms) பலபொருள் ஒரு சொல்லும் (Polysemy Word)இடம் பெற்றுள்ளன. மூன்றாவது துவைதம், வைதீக தேவதைகள் பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. நிருத்தத்தினைத் தொடர்ந்து தேவராசர், துர்க்காச்சாரியார், சாயனர் போன்றவர்கள் வேத நிகண்டுகளுக்கு உரை வகுத்தனர். பல்வேறு நிகண்டுகள் சுலோகங்களால் எழுதப்பெற்று வடமொழி அகராதியியலை

வளர்த்தன. இந்நிகண்டுகளுள் அமரசிம்மரின் 'நாமலிங்கானு சாசனம்' என்னும் நிகண்டு குறிப்பிடத்தக்கது. இது கி.பி. 6ஆம் நூற்றாண்டில் சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இப்பிரிவுகள் காண்டங்கள் எனக் குறிக்கப் பெறும். மூன்று காண்டங்களும் முறையே 9,10,5 உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றன. இவற்றுள் ஒருசொல் பலபொருள் தொகுதி, ஒருபொருள் பல பெயர்த் தொகுதி ஆகியனவும் அடங்கும். இதனையே தமிழ் நிகண்டுகளின் முன்னோடி எனலாம். இதனைத் தொடர்ந்து 'திரிகாண்டம்', 'இரத்தின கோசம்' போன்ற பல வடமொழி நிகண்டுகள் தோன்றின. வடமொழி நிகண்டுகளில் சொற்கள் பொருள், பால் அல்லது பிற அடிப்படையில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் அகரநிரல் பின்பற்றப்படவில்லை.

அக்பர் காலத்தில் கிருஷ்ணதாசரால் தொகுக்கப்பட்ட 'பாரசி பிரகாசம்' (பெர்சியன் - வடமொழி அகராதி), மகாராட்டிர மாவீரன் சிவாஜிக்கென்று தயாரிக்கப்பட்ட 'இராஜவிகார கோசம்' (மராத்தி- பெர்சியன்- வடமொழி அகராதி) ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். அருஞ்சொற்களை யாப்பில் அமைத்துப் பொருள் விளக்கும் தொடக்கநிலை வடமொழி அகராதியியல், ஏராளமான நிகண்டுகளைப் பெற்றுப் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. மேற்கத்திய அகராதியியலின் தாக்கம், வடமொழி அகராதியியல் மேலும் மேம்பட்டுப் பல சீரிய அகராதிகள் தோன்றிட அடிப் படையாக அமைந்தது எனலாம்.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட இராஜா இராதாகாந்ததேவின் 'சப்த கல்பத்ருமம்' வடமொழி அகராதி யியலை நவீனப்படுத்தும் முதல் முயற்சியாகும் என்று வ. ஜெயதேவன் கூறுகிறார் (1977:110). இப்பணியில் முதல் எழுத்து மட்டும் அகரநிரல் இப்பணியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர்க் காலப்போக்கில் அகரநிரல் முழுமையாய்ப் பின்பற்றப்பட்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய சுகானந்தானந்தரின் 'சப்தார்த்த சிந்தாமணியும்', தாராநாதரின் 'வாசஸ் பத்யமும்' குறிப்பிடத்தக்க அகராதிகளாகும். இந்நூற்றாண்டில் வெளிவந்த ரோத், பொஹிட்லிங்கு ஆகிய இருவராலும் தொகுக்கப்பட்ட இருமொழி

அகராதி சிறந்த அகராதியாகத் திகழ்கின்றது. வடமொழி அகராதி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்படுவது பூனா தக்காணக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் உருவாகிவரும் 'வடமொழி வரலாற்று அகராதி'யாகும். இவ்வகராதியின் முதல் தொகுதி கி.பி. 1991இல் வெளியிடப்பட்டது. வடமொழிச் சொற்களின் வரலாற்று ஆட்சியைக் குறிக்க ஏறத்தாழ 200 நூல்களிலிருந்து மேற்கோள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்திய அகராதி வரலாற்றில் உயர்ந்த இடத்தை வகிக்கத்தக்க அகராதியாக இஃது அமைகின்றது.

வடமொழி அகராதியியல் வரலாற்றினைச் சுருங்க நோக்கும் பொழுது, வேதத்திற்குப் பொருள் கூறுமுகத்தான் வளர்ந்து வந்துள்ள வடமொழி அகராதிகள், நிகண்டுகள் மற்றும் கோசங் களின் வழி பல்வேறு காலகட்டங்களைக் கடந்து ஐரோப்பியர் கள் வருகைக்குப் பின்னரே சிறந்து விளங்கியது.

திராவிட மொழிகளில் அகராதி வளர்ச்சி

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற திராவிட மொழிகளின் அகராதி வளர்ச்சியை நோக்கும்பொழுது, எல்லா மொழிகளிலும் மரபுடன் இணைந்த வளர்ச்சியைக் காண முடிகின்றது. முதலில் இலக்கண நூலின் ஒரு கூறாகக் கடின சொற் களுக்குப் பொருள் கூறும் நெறி திராவிட மொழிகளில் அமைந் துள்ளதை உணரமுடிகின்றது. ஐரோப்பியர்களின் வருகையே திராவிட மொழிகளின் அகரதியியல் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளது. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்தான் அகராதித் தொகுப்புத் தெளிவான அறிவியல் துறைசார்ந்த ஒரு பணியாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. மதப்பணியின் பொருட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஐரோப்பியர்கள் பணியிலமர்த்தப்பட்டனர். அவர்களின் பணியில் இன்றியமையாத தாகக் கருதப்படுவது அகராதிப் பணியாகும். அவர்களால் அறிவியல் முறைப்படித் தொகுக்கப்பட்ட பல இருமொழி அகராதி கள் திராவிட மொழிகளின் அகராதியியல் வளர்ச்சியில் இன்றிய மையாத இடத்தைப் பெற்றுள்ளன. திராவிட மொழிகளின் அகராதி வளர்ச்சியை இவண் சுருக்கமாகக் காண்போம்.

தமிழ் அகராதி வளர்ச்சி

திராவிட மொழிக் குடும்பத்தில் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த மொழி தமிழாகும். இம்மொழி பல்வேறு துறைகளில் சிறப்படைந்துள்ளது போன்று, அகராதித் துறையிலும் பல சிறந்த பண்புகளைப் பெற்றுள்ளது. தொல்காப்பியக் காலம் முதல் இன்று வெளி வந்துள்ள மெய்யப்பன் தமிழ் அகராதி வரையில் பல்வேறு படிநிலைகளில் தமிழ் அகராதியியல் வளர்ச்சிப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. இங்குத் தமிழ் அகராதியின் வளர்ச்சி நிலை யினைக் கண்டு கொள்வோம்.

தமிழ் மொழியின் அகராதியியல் வளர்ச்சிக்கு அடிப்படை யாக அமைந்தவர்கள் ஐரோப்பியர்கள்தான். அவர்கள் பெரும் பாலும் இருமொழி அகராதிகளையே தொகுத்தனர். ஏனெனில் தங்களின் மதத்தைப் பரப்புவதற்கு இருமொழி அகராதியே சிறந்தது என்று அவர்கள் கருதினர். அவ்வகையில் பதினேழாம் நூற்றாண்டில் (1679) 'தமிழ் போர்ச்சுகீசிய அகராதி' எனும் நூலை ஆந்தம் தெ. புரோயன்சா என்னும் மேலைபுலத் துறவியார் உருவாக்கினார். தமிழக வரலாற்றில் முதன்முதலில் தமிழில் தோன்றிய முதல் அகராதி இந்த இருமொழி அகராதிதான். இதனையடுத்துத் தமிழ் ஒருமொழி அகராதி வரலாற்றில் முதலிடம் பெறுவது கி.பி. 1732ல் வீரமாமுனிவரால் தொகுக்கப் பெற்ற சதுரகராதியாகும். தமிழ் அகராதி வளர்ச்சியில் முன்னோடியாகக் கருதப்படும் வீரமாமுனிவரைத் தமிழ் அகராதி யின் தந்தை எனலாம். கி.பி. 1779ல் ஜான் பிலிப் பெப்ரீசியஸ் தமிழ்-ஆங்கில அகராதியை உருவாக்கினார். இவ்வகராதியில் இலக்கியச் சொற்களும் அன்றாட வழக்குச் சொற்களும் மரபுச் சொற்களும் அதிகமாக இடம் பெற்றுள்ளன. இது முதலில் 'மலபார் ஆங்கில அகராதி' என வழங்கப்பட்டது. பின்னர்ப் பல்வேறு பதிப்புகளில் பல பெயர்களைப் பெற்று வழக்கிலிருந்தது. ஒவ்வொரு பதிப்பிலும் இவ்வகராதியின் அமைப்பில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இவ்வகராதியின் பெயரும் பலமுறை மாற்றம் செய்யப்பட்டிருப்ப தைக் காணமுடிகிறது.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் ஏராளமான ஒருமொழி, இரு மொழி அகராதிகள் உருவாகியுள்ளன. கி.பி. 1834இல் ராட்லர் என்பவர் 'தமிழ்- ஆங்கில அகராதி' ஒன்றினைத் தொகுத்தார். இது நான்கு தொகுதிகளைக் கொண்டுள்ளது. இவை முறையே 1834, 1837, 1839, 1841 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன. கி.பி. 1842இல் வின்சுலோ என்பவரால் 'ஆங்கிலம் தமிழ் அகராதி' வெளியிடப்பட்டது. இதில் பொருள் விளக்கத்திற்குப் பல்வேறு வகையான நெறிமுறைகள் கையாளப்பட்டுள்ளன. அறிஞர் சந்திரசேகர பண்டிதரால் 'யாழ்ப்பாணத் தமிழ் அகராதி' கி.பி. 1842இல் தொகுக்கப் பெற்றது. இது சதுரகராதியை விட நான்கு மடங்கு பெரியது. கி.பி. 1844இல் ஸ்பால்டிங் என்வரால் 'ஆங்கிலம் -தமிழ் அகராதி' ஒன்று வெளியிடப்பட்டது. கி.பி. 1851இல் டி.எம். கிருஷ்ணசாமிப் பிள்ளை என்பவரால் 'ஆங்கிலம்-தெலுங்கு -தமிழ்' என்னும் மும்மொழி அகராதி உருவானது. இதனைத் தொடர்ந்து பல சிறந்த அகராதிகள் உருவாயின. அவற்றுள் போப்பின் 'தமிழ் -ஆங்கில அகராதி' (1859) குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அடுத்துக் கி.பி. 1862இல் வின்சுலோவின் 'தமிழ்-ஆங்கில அகராதி' உருவானது. இவ்வகராதி பிற்காலத்தில் தமிழில் தோன்றிய பெரிய அகராதிகளுக்குச் சொற்களையும் அகராதி நெறிமுறைகளையும் வழங்கும் மூலமாகத் திகழ்கின்றது. மேலும் பல்வேறு விளக்கங் களுடன் பல அகராதிகள் தமிழில் உருவாகியுள்ளன. அவற்றுள் பில்டர் ஆங்கில தமிழ் அகராதி (1880)– டி.எஸ். வீராசாமி; அகராதிச் சுருக்கம் (1883) சி. விஜயரங்க முதலியார்; தமிழ்–ஆங்கில அகராதி (1888) – விஸ்வநாத பிள்ளை; தரங்கம்பாடி தமிழ்–ஆங்கில அகராதி (1897)–பெப்ரீசியஸ் என்னும் அகராதிகள் குறிப்பிடத்தக்கவை.

இருபதாம் நூற்றாண்டில் பல சிறப்பு அகராதிகள் வெளிவந்தன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் 1899இல் நா.கதிரைவேற்பிள்ளை என்பவரால் தமிழ்ப் பேரகராதி உருவாக்கப்பட்டது. கி.பி. 1904இல் சி.டபிள்யூ. கதிரைவேற் பிள்ளை 'தமிழ்ச் சொல் அகராதி' ஒன்றைத் தொகுத்தார். மூன்று பாகங்களைக் கொண்ட சிறந்த அகராதியாக இது திகழ்கின்றது. கி.பி. 1906இல் த. குப்புசாமி நாயுடு என்பவர் தமிழ்ப் பேரகராதியை உருவாக்கினார். சதுரகராதியைப்

போலப் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு தொகுதிகளைக் கொண்ட மிகப் பெரிய அகராதியாக இவ்வகராதி திகழ்கிறது. தெய்வம், ஊர், நூல், புலவர் பெயர்கள் அடங்கிய சிறப்புப் பெயர் அகராதி ஒன்று கி.பி. 1908இல் இரத்தினவேலு முதலியாரால் தொகுக்கப்பட்டது. கி.பி.1909இல் பி.இராமநாதன் என்பவரால் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி' ஒன்று தொகுக்கப்பட்டது. இதில் பொருள் விளக்கத்துடன் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கி.பி. 1909இல் டி.எஸ். சுவாமிநாத ஐயர் 'ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ் அகராதி' ஒன்றை வெளியிட்டார்.

கி.பி. 1911இல் 'கார்னேழன் தமிழ்மொழி அகராதி' அல்லது 'ஜூபிலி தமிழ் அகராதி'யை நாகலிங்க முதலியார் தொகுத்தார். இதனைத் தொடர்ந்து பல்வேறு காலங்களில் பல்வேறு வகையான அகராதிகள் தோன்றின. சென்னைப் பல்கலைக்கழகத்தில் வையாபுரிப் பிள்ளையால் 'தமிழ் லெக்சிகன்' என்று அழைக்கப் படும் தமிழ்ப் பேரகராதி வெளியிடப்பட்டது. இது ஆரம்பத்தில் தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் பொருள் கூறுவதாக இருந்தது. பின்னர்த் தமிழ்ச் சொல்லுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் தருவதாக மாற்றிப் பதிப்பிக்கப்பட்டது. இது ஆறு தொகுதிகளையும் ஒரு பின்னிணைப்பையும் கொண்டுள்ளது. முதல் பகுதி கி.பி.. 1923ல் வெளியானாலும் முழு அகராதியும் கி.பி. 1936ல் தான் வெளிவந்தது. இப்பேரகராதியில் 1,04,405 சொற்கள் பொருள் விளக்கம் பெற்றுள்ளன.

கி.பி. 1925இல் ச. பவானந்தம் பிள்ளையால் 'தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி' ஒன்று தொகுக்கப்பெற்றது. இதில் வழக்குச் சொற்கள் அனைத்தும் காணப்படுகின்றன. கி.பி. 1935இல் ஜூபிலி தமிழ்ப் பேரகராதி ஒன்று நெல்லை எஸ். சங்கரலிங்க முதலியாரால் தொகுத்து வெளியிடப்பெற்றது. சொற்களின் வேர்ச்சொல்லை ஆய்வதை நோக்கமாகக் கொண்டு பாவாணரால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி (1985) உருவாக்கப்பட்டது. 1983இல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தாரால் பெருஞ்சொல்லகராதி உருவாக்கப் பட்டது. இதுவரை நான்கு தொகுதிகள் வெளி வந்துள்ளன. கி.பி. 1992இல் க்ரியாவின் தற்காலத் தமிழகராதி

உருவானது. தற்காலத் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் வரையறை செய்திருக்கும் முதல் தமிழகராதியாக இது திகழ்கிறது. 20ஆம் நூற்றாண்டில் மேலும் பல அகராதிகள் தோன்றின. அவற்றுள் பி. ராமநாதனின் இராமநாதன் ஆங்கிலம்–தமிழ் அகராதி (1936); இ.மா. கோபால கிருஷ்ணனின் 'மதுரைத் தமிழ்ப் பேரகராதி' (1937); லிட்டில் பிளவர் கம்பெனியின் லிப்கோ, ஆங்கிலம்–ஆங்கிலம் தமிழ் அகராதி (1950), கா. அப்பாதுரைபிள்ளையின் கழகத் தமிழ்க் கையகராதி (1952), தமிழ்ப் புலவர் அகராதி (1952), தட்சிணபாரத இந்திய சபாவின் தமிழ்–இந்தி அகராதி (1962), முத்துச்சண்முகம் பிள்ளையின் தமிழ்–தமிழ் அகரமுதலி (1985) போன்றவை குறிப்பிடத்தக்க அகராதிகளாகும்.

அவற்றுள் 21ஆம் நூற்றாண்டில் அகராதிகள் சில தோன்றின. ஒருமொழி அகராதிகளாகவே இருக்கின்றன. கி.பி. 2000இல் அரிமதி தென்னகன் என்பவரால் 'வசந்தா தமிழ் அகராதி' தொகுக்கப்பட்டது. இதே ஆண்டில் என்.சி.பி.எச். என்னும் பதிப்பகத்தால் தற்காலத் தமிழகராதி உருவாக்கப்பட்டது. வ.த. இராம சுப்பிரமணியம் என்பவரால் கி.பி. 2001இல் 'திருமகள் தமிழகராதி' தோற்றுவிக்கப்பட்டது. கி.பி. 2003இல் 'தமிழ்மொழி அகராதி' ஒன்றினை எஸ். கௌமாரீஸ்வரி வெளியிட்டார். இவரே கி.பி. 2004இல் கௌரா தமிழ் அகராதியைத் தொகுத்து வெளியிட்டார். ச.வே. சுப்பிரமணியம் என்பவரால் மெய்யப்பன் தமிழகராதி கி.பி. 2006இல் வெளியிடப்பட்டது. கோ. பெரியண்ணனின் முத்தமிழ் அகராதி (2006), அ.கி. மூர்த்தியின் லியோவின் தமிழ் அகராதி (2008), புதிய தமிழ் அகராதி (2009) ஆகியவையும் தமிழில் குறிப்பிடத்தக்க அகராதிகளாகும். இவை அனைத்தும் தமிழ் ஒரு மொழி அகராதிகளாகும்.

இதுவரையில் தமிழ்மொழியில் தோன்றிய அகராதிகளின் சுருக்கத்தைக் கண்டோம்.

கன்னட அகராதி வளர்ச்சி

கன்னட அகராதியியல் வரலாறு தமிழைப் போன்று மிகத் தொன்மையானது. கன்னட மொழியின் அகராதி வளர்ச்சி

நிகண்டு, ஒருமொழி, இருமொழி அகராதிகள் எனும் நிலையில் அமைந்துள்ளது. கன்னட மொழியில் கி.பி. 993இல் கன்னட – கன்னட அகராதி தோற்றம் பெற்றுள்ளது. கன்னட அகராதி வரலாற்றில் முதலில் செய்யுள் வடிவிலான நிகண்டுகள்தான் சொற் பொருள் கூறும் நூலாகப் பயன்பட்டு வந்துள்ளன. 'சப்தமணி தர்ப்பணா' எனும் இலக்கண நூலின் சில பகுதிகளில் செய்யுள் வடிவில் கடினமான சொல்லுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. எனினும் முழுமையான அகரநிரலையும், அகராதியியல் கூறுகளை யும் கொண்ட அகராதி ஐரோப்பியரின் வருகைக்குப் பின்தான் வெளியானது என்று கூறலாம்.

கன்னட மொழியின் முதல் அகராதி கி.பி. 993இல் ரணா என்பவரால் செய்யுள் வடிவில் தொகுக்கப்பட்ட 'ரணகந்தா'தான் என்று பி.ஜி. மிஸ்ரா கூறுகிறார் (1980:70). இந்நிகண்டு கடின சொற்களுக்கு மட்டும் பொருள் கூறியுள்ளது. பொருட் பாகுபாடோ, வரிசை முறையோ இந்நிகண்டில் பின்பற்றப்படவில்லை. அடுத்து மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு கி.பி. 1260இல் புகழ்பெற்ற கன்னட இலக்கண ஆசிரியரான கேசிராஜா 'சப்தமணி தர்ப்பணா' எனும் தமது இலக்கணத்தின் சில பகுதிகளில் சொல்லுக்குப் பொருள் கூறும் நெறியை அமைத்தார். இது பின்னர் வந்த நிகண்டு மற்றும் அகராதிகளின் தோற்றத்திற்கு அடிகோலியுள்ளது. 'சப்தமணி தர்ப்பணா' ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. முதல் இயலில் 'La' என்ற எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட 181 சொற்கள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இச்சொற்களுக்கு ஒன்று முதல் ஐந்து வரையில் பொருள் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. 'பிரயோகாசரா' அல்லது 'சப்தார்த்த நிர்ணயா' எனும் ஒன்பதாவது இயலில் 237 கன்னடச் சொற்களுக்குக் கன்னட மொழியில் பொருள் கூறப்பட்டுள்ளது. ஆறாவது இயலின் 'தாது பிரகர்ணா'வில் 973 கன்னட வினையடிகளுக்கு வடமொழியில் பொருள் கூறப் பட்டுள்ளது. இவ்வியல்தான் கன்னட – வடமொழி (இருமொழி) அகராதி உருவாக்கத்திற்கு அடிப்படையானதாகும். எனவேதான் 'சப்தமணி தர்ப்பணா'வில் ஒருமொழி, இருமொழிக்கான அகராதிக் கூறுகளைக் காணமுடிகின்றது என்று பி.ஜி. மிஸ்ரா கூறியுள்ளார்

(1980:70). இந்த இலக்கணத்தில் மொத்தம் 1041 சொற்களுக்குப் பொருள் வழங்கப்பட்டுள்ளது இவண் குறிப்பிடத்தக்கது.

கி.பி. 1400இல் 'கர்நாடக சப்தசாரா' எனும் கன்னட கன்னட நிகண்டு உரைநடையில் தோன்றியது. சப்தமணி தர்ப்பணாவி லுள்ள ஒன்பதாவது இயலை இதில் காணலாம். இதனையடுத்துக் கி.பி. 1450இல் சதுரசிய பொம்மராசா என்பவரால் 'சதுரசிய நிகண்டு' உருவாக்கப்பட்டது. இந்நிகண்டில் பொருள் பாகு பாடோ, வரிசை முறையோ பின்பற்றப்படவில்லை. கி.பி. 1536இல் லிங்க மந்திரி என்பவரால் 'கபிகார கைப்பிடி' என்ற செய்யுள் வடிவிலான கன்னட நிகண்டு 100 செய்யுட்களால் தொகுக்கப் பட்டது. இந்நிகண்டில் அதிகமான கன்னடச் சொற்கள் பொருள் விளக்கம் பெற்றுள்ளன. கி.பி. 1560இல் 'விரக்த தொண்டார்யா' என்பவரால் தொகுக்கப்பட்ட 'கர்நாடக சப்தமஞ்சரி' 120 செய்யுட் களைக் கொண்டும், கி.பி. 1600இல் சிருங்கார கவிராயரால் தொகுக்கப் பட்ட 'கர்நாடக சஞ்சீவனா' 35 செய்யுட்களைக் கொண்டும் அமைந்தன. 'சப்த காமா' எனும் நிகண்டு 202 செய்யுட்களையும், 'பாரத நிகண்டு' 67 செய்யுட்களையும் கொண்டு வெளி வந்துள்ளன. கன்னட நிகண்டுகளில் பல இரு மொழி நிகண்டுகளும் வெளி வந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கன பின்வருவனவாகும்.

1. அபிதான வஸ்து கோசா (வடமொழி– கன்னட அகராதி)
   ஆசிரியர்: நாகவர்மா II,1145
2. கலயுதா அபிதான ரத்னமாலா (வடமொழி-கன்னட அகராதி)
   நாகவர்மா II
3. நாநார்த்த ரத்ன காரா (வடமொழி - கன்னட அகராதி)
   திவோத்தமா, 1600
4. நாசிராசியா (வடமொழி - கன்னட அகராதி)
   ராசிராஜா, 1300

மேற்கண்ட கன்னட நிகண்டுகள், அறிவியல் நேறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட அகராதிகள் தோன்றுவதற்குச் சிறந்த மூலநூல்களாக அமைந்துள்ளன. பல வழக்கிழந்த வடமொழிச்

சொற்களுக்கு இந்நிகண்டுகளில் பொருட்கள் கூறப்பட்டுள்ளன. சொற்களுக்கு இயன்றவரை இணையான சொற்கள் வழங்கப் பட்டன. இதன் அடிப்படையில் பிற்காலத்தில் விரிவான சொற்பொருண்மைப் பாகுபாடு செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது எனலாம். ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் மேலை நாட்டு அகராதி நெறிகளைப் பின்பற்றிய அகராதித் தொகுப்புப் பணி கன்னட மொழியில் தோற்றம் பெற்றது. அகர வரிசையும் ஒழுங்கான அகராதி அமைப்பும் கொண்ட பல அகராதிகள் இதன்வழி உருவாகியுள்ளன. இத்தகு சிறந்த பணியைக் கன்னட மொழியில் முதலில் செய்தவர்கள் கிறித்தவ மிஷினரியைச் சேர்ந்த ரீவ்ஸ், கிட்டல் ஆவார்கள். இவர்களால் 'கன்னட-ஆங்கில அகராதி' வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து கி.பி. 1894இல் கிட்டல் தனது புகழ்பெற்ற 'கன்னட-ஆங்கில அகராதி'யை வெளியிட்டார். இவ்வகராதி மேலும் பல திருத்தங்களுடன் சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது. கிட்டல் அகராதியில் சேர்க்கப் படாத பல பழைய சொற்கள் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. பல நூற்களிலிருந்து எடுத்துக் காட்டுகளும் 7800 புதிய கன்னடச் சொற்களும் சேர்க்கப்பட்டுச் சிறந்த அகராதியாக இது திகழ் கின்றது.

கி.பி. 1923இல் ரெவரண்ட் ஜே. பச்சர் என்பவரின் 'கன்னட-ஆங்கில அகராதி' வெளிவந்துள்ளது. இதைத் தொடர்ந்து பல ஒரு மொழி, இருமொழி அகராதிகள் தோற்றம் பெற்றன. கன்னட மொழியில் நிகண்டுகளின் வடிவிலிருந்து சொற்பொருள் கூறும் முறை, மேலைநாட்டவர் வருகைக்குப் பின்னர்தான் சிறந்த அகராதிகள் உருவாகும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

தெலுங்கு அகராதி வளர்ச்சி

திராவிட மொழிகளுள் ஒன்றான தெலுங்கு மொழியின் அகராதியியல் வளர்ச்சி ஓரளவு தமிழ் அகராதியியல் வளர்ச்சி யினை ஒத்துள்ளது எனலாம். பிற திராவிட மொழிகள் போன்றே தெலுங்கு மொழியிலும் முதலில் செய்யுள் வடிவிலான நிகண்டு கள் காணப்பட்டன. வடமொழியில் சிறந்து விளங்கிய 'அமர

கோசத்தைப் பின்பற்றித் தெலுங்கு மொழியில் பல அகராதிகள் தோற்றம் பெற்றுள்ளன. இவை ஐரோப்பியர் வருகைக்குப் பின் ஒருமொழி, இருமொழி அகராதிகளாக உருவாகியுள்ளன. தெலுங்கு இலக்கியங்களில் முதலில் வடமொழிச் சொற்கள் தெலுங்கு எழுத்துக்களால் எழுதப்பட்டன. நன்னயபட்டர் மகாபாரதத்தின் ஆதி, சபா என்னும் பருவங்களையும், ஆரண்ய பருவத்தின் ஒரு பகுதியையும் இம்முறையில் எழுதி உருவாக்கினார். திக்கண்ணா எனும் தெலுங்குமொழிப் புலவர் இம்முறையினை மாற்றிப் பாரதத்தின் 15 பருவங்களில் தெலுங்குச் சொற்களைத் தெலுங்கு எழுத்துக்களில் எழுதினார் என்று பி.ஜி. மிஸ்ரா குறிப்பிடுகின்றார் (1980:31).

கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் பத்துக்கும் மேற்பட்ட வடமொழி நிகண்டுகள் தோன்றின. இவை பெரும்பாலும் 'அமரகோசம்', 'விஸ்வகோசம்' ஆகியவற்றை அடியொற்றித் தொகுக்கப்பட்டன. தெலுங்கு, வடமொழியின் மகளான பிராகிருதத்தின் கிளைமொழியாகக் கருதப்பட்டது. கி.பி. 1856இல் கால்டுவெல் என்னும் மொழியியல் அறிஞர் ஆரியமொழிக் குடும்பம் திராவிட மொழிக் குடும்பத்திலிருந்து வேறுபட்டது என்பதை நிலை நாட்டினார். எனவே, தெலுங்கு மொழியும் திராவிட இலக்கண அறிஞர்களும், அகராதி வல்லுநர்களும் கால்டுவெல் கூறிய கருத்தின் அடிப்படையில் தெலுங்கு இலக்கணக் கோட்பாடுகளையும் தெலுங்கு அகராதிக் கூறுகளையும் ஆராய்ந்தனர். இவ்வடிப்படையில் தெலுங்குச் சொற்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டன என்கிறார் பி.ஜி. மிஸ்ரா (1980: 134).

சொற்றொகுதி

↓

தற்சமம் | **தற்பவம்** | **தேசியம்** | **கிராமியம்**

தற்சமம் (தற்சமா) என்பது வடமொழியிலிருந்து தெலுங்குக்குக் கடன் வாங்கப்பட்ட சொற்களாகும். தற்பவம் (தற்பவா) என்பது

வடமொழி போல் தெலுங்கு மொழியில் உருவாக்கப்பட்ட சொற்களாகும். தேசியம் (தேசியா) என்பது பழங்கால தெலுங்குச் சொற்கள். கிராமியம் (கிராமியா) என்பது தெலுங்கிலுள்ள கொச்சைச் சொற்களாகும். மேற் கூறப்பட்ட நான்கு பிரிவுகளில் தேசியா எனும் பழைய தெலுங்குச் சொற்கள் மட்டுமே பழைய நிகண்டுகளில் பயன் படுத்தப்பட்டன. எனினும் சில தெலுங்கு நிகண்டுகளில் தற்பவா சொற்களும் காணப்படுகின்றன. வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட சொற்கள் முற்றிலுமாகக் கைவிடப்பட்டன. ஏனெனில், அமரகோசம் எனும் வடமொழி நிகண்டில் இச் சொற்களே காணப்படுகின்றன.

தெலுங்கு மொழியில் காணப்படும் குறிப்பிடத்தக்க நிகண்டுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். கி.பி. 1674இல் ஞானபவரபு வெங்கடகவி என்பவரது 'வெங்கடசந்தரமு' எனும் நிகண்டு தோற்றம் பெற்றது. இந்நிகண்டு 5 பிரிவுகளில் 128 செய்யுட்களில் 2500 சொற்களையும் கொண்டு விளங்குகின்றது. 17ஆம் நூற்றாண்டில் லெட்சுமண கவி 'ஆந்திரநாம சங்கதமு' எனும் நிகண்டை இயற்றினார். இது மேற்கண்டதுபோல் ஐந்து பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இதில் 200 செய்யுட்களில் 1500 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன. இது மக்களிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றுத் திகழ்கிறது. கி.பி. 1720இல் அடிடம்சுரானா 'ஆந்திர நாமகோசம்' எனும் நிகண்டைத் தொகுத்தார். இதில் உட்பிரிவுகள் எதுவும் காணப்படவில்லை. இந்நிகண்டில் 78 செய்யுட்களில் 900 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன. கி.பி. 1750இல் கஸ்தூரிரங்க கவி என்பவர் 'சாம்ப நிகண்டுவு' எனும் நிகண்டைத் தொகுத்தளித்தார். இந்நிகண்டு 119 செய்யுட்களையும், 2500 சொற்களையும் கொண்டு மக்களின் பேராதரவைப் பெற்றது. கி.பி. 1750-1790இல் நுடுருபதி வெங்கட்ணா என்பவர் வடமொழி அமரகோசத்தை அடியொற்றி 'ஆந்த்ர பாஷார்ணவமு' எனும் நிகண்டைத் தொகுத்தார். கவி சௌடப்ப என்பவர் 'சிட்சுமுலு' எனும் நிகண்டில் 61 செய்யுட்களில் 600 சொற்களை விளக்கியுள்ளார். இதில் சில அமரகோசச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளமை இவண் குறிப்பிடத்தக்கதாகும். சீதாராம சோமயாஜி 'நாநார்த்த நிகண்டுவு' எனும் நிகண்டில்

வடமொழிச் சொற்கள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்டுள்ளது போல் முதல் ஐந்து நிகண்டுகள் மக்களின் வரவேற்பைப் பெற்றன. இந்நிகண்டுகளில், ஒப்புருச் சொற்களும் பலபொருள் சொற்களும் அமரகோசத்தில் உள்ளது போல் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. சொற்களுக்குரிய இலக்கணக் குறிப்புகள் கொடுக்கப்படவில்லை பெரும்பாலும் பெயர்ச் சொற்களே இந்நிகண்டுகளில் அதிகம் தரப்பட்டுள்ளன. தெலுங்கு மொழியில் செய்யுள் வடிவில் நிகண்டுகளைத் தொகுத் தளித்தவர்கள் பெரும்பாலும் புலவர்களாகவே காணப்பட்டனர். அவர்கள் தமக்குப் பயன்படும் வகையிலேயே சொற்களைத் தெரிந் தெடுத்து, அவற்றுக்குரிய ஒருபொருட் பன்மொழிகளையும் உருவாக்கினர். எனவே, இப்பணிகள் செய்யுள் புனைவோருக்காக உருவாக்கப் பட்டனவே அன்றிப் பொது அறிஞர்களுக்குப் பயன்படும் வகையில் அமையவில்லை என்றே கூறலாம். கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் எழுந்த 'நாநார்த்த நிகண்டுவு' எனும் நூல் வடமொழியிலிருந்து பெறப்பட்ட பலபொருள் சொற்களை அவற்றின் பொருளோடு அகரவரிசையில் கொடுத்துள்ளது.

ஐரோப்பியர் வருகையினால் அகராதி நெறிமுறையுடன் கூடிய பல அகராதிகள் தெலுங்கு மொழியில் உருவாயின. தெலுங்கில் அகரவரிசை கி.பி. 1852இல் சி.பி.பிரௌன் தொகுத்த 'தெலுங்கு-தெலுங்கு ஆங்கில அகராதி'யில் அறிமுகப்படுத்தப் பட்டது. அகர வரிசை முறை அகராதிகளை நவீன முறைப்படி மமிடி-வெங்கையா தொகுக்கத் துவங்கியபோதும் மோனியர் வில்லியம்ஸின் 'வடமொழி -ஆங்கில அகராதி' (1878) வெளிவந்த பிறகே முழுநிலையிலான அகரவரிசை தெலுங்கு அகராதியில் உருவாயிற்று எனலாம். பிரௌன் அகராதி வில்லியம்ஸின் அகராதியை அடியொற்றியதாக விளங்கியது. மாணவர்களுக்காகக் கி.பி.1906இல் 'சப்தார்த்த சந்திரிகா' எனும் அகராதி உருவாக்கப் பட்டது. இருமொழி அகராதிகளில் சங்கர நாராயணனால் தொகுக்கப்பட்ட 'ஆங்கில–தெலுங்கு அகராதி' சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது. ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியை அடியொற்றி வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில்

'ஆங்கில- தெலுங்கு அகராதி' ஒன்று உருவாக்கப்பட்டது. இங்ஙனம் தெலுங்கு மொழி யிலும் பிற திராவிட மொழிகளைப் போல் நிகண்டுகளாகக் காணப்பட்ட நோக்கு நூல்கள் ஐரோப்பியர்கள் வருகைக்குப் பின் தான் அகராதி வடிவைப் பெற்று வெளிவந்தன என்பதில் ஐயமில்லை.

மலையாள அகராதி வளர்ச்சி

ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்ட கால எல்லையைக் கொண்ட இலக்கிய வளமுடைய மொழியாக மலையாளம் உள்ளது. ஏனைய மொழிகளைப் போலத் தொன்மையான அகராதி மரபினை இம் மொழியில் காணமுடியவில்லை. எனினும் ஐரோப்பியர் வருகைக்குப் பின்தான் இம்மொழியில் அகராதித் தொகுப்புப்பணி வளர்ச்சி அடைந்ததைக் காணமுடிகின்றது. கி.பி. 1846இல் மலையாள இலக்கிய வழக்குச் சொற்களையும், பேச்சு வழக்குச் சொற்களையும் கொண்ட 'மலையாள-ஆங்கில அகராதி' உருவாக்கம் பெற்றது. இது ரெவரண்ட் பி.பெய்லி என்பவரால் தொகுக்கப்பட்டது. வடமொழியில் உருவாகியுள்ள 'அமரகோசத்தில்' இடம்பெற்றுள்ள அனைத்து மலையாள இலக்கியச் சொற்களும் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. இவ்வகராதி முதலில் தோன்றி வளர்ந்தாலும் முழுமையான அகராதியாக நிலைபெறவில்லை என்று கூறலாம்.

கி.பி. 1865இல் காலின்ஸ் என்பவர் முதன் முதலில் மலையாள ஒருமொழி அகராதியை உருவாக்கினார். இவ்வகராதியில் ஏராள மான சொற்கள் இடம்பெற்றிருந்தும், வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட மலையாளச் சொற்களே மிகுதியாகக் காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து கி.பி. 1872இல் குண்டர்ட் என்பவரால் வெளியிடப்பட்ட 'மலையாள - ஆங்கில அகராதி' முழுமையான மொழியியல் நுணுக்கங்களுடன் திட்டமிட்டு வெளிவந்த அகராதி என்று சுரநாடு குஞ்சன் பிள்ளை கூறுகிறார் (1965:20). ஏனைய மலையாள அகராதிகளில் காணமுடியாத சில சிறப்புக் கூறுகளை இவ்வகராதியில் காணலாம். இவ்வகராதியில் தலைச்சொற்களுக்கு எழுத்துப் பெயர்ப்பானது கொடுக்கப்பட்டுள்ளது. மலையாள இலக்கியச் சொற்களுக்கு இணையான இனமொழிச் சொற்களும்

(Cognates) காட்டப்பட்டுள்ளன. பொருள் விளக்கத்தில் விளக்கப் படங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் பல்வேறு அகராதி [illegible]தி களைக் கொண்டு இவ்வகராதி சிறப்பான அகராதியாகத் திகழ்கிறது.

கி.பி. 1923இல் ஸ்ரீ காண்டேஸ்வரம் பத்மநாபபிள்ளை 'சப்த தாராவலி' எனும் அகராதியை உருவாக்கினார். இதில் அகராதிக் குரிய சிறப்புக் கூறுகளான விளக்கங்கள், படங்கள் போன்றவை காணப்படவில்லை. ஆர். நாராயண பணிக்கர் உருவாக்கிய 'நவயுக பாஷா' எனும் நிகண்டும் கி.பி. 1939இல் ஏ.ஆர்.பி. பாஷா நிகண்டும் மேலே கூறப்பட்ட சப்த தாராவலியை அடியொற்றி அமைந்துள்ளன. மேற்கண்ட அகராதிப் பணிகள் அனைத்தும் முழுமையானவையாக அமையவில்லை. இக்காரணத்தினால் முழு அளவிலான பேரகராதியை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கி.பி. 1953இல் திருவிதாங்கூர் அரசும், கேரளப் பல்கலைக்கழகமும் இணைந்து 'மலையாளம்-மலையாளம் ஆங்கிலப் பேரகராதியை உருவாக்கும் பணியை மேற்கொண்டன. இவ்வகராதி பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு முழுமைபெற்ற அகராதியாக விளங்கு கின்றது. இவ்வகராதியில் இதுவரை 6 தொகுதிகள் வெளி வந்துள்ளன.

துளு அகராதி வளர்ச்சி

திராவிட மொழிக் குடும்பத்தில் 'துளு' முக்கிய இடத்தைப் பெறு கின்றது. இம்மொழியில் பழைய இலக்கியங்கள் இல்லை. பெரும்பாலும் வாய்மொழியாகவும், மரபு வழியாகவும் சொல்லப் பட்டு வரும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் போன்றவையே மிகுதியாக உள்ளன. ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்னர்க் கிறித்தவப் பாதிரியார்கள் துளு மொழிச் சொற்களைக் கன்னட எழுத்துக்களில் எழுதினர். எனினும் பிராமணர்கள் சமயம், சடங்கு, தத்துவம் போன்றவற்றிற்குரிய வடமொழிச் சொற்களை எழுதத் துளு எழுத்தைப் பயன்படுத்தினர். இவ்வாறுதான் துளு மொழியில் எழுத்து வடிவம் தோற்றம் பெற்றது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட 'ஸ்ரீபாகவதோ', 'காவேரி' எனும் கல்வெட்டுக்கள் இரண்டும் செய்யுள் வடிவில் அமைந்த

காப்பியங்களாகும். மேலும் துளு மொழியில் 'பாட்டன' என்று வழங்கப்படும் நாட்டுப்புறக் காப்பியத்தில் கலை, கலாச்சாரம், கைத்தொழில், விளையாட்டு எனும் பல்வேறு துறைகளுக்குரிய சொற்களும் அவற்றின் விளக்கங்களும் காணப்படுகின்றன என்று துளு லெக்சிகன் மொழிகின்றது (1989:20).

கி.பி. 1834இல் தென் கன்னட நாட்டிற்கு வந்த மேல்நாட்டுக் கிறித்தவர்கள், தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்குத் துளு மொழியில் ஓர் இலக்கணத்தையும் ஓர் அகராதியையும் உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டனர். ரெவரண்ட் கம்மீரர், ரெவரண்ட் அம்மன் ஆகியோர் துளுமொழி அகராதியைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டனர். கம்மீரர் (1856-58) இப்பணியைத் தொடரும் முகத்தான் 2000 துளுச் சொற்களைத் தொகுத்தார். ஜெர்மனியைச் சேர்ந்த ரெவரண்ட் மேனர் என்பவர் கி.பி. 1856இல் 18,000 சொற்களைக் கொண்ட 'துளு-ஆங்கில அகராதி'யை வெளி யிட்டார். இதனையடுத்து அவர் கி.பி. 1888இல் 'ஆங்கில-துளு அகராதி'யையும் வெளியிட்டார். இவ்வகராதிகள் 20ஆம் நூற்றாண்டில் துளு மொழிக்குரிய கருவூலங்களாக அமைந்தன எனலாம். மேனர் தனது அகராதியில் கன்னடம் மற்றும் ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்தினார். சரியான உச்சரிப்பிற்காகச் சில அடையாளக் குறியீடுகளையும் பயன்படுத்தியுள்ளார். பொருட் பகுதியில் விளக்கப் படங்களும் மரபுத் தொடர்களும் பல அகராதி உத்திகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கி.பி. 1967இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். மாரியப்ப பட் என்பவரும் சங்கர் கேடில்யாவும் இணைந்து 8000 சொற்கள் கொண்ட அகராதி ஒன்றை உருவாக்கினர். இதனை மேனர் அகராதியின் எளிமை யாக்கம் எனலாம். மேனர் அகராதியில் காணப்படும் குறைகள் நீக்கப்பட்டும் பல புதிய சொற்கள் சேர்க்கப்பட்டும் இவ்வகராதி உருவாகியுள்ளது. எனினும் துளு மொழியில் ஒரு முழுமையான அகராதியாக இஃது அமையவில்லை என்பது இங்குச் சுட்டத் தக்கது.

கி.பி. 1979இல் அரசு உதவியுடன் தொடங்கப்பட்ட 'துளு மொழிப் பேரகராதிப் பணி' முன்பு கண்ட குறைபாடுகளை நீக்கும் முகத் தான், பழைய துளு மொழிக் காப்பியங்களான 'ஸ்ரீபாகவதோ', 'காவேரி', 'மந்த ராமாயணம்' போன்ற நூல்களிலிருந்து சொற் களைத் திரட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும் பல நாட்டுப்புற இலக்கியச் சொற்கள், தொழிற்சொற்கள், கலை, பண்பாடு சார்ந்த பேச்சு வழக்குச் சொற்கள் ஆகியன திரட்டப் பட்டுச் சிறப்பான ஓர் அகராதி உருப்பெற்றுள்ளது. ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே துளுமொழியிலும் சிறந்த அகராதி உருவானது என்பதில் ஐயமில்லை.

தொகுப்புரை

இதுவரை உலகமொழிகளிலும் வடமொழி, திராவிட மொழி களிலும் அகராதியின் வளர்ச்சியினைச் சுருக்கமாகக் கண்டோம். இவற்றை விரிவாக விளக்கினால் இங்கு எடுத்துக்கொண்ட கருத்தின் பயணம் தடைபடும் என்று கருதியே சுருக்கமாக எடுத்தாளப்பட்டுள்ளது. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே திராவிட மொழிகளில் அகராதிகள் வளர்ச்சி நிலையை அடைந்துள்ளன.

[illegible]

[illegible]

[illegible]

இயல்-2
தொல்காப்பியமும் நிகண்டும்

அகராதி

மொழிக்கு வளம் சேர்ப்பதிலும் புதிதாய் மொழியைக் கற்பவர்க்குத் துணையாய் நிற்பதும் அகராதியாகும். அத்தகைய அகராதி என்றால் என்ன? என்ற வினாவிற்கு விடை காண வேண்டும். அப்பொழுதுதான் அகராதியைப் பற்றிய செய்திகளை எளிதில் உள்வாங்கிக் கொள்ள முடியும். ஒரு மொழியிலுள்ள சொற்களைத் தொகுத்து, அகரவரிசை முறையில் அமைத்து, அவற்றிற்குரிய பொருள்களைப் பல்வேறு நெறிமுறைகளில் கூறும் நோக்கீட்டு நூல்தான் அகராதியாகும். அகரம்+ஆதி என்ற இரண்டு சொற்களின் புணர்ச்சியே அகராதி. ஒரு மொழியிலுள்ள எந்தெந்தச் சொற்களுக்கு அகராதியில் பொருள் தரப்பெறும் என்பதைச் சொற்பொருள் வளர்ச்சி குறித்த பகுதியில் கண்டு தெளியலாம்.

அகரவரிசை

அகராதியில் சொற்களை அகரவரிசையில் தரும் முறையினை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்ற உயிரெழுத்துக்களை முதலாகவுடைய சொற்களை முதலில் வரிசைப்படுத்தி, அதன்பின் ஃ என்ற ஆய்த எழுத்தையும் மெய் எழுத்துக்களையும் உயிர்மெய் எழுத்துக்களையும் முறையே வரிசைப்படுத்திப் பொருள் கூறுவது. இரண்டாவது 'முறையில் உயிர், ஆய்தம், உயிர்மெய், மெய் என்ற அடிப்படையில் வரிசைப் படுத்துவது. இந்த இரண்டு வழிகளில்தான் தமிழ் ஒருமொழி அகராதிகள் பயணிக்கின்றன. 'அகராதியில் அகரம் முதலிலும் பின்னர் 'ஆகாரம்', 'இகரம்' போன்ற பிற உயிர் எழுத்துக்களும், பின்னர்க் ககர வரிசையிலான மெய்யெழுத்துக்களும் வரிசைப் படுத்தப்பட வேண்டும். முதல் எழுத்திற்குப் பின்னர் இரண்டாம்

எழுத்தும் தொடர்ந்து பிற எழுத்துக்களும் அடுக்கி வரப் பொருள் கூறும் முறையையே 'அகர வரிசை முறை' என்று சுந்தர சண்முகனார் கூறுகிறார் (1965:12). அகர வரிசை முறையை ஆங்கிலத்தில் 'Alphabetic' என்ற சொல் குறிப்பிடுகிறது. இது குறித்துச் சுந்தர சண்முகனார் பின்வருமாறு விளக்குகிறார். 'அகர வரிசை முறையை ஆங்கிலத்தில் 'Alphabetic' என்பர். இப்பெயர் கிரீக் மொழியிலிருந்து வந்ததாகும். இதில் Alpha என்பது ஒரு சொல். Beta என்பது மற்றொரு சொல். இதில் Alpha என்பது ஒரு A என்னும் எழுத்தைக் குறித்து வருவதாகும். இது கிரீக் மொழியின் முதல் எழுத்தாகும். ஐரோப்பிய மொழிகளில் A, B, C, D வரிசை என்று சொல்வதற்குப் பதில் Aயில் தொடங்கும் Alpha என்னும் சொல்லையும், Bயில் தொடங்கும் Beta எனும் சொல்லையும் இணைத்து Alphabet வரிசை என்று கூறி வருகின்றனர் (1965:13). இவ்வாறு பலரும் அகரவரிசையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அகரவரிசையின் தோற்றம்

தமிழில் அகரவரிசை முதன்முதலில் அகராதியில்தான் தோன்றியதா? அதற்குமுன் தமிழில் தோன்றிய நூல்களில் அம்முறை தோற்றம் பெறவில்லையா? என்பன போன்ற வினாக்கள் நம்முன் எழுவது இயல்பு. ஏனெனில் ஒருமொழி அகராதி கி.பி. 18ஆம் நூற்றாண்டில்தான் தமிழில் தோற்றம் பெற்றது. அதற்குமுன் பல்வேறு நூல்கள் தமிழில் தோற்றம் பெற்றுத் தமிழையும் தமிழர் களையும் வளர்த்துள்ளன. கி.பி. 18இல் அகராதி தோன்றினாலும் அதற்கு முன்பே அகரவரிசை என்ற முறையை அகராதி நிகண்டு தோற்றுவித்தது. இந்நிகண்டு முதலெழுத்தளவில் சொற்களை அகர வரிசையில் அமைத்துப் பொருள் கூறியுள்ளது. இந்நிகண்டினை இரேவண சித்தர் என்பவர் கி.பி. 1594இல் தொகுத்து வெளி யிட்டார். அகராதி என்ற சொல்லையும் இந்நிகண்டுதான் தமிழுக்கு அறிமுகப் படுத்தியது.

'அகர முதல எழுத்தெல்லாம்' என்று தொடங்கும் திருக் குறளின் முதல் குறளே அகரவரிசையைப் பற்றிக் கூறுகிறது. மொழிக்கெல்லாம் முதலெழுத்தாக இருப்பது அகரமே என்பதைக்

குறளும் பதிவு செய்கிறது.

அகராதிக்கான கூறுகள் நிரம்பிக் கிடக்கின்ற தொல்காப்பியத்தில் அகரவரிசைக்கான கூறு இருக்கிறதா? என்ற வினா அடுத்துத் தோன்றுவது இயல்புதான். திருவள்ளுவரின் முதல் குறளே அகர வரிசையைப் பற்றிச் சொல்லுவது போலவே அதற்குமுன் பல நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றிய தொல்காப்பியத்திலும் முதல் நூற்பாவே அகரவரிசையைப் பதிவு செய்கிறது.

"எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்து வரல்மரபின் மூன்றலங் கடையே" (தொல்.1)

இந்த நூற்பா தமிழ் நெடுங்கணக்கினை அகரவரிசைப்படுத்தி யும் தமிழெழுத்துக்களின் எண்ணிக்கையையும் கூறியுள்ளது வியப்பிற்குரியது. தமிழின் அகரவரிசையானது அகரத்தை முதலாகவும் னகரத்தை இறுதியாகவும் கொண்ட முறையாகும் என்பதைத் தமிழில் தோன்றிய முதன்மையான நூலான தொல்காப்பியமே சுட்டியுள்ளது. இது மட்டுமன்றி "அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு" (தொல். 31), "ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா" (தொல் 32) என்பன போன்ற பல நூற்பாக்களிலும் அகரவரிசை முறையை இந்நூல் பின்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்தில் அகராதிக்கான கூறுகள் இருப்பதையும் நிகண்டுகளில் அகராதிக்கான கூறுகள் இருப்பதையும் இப்பகுதியில் காண்போம்.

தொல்காப்பியம்

இன்று கிடைத்துள்ள தமிழ் நூல்களில் முதலில் தோன்றிய தும் முதன்மையான நூலாகவும் கருதக்கூடியது தொல்காப்பியம். இத்தொல்காப்பியம் சிற்றிலக்கியம், பேரிலக்கியம், மொழியியல் போன்ற பலவற்றிற்கும் தோற்றுவாயாக இருக்கும்போது அகராதிக் கும் தோற்றுவாயாக இருக்கிறதா? என்றால் இருக்கிறது என்று தான் கூறவேண்டும். அகராதி என்பது சொல்லுக்குப் பொருள்

கூறும் நூல் என்பதை நாம் முன்னமே கண்டோம். நிகண்டுக்கு வழங்கப்பட்ட உரிச்சொல் என்னும் சொல்லே தொல்காப்பியத்தி லிருந்து பெறப்பட்டதுதான். தொல்காப்பியத்திலுள்ள இடையிய லும் உரியியலும் முழுக்க முழுக்க அகராதிக்கான கூறுகளைக் கொண்டு விளங்குகின்றன.

"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை" (தொல். சொல். 298:1)

என்று தொடங்கும் உரியியலின் முதல் நூற்பாவில் 'உரிச்சொல்' என்ற சொல் பயின்று வந்துள்ளமையை அறிந்து கொள்ளலாம். தொல்காப்பியர் காலத்தில் இவ்விரு இயல்களில் மட்டும் அகராதிக் கான கூறுகள் ஏன் இருக்க வேண்டும்? பெயரியல், வினைவியல் முதலான மற்ற இயல்களில் அகராதிக்கான கூறுகள் இல்லையா? இடையியல், உரியியல் தவிர்த்த ஏனை இயல்களில் அகராதிக்கான கூறுகள் இல்லாமலில்லை. தொல்காப்பியரின் காலத்தில் சொல்லுக் குப் பொருள் கூறும் முறை இருந்தது. இருப்பினும் அன்று அனைத்துச் சொல்லுக்கும் பொருள் கூறவேண்டிய அவசியமில்லை. வெளிப்படையாகப் பொருள் தெரிகின்ற சொற்களுக்குத் தனியாகப் பொருள் கூறும்முறை அவர் காலத்தில் இல்லை. அதனால்தான்,

"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன" (தொல்.சொல்.299)

என்ற நூற்பாவைத் தொல்காப்பியர் படைத்துள்ளார். மற்ற இயல் களில் அகராதிக்கூறுகள் உள்ள நூற்பாக்களின் பொருள் விளக்கம் பின்னர்த் தரப்படும். எனவே, தொல்காப்பியம் அனைத்துத் துறை களுக்கும் முன்னோடியாகத் திகழ்கின்றது என்றால் மிகையாகாது.

தமிழில் சொற்பொருள் கூறும் முறை (துறை) முதன்முதலில் தொல்காப்பிய உரியியலில் காணப்படுகின்றது. பிற்காலத்தில் தோன்றிய சொற்பொருள் விளக்கும் நூல்கள் உரிச்சொற்களுக்கு மட்டுமல்லாமல், எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறப்பட்டன. இருப்பினும் அவற்றிற்கு உரிச்சொல் அல்லது உரிச்சொல் பனுவல் என்றே பெயரிடப்பட்டது. வைதிகச் சொற்களுக்குப் பொருள் கூறு கின்ற நூலுக்கு நிகண்டு எனப் பெயரிட்டது போல், அனைத்துச்

சொற்களுக்கும் பொருள் கூறும் நூலுக்கும் நிகண்டு என்றே பெயரிடப்பட்டது.

பிங்கலம் என்னும் நிகண்டின் சிறப்புப் பாயிரத்திலும் நூலின் இறுதியிலும் 'உரிச்சொல் பனுவல்' என்னும் வழக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் இடையியல், உரியியல் என்னும் இரண்டில் மட்டும்தான் அகராதிக்கான கூறுகள் இருக்கின்றனவா? மற்ற இயல்களில் அகராதிக் கூறுகள் இல்லையா? என்னும் வினாக்கள் நம்முன் எழுதல் இயல்பு. தொல்காப்பியத்திலுள்ள மற்ற இயல்களிலும் அகராதிக்கான கூறுகள் இருக்கின்றன. எனினும் முழு நிலையில் இயல் முழுவதுமே அகராதிக்கான கூறு கள் இருக்கின்றன என்று சொல்ல முடியாது. ஓரளவிற்கு இருக் கின்றன என்று கூறலாம். அவ்வகையில் எந்தெந்த இயல்களில் அகராதிக்கூறுகள் இருக்கின்றன என்பதை இனிக் காண்போம்.

எழுத்ததிகாரம்

எழுத்ததிகாரத்திலுள்ள நூற்பாக்களில் சில சொல்லுக்குப் பொருள் கூறுவதாய் அமைந்துள்ளன. அவற்றை இயல் வாரியாகக் கீழே காணலாம்.

நூன்மரபு

தொல்காப்பியத்தின் முதல் இயல்தான் இந்த நூன்மரபு. இதில் அகராதிக்குரிய கூறுகள் சில உள்ளன. அவற்றைக் கீழே காணலாம்.

ஆய்தம்

"ஆய்தம் என்ற– முப்பாற் புள்ளி" (தொல். 2: 2,3)

இந்நூற்பாவில் ஆய்தம் என்ற சார்பெழுத்து மூன்று புள்ளி களை (ஃ) உடைய எழுத்தினைக் குறிக்கும் என்பது சுட்டப் பட்டுள்ளது. ஆய்தம் என்பதற்கு இதே பொருளைத்தான் தமிழ் தமிழ் அகரமுதலி (த.த.அ.)யிலும் காணமுடிகிறது.

சான்று

ஆய்தம்: மூன்று புள்ளி (ஃ) வடிவினதாகிய ஓரெழுத்து

(த.த.அ., ப.87)

மாத்திரை

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை" (தொல். 7:1)

மாத்திரை என்பது இங்கு எழுத்துக்களை ஒலிக்கின்ற கால அளவைக் குறிக்கும். அதாவது ஒரு மாத்திரை அளவு என்பது கண்ணை இயற்கையாக இமைக்கும் நேரமும் கையினை இயல்பாக நொடிக்கும் நேரமுமே ஆகும். இதனையே க்ரியா அகராதியும் கூறு கின்றது.

மாத்திரை 2 பெ. (இலக்.) (எழுத்தை உச்சரிக்கும் கால அளவைக் குறிக்கையில்) கண் இமைக்கும் அல்லது விரலைச் சொடுக்கும் நேரம் (ப. 823)

மெய்

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையில்" (தொல். 15)

மெய்யெழுத்தின் இயல்பானது புள்ளிபெற்று இருப்பதாகும். புள்ளி என்பதற்கும் ஒற்று என்பதற்கும் ஒரே பொருள்தான். இதையே தான் நா. கதிரைவேற்பிள்ளையின் அகராதியும் கூறு கின்றது. (ப.கககஅஅ).

மெய்– உடல், இது பஞ்சப்பொறியினொன்று, உண்மை, ஒற்றெழுத்து, சொல், சொற்பொருள்.

சுட்டு (சுட்டெழுத்து)

"அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு" (தொல். 31)

சுட்டு அல்லது சுட்டெழுத்துக்கள் என்பவை அ, இ, உ என்னும் இம்மூன்றும்தான் என்கிறார் தொல்காப்பியர். இதை அமைப்பு 1 வகை அகராதியில் பார்க்க வேண்டுமானால் தொகையகராதி என்னும் பகுதியில் சென்று பார்க்க வேண்டும். அமைப்பு 2

அகராதியில் அச்சொல்லிருக்கும் இடத்தை நோக்கினால் போதும். இந்நூற்பாவின் கருத்தைக் கூறும் விதமாகத் தமிழ் தமிழ் அகர முதலியும் பொருள் கூறியுள்ளது (1985:478).

சுட்டெழுத்து சுட்டி உணர்த்தும் அ, இ, உ என்னும் எழுத்துக்கள்.

வினா (வினாவெழுத்து)

"ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா" (தொல்.32)

வினாவெழுத்துக்களாக ஆ, ஏ, ஓ என்னும் மூன்று எழுத்துக்கள் உள்ளன என்கிறார் தொல்காப்பியர். காலப்போக்கில் மொழியின் வளர்ச்சியால் இன்னும் சில எழுத்துக்களும் வினா எழுத்துக் களாக உள்ளன என்பதைத் தமிழ் தமிழ் அகரமுதலி விளக்குகின்றது (1985 :989).

வினாவெழுத்து– சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வந்து வினாப் பொருள் தரும் எழுத்துக்களான எ, யா, ஆ, ஓ, ஏ என்பன.

மொழி மரபு

மொழிமரபு என்னும் இயலில் அகராதியைச் சுட்டும் நூற் பாக்கள் அதிகம் இல்லை. மொழிமரபில் 10வது நூற்பாவை மட்டும் அகராதிக் கூறுடையதாகக் கருதலாம்.

ஓரெழுத்தொரு மொழி

"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி"

இந்நூற்பா ஓரெழுத்து ஒருமொழியாகும் உயிர் எழுத்துக் களைப் பற்றிப் பேசுகிறது. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு உயிர்நெடில் எழுத்துக்களும், தனித்து நின்று பொருள் தரக் கூடியவை என்று மொழிகிறது தொல்காப்பியம்.

புணரியல்

பிறப்பியலில் அகராதிக் கூறுகளைக் கொண்ட நூற்பாக்கள் எதுவுமில்லை. ஆதலால் புணரியிலிலுள்ள நூற்பாவில் அகராதிக் கூறுகளை இங்குக் காணலாம்.

எழுத்துச்சாரியை

"காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை" (தொல். 135)

இது எழுத்துச் சாரியையாகக் காரம், கரம், கான் என்னும் மூன்றும் உள்ளன என்பதைக் குறிக்கிறது. இக்கருத்தையே தமிழ் தமிழ் அகரமுதலியும் சொல்கிறது (1985:202).

"எழுத்துச்சாரியை–எழுத்துக்களைச் சொல்லுகின்றபோது

சேர்க்கப்படுகிற சாரியைச் சொற்கள்: கரம், காரம், கான் போன்றவை" தொல்காப்பியம் காரத்தை முன்சொல்லிக் கரத்தைப் பின் வைக்கிறது. ஆனால் இவ்வகராதி கரத்தையடுத்துக் காரத்தைச் சொல்லுகிறது. கான் இரண்டிலும் மூன்றாவதாகவே உள்ளது. வைப்பு முறையில் மட்டுமே மாற்றம் உள்ளது. எனினும் பொருள் ஒன்றே என்பது இங்குச் சுட்டத்தக்கது.

தொகை மரபு

தொகை மரபில் ஒரு நூற்பா மட்டுமே (தொல். 170) அகராதிக் கூறுடைய நூற்பாவாக அமைந்துள்ளது.

பனை, கா

"பனையென் அளவும் காவென் நிறையும்" (தொல். 170)

பனை என்பது இங்கு அளவுப் பெயரையும் கா என்பது நிறைப் பெயரையும் குறிக்கும் எனச் சுட்டியுள்ளது இந்நூற்பா. இதைத் தமிழ் ஒரு மொழி அகராதிகள் பனைக்குத் தனியாகவும் காவுக்குத் தனியாகவும் பொருள் கூறியுள்ளன.

பனை– ஒரு பேரளவு (த.த.அ. 741)

கா– ஒரு நிறையளவு (த.த.அ. 302)

உயிர் மயங்கியல்

உருபியலில் அகராதிக்கூறு இல்லாததால் உயிர் மயங்கியலில் உள்ள அகராதிக்கூறுகள் குறித்து இங்குப் பார்க்கப்படும். இவ்வியலில்

ஆறு நூற்பாக்கள் மட்டும் அகராதிக்கூறான சொல்லுக்குப் பொருள் கூறும் வண்ணம் அமைந்துள்ளன. பெரும்பாலும் அவை மரப்பெயரைக் குறிக்கும் சொற்களாகவே இருக்கின்றன. ஒரு நூற்பா மட்டும் ஐம்பூதத்துள் ஒன்றாகிய காற்றைப் பற்றி வருகிறது.

வளி

"வளியென வரூஉம் பூதக் கிளவி" (தொல். 243)

வளி என்பது ஐம்பூதங்களில் ஒன்று என்கிறது தொல்காப்பியம். ஆனால் இவ்வாறு பொருள் கூறாமல் 'வளி—காற்று' (1985 :951) என்று நேரடியாகவே பொருள் தருகின்றது தமிழ்—தமிழ் அகர முதலி.

உதி, புளி, ஒடு, சே, விசை

"உதிமரக் கிளவி" (தொல். 244)

"புளிமரக் கிளவி" (தொல். 245)

"ஒடுமரக் கிளவி" (தொல். 263)

"சேமரக் கிளவி" (தொல். 279)

"விசைமரக் கிளவி" (தொல். 283)

உதி, புளி, ஒடு, சே, விசை என்பவை மரத்தின் பெயர்களைக் குறிக்கின்ற சொற்கள் என்பது இந்நூற்பாக்களின் பொருளாகும். இச்சொற்களுக்குப் பல பொருள்களைத் த.த.அ. கூறியிருந்தாலும் இந்நூற்பாக்களில் கூறப்பட்டுள்ள பொருள்களோடு தொடர்புடையனவற்றை மட்டும் இங்கு எடுத்தாளப்படும்.

உதி — காண்க. ஒதி (ப. 157), ஒதி—ஒதிய மரம் (ப.222)

புளி — மரவகை (ப. 789)

ஒடு — ஒடு மரம்; நிலப்பாலை (ப. 221)

சே — சேமரக்கொட்டை; அழிஞ்சில் மரம் (ப. 509)

விசை— மரவகை (ப. 970)

புள்ளி மயங்கியல்

எழுத்ததிகாரத்தின் எட்டாவது இயலாகப் புள்ளி மயங்கியல் அமைந்துள்ளது. இவ்வியலின் நான்கு நூற்பாக்கள் சொல்லுக்குப் பொருள் கூறுவதாக உள்ளன. அவற்றைக் கீழே காணலாம்.

ஆண், அரை, எகின், குமிழ்

ஆண், அரை, எகின், குமிழ் என்னும் பெயரையுடைய மரங்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்துள்ளன. அவற்றைக் குறிக்கும் விதமாகத்தான், பின்வரும் நூற்பாக்கள் அமைந்துள்ளன.

"ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே" (தொல். 305)
"எகின் மரமாயின்" (தொல். 337)
"குமிழென் கிளவி மரப்பெய ராயின்" (தொல். 387)

தொல்காப்பியத்தைப் போலவே அகராதியும் பொருள் கூறியுள்ளதா? என்பதைக் காண்போம்.

ஆண் : ஆண்மரம் (த.த.அ., ப.80)

அரை : அரை மரம் (த.த.அ., ப.45)

எகின் : அன்னம்; கவரிமா; அழிஞ்சில் மரம்; செம்மரம்; புளியமரம்; நீர்நாய்; நாய் (த.த.அ., ப. 189)

குமிழ் : குமிழ மரம் (த.த.அ., ப. 350)

தொல்காப்பியத்தைப் போலவே த.த.அ.யும் பொருள் கூறியுள்ளதைக் காண முடிகிறது.

குற்றியலுகரப் புணரியல்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் இறுதி இயலாகக் குற்றியலுகரப் புணரியல் உள்ளது. இவ்வியலில் ஒரே நூற்பா மட்டும் சொல்லுக்குப் பொருள் கூறும் விதமாக அமைந்துள்ளது.

யா

"யாவினா மொழி" (தொல். 429)

அதாவது யா என்பது வினாவைக் குறிக்கும் சொல்லாக இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. யா என்னும் சொல்லுக்குத் த.த.அ. தரும் பொருளும் இதோடு ஒத்துப்போவதாக உள்ளது.

யா: ஓர் உயிரெழுத்து (ய்+ஆ) யாவை; ஓர் அசைச் சொல்; ஒரு மரவகை; அகலம் (ப.923)

சொல்லதிகாரம்

சொல்லதிகாரத்திலுள்ள இடையியல், உரியியல் முழுவதும் அகராதிக்கான கூறுகள் நிரம்பியுள்ளன என்பதை அனைவரும் அறிவர். அதனால் இவ்விரு இயல்களையும் தவிர்த்து ஏனைய இயல்களில் அகராதிக்கூறுகள் இருக்கின்றனவா? என்பதை ஆராய்வதாக இப்பகுதி அமைந்துள்ளது.

கிளவியாக்கம்

சொல்லதிகாரத்தின் முதல் இயல்தான் கிளவியாக்கம். இவ்வியலின் சில நூற்பாக்களில் அகராதிக்கூறுகள் காணப்படு கின்றன.

உயர்திணை; அஃறிணை

“உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே” (தொல்.சொல்.1)

உயர்திணைக்குரியவர்கள் மக்கள் என்றும் அஃறிணை என்பது மக்கள் அல்லாததைக் குறிக்கும் என்றும் தொல்காப்பியம் செப்புவதைக் காணமுடிகிறது. த.த.அ. கூறும் இச்சொற்களுக்கான பொருள் விளக்கம் தொல்காப்பியத்தை ஒத்துள்ளது என்பதைக் கீழே காணலாம்.

உயர்திணை– உயர்வாகிய சாதி; மேற்குலம், உயர்ந்த குலம், மானிடர்; தேவர், நரகர் ஆகியோரைக் குறிக்கும் சொல் (ப. 163)

அஃறிணை (அல்+திணை)– உயர்திணையல்லாதவை;

> பகுத்தறிவற்ற உயிர்களும் உயிரற்றனவும்;
> மக்கள், தேவர், நரகர் அல்லாத மற்ற
> பொருள்கள் (ப.1)

மேற்சுட்டிய கருத்தை இவை நிரூபிக்கின்றன. தேவர், நரகர் ஆகியோர் இக்காலத்தில்தான் உயர்திணையில் வைக்கப் பட்டுள்ளனர்.

வண்ணச்சினைச்சொல்

> "அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை
> நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்" (சொல்.26)

வண்ணச்சினைச்சொல் என்பதில் அடை, சினை, முதல் என்னும் மூன்றும் வெளிப்படையாகச் சேர்ந்து வரும். இக்கருத்து ஒருமொழி அகராதிகளில் காணப்படவில்லை. எனினும் தொல்காப்பியர் சொல்லுக்குப் (வண்ணச்சினைச்சொல்) பொருள் கூறுவதைப் போலத்தான் இந்நூற்பாவைப் படைத்துள்ளார் என்பதில் ஐய மில்லை.

மூவிடம்

> "தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
> அம்மூ விடத்தும் உரிய என்ப" (சொல்.28)

மூன்று இடங்களாகத் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன சுட்டப் படுகின்றன. அமைப்பு ஒன்று அகராதியில் தொகையகராதி என்னும் பகுதியில் மட்டுமே மூவிடம் என்ற சொல்லிற்கான பொருளைப் பார்க்க முடியும். அமைப்பு இரண்டில் அச்சொல் இடம்பெறும் இடத்தினிலே அதன் பொருளைக் காணமுடியும்.

மூவிடம்-தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடங்கள் (த.த.அ.ப. 908)

யாது

> "யாதுஎன வரூஉம் வினாவின் கிளவி" (சொல்.32)

யாது என்னும் சொல் வினாவைக் குறிக்க வரும் சொல் என்று தொல்காப்பியம் சொல்கிறது. இவ்வாறே நா. கதிரைவேற் பிள்ளை யின் அகராதியும் கூறுகிறது.

யாது–அஃறிணைப் படர்க்கை ஒருமை வினா, இராக்கதர்கள்
(ப. 1222)

இரட்டைக்கிளவி

"இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா" (சொல்.48)

இரட்டைக்கிளவி என்பதைத் தனித்தனியே பிரித்தால் பொருள் தராது. பிரிக்காமல் சேர்த்தே பயன்படுத்தினால்தான் பொருள் தரும் என்கிறார் தொல்காப்பியர். இக்கருத்தோடு த.த.அ.யும் உடன் படுகிறது.

இரட்டைக்கிளவி- ஒலிக்குறிப்பில் வரும் இரட்டைமொழி;
இரட்டையாக நின்றே பொருள் உணர்த்துஞ் சொல்
விறுவிறுப்பு என்றாற் போல வருவது (ப.117)

வேற்றுமையியல்

சொல்லதிகாரத்தின் இரண்டாவது இயலாக வேற்றுமையியல் உள்ளது. இவ்வியல் வேற்றுமைகளின் எண்ணிக்கையையும் அவற்றின் பொருள் பாகுபாடு பற்றியும் பேசுகிறது. இவ்வியலிலும் அகராதிக் கூறுடைய நூற்பாக்கள் சில உள்ளன. இவ்வியலில் வேற்றுமை உருபுகள் எந்தெந்த வேற்றுமைக்குரியன என்பதைக் கூறும் விதமாக அமைந்துள்ளதைத்தான் அகராதிக்கூறுடைய நூற்பாக்கள் என்று இங்குச் சுட்டப்படுகின்றது.

"எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே" (சொல். 65)

"இரண்டா குவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (சொல். 71)

"மூன்றாகுவதே,
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (சொல்.73)

"நான்கா குவதே
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (சொல். 75)

"ஐந்தா குவதே

இன்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (சொல். 77)

"ஆறா குவதே

அதுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (சொல். 79)

"ஏழா குவதே

கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (சொல். 81)

முதல் வேற்றுமையிலிருந்து ஏழாம் வேற்றுமை வரைக்கும் உருபுகள் முறையே பெயர், ஐ, ஒடு, கு இன், அது, கண் எனச் சுட்டிக் கூறப்பட்டுள்ளன. இந்த உருபு இந்த வேற்றுமைக்கு உரியதுதான் என்ற பொருளை இன்றைய அகராதிகளும் தொல்காப்பியம் சுட்டியது போலவே சுட்டுகின்றன.

எழுவாய் வேற்றுமை- முதலாம் வேற்றுமை; பெயர் வேற்றுமை; பெயர் தோன்றிய துணையால் உருபும் விளியும் ஏலாது பிறிதொன்றனொடு தொகாது நிற்கும் நிலைமை (த.த.அ., ப. 204)

ஐ- ஒன்பதாம் உயிரெழுத்து; முன்னிலையொருமை விகுதி; சாரியை; தொழிற்பெயர் விகுதி; பண்புப் பெயர் விகுதி; வியப்பிடைச்சொல்; இரண்டாம் வேற்றுமை உருபு; ... (த.த.அ., ப.215)

ஒடு- ஒருமரம்; நிலப்பாலை; முதுபுண்; புடைகொண்ட புண்; எண்ணுப் பொருளில் வரும் ஓரிடைச் சொல்; காண்க; ஒடுக்கட்டி; மூன்றாம் வேற்றுமை யுருபு (த.த.அ., ப.221)

கு- ஓர் உயிர்மெய்யெழுத்து (க்+உ); நான்கனுருபு; ஒரு சாரியை; பண்புப்பெயர் விகுதி;... (த.த.அ., ப.334)

இன்- இனிய; ஐந்தாம் வேற்றமை உருபு; சாரியை; இறந்த கால இடைநிலை (த.த.அ., ப.142)

அது- அஃது; அஃறிணை ஒருமைச் சுட்டுப்பெயர்; ஆறாம் வேற்றுமை ஒருமையுருபு (த.த.அ., ப.27)

கண்- விழி; கண்ணோட்டம்; பீலிக்கண்; கணு; மரக்கணு, தொளை; மூங்கில்; முரசடிக்குமிடம்; மூட்டுவாய்; பெருமை; இடம்; ஏழனுருபு; அறிவு; பற்றுக்கோடு; உடம்பு; அசை; உடலூரக்கம் (த.த.அ., ப. 252)

இவற்றின் மூலம் தொல்காப்பியம் சொல்லுக்குப் பொருள் கூறிய விதமும் த.த.அ. பொருள் கூறும் விதமும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

விளிமரபு

வேற்றுமை மயங்கியலில் அகராதிக்கூறு இல்லை. அதனால் விளிமரபிலுள்ள அகராதிக்கூறுடைய நூற்பாவை இங்குக் காணலாம்.

அம்ம

"அம்ம என்னும் அசைச்சொல்" (சொல். 153)

'அம்ம' என்னும் சொல் அசைச்சொல்லாகும். அதாவது அசைச் சொல் என்பது பொருளில்லாமல் அசையின் பொருட்டுச் செய்யுளில் வரும் இடைச்சொல்லாகுமென்று தொல்காப்பியம் கூறுகிறது.

அம்ம—ஓர் உரையசைச் சொல் (த.த.அ. ப.33)

பெயரியல்

பெயரியலில் இரண்டு நூற்பாக்கள் மட்டுமே சொல்லின் பொருளைக் கூறுவதாக அமைந்துள்ளன.

சொல் (சொல்வகை)

"சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப வறிந்திசி னோரே" (சொல். 645)

"இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப" (சொல். 646)

சொல் என்பது முதலில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமாம். இவற்றின் வழியில் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தோன்று கின்றன. ஆக மொத்தம் நான்கு உள்ளன என்கிறார் தொல்காப்பியர். சொல் என்ற சொல்லுக்குத் த.த.அ. தரும் பொருளைக் கீழே பார்க்க லாம்.

> சொல்- மொழி; பேச்சு; பழமொழி; உறுதிமொழி; புகழ்; மந்திரம்; சாபம்; கட்டளை; புத்திமதி; பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நால்வகை மொழிகள்; ... (ப.516)

தொல்காப்பியர் சொல்லை வகைப்படுத்தியதைப் போலவே அகராதியும் வகைப்படுத்தியுள்ளது என்பதை அறியமுடிகிறது.

வினையியல்

சொல்லதிகாரத்தின் ஆறாவது இயலாக வினையியல் உள்ளது. இவ்வியலில் சில நூற்பாக்கள் சொல்லுக்குப் பொருள் கூறும் விதமாக அமைந்துள்ளன.

தாம், தான், நீ, ஒருவர்

> "தாமென் கிளவி பன்மைக் குரித்தே" (சொல். 187)
>
> "தானென் கிளவி ஒருமைக் குரித்தே" (சொல். 188)
>
> "நீயென் கிளவி ஒருமைக் குரித்தே" (சொல். 192)
>
> "ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
> இருபாற்கு முரித்தே தெரியுங் காலை" (சொல். 194)

தாம், தான், நீ, ஒருவர் என்னும் சொற்களுக்கு முறையே பன்மை, ஒருமை, ஒருமை, ஆண் பெண் என்னும் இருபால் பொதுமை ஆகிய பொருள்கள் தொல்காப்பியத்தில் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் தான், நீ என்பனவற்றிற்கு ஒருமை என்று சொல்லியிருக்கிறார் ஆசிரியர். எனினும் மூவிடங்களில் எதற்கு என்று சுட்டவில்லை. காரணம் அதைப் படிக்கையிலே புரிந்து விடும் என்பதால்தான் எனலாம். இச்சொற்களுக்குத் த.த.அ. என்ன பொருளைக் கூறுகிறது

என்று இப்பொபது காண்போம்.

தாம்– அவர்கள்; மரியாதை குறிக்கும் முன்னிலைச் சொல்; ஓரசைச்சொல்; ஒரு சாரியை; தாகம்; விலை (ப.560)

தான்– படர்க்கை ஒருமைப் பெயர்; தேற்றச் சொல்; அசைச்சொல்; முழுப்புடவை... (ப.566)

நீ– ஓர் உயிர்மெய்யெழுத்து (ந்+ஈ); முன்னிலை ஒருமைப் பெயர் (ப. 674)

ஒருவர்–ஓராள்; ஒருவன் என்பது ஒருத்தியைச் சிறப்புப் பற்றிப் பன்மையில் வழங்கும் பெயர்; மரியாதைப் பன்மை (ப.225)

இவற்றின் மூலம் தொல்காப்பியர் அச்சொற்களுக்குக் கூறிய பொருளைத் த.த.அ.யும் சுட்டியுள்ளது. எனவே, இவ்வியலின் மேற் சுட்டிய நூற்பாக்கள் அகராதிக் கூறுடையன என்பது தெளிவாகிறது.

எச்சவியல்

சொல்லதிகாரத்தின் இறுதி இயலாக எச்சவியல் அமைந்துள்ளது. இவ்வியலில் பத்துக்கும் மேற்பட்ட நூற்பாக்களில் அகராதிக் கூறான சொல்லுக்குப் பொருள் கூறும் உத்தி பின்பற்றப் பட்டுள்ளது.

இயற்சொல்

"இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே" (சொல்.398)

இயற்சொல் என்பதைச் செந்தமிழ் நிலத்தில் வாழும் மக்கள் பேசும் சொல் என்னும் பொருளில் தொல்காப்பியம் கூறியுள்ளது. இதே பொருளைத்தான் நா.கதிரைவேற்பிள்ளையின் அகராதியும் கூறியுள்ளது.

இயற்சொல்–இயற்றமிழ் வழக்குச் சொல் (ப.223)

அதாவது இயற்றமிழ் என்பதும் செந்தமிழ் (தொல். சொல். 398) என்பதும் ஒரே பொருளுடைய சொற்களாகும்.

திரிசொல்

"ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி" (சொல். 399)

திரிசொல் என்பது ஒருபொருள் குறித்த வேறு சொல்லும் வேறுபொருள் குறித்த ஒரு சொல்லும் உடையதாகும். இதனை இக்கால அகராதிகள் சுருக்கமாகச் செய்யுட்சொல் என்கின்றன.

திரிசொல்– செய்யுட்சொல் (நா.கதி.ப. 786)

திரிசொல்– செய்யுளில் மட்டும் வழங்கப்படுவதற்குரிய தமிழ்ச்சொல்; கற்றவர்க்கு மாத்திரம் பொருள் விளங்கும் சொல் (த.த.அ. ப.575)

திசைச்சொல்–

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி" (சொல். 400)

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்திலும் வழங்கும் தமிழ்ச்சொல்லே திசைச்சொல் என்கிறது தொல்காப்பியம். இச்சொல்லின் பொருளைச் சிறிதும் மாற்றாமல் அப்படியே த.த.அ. வழங்கியுள்ளது.

திசைச்சொல்– செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலப் பகுதிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல் (ப. 569)

வடசொல் குறித்துத் தொல்காப்பியர் பேசும்போது வட சொல்லை எப்படி மாற்றித் தமிழில் வழங்கலாம் என்றுதான் பேசியுள்ளார். ஆனால் வடசொல்லின் பொருள் பற்றிப் பேசாததால் இங்கு அதைப் பதிவு செய்யவில்லை.

நிரனிறை

"நிரனிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்" (சொல். 405)

நிரனிறைப் பொருள்கோளானது வினையாலும் பெயராலும் தோன்றி முடிக்கப்படும் சொல்லும் முடிக்குஞ் சொல்லும் வேறு வேறிடத்திலிருந்து பொருள் தருவதாகும். தொல்காப்பியர் காலத்தில் பொருள்கோள் நான்காக இருந்தது இன்று எட்டாக வளர்ந்துள்ளது என்பதை, அடிமறிக்கு அகராதி கூறிய பொருளின் மூலம் அறிய முடிகிறது. நிரனிறை என்ற சொல்லுக்கு அகராதி (த.த.அ.) கூறும் பொருளைக் கீழே காணலாம்.

நிரனிறை– ஒழுங்காக நிறுத்தல்; பொருள்கோள் நான்கனுள் நிறுத்த முறையே சொற்களை நிறுத்தல்.

சுண்ணம்

"சுண்ணம் தானே
பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்" (சொல். 406)

சுண்ணம் என்பது பொருள்கோள்களில் ஒன்றாகும். இது ஈரடி எண்சீர்களில் பொருள் முறையின்றிச் சொற்களை ஒட்டித் துணிந்து கூறுதலாகும். இச்சொல்லுக்குத் த.த.அ.யின் பொருளைக் கீழே காணலாம்.

சுண்ணம்– பொடி; நறுமணப்பொடி; பூந்தாது; மலர்; புழுதி; சதயநாள்; சுண்ணாம்பு; ஈரடி எண்சீரைப் பொருள் முறையின்றித் துணித்துச் செய்யுளியற்றும் முறை... (ப.479)

அடிமறி (அடிமறி மாற்று)

"அடிமறி செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை தியாது தடுமா றும்மே" (சொல். 407)

அடிநிலை மாறிச் சீர்நிலை திரிந்து வராமல் தடுமாறி வரக்கூடிய பொருள்கோள்தான் அடிமறியாகும். த.த.அ. அடிமறி மாற்று என்ற சொல்லில் பொருள் கூறுகின்றது. அடிமறி என்றாலும் அடிமறி மாற்று என்றாலும் பொருள் ஒன்றே.

அடிமறி மாற்று–பொருள்கோள் எட்டனுள் ஒன்று;
செய்யுளடிகளைப் பொருளுக்கு ஏற்றபடி
கொண்டுகூட்டுவது (ப.17)

மொழிமாற்று

"மொழிமாற் றியற்கை
சொல்நிலை மாற்றிப் பொருளெதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாவல்" (சொல். 409)

சொற்கள் பொருளியைபில்லாமல் நின்றால் பொருள் எதிர் வந்து பொருந்தும் வண்ணம் முன்னும் பின்னும் சொல்நிலையை மாற்றிப் பொருள் கொள்ளுவதே மொழிமாற்றாகும் என்கிறது தொல்காப்பியம். த.த.அ.யும் இப்பொருளையே கூறுகின்றது என்பதைப் பின்வரும் சான்றால் அறியலாம்.

மொழிமாற்று– ஏற்ற பொருளுக்கு இயையுமாறு மொழி
களை மாற்றிப் பொருள் கொள்ளுதல்
(ப.920)

எச்சம்

பிரிநிலை, வினை, பெயர், ஒழியிசை, எதிர்மறை, உம்மை, என, சொல் என்னும் எச்சங்களுக்குத் தொல்காப்பியர் பொருள் கூறியுள்ள முறை அகராதியைப் போல உள்ளது. இங்குத் தனித் தனியே தலைப்பிட்டு விளக்கினால் விரிவாகப் போகும் என்பதால், எச்சம் என்னும் ஒரே தலைப்பின்கீழ்ச் சொல்லப்படுகிறது.

"பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின" (சொல். 431)

"வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே" (சொல். 432)

"பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே" (சொல். 433)

"ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின" (சொல். 434)

"எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின" (சொல். 435)

"உம்மை எச்சம் இருவீற் றானுந்
தன்வினை ஒற்றிய முடிபா கும்மே" (சொல். 436)

"எனவென் எச்சம் வினையொடு முடிமே" (சொல். 438

"சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே" (சொல். 441)

பிரிநிலையெச்சமானது பிரிக்கப்பட்ட பொருள் தன்னையே கொண்டு முடியும் எச்சமாகும். வினையெச்சமானது வினையையும் வினைக்குறிப்பையும் கொண்டு முடியும். பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சமாகும். ஒழியிசைப் பொருளைக் கொண்டு முடிவது ஒழியிசை எச்சமாகும். எதிர்மறையில் முடிவது எதிர்மறையெச்சம். உம்மை எச்சம் என்பது தானும் தன்னால் தழுவப் பட்டதுமான இரண்டும் ஒன்றிய வினையைக் கொண்டு முடிவதாகும். எனவென நின்ற எச்சம் வினையை மட்டுமே கொண்டு முடியும். சொல்லெச்சம் என்பது முன்னும் பின்னும் சொல்லென்னும் சொல்லைக் கொண்டு முடிவதாகும். இசை, குறிப்பு என்னும் எச்சங்களைத் தொல்காப்பியர் வகையில் சொல்லி யிருந்தாலும் அவற்றிற்கான விரியில் பொருளேதும் கூறவில்லை. இவையிரண்டும் தவிர்த்த மற்ற எச்சங்களுக்கு நா. கதிரைவேற் பிள்ளையின் அகராதி தரும் பொருள் விளக்கத்தை இனிக் காண்போம்.

பிரிநிலையெச்சம்– பிரிநிலையாக்குமோரெச்சம் (உ.ம் அவனோ கொண்டான் (ப.1044)

வினையெச்சம்– பிறிதோர் வினையொடு முடிய அவாவி நிற்கும் வினைச் சொல், இதில் தெரிநிலை வினையெச்சம் செய்து, செய்பு முதலிய வாய்ப்பாட்டால் வருவன, குறிப்பு வினை யெச்சம் அன்றி, இன்றி முதலியன (ப.1315)

பெயரெச்சம்– பெயரையவாவி நிற்குஞ்சொல், அது அகரமும் உம்முமாகிய இரு விகுதிகளையும் பெற்று கருத்தா காரணம் இடம் காலம் செயல் செயப்படுபொருள் எனு மாறனுள் ஒன்றைக் கொண்டு முடியும் (ப. 1084).

ஒழியிசை, ஒழியிசையெச்சம்– ஒழிந்து நிற்குஞ் சொற்களைக் கொண்டு முடிவது (ப. 349)

எதிர்மறையெச்சம்– எதிர்மறுப்பைக் காட்டுமெச்சம் (உ.ம்) அவனோ கொண்டான் (ப. 322)

பொருளதிகாரம்

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களில் இறுதியாக இருப்பது பொருளதிகாரமாகும். இவ்வதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் இருக்கின்றன. இவ்வியல்களில் ஆறாவது இயலாக உள்ள மெய்ப்பாட்டியலில் ஒரு நூற்பா கூட அகராதிக் கூறுடையதாக இல்லை. ஏனைய இயல்களில் அகராதிக்கூறுடைய நூற்பாக்கள் உள்ளன. எனினும் சொல்லதிகார இடையியல், உரியியல் போன்றே செய்யுளியலிலும் அகராதிக்கூறுடைய நூற்பாக்கள் ஐம்பதுக்கும் மேலுள்ளன. மரபியலில் பத்துக்குமேற்ற நூற்பாக்கள் சொற் பொருள் கூறும் முறையிலேயே அமைந்துள்ளன.

அகத்திணையியல்

அகத்திணையியல் பொருளதிகாரத்தின் முதலியல் ஆகும். இந்த இயலில் அகராதித் தொடர்பாக ஒரு நூற்பா மட்டுமே உள்ளது. அது உள்ளுறை என்பதற்கான பொருளைப் பற்றிப் பேசுகிறது.

உள்ளுறையுவமம்

"உள்ளுறுத் திதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் துரைப்பது உள்ளுறை யுவமம்" (பொருள்.51)

உள்ளுறையுவமம் என்பது உள்ளுறுத்தப்பட்ட கருப்பொருளின் மேல் ஏற்றிக் கூறவந்த பொருளைக் குறிப்பாக உரைப்பதாகும்.

இப்பொருளோடு அகராதியின் பொருளும் ஒத்துள்ள நிலையைக் கீழே காணலாம்.

உள்ளுறையுவமம்– வெளிப்படையல்லாத உவமம், வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பாகக் கருப்பொருண் மேல் ஏற்றிக் கூறும் உவமம் (த.த.அ., ப. 177)

கைக்கிளை

"காமம் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே' (பொருள். 53)

கைக்கிளை என்பதற்குக் கலைக்களஞ்சிய விளக்கம் போலப் பொருள் கூறியுள்ளார் தொல்காப்பியர். அதாவது கைக்கிளை என்பது காமம் என்பதே அமையாத சிறுமியிடம் ஏமம் அமையாத துன்பம் எய்தி, புகழ்தலும் பழித்தலுமாகிய இருதிறத்தால், தனக்கும் அவளுக்கும் ஒத்தன புணர்த்து, சொல் எதிர்பெறானாய்த் தான் மட்டுமே சொல்லி இன்புறுவான். இவ்வாறு பொருந்தித் தோன்றுவது இது. ஆனால் இன்றைய அகராதிகள் கைக்கிளை என்பது தொல்காப்பியம் போலக் களஞ்சிய விளக்கமாகத் தருவதில்லை. சுருக்கமாகவே அவை பொருள் தருகின்றன.

கைக்கிளை– ஒருதலைக் காமம்; ஐந்து விருத்தச் செய்யுளால் ஒருதலைக் காமத்தைப் பற்றிக் கூறும் நூல் வகை; ஏழிசையில் மூன்றாவதாகிய காந்தார சுரம்; மருட்பா (த.த.அ., ப. 375)

புறத்திணையியல்

இவ்வியல் புறப்பொருள் தொடர்பான செய்திகளைப் பேசிச் செல்வதால் புறத்திணையியல் எனப் பெயர் பெற்றது.

புறத்திணைகளை விளக்கும் முறை சொல்லுக்குப் பொருள் தருவ தாகவே உள்ளது.

வெட்சி

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்"

'மேவற்று' என்பது வெட்சி என்ற திணையைக் குறிக்கும். அதாவது முன்னால் சொல்லப்பட்ட நூற்பா வெட்சிக்குரியது. மீண்டும் அப்பெயரைச் சுட்ட வேண்டாமென்று கருதிய தொல்காப்பியர் அதைக் குறிக்க மேவற்று என்ற சொல்லைப் பயன் படுத்தியுள்ளார். வேந்தனால் விடப்பட்ட முனைஞர்கள் பகைவர் களின் ஆனிரைகளைக் கவர்ந்து வரும் புறத்திணைக்கு வெட்சி என்று பெயர் என மொழிகிறது தொல்காப்பியம். இதற்குத் த.த.அ. கூறும் பொருளும் இதோடு ஒத்துப் போகிறது.

வெட்சி– வெட்சிச்செடி, பகைவர் ஆனிரையைக் கவர்தலைக் கூறும் புறத்துறை (ப. 995)

வஞ்சி

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"
(பொருள். 64: 2,3)

மண்ணாசையின் பொருட்டு இருபெருவேந்தரும் போர் செய்யும் புறத்திணையே வஞ்சி என்கிறது தொல்காப்பியம். த.த.அ.யும் இப்பொருளையே சொல்கிறது.

வஞ்சித்திணை–புறத்திணையுள் மண்கொள்ளப் பகைவர்மேற் செல்வதைக் கூறுவது (ப.932)

உழிஞை

"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்கு ஆகும் என்ப" (பொருள். 66: 2,3)

முழுமுதல் காரணத்தை முற்றிலும் அழித்தலுமே உழிஞைத் திணை

யாகும் என்கிறது தொல்காப்பியம். த.த.அ.யில் இச்சொல்லுக்கு வழங்கியிருக்கும் பொருளை இவண் காண்போம்.

உழிஞை— சிறுபூளை; கொற்றான்; பகைவரது அரணை வளைப்போர் சூடும் மாலை; உழிஞைத் திணை (ப. 175)

தும்பை

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப" (பொருள். 70: 2,3)

தும்பைத்திணை என்பது வலிமையின் பொருட்டுப் போர்கருதி வந்த பகையரசனிடம் சென்று அவனைத் தலையழிக்கும் சிறப்புடையதாகும். த.த.அ. இச்சொல்லுக்குப் பின்வருமாறு பொருள் தருகிறது.

தும்பைத்திணை— பெருவீரச் செயல் காட்டிப் பகைவரோடு போர் செய்தலைக் கூறும் பகுதி (ப. 595)

வாகை

"தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப" (பொருள். 73: 2,3)

வாகைத்திணை என்பது கேடில்லாக் கோட்பாட்டினையுடைய தத்தமக்கு உள்ள இயல்பினை வேறுபட மிகுதிப்படுத்தல் என்பர் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அதாவது பகையரசரை வெல்லுதலாம். இச்சொல்லுக்கு (வாகை) த.த.அ. தரும் பொருளை இங்குப் பார்ப்போம்.

வாகை— மரவகை; கருவாகை; அகத்தி; வெற்றியாளர் அணியும் மாலை; வெற்றி; பகையரசரைக் கொன்று வகைப்பூச் சூடி வெற்றியில் ஆரவாரிப்பதைக் கூறும் புறத்துறை;... (ப.955)

காஞ்சி

"பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்

நில்லா உலகம் புல்லிய நெறித்தே" (பொருள்.76: 2,3)

காஞ்சித்திணை என்பது பாங்காதல் அரிய சிறப்பினால் பல நெறியாலும் நிலையில்லாத உலகத்தைப் பொருந்திய நெறிறை யுடையதாகு மென்று தொல்காப்பியம் கூறுகின்றது.

காஞ்சித்திணை– வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமைகளைச் சாற்றும் புறத்திணை; வீரன் காஞ்சி மலர்மாலை அணிந்து பகைவர் முன் எதிரூன்றி நிற்றலைக் குறிக்கும் புறத்திணை (ப. 304)

என்று த.த.அ. விளக்கம் தருகிறது. இவ்விரு விளக்கங்களும் ஒத்துப் போகின்றமையை அறியமுடிகிறது.

பெருமங்கலம் மண்ணுமங்கலம்

"பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்" (பொருள் 88: 8–9)

அரசன் தன்னுடைய பிறந்த நாளில் குடிமக்களுக்கு அருள் செய்வதைக் கூறம் புறத்துறை பெருமங்கலமென்றும், அரசன் முடிபுனைந்ததிலிருந்து ஆண்டுதோறும் முடிபுனையும் வழி நிகழும் மிகப்புண்ணிய நீராடுதலைக் கூறும் புறத்துறை மண்ணு மங்கலம் என்றும் தொல்காப்பியம் சுட்டுகின்றது. இப்புறத்துறை களுக்குத் த.த.அ. கூறும் விளக்கமும் தொல்காப்பியத்தோடு பொருந்திப் போகின்றது என்பதைக் கீழ்வரும் சான்றுகள் மூலம் அறியலாம்.

பெருமங்கலம்– வாழ்த்துப்பாடல்; நன்னாள்; அரசன் தன் பிறந்த நாளில் குடிகட்கு அருள் செய்வ தைக் கூறும் புறத்துறை; அரசனது பிறந்த நாள் மங்கலத்தைக் கூறம் நூல் (ப. 807)

மண்ணுமங்கலம்– அரசன் முடிபுனைந்த காலந்தொடங்கி ஆண்டுதோறும் முடிபுனைந்து நன்னீராடு தலைக் கூறும் புறத்துறை (ப. 842)

களவியல்

களவியல் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயலாகவுள்ளது. இவ்வியல் தலைவன், தலைவியின் களவு கால நிகழ்ச்சிகளை விரிவாகப் பேசிச் செல்கிறது. அதனால்தான் களவியல் என்னும் பெயர் பெற்றது. இவ்வியலில் ஒரு நூற்பா மட்டுமே சொல்லுக்குப் பொருள் கூறுவதாய் அமைந்துள்ளது.

தோழி

"தோழி தானே செவிலி மகளே" (பொருள்.123).

உறவுமுறையைக் குறித்து இந்நூற்பா பேசிச் செல்கிறது. அதாவது தோழி என்பவள் செவிலியின் மகளாவாள் என்று தொல்காப்பியம் அன்றே கூறியுள்ளது. உறவுமுறையில் மாற்றம் பெரும்பாலும் நிகழாது எனலாம். அதனால்தான் இக்கால அகராதியான த.த.அ.யும் இதே பொருளையே சுட்டுகின்றதை அறிய முடிகிறது.

தோழி– பாங்கி; பணிசெய்பவள்; செவிலித்தாயின் மகள்;
தேவி; அரக்கு (ப. 630)

கற்பியல்

தலைவன், தலைவி இருவரும் மணம் முடித்து வாழும் வாழ்க்கையே கற்பாகும். மணவாழ்வைப் (கற்பு) பற்றிச் சொல்வதால் இவ்வியல் கற்பியல் எனப் பெயர் பெற்றது. கற்பியலில் கற்புக்குப் பொருள் கூறும் ஒரு நூற்பா மட்டுமே அகராதிக் கூறுடையதாகக் காணப்படுகிறது.

கற்பு

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குறி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"
(பொருள். 140)

கற்பு என்பதற்குப் பொருளை வரையறுக்கிறது தொல்காப்பியம். அதாவது கற்பென்பது கரணத்தொடு பொருந்திப் பெறுதற்குரிய மரபினையுடைய தலைவன் கொடுத்தற்குரிய மரபினையுடையவர்கள் தலைவியைக் கொடுக்கக் கொள்வதாகும். கற்புக்குத் த.த.அ. தரும் பொருளை இனிக் காணலாம்.

கற்பு– மகளிர் கற்பு; களவுக் கூட்டத்துக்குப் பின் தலைவன் தலைவியை முறைப்படி மணந்து இல்லறம்புரியும் ஒழுக்கம்; கற்பின் அடையாளமான முல்லை; கல்வி; தியானம்; ஆணை; கதி; உறுதி; புரிசை; மதிலண் மேடை; நீதிநெறி; கற்பனை (ப. 296)

பொருளியல்

பொருளதிகாரத்தின் ஐந்தாவது இயலாகப் பொருளியல் உள்ளது. பொருளியலிலும் ஒரு நூற்பா மட்டுமே அகராதிக் கூறுடையதாகக் காணப்படுகிறது.

இறைச்சி

"இறைச்சி தானே உரிபுறத் ததுவே" (பொருள். 225)

இறைச்சிப்பொருள் என்பது உரிப்பொருளின் புறத்தாகிய கருப் பொருளில் தோன்றும் பொருளாகும். இறைச்சி, இறைச்சிப் பொருள் இவையிரண்டிற்கும் த.த.அ.தரும் பொருள் தொல்காப்பியத்தோடு ஒன்றுகிறது.

இறைச்சி– மாமிசம்; இறைச்சிப்பொருள்; கருப் பொருள்; விருப்பமானது (ப.141)

இறைச்சிப் பொருள்– கருப்பொருளினுள்ளே கொள்ளும் பொருள்; புறத்துச் செல்லும் குறிப்புப் பொருள் (ப.141)

உவமையியல்

உவமையியல் மூன்று நூற்பாக்கள் அகராதிக் கூறுடையன வாகக் காணப்படுகின்றன. இவ்வியல் உவமை தொடர்பாகவுள்ள

அனைத்துச் செய்திகளையும் பேசுகின்றது.

உவமை

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்" (பொருள். 272).

"உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்" (பொருள். 279).

உவமை என்பது ஒரு பொருளை ஒப்புமைப்படுத்த உதவும் உத்தியாகும். இதில் உவமமும் பொருளும் ஒத்து இருக்க வேண்டும். வினை, பயன், மெய், உரு என்னும் நான்கு வகைகளில் உவமை யானது தோன்றிவரும் என்கிறார் தொல்காப்பியர். மேற்கூறிய இரண்டு நூற்பாவும் உவமை என்பதற்குப் பொருள் கூறுவனவாய் அமைந்துள்ளன. 'உவமை' என்னும் சொல்லுக்கு த.த.அ. தரும் விளக்கமானது பின்வருமாறு உள்ளது.

உவமை– உவமம்; ஒப்புமை; உவமையணி; வினை, பயன், மெய், உரு என்பவை காரணமாக ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்புமை புலப்படப் பேசுகை (ப. 173)

உவமம் (உருவகம்)

"பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்" (பொருள். 280)

உவமிக்கும் பொருளை உவமமாக்கிக் கூறினாலும் மயக்க மில்லாச் சிறப்பு நிலைமையால் எய்துவது உவமமாகும் என்கிறது தொல்காப்பியம். இன்று இது வளர்ச்சியடைந்து உவமையின் ஒரு பிரிவான உருவகமாக மாறியுள்ளதை அறியமுடிகிறது. இப் பொருளை இன்று தமிழகராதியில் பார்க்க வேண்டுமானால் 'உவமம்' என்ற சொல்லில் பார்க்காமல் 'உருவகம்' என்ற சொல்லைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் பொருள் தெளிவாக இருக்கும்.

உருவகம்–

உவமான உவமேயங்களை ஒற்றுமைப்படக் கூறும் அணி
உருவகஅணி (த.த.அ., ப. 167)

இது இக்காலத்தில் அணியாக வளர்ச்சியடைந்துள்ளதை இதன் மூலம் அறியமுடிகிறது. தொல்காப்பியத்தில் உவம உருபுகளாக அன்ன முதல் புரைய வரை 36 சுட்டப்பட்டுள்ளன. இன்றைய தமிழ் அகராதிகளுள் ஒன்றான த.த.அ. உவமவுருபு என்பதற்கு 36 உருபுகளையும் கொடுக்காமல் மூன்றை மட்டும் கொடுத்துள்ளது.

உவமவுருபு– உவமானத்தைச் சார்ந்து ஒப்புமை விளக்கவரும் இடைச்சொல் அன்ன, ஒப்ப, ஏய்ப்ப என்றாற் போல வருபவை (ப.173)

செய்யுளியல்

செய்யுளை எப்படிப் படைப்பது என்பது தொடர்பான செய்திகளைக் கூறுவதால் இவ்வியல் செய்யுளியல் என்னும் பெயருடைய தாயிற்று. தொல்காப்பியத்தில் மிகவும் முக்கியமான இயலாக இது உள்ளது. இவ்வியலில் சொல்லுக்குப் பொருள் கூறு வதைப் போன்ற நூற்பாக்கள் அதிகம் உள்ளன.

செய்யுளுறுப்பு

"மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவாக எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
... ...
விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே" (பொருள்.310)

இந்நூற்பாவில் மாத்திரை முதல் இழைபு வரை 34 செய்யுளுறுப்புகள் உள்ளன என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அவர்

காலத்தில் அகராதியொன்று தோன்றியிருந்தால் 'செய்யுளுறுப்பு' என்னும் செல்வாக்கு இந்த முப்பது நான்கையும் கூறியிருக்கும். ஆனால் மொழி வளர்ச்சியின் காரணமாகச் செய்யுளுறுப்புகள் குறுகி ஆறாக உள்ளன. இதனைத் த.த.அ. மூலமே அறியலாம்.

செய்யுளுறுப்பு– எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் செய்யுளின் உறுப்புகள் (ப. 504)

இயற்சீர், உரிச்சீர்

"இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்" (பொருள். 321)

நேர், நிரை என்னும் இரண்டு அசைகளும் தங்களுக்குள் மயங்கி வந்தால் அதற்கு இயற்சீர் என்றும், நேர்பு, நிரைபு என்னும் அசைகள் தங்களுக்குள் மயங்கி வந்தால் அதற்கு உரிச்சீர் (அ) ஆசிரிய உரிச்சீர் என்றும் பெயர் சூட்டியுள்ளார் தொல்காப்பியர். த.த.அ.யும் இவரின் கருத்தையே ஆதரிக்கிறது.

இயற்சீர்– அகவல் உரிச்சீர் (ப.114)

அகவல் உரிச்சீர்– ஈரசை கொண்டு வரும் நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என்னும் சீர்வகை (ப.5)

உரிச்சீர்– மூவசைச்சீர் (ப. 165)

இவற்றுள் இயற்சீர் என்பதற்குத் த.த.அ. கொடுத்த விளக்கம் தொல்காப்பியத்தோடு பொருந்திப் போகிறது. ஆனால் உரிச்சீருக்குத் தரும் விளக்கம் மொழி வளர்ச்சியைச் சுட்டுகின்றது. ஏனென்றால் இக்காலத்தில் நேர்பு, நிரைபு என்னும் அசைகள் இல்லை. அதனால் தான் இவ்வகராதி 'மூவசைச்சீர்' என்று உரிச்சீருக்குப் பொருள் வழங்கியுள்ளது. எனவே இருவரின் கருத்துக்களும் அவரவர் காலத்தில் ஏற்கக் கூடியனவாகவே உள்ளன. இங்குச் சொல்லப்பட்ட உரிச்சீர் ஆசிரிய உரிச்சீராகும். இதன் பொருளும் வெண்பா உரிச்சீரின் பொருளும் ஒன்றுபோலத் தோன்றுகிறது. ஆசிரிய உரிச்சீர் என்பதற்கு நா. கதிரைவேற் பிள்ளையின் அகராதி அகவற்குரியசீர் (ப. 177) என்று கூறுகிறது. இப்பொருளே பொருத்தம் உடையதாகத் தோன்றுகிறது.

வெண்சீர் (அ) வெண்பா உரிச்சீர்

"இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப" (பொருள். 327)

இயற்சீராகிய நேர் நேர், நேர் நிரை, நிரை நேர், நிரை நிரை என்பவற்றின் பின் நேரசை வந்து நிற்கும் மூவசைச்சீருக்கு வெண்பா உரிச்சீர் என்று பெயர். நா. கதிரைவேற்பிள்ளை அகராதியும் தொல்காப்பியத்தோடு பொருந்திச் செல்கிறது.

வெண்சீர்– மூவசை நேரீற்றுச் சொல் (ப. 1323)

வஞ்சிச்சீர் (அ) வஞ்சியுரிச்சீர்

"வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை என்ப" (பொருள். 328)

வஞ்சிச்சீர் என்று சொல்லப்படுவது மேலே வெண்சீருக்குக் குறிப்பிடப்பட்ட வெண்பா உரிச்சீர் அல்லாத மூவசைச்சீர் என்று கூறுவர் என்கிறார் தொல்காப்பியர். நா. கதிரைவேற்பிள்ளையின் அகராதி வஞ்சியுரிச்சீருக்குப் பின்வருமாறு பொருள் விளக்கம் தருகிறது.

வஞ்சியுரிச்சீர்– நேரசையும் நிரையசையுந் தம்முள் விரவி மூன்றடுத்த நிரையசை முடிவு பெற்று நிற்பது (உ.ம்) தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங் கனி, கூவிளங்கனி (ப. 1243)

அடிகள்

தொல்காப்பியத்தில் அடிகள் ஐந்து வகையாகப் பகுக்கப் பட்டுள்ளன.

"நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்
தேறிய நிலத்தே குறளடி என்ப" (பொருள். 344).

"ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் அல்வழி யான" (பொருள். 345).

"பத்தெழுத் தென்ப நேரடிக் களவே

ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே" (பொருள் 346).

"மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப' (பொருள். 347).

"மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப' (பொருள். 348).

நான்கு முதல் ஆறெழுத்துக்களைக் கொண்ட அடி குறளடி என்றும், ஏழு முதல் ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட அடி சிந்தடி என்றும், பத்து முதல் பதினான்கு எழுத்துக்களைக் கொண்ட அடி நேரடி அல்லது அளவடி என்றும், பதினைந்து முதல் பதினேழு எழுத்துக் களைக் கொண்ட அடி நெடிலடி என்றும், பதினெட்டு முதல் இருபது எழுத்துக்களைக் கொண்ட அடி கழிநெடிலடி என்றும் வழங்கப் பெறும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. தொல்காப்பியரின் காலத்தில் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் கொண்டும் அடிகளுக்குப் பெயரிட்டுள்ளனர் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது. ஆனால் இக்காலத்தில் சீர்களைக் கொண்டுதான் அடிகளுக்குப் பெயரிட்டுள்ளனர் என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது. ஆனால் இக்காலத்தில் சீர்களைக் கொண்டுதான் அடியானது கணக்கிடப்படுகிறது. கீழ் வரும் அகராதிகளின் விளக்கம் இருக்கத்தை மெய்ப்பிக்கும்.

குறளடி– இருசீரான் வரும் அடி (த.த.அ., ப 360).

சிந்தடி– செய்யுள் முச்சீரடி (த.த.அ., ப. 452).

நேரடி– நற்சீரான் வரும் அளவடி; நேரில் (த.த.அ., ப. 692).

நெடிலடி– ஐந்து சீரால் அமைந்த செய்யுளடி (த.த.அ., ப. 685).

கழிநெடிலடி– ஐந்தின் மிக்க சீரால் வரும் அடி (த.த.அ., ப. 290).

தொடைகள்

தொல்காப்பியத்தில் தொடையின் வகைகளாக மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரனிறுத்தல், இரட்டையாப்பு எனப் பத்துச் சொல்லப் பட்டுள்ளன. இத்தொடை வகையினை மேலும் விரித்துச் சொன்னால் 13,699 என விரியும் என்கிறார் தொல்காப்பியர் (பொருள். 406). இறுதி இரண்டு தொடைகள் பற்றிப் பொருள் விளக்கம் தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை. மற்ற எட்டுத் தொடைகள் குறித்துத் தொல்காப்பியம் பொருள் கூறுவதையும் த.த.அ. பொருள் கூறுவதையும் இங்குக் காணலாம்.

"அடிதொறுத் தலையெழுத் தொப்பது மோனை" (பொருள்.397)

"அஃதொழித் தொன்றின் எதுகை யாகும்" (பொருள். 398)

"மொழியினும் பொருளினும் முரணுதல் மோனை" (பொருள்.400)

"இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப" (பொருள். 401)

"அளபெழின் அவையே அளபெடைத் தொடையே"
(பொருள்.402)

"ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே" (பொருள்.403)

"இருசீ ரிடையிடின் ஒரூஉவென மொழிப" (பொருள்.404)

"சொல்லிய தொடையொடு வேறுபட் டியலின்
சொல்லியற் புலவர் அது செந்தொடை என்ப" (பொருள். 405)

அடிதொறும் முதல் எழுத்து ஒன்றாய் வருவது மோனை. இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகையாகும். முரண் தொடை என்பது சொல்லாலும் பொருளாலும் மாறுபட்டுவரும் தொடையாகும். அடிதோறும் இறுதி எழுத்து ஒன்றாய் வருவது இயைபுத் தொடை. அடிதோறும் அளபெடுத்து வருவது அளபெடைத் தொடை. ஓர் அடியில் ஒரு சீரிடையிட்டு எதுகை வந்தால் அதற்குப் பொழிப்புத் தொடை என்று பெயர். அதே இரண்டு சீர் இடையிட்டு வந்தால் ஒரூஉத் தொடையாகும்.

மேற் சொல்லப்பட்ட தொடைபோல் அல்லாமல் வேறுபட்டுத் தொடுக்கும் தொடை செந்தொடையாகும். இத்தொடைகளுக்குத் த.த.அ. பின்வருமாறு பொருள் தருகிறது.

மோனை–	முதன்மை; மகன்; சீர்களின் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுக்குந் தொடை (ப. 921).
எதுகை– எதுகைத்தொடை	–எதுகைத்தொடை, செய்யுளடிகளிலாயினும் சீர்களிலாயினும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றி வருவது;பொருத்தம் (ப. 197).
முரண்டொ(தொ)டை–	தொடை ஐந்தனுள் சொல்லாலும் பொருளாலும் மறுதலைப்படப் பாட்டுத் தொடுப்பது (ப. 896).
இயைபுத் தொடை	ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது (ப.115).
அளபெடை	பாட்டில் ஓசை மிகுந்து ஒலிக்கும் அளவு (ப. 57).
பொழிப்புத்தொடை	அளவடியுள் முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது (ப. 821).
ஒரூஉத்தொடை	அளவடியுள் நடுவிரு சீர்கள் ஒழிய முதற்சீர்க் கண்ணும் நான்காஞ்சீர்க் கண்ணும் மோனை முதலியன வரத் தொடுப்பது (ப. 226).
செந்தொடை	சிவந்த மாலை; மோனை எதுகை முதலியன அமைக்கப்படாத பாட்டு; அம்பு முதலியவற்றை எய்யும் குறி (ப.500).

இவ்வாறு தொடை குறித்துப் பொருள் விளக்கம் தருவதில் தொல்காப்பியத்தோடு த.த.அ. பொருந்திப் போவதைக் காண முடிகிறது.

அங்கதம்

அங்கதத்தின் வகைகளுக்குப் பொருள் விளக்கத்தைத் தொல்காப்பியம் கூறியுள்ளது. இது அகராதிக் கூறுகளோடு பொருந்திப் போகிறது என்பதைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் நிரூபிக்கின்றன.

"செம்பொருளாயின் வசையெனப் படுமே" (பொருள். 430)

"மொழிகரந்து மொழியின் அதுபழிகரப் பாகும்" (பொருள்.431)

"புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்" (பொருள். 433)

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்" (பொருள். 434)

செம்பொருள் அங்கதமானது வசை என்று சொல்லப்படுவ தாகும். தான் சொல்ல வந்ததை மறைத்துச் சொன்னால் அது பழிகரப் பங்கதம் எனப்படும். துகளொடும் பிழை தவிர்க்கும் பொருளொடும் பொருந்தி வருவது செவியுறைச் செய்யுள் அல்லது செவியுறை அங்கதமாகும். வசையுடனும் புகழ் விரும்பும் நசையுடனும் பொருந்திய அங்கதத்திற்கு அங்கதச் செய்யுள் என்று பெயர் எனத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. த.த.அ. இச் சொற்களுக்குக் கூறிய பொருள் விளக்கத்தை இனிக் காண்போம்.

செம்பொருளங்கதம் – வாய் கரவாது சொல்லிய வசைப் பாட்டு (ப. 502)

பழிகரப்பங்கதம், பழிகரப்பு – வசையைக் குறிப்புப் பொருளாகக் கொண்ட செய்யுள் வகை (ப.734)

செவியுறையங்கதம் – அரசர்க்கு உறுதிகூறும் நோக்குடன் அறிஞர் கூறும் வசைச்செய்யுள் (ப.508)

அங்கதச்செய்யுள், அங்கதப்பாட்டு – வசைப்பாட்டு (ப.7)

இவ்வாறு த.த.அ. செம்பொருளங்கதம், பழிகரப்பங்கதம், செவியுறையங்கதம், அங்கதச் செய்யுள் ஆகியவற்றிற்குப் பொருள் விளக்கம் தந்திருக்கும் முறையோடு தொல்காப்பியம் பொருள் கூறியுள்ள விதம் ஒத்துப் போகிறது.

சூத்திரம்

"சூத்திரம் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே (பொருள். 471)

சூத்திரம் என்பது கண்ணாடியின் நிழல்போல விளங்கத் தோன்றி, ஆராயாமலே அதன் பொருள் நனிவிளங்குமாறு யாப்பின்கண் தோன்றுமாறு செய்தலாகும். இதற்குத் த.த.அ. பொருள் விளக்கம் தரும்முறை கீழே தரப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தால் இரண்டு பொருள் விளக்கமும் சூத்திரத்திற்கு ஒத்துப் போவதை அறியலாம்.

சூத்திரம்– பஞ்சுநூல்; இயந்திரம்; நுண்ணிய வேலை; தந்திரம்; இரகசியம்; சில்லெழுத்திற் பலபொருள் தெரிவிக்கும் யாப்புச் செய்யுளாகிய நூற்பா; சூத்திர வடிவில் அமைந்த நூல்; இயக்குவிக்குங் கயிறு; பெயர், விதி, விலக்குதல், நியமம், அதிகாரம், ஞாபகம் என்னும் அறுவகைச் சூத்திரங்கள் (ப. 494)

ஒத்து

"நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்"

ஒரே இனத்தையுடைய மணியை வரிசைப்பட வைத்ததைத் போல, ஓரோரினமாக வரும் பொருளை ஒரே இடத்தில் சேர வைப்பது ஓத்தாகும் என்று உயர்மொழிப் புலவர் கூறுவதாகத்

தொல்காப்பியம் தெரிவிக்கிறது. ஓத்து என்பதற்குத் த.த.அ. தரும் விளக்கத்தைக் கீழே காண்போம்.

ஓத்து– ஓதுகை, ஓதப்படுவது; வேதம்; ஓரினப் பொருளை ஒருவழி வைத்திருக்கும் இயல், நூற்பிரிவு; விதி (ப. 232)

படலம்

"ஒருநெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அதுபடலம் ஆகும்" (பொருள். 473)

படலம் என்பது ஒரே இனமாகிய நெறி இல்லாமல் பல நெறியால் விரவிய பொருள் பொதுமொழியால் தொடர்புடையதாய் வரும் நூலாகும். இந்தச் சொல்லுக்குரிய தொல்காப்பியப் பொருளைத் த.த.அ.யில் காணமுடிகின்றது என்பதைப் பின்வரும் சான்று மெய்ப்பிக்கும்.

படலம்– கூட்டம்; நூற்பகுதி; கூடு; மேற்கட்டி; நேத்திரப் படலம்; அடுக்கு; உலகம்; சுற்றம்; திலகம்; மறைப்புத் தட்டி; அடைப்பு; இரத்தினக் குற்றம் (ப. 708)

பிண்டம்

"மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவர் அது பிண்டம் என்ப" (பொருள். 474)

சூத்திரம், ஓத்து, படலம் என்னும் மூன்றுறுப்பினையும் அடக்கிய தன்மைக்குப் பிண்டம் என்று பெயர் வழங்கப்பெறும். த.த.அ.யின் பொருளும் தொல்காப்பியத்தின் பொருளும் ஒன்றிப் போகின்றன,

பிண்டம்– உண்டை; உருவற்ற கரு; உடல்; சோற்றுத்திரள்; பிதிரர் பொருட்டுக் கொடுக்கப்படுஞ் சோற்றுருண்டை; தொகுதி; காண்க: பிண்டசூத்திரம், சூத்திரம், ஓத்து, படலம் என்னும் மூன்றுறுப்புக் கொண்ட நூல் (ப. 760)

மந்திரம்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் என்ப" (பொருள். 480)

நிறைந்த மொழியையுடைய மாந்தர் தங்களுடைய ஆணையால் சொல்லப்பட்ட மறைந்த சொல்தான் மந்திரம் என்கிறது தொல்காப்பியம்.

மந்திரம்– ஆலோசனை, அமைச்சர்கள் அவை; எண்ணம்; வேதமந்திரம்; காண்க: திருமந்திரம்; வீடு; அரண்மனை; தேவர் கோயில்; மண்டபம்; உறைவிடம்; குகை; அறச்செயல் வகை; குதிரைச் சாலை; குதிரைக்கூட்டம்; கள்; யானைவகை; மேருமலை (ப. 848)

இவ்வாறு மந்திரம் என்பதற்குத் த.த.அ. பொருள் விளக்கம் தந்துள்ளது.

குறிப்புமொழி

"எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே" (பொருள். 481)

குறிப்பு மொழி என்பது எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிச் சொல்லினால் உணரப்படும் பொருளின் புறத்ததாகும். இதுகுறித்த த.த.அ.யின் பொருள் விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

குறிப்பு மொழி– காண்க: குறிப்புச் சொல் (ப. 361)

குறிப்புச் சொல்– குறிப்பினால் பொருள் உணர்த்தும் சொல் (ப. 361)

பண்ணத்தி

"பாட்டிடைக் கலந்த பொருளா வாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே" (பொருள். 482)

பண்ணத்தி என்பது பாட்டின்கண் கலந்த பொருளையுடையதாகி,

பாட்டின் இயல்பினைக் கொண்டதாய்த் தோற்றுவிக்கும் செய்யுளாகும்.

பண்ணத்தி– உரையும் பாட்டுமாகச் செய்யப்படும் ஒரு நூல்வகை (ப. 713)

என்று த.த.அ. கூறும் பொருள் விளக்கம் மேலே சுட்டப்பட்டுள்ள தொல்காப்பியத்தின் பொருள் விளக்கத்தோடு பொருந்திச் செல்வதை அறியமுடிகிறது.

மெய்ப்பாடு

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்" (பொருள். 505)

ஏதேனும் ஒன்றினைக் கூறியவழி அதன்கண் பொருண்மையை உய்த்து அறியாமலே அவ்விடத்து வரும் பொருண்மையினை மெய்ப்பாடு தோன்றும்படி முடிப்பதே மெய்ப்பாட்டாகும் என்கிறார் தொல்காப்பியர்.

மெய்ப்பாடு– உள்ளத்தின் நிகழ்ச்சி புறத்தார்க்கு வெளிப்படுதல்; புகழ்; இயற்கைக் குணம் (ப. 910)

என்று த.த.அ. பொருள் விளக்கம் தருகிறது.

வண்ணங்கள்

தொல்காப்பியத்தில் மொத்தம் 20 வண்ணங்கள் உள்ளன. இவற்றிற்குப் பொருள் விளக்கம் தந்திருக்கும் முறை அகராதிக் கூறான சொல்லுக்குப் பொருள் கூறும் முறைபோல அமைந்துள்ளது. எனவே அந்நூற்பாக்கள் அனைத்தையும் இங்குச் சுட்டுவது தகும் எனலாம். அவற்றிற்குரிய த.த.அ.யின் பொருளும் பின்னர்த் தரப்படும்.

"பாஅ வண்ணம்
சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்" (பொருள். 515)

"தாஅ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகை யாகும்" (பொருள்.516)

"வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே" (பொருள்.517)

"மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே" (பொருள். 518)

"இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே" (பொருள்.519)

"அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்" (பொருள். 520)

"நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்" (பொருள்.521)

"குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுதுப் பயிலும்" (பொருள். 522)

"சித்திர வண்ணம்
நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே" (பொருள்.523)

"நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்" (பொருள்.524)

"அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே" (பொருள். 525)

"புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியா தாகும்" (பொருள். 526)

"ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்" (பொருள். 527)

"ஒரூஉ வண்ணம் ஒரூஉத் தொடை தொடுக்கும்" (பொருள். 528)

"எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்" (பொருள். 529)

"அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்" (பொருள்.530)

"தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்" (பொருள்.531)

"ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்" (பொருள்.532)

"உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்" (பொருள்.533)

"முடுகு வண்ணம் முடிவறி யாமல்
அடியிறந் தொழுகி அதனோர் அற்றே" (பொருள். 534)

தொல்காப்பியம் இந்நூற்பாக்களில் வண்ணங்களின் பொருளை விளக்கியுள்ளது. பாஅ வண்ணமாவது சொற்சீரடியாகி நூலில் பயின்றுவரும். தாஅ வண்ணம் இடையிட்ட எதுகையால் வரும். வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுந்து வரும். மெல்லிசை, இயைபு வண்ணம் முறையே மெல்லெழுத்து, இடையெழுத்து மிகுந்து வரும். அளபெடை வண்ணம் அளபெடை பயின்று வரும். நெடுஞ்சீர், குறுஞ்சீர், வண்ணம் முறையே நெடில் எழுத்து, குறிலெழுத்துப் பயின்று வரும். சித்திர வண்ணமானது நெடில், குறில் என இரண்டெழுத்தும் சார்ந்து வரும். நலிபு வண்ணம் ஆய்தம் பயின்றுவரும். முடியாததுபோல் முடிந்ததை உணர்த்துவது புறப்பாட்டு வண்ணமாகும். ஒழுகு வண்ணம் ஓசையால் ஒழுகிக் கிடக்கும்.

ஒரூஉத் தொடையைப் பெற்று வரும் வண்ணம் ஒரூஉ வண்ணம். எண்ணிக்கை பயின்று வருவது எண்ணு வண்ணம். அகைப்பு வண்ண மானது அறுத்தறுத்து வருவது. வஞ்சியுரிச்சீர் பயின்று வருவது தூங்கல் வண்ணமாகும். சொல்லிய சொல்லாலே மொழியப்பட்டது சிறக்க வருவது ஏந்தல் வண்ணம். அராகம் பெற்று வருவது உருட்டு வண்ணமாகும். நான்கு சீரடியின் மிகுந்து அராகத்தோடு ஒத்து வருவது முடுகு வண்ணமாகும். வண்ணங்களுக்குத் த.த.அ. தரும் பொருள் விளக்கத்தினை இனிக் காண்போம்.

பா வண்ணம்–	நூற்பாச் சந்தம் (ப. 754)
தாஅ வண்ணம்–	இடையிட்டு வரும் எதுகையுடைய சந்தம்(ப.557)
வல்லிசை வண்ணம்–	வல்லெழுத்து மிக்குப் பயின்றுவருஞ் சந்தம் (ப. 944)
மெல்லிசை வண்ணம்–	மெல்லெழுத்து மிக்குப் பயின்றுவருஞ் சந்தம் (ப. 944)
இயைபு வண்ணம்–	இடையெழுத்துக்கள் மிகுந்து வரும் சந்தம் (ப. 115)

அளபெடை வண்ணம்–	அளபெடை பயின்றுவரும் சந்தம் (ப.57)
நெடுஞ்சீர் வண்ணம்–	நெட்டெழுத்துப் பயின்று வரும் சந்தம் (ப.686)
குறுஞ்சீர் வண்ணம்–	குற்றெழுத்துப் பயின்றுவரும் சந்தம் (ப.362)
சித்திர வண்ணம்–	நெடிலும் குறிலும் ஒப்ப விரவிய சந்தம் (ப. 456)
நலிபு வண்ணம்–	ஆய்தவெழுத்துப் பயின்றுவருஞ் சந்துப் பாட்டு (ப. 644)
அகப்பாட்டு வண்ணம்–	இறுதியடி முற்றுப்பெறாது இடையடி போன்று வரும் சந்தம் (ப.4)
புறப்பாட்டு வண்ணம்–	இறுதியடி முடியாதிருப்பவும் தான் முடிந்த அடிபோலக் காட்டும் சந்தம் (ப. 792)
ஒழுகு வண்ணம்–	ஒழுகியலோசையால் செல்லும் சந்தம் (ப.227)
ஒரூஉ வண்ணம்–	யாற்றொழுக்காகப் பொருள்கொண்டு செல்லுஞ் சந்தம் (ப.226)
எண்ணு வண்ணம்–	இருபது வண்ணங்களுள் ஒன்று, எண்ணிடைச்சொல் பயின்றுவரும் சந்தம் (ப.194)
அகைப்பு வண்ணம்–	இருபது வண்ணங்களுள் ஒன்று, அறுத்தறுத்து ஒழுகும் நடையை உடையது; விட்டுவிட்டுச் செல்லும் சந்தம் (ப.7)
தூங்கல் வண்ணம்–	வஞ்சி ஓசை பயின்றுவரும் சந்தவகை (ப.604)

ஏந்தல் வண்ணம்–	விளக்கத்தின் பொருட்டும் வற்புறுத்தற் பொருட்டும் ஒரு சொல்லே மிகுந்து வருஞ் சந்தம் (ப. 210)
உருட்டு வண்ணம்–	இருபது வண்ணங்களுள் ஒன்று, உருட்டிச் சொல்லப்படும் அராகம் தொடுத்துவரும் சந்தம் (ப. 166)
முடுகு வண்ணம்–	அராகந் தொடுத்த அடியோடு பிற அடி சேர்ந்து தொடர்ந்தோடுஞ் சந்தம் (ப.889)

இவ்வாறு வண்ணத்திற்குப் பொருள் கூறிய விதத்தையே மேற்சுட்டிய தொல்காப்பிய நூற்பாக்களில் காணமுடிகிறது. எனவே, வண்ணம் குறித்த நூற்பாக்களும் அகராதிக் கூறுடையன வாகத் திகழ்கின்றன.

வனப்பு

தொல்காப்பியத்தில் எட்டு வகையான வனப்புகள் சொல்லப் பட்டுள்ளன. அவற்றினை விளக்கும் முறை சொல்லுக்குப் பொருள் கூறுவதாகவே அமைந்துள்ளது. வனப்புக் குறித்த தொல்காப்பிய நூற்பாக்களைக் கீழே காணலாம்.

"சின்மென் மொழியான் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே" (பொருள்.536)

"செய்யுள் மொழியான் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே" (பொருள். 537)

"தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" (பொருள். 538)

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்" (பொருள். 539)

"விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" (பொருள். 540)

"ஞகார முதலா னகார ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபெனப் படுமே" (பொருள். 541)

"தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே" (பொருள். 542)

"ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்
இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்" (பொருள். 543)

சிலவாகிய மெல்லினச் சொற்களால் தொடுக்கப்படும் அடிநிமிர் வில்லாத செய்யுள் அம்மையாகும். செய்யுளுக்குரிய சொல்லால் சீரைப் புணர்த்துத் தொடுக்கும் செய்யுள் அழகு எனப்படும். தொன்மை என்பது உரையொடு பொருந்திப் போகும் பழைமை யாகிய பொருள்மேல் வருவது. இழுமென் மொழியால் விழுமிய பொருளைக் கூறினாலும் பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினாலும் அத்தகு செய்யுளுக்குத் தோல் என்று பெயர். முன்பு சொல்லப்பட்ட நெறி மடிந்து புதிதாக ஒரு நெறி தோன்றச் சொல்லும் யாப்பு விருந்தாகும். 'ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள' என்னும் பதினொரு மெய்யும் ஈறாக வரும் செய்யுள் இயைபு எனப்படும். வழக்குச் சொற்களால் தொடுக்கப்பட்டு ஆராயாமல் பொருள் வெளிப்படையாகத் தோன்றுமாறு செய்யும் செய்யுளுக்குப் புலன் என்று பெயர். ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காமல் ஆசிரியப் பாவிற்குச் சொல்லப்பட்ட குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி என்னும் ஐந்தடியும் முறையாக வருமாறு தொடுக்கும் செய்யுளுக்கு இழைபு என்று பெயர். இவ்வாறு வனப்பு எட்டிற்குமான பொருளைத் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. இக்கால அகராதியான த.த.அ. வனப்புகளை விளக்கும்போது பொருள் கூறுவதில்லை. மாறாக வனப்பு அல்லது நூல் வனப்புள் ஒன்று என்றே பொருள் கூறுகின்றது.

அம்மை– நூல் வனப்புள் ஒன்று (ப. 34)

அழகு– வனப்பு, நூல் வனப்புள் ஒன்று (ப. 54)

தொன்மை– பழைமை செய்யுள் வனப்பில் ஒன்று உரைவிரவிப் பழமையாகிய கதை பொருளாகச் செய்யப் படுவது தன்மை (ப. 627)

தோல்– மெல்லென்ற சொல்லால் விழுமிய பொருள் பயப்பச் செய்யும் நூல் (ப. 630)

விருந்து– புதுமை நூலுக்குரிய எண்வகை வனப்புகளுள் ஒன்று (ப. 981)

இயைபு– நூல் வனப்புள் ஒன்று (ப. 115)

புலன்– நூல் வனப்புள் ஒன்று (ப. 787)

இழைபு– நூலழகுகளுள் ஒன்று, வல்லெழுத்துச் சேராது வருவது (ப. 137)

வனப்புகளுக்குரிய பொருள் மட்டும் த.த.அ. யிலிருந்து கொடுக்கப் பட்டுள்ளது. அச்சொற்களுக்குரிய பிற பொருள் இங்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவற்றுள் தொன்மை, தோல், இழைபு என்பவற்றிற்கு இவ்வகராதி கூறும் பொருள் தொல்காப்பியத் தோடு முழுமையாகப் பொருந்துகிறது. இது மற்றச் சொற்களுக்கு வனப்புள் ஒன்று என்று மட்டும் பொருள் தந்துள்ளது. வனப்பிற்குத் தொல்காப்பியம் தந்துள்ள பொருள் விளக்கம் சிறப்பானது.

மரபியல்

தொல்காப்பியத்தின் இறுதி இயலாக மரபியல் உள்ளது. தொன்றுதொட்டு வழங்கிவரும் மாற்றுதற்கரிய மரபுகளைத் தொல்காப்பியர் இவ்வியலில் பேசிச் செல்கிறார். இவ்வியலின் பத்துக்கு மேற்பட்ட நூற்பாக்கள் அகராதிக்கூறுடையனவாகத் திகழ்கின்றன.

உயிர்ப்பாகுபாடு

தொல்காப்பியத்தில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை பொருள் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, அதற்குரிய உயிரினங்களும் சில சான்றுகளாகக் காட்டப்பட்டுள்ளன. அவற்றை ஒட்டு மொத்தமாக இங்குக் காணலாம்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" (பொருள். 571)

ஓரறிவு– தொடுவுணர்வு; ஈரறிவு– தொடுவுணர்வு+நா; மூவறிவு– தொடுவுணர்வு+நா+மூக்கு; நான்கறிவு– தொடுவுணர்வு+நா+மூக்கு+கண்; ஐந்தறிவு– தொடுவுணர்வு+நா+மூக்கு+கண்+செவி; ஆறறிவு– தொடுஉணர்வு+நா+மூக்கு+கண்+செவி+மனம். இவ்வாறு அறிவும் அந்த அறிவு எது என்பதும் தொல்காப்பியத்தில் அருமையாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய உயிரினங்களைப் பின் வரும் நூற்பாக்களில் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

"புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (பொருள். 572)

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (பொருள். 573)

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (பொருள். 574)

"நண்டுந் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (பொருள். 575)

"மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (பொருள். 576)

"மக்கள் தாமே ஆறறி உயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (பொருள். 577)

புல், மரம் போன்றவை ஓரறிவுயிர்; நந்து, முரள் போன்றவை ஈரறிவுயிர்; சிதல், எறும்பு போன்றவை மூன்றறிவுயிர், நண்டு, வண்டு போன்றன நான்கறிவுயிர்; விலங்கு, பறவை முதலானவை ஐந்தறி வுயிர்; மக்கள் ஆறறிவுடைய உயிர் எனத் தொல்காப்பியம் கூறியுள்ள முறை வியப்பிற்குரியதாகும். இவற்றிற்குச் சான்றாக ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு த.த.அ.யோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

ஓரறிவுயிர்— புல், மரம் முதலியன (ப.234)

இந்த அகரமுதலியில் ஓரறிவுயிர் என்றால் தொடுவுணர்வு டைய புல், மரம் போன்றவை என்றிருந்தால் இன்னும் பொருள் தெளிவாக இருந்திருக்கும் எனலாம். எனினும் மேற்கூறிய அனைத்து நூற்பாக்களுக்கும் இது ஒன்றே போதும் எனக் கருதலாம்.

புல், மரம்

"புறக்கா ழனவே புல்லெனப் படுமே" (பொருள். 630)

"அகக்கா ழனவே மரமெனப் படுமே" (பொருள். 631)

புறத்தே வயிரமுள்ள தாவரம் புல்லெனப்படும். அகத்தே வயிரமுள்ள தாவரம் மரம் எனப்படும். இவ்வாறு புல்லுக்கும் மரத்திற்குமான பொருளைத் தொல்காப்பியர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள விதம் சிறப்பிற்குரியது.

புல்— தாவரவகை; ஒருசார் விலங்குகளின் உணவு வகை; புதர்; கம்பு; புன்செய்த் தவசம்; காண்க: மருந்துச் செடி வகை; பனை; தென்னை; அனுடநாள்; ... (ப. 785)

மரம்— உள்வயிரமுள்ள தாவரம்; அறுக்கப்பட்ட மரம்; மூலிகை; தொழுமரம்; மரக்கலம்; காண்க: இமயமரம்; உழுத வயலைச் சமப்படுத்தும் பலகை (ப. 852)

இவ்வாறு புல், மரம் ஆகியவற்றிற்குத் த.த.அ. பொருள் விளக்கம் தந்துள்ளது. மரத்திற்குக் கூறும்போது உள்வயிரமுள்ள

தாவரம் என்று தொல்காப்பியத்தைப் போலவே கூறியுள்ளது. ஆனால் புல் என்பதற்குத் தொல்காப்பியத்தைப் போலவே புறவயிர முடைய தாவரம் என்றிருந்தால் சிறப்பாக இருக்கும் எனலாம்.

உலகம்

"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம்" (பொருள். 635: 1,2)

உலகம் என்பது நிலம், தீ, நீர், வளி, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்த தாகும் என்று கூறுகிறது தொல்காப்பியம். த.த.அ. தொல்காப்பியத் தோடு சிறிது பொருந்திப் போகிறது.

உலகம்– உலகு, உலகப்பொது; பூமி; நிலப்பகுதி; உலகுயிர்கள்; திக்கு; மக்கள் தொகுதி; உலகிலுள்ள உயர்ந்தோர் ஒழுக்கம்; உயர்ந்தோர்; உயர்குணம்; வானம் (ப. 171)

முதனூல்

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்" (பொருள். 640)

முதனூல் என்பது எந்த நூலையும் பின்பற்றாமல் விளங்கிய அறிவைக் கொண்டு முனைவர் செய்யும் நூல் முதனூலாகும் என் கிறது தொல்காப்பியம். த.த.அ.யும் இக்கருத்துக்கு உடன்பட்டு நிற் கிறது.

முதனூல் முதல்வன் வாக்கு மறை பிறநூலைப் பின்பற்றாது முதலில் செய்யப்படும் நூல் வழிநூலுக்கு மூலமாகவுள்ள நூல் (ப.892)

வழிநூல்

"வழியெனப் படுவ ததன்வழித் தாகும்" (பொருள். 641)

வழிநூலென்பது முதனூலைப் பின்பற்றி எழுதும் நூலாகும். இக்கருத்திற்கும் த.த.அ. ஒத்துப் போகிறது.

வழிநூல்– நூல் மூன்றனுள் ஒன்றான முதனூல் வழியை விகற்பிக்கும் நூல் (ப. 948)

இங்கு நூல் மூன்று என்பது பிற்காலத்தில் தோன்றிய சார்பு நூலையும் சேர்த்து. தொல்காப்பியர் காலத்தில் சார்பு நூல் இல்லை. இருப்பின் அவர் அதைப்பற்றிக் குறிப்பிடாமலிருந்திருக்க மாட்டார் எனலாம்.

நிகண்டு சொல் தோற்றம்

நிகண்டு என்னும் சொல், முதன்முதலில் தோன்றிய திவாகரத்திலோ, அடுத்துத் தோன்றிய பிங்கலத்திலோ காணப்படவில்லை என்பது தெளிவு. நிகண்டு என்னும் வழக்கு, தமிழ்ப் பரப்பில் இறையனார் அகப்பொருள் உரையில்தான் முதன்முதலில் இடுகுறியால் நூல்பெயர் பெறும் முறைக்குச் சான்றுகள் கூறுமிடத்துத் தான் காணப்படுகின்றது.

"நூற்பெயர் என்பது, நூலதி பெயர் என்றவாறு. நூல் பெயர் பெறுமிடத்துப் பல் விகற்பத்தாற் பெயர் பெறும்; என்னை? செய்தானால் பெயர் பெறுதலும், செய்வித்தானால் பெயர் பெறுதலும், இடுகுறியால் பெயர் பெறுதலும், அளவினால் பெயர் பெறுதலும், சிறப்பினால் பெயர் பெறுதலுமென. செய்தானால் பெயர் பெற்றன, அகத்தியம், தொல்காப்பியம் என இவை; செய்வித்தானால் பெயர் பெற்றன, சாத வாகனம், இளந்திரையம் என இவை; இடு குறியால் பெயர் பெற்றன, நிகண்டு, நூல், கலைக் கோட்டுத் தண்டு என இவை; அளவினால் பெயர் பெற்றது பன்னிருபடலம் என்பது; சிறப்பினால் பெயர் பெற்றது களவியல் என்பது" என்பதை இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் எழுதிய உரையில் காண முடிகின்றது (2006:4).

எனினும் நிகண்டு என்னும் சொல், சொல்லுக்குப் பொருள் கூறும் நூலுக்கு முதன்முதலில் வழங்கியது, மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டில்தான் என்பதை அறியமுடிகின்றது. சூடாமணி நிகண்டின் பாயிரப்பகுதி, அகராதி நிகண்டின் பாயிரப் பகுதி, நன்னூலின் 460ஆம் நூற்பாவிற்குச் சங்கர நமச்சிவாயர் உரை, ஆசிரிய நிகண்டின் பாயிரம், நாமதீப நிகண்டு ஆகியவற்றின் மூலம் நிகண்டு என்னும் சொல்லாட்சி பரவியது எனலாம்.

நிகண்டுகளின் தோற்றம்

தொல்காப்பியம் எப்படி உலா, தூது, பிள்ளைத்தமிழ், அகம், புறம் போன்ற இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்ததோ அதைப்போலவே, நிகண்டு தோன்றுவதற்கும் அடிப் படையாக அமைந்தது. மொழியின் வளர்ச்சியால் காலப்போக்கில் தமிழில் எண்ணற்றச் சொற்கள் தோன்றின. அதைப் போலச் சில சொற்கள் வழக்கழிந்தும் போய்விட்டன. இது இயல்புதான். இச் சூழலில் இடைக்காலத்தில் வாழ்பவர்களுக்குச் சங்ககாலச் சொற் களின் பொருளைப் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது. இடைக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் காணப்படும் நடை, கவிதைப் பண்பு, சொல்லின் தன்மை, வடிவம், தொடரமைப்பு முதலானவை சங்கத் தமிழிலிருந்து மிகுதியாக வேறுபட்டிருந்தன. எனவே, புலவர்களுக்கும் இலக்கியப் பயிற்சியில் தொடர்புடையவர்களுக் கும் சங்ககாலச் சொல்லுக்குரிய சொற்பொருள் கூறும் நூல்கள் தேவைப்பட்டன. அவ்வாறு புதுமையாக இலக்கியம் படைக்க உதவியாகத் தோன்றிய நூல்கள்தான் நிகண்டுகள் ஆகும்.

சொற்கூறுகள்

சொல்லுக்கு இரண்டு பெரும் இயல்புகள் உள்ளன என்று தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளார்.

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்" (தொல். சொல். 159)

என்ற நூற்பா மேற்சுட்டிய கருத்தை விளக்கும்.



யாராக இருப்பினும், ஒரு மொழியில் இருக்கக்கூடிய இந்த இரண்டு சொற்கூறுகளையும் நன்கு தெரிந்து கொண்டால்தான் அம்மொழியை நன்கு புரிந்துகொள்ள முடியும். இல்லையென்றால்

அம்மொழியில் ஒரு வாக்கியத்தைக் கூடச் சரியாக எழுதவும் முடியாது. எனவேதான் பொருண்மை முதலில் தெரிந்து கொள்ள நிகண்டுகளையும், பின்னர்ச் சொன்மையை அறிந்து கொள்ள இலக்கணங்களையும் பயில்வது பண்டைத் தமிழர்களின் மரபாக இருந்தது. அதனால்தான் தொல்காப்பியர் முதலில் சொன்மை யைக் கூறாமல், பொருண்மையைக் கூறியுள்ளார்.

நிகண்டுகளின் அமைப்புமுறை

திவாகரத்தின் அமைப்பைப் பின்பற்றியே மற்ற நிகண்டுகளின் அமைப்பும் உள்ளது. திவாகரம் மூன்று பெரிய தொகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

திவாகரம்

↓	↓	↓
ஒருபொருட் பலபெயர்த் தொகுதி	ஒரு சொல் பல்பொருட்தொகுதி	பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி

இந்தப் பதிவு முறையைத் திவாகரரே உண்டாக்கினாரா? அவருக்கு முன்னுள்ள வேறு யாரிடமிருந்தாவது இம்முறையைக் கடன் வாங்கினாரா? என்னும் வினாக்கள் நம்முன் எழும். இருப்பினும் இம்முறையை எங்கேயோ பார்த்ததுபோலலோ அல்லது கேள்விப் பட்டது போலோ நமக்குத் தோன்றுவது உண்மைதான். ஏனெனில், அனைத்திற்கும் (அனைத்துத் துறையினருக்கும்) அடிப்படையான நூலாய் விளங்கும் தொல்காப்பியத்திலே இப்பிரிவு முறை உள்ளது. தொல்காப்பிய உரியியலின் முதல் நூற்பா

> "ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
> பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்"
>
> (தொல்.சொல்.298: 4-5)

என்று முதலிரண்டு பிரிவுமுறையினைச் சுட்டுகின்றது. மூன்றாவது பிரிவுமுறையான பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியை மரபியல் முழுவதிலும் காணலாம். எனவே, தொல்காப்பியத்தின்

பிரிவு முறையை அடிப்படையாகக் கொண்டே திவாகரர் தன்னுடைய நிகண்டின் அமைப்பினை உருவாக்கினார் என்பது தெளிவாகிறது.

திவாகரர் மூன்று பெரும் பிரிவினை மேலும் பிரித்துப் பன்னிரண்டு தொகுதிகளாக அமைத்துக் கொள்கிறார்.

1. ஒரு பொருள் பல சொல்
    - 1.1 தெய்வப் பெயர்
    - 1.2 மக்கட் பெயர்
    - 1.3 விலங்கின் பெயர்
    - 1.4 மரப்பெயர்
    - 1.5 இடப்பெயர்
    - 1.6 பல்பொருட் பெயர்
    - 1.7 செயற்கை வடிவப் பெயர்
    - 1.8 பண்புப் பெயர்
    - 1.9 செயல் பற்றிய பெயர்
    - 1.10. ஒலி பற்றிய பெயர்
2. ஒரு சொல் பல பொருள்
3. பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்

இவ்வாறு மூன்று பெரும் பிரிவில் முதலாவதாகவுள்ள பிரிவினை மட்டும் பத்து உட்பிரிவுகளாக்கி, அவற்றிலுள்ள சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார் திவாகரர்.

தெய்வப்பெயர்

தெய்வப் பெயர்த் தொகுதியில் சிவன், திருமான் முதலிய தெய்வப் பெயர்கள் உள்ளன. அவை மட்டுமன்றி நாள் கோள்களின் பெயர், காலப்பெயர், பருவப்பெயர், மழை, மேகம் முதலியவற்றின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் பெயர்

இரண்டாவதாக உள்ள தொகுதிதான் மக்கள் பெயர்த் தொகுதி. இத்தொகுதியில் அருந்தவர், அறிஞர், அரசர், பரிவாரங் கள், தொழிலாளர், கீழ்மக்கள், பெண்டிர், நானில மக்கள், உறவினர், படைகள், உடல் உறுப்புகள் போன்றன விளக்கம் பெறுகின்றன.

விலங்கின்பெயர்

விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, இவற்றின் உறுப்புப் பெயர் முதலியன விலங்கு பெயர்த் தொகுதியில் குறிக்கப்படுகின்றன.

மரப் பெயர்

மரப்பெயர்த் தொகுதியில் மரம், செடி, கொடி, பூ, காய், கனி, தானியவகை முதலானவற்றிற்கான சொற்பொருட்கள் இடம் பெறுகின்றன.

இடப்பெயர்

உலகம், நாடு, ஊர், மனை, மலை, ஆறு, நீர்நிலை ஆகியன இடப்பெயர்த் தொகுதியில் சுட்டப்படுகின்றன.

பல்பொருட் பெயர்

பொன், மணி, விளைபொருள், உணவு வகை போன்றன இத் தொகுதியில் விளக்கப்படுகின்றன.

செயற்கை வடிவப்பெயர்

ஏழாவது தொகுதியாகவுள்ள செயற்கை வடிவப் பெயர் தொகுதியுள் இயற்கையாய் அன்றிச் செயற்கையாகச் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் இடம்பெறுகின்றன. அதாவது போர்க் கருவிகள், அணிகளின் வகை, உடை வகை, ஊர்தி வகை, விளையாட்டுக் கருவிகள் போன்றவை இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

பண்புப் பெயர்

பண்புப் பெயர்த் தொகுதியில் காட்சிப் பொருள், உணர்விற்குப் புலப்படும் உண்மையான பொருள், இவற்றின் குணத்தொடர்பு

பற்றிய பெயர்கள் எல்லாம் இணைந்துள்ளன.

செயல் பற்றிய பெயர்

ஒன்பதாவது தொகுதியாக விளங்கக்கூடிய செயல் பற்றிய பெயர்த்தொகுதியில் வினைப் பெயர்கள் பலவற்றிற்கும் பொருள் தரப்பட்டுள்ளது.

ஒலி பற்றிய பெயர்

இத்தொகுதியில் சொல்லின் வகை, பாக்களின் வகை, யாழ் வகை, இசையின் வகை முதலியன குறித்த பெயர்களனைத்தையும் காணலாம்.

இந்தப் பத்துத் தொகுதிகளும் சேர்ந்ததுதான் ஒருபொருள் பலசொல் தொகுதியாகும் என்பதை முன்னமே கண்டோம்.

நிகண்டுக் காலம்

சங்ககாலத்திற்குப் பின் சில நூற்றாண்டுகளில் சமணம், பௌத்தம், சைவம் போன்ற மதங்கள் இந்தியாவில் வேரூன்றத் தொடங்கின. இச்சமயங்களைத் தழுவி எண்ணற்ற இலக்கிய நூல்கள் தோற்றம் பெற்றன. இதன் வழி வடமொழி போன்ற பிறமொழிச் சொற்கள் ஏராளமாகத் தமிழில் கலந்தன. இந்நிலையில் சமயங் களைச் சார்ந்த இலக்கியங்களைப் படைப்பதற்கும் தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களை எளிதாகப் புரிந்து கொள்வதற்கும் நோக்கீட்டு நூல்களின் தேவை உணரப்பட்டது. இத்தேவையை நிறைவு செய்யும் வகையில் தொல்காப்பிய நெறியில் கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை எண்ணிறந்த நிகண்டு கள் அறிஞர்களால் தொகுக்கப் பெற்றன. தொல்காப்பிய உரியியலே சொல்லுக்குப் பொருள் கூறினமையால் இந்நிகண்டுகள் உரிச்சொல் என்றும் உரிச்சொல் பனுவல் என்றும் அழைக்கப்பட்டன.

திவாகரம்

நிகண்டு நூல்களின் வரிசையில் முதல் நிகண்டாகக் கருதப் படுவது கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரமாகும்.

திவாகர நிகண்டு 'தெய்வப் பெயர்த்தொகுதி' முதல் பலபொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி ஈறாகப் பன்னிரண்டு தொகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு தொகுதியும் பொருண்மைப் புலங்களின் அடிப்படையில் தன்னுள் பல பிரிவுகளையும், உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. இவற்றின் பிரிவுகள் நிகண்டுகளின் அமைப்புமுறை என்னும் தலைப்பின்கீழ் நாம் முன்னமே கண்டோம். திவாகரரின் தொகுதி அமைப்புப் பின்வந்த பல நிகண்டுகளின் அமைப்பிற்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. திவாகரத்தைப் போன்று பன்னிரண்டு தொகுதி களைப் பெற்றுச் சில நிகண்டுகள் காணப்படுகின்றன. இப் பன்னிரண்டு தொகுதிகளையும் முன்னர்க் கூறியதுபோல மூன்று பிரிவுகளில் அடக்கலாம். இம்மூன்றனுள் முதல் வகையைப் பின்பற்றிச் சில நிகண்டுகளும் தோன்றியுள்ளன. திவாகரத்தின் பன்னிரண்டு தொகுதிகளிலும் ஏறத்தாழ 9500 சொற்கள் பொருள் விளக்கம் பெற்றுள்ளன. இந்நிகண்டு தொல்காப்பிய உரியியலை விடச் சொல், பொருள் எண்ணிக்கையிலும் அமைப்பிலும் மாற்றம் பெற்றுள்ளது.

"அப்பம் பிட்டொடு அஃகுல்லி இடியெனச்
செப்பிய வெல்லாம் சிற்றுண்டி யாகும்" (திவாகரம்)

சிற்றுண்டியைப் பற்றியதாக இந்நூற்பாவில் பொருள் அமைந்துள்ளது.

பிங்கலம்

திவாகரத்தை அடுத்துக் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் பிங்கல நிகண்டு என்னும் நூல் பிங்கல முனிவரால் தொகுக்கப் பெற்றது. திவாகரத்தின் ஒவ்வொரு தொகுதியும் இதில் வகை என்று குறிக்கப் பெற்றுள்ளது. இந்நிகண்டில் திவாகரத்தின் முதலிரண்டு தொகுதி கள் மட்டும் இடம் பெற்றுள்ளன. 'பலபொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் மூன்றாம் தொகுதி இந்நிகண்டில் இடம் பெறவில்லை. இந்நிகண்டு திவாகரத்தைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான நூற்பாக்களையும் சொற்களையும் கொண்டுள்ளது. இந்நிகண்டில் மொத்தம் 15,300 சொற்கள்

விளக்கம் பெற்றுள்ளன. இதற்குப் பிங்கலத்தை என்ற பெயரும் உண்டு. திவாகரத்தைவிட இதில் சொற்கள் அதிகமாயிருந்தாலும் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக வேறு எந்தத் தனிப் பண்பையும் காணமுடிய வில்லை.

"நிலையழி வோட்டம் பின்னிட றோல்வே
தொலைத றோற்ற லஞ்சறோல் விப்பெயர்" (பிங்கலம்)

நிலையழிவு, ஓட்டம், பின்னிடல், தோல்வு, தொலைதல், தோற்றல், அஞ்சல் என்பன தோல்வியைக் குறிக்கும் பெயர்களாக அமைந்துள்ளன என்று இந்நூற்பா சுட்டுகின்றது.

சூடாமணி நிகண்டு

திவாகரம், பிங்கலம் என்பனவற்றிற்கு அடுத்தபடியாகக் கிடைத்திருக்கும் நிகண்டுகளுள் காலத்தாலும் சிறப்பாலும் முதன்மை பெறுவது சூடாமணி நிகண்டாகும். இந்நிகண்டை மண்டலபுருடர் என்பவர் உருவாக்கினார். திவாகரம் போன்று பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்டதாக இந்நிகண்டு விளங்கு கிறது. சூடாமணியைத் திவாகரத்தின் விரிவான மறுபதிப்பு என்று சுந்தர சண்முகனார் கூறுகிறார் (1965 193). இதில் 1789 செய்யுள்கள் உள்ளன. முன்பு தோன்றிய நிகண்டுகளிலிருந்து இது வேறுபட்டுக் காணப்படுகிறது. என்னவென்றால் இந்நிகண்டைப் படித்து மனனம் செய்வதற்கு ஏற்ற வகையில் பாடல்கள் விருத்தப்பாவில் அமைந்துள்ளன. இதன் பத்துத் தொகுதிகளில் மட்டும் ஏறத்தாழ 11,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. சூடாமணியின் பதினோரா வது தொகுதி திவாகரத்தின் பதினோராவது தொகுதியைப் போன்றே அமைந்துள்ளது. எனினும் இத்தொகுதியை மனப்பாடம் செய்வதற்கு ஏற்றவகையில் மெய்யெழுத்துக்களின் அடிப்படையில் பதினெட்டு வகையாகக் ககர எதுகை முதல் னகர எதுகை ஈறாகப் பிரித்துள்ளார் இந்நிகண்டின் ஆசிரியர். இவர் முதலில் ககர எதுகைச் சொற்களைக் கொடுத்துப் பின் ஙகர எதுகைச் சொற் களைத் தந்து வரிசைப்படுத்தியிருப்பது அகராதி வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

சூடாமணி நிகண்டின் வரிசைமுறையில் சில குறைகளும் நிகழ்ந்துள்ளன. ககர எதுகையில் 'வசி' எனும் வகர எதுகைச் சொல்லும் னகர எதுகை வரிசையில் பேடு என்னும் சொல்லும் கலந்துள்ளன. சில இடங்களில் சொல்லுக்குப் பொருள் கூறும்போது அடைமொழிச் சொற்களைச் சேர்த்திருப்பது பொருளில் மயக்கத் தைத் தருகின்றது. சான்றாக 'விழவு' என்னும் சொல்லுக்குப் பொருள் கூறவந்த ஆசிரியர்,

"விழவு என்ப மிதுனராசி விளங்கும் உற்சவமாகும்"

என்கிறார். இதில் விழவு என்பதற்கு மிதுனராசி, உற்சவம் என்று இரண்டு பொருள்கள்தான் கூறப்பட்டுள்ளன. ஆனால் விளங்கும் உற்சவம் என்பதால் பொருள் மயக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. திவாகரம், பிங்கலந்தை போன்ற அமைப்பினைச் சூடாமணி நிகண்டு கொண்டிருந்தாலும் முன் நிகண்டுகளின் பாடல்களில் மனனம் செய்வதில் ஏற்படும் சிக்கல்கள் இதில் ஓரளவு தீர்த்து வைக்கப் படுகின்றன. நோக்குநூல் பண்பைப் பெற்றுப் பின் அகராதிக்கு அடியெடுத்துக் கொடுத்த பெருமை இந்நிகண்டிற்கு என்றும் உண்டு எனலாம். மண்டலபுருடர் தம் நூலின் பாயிரத்தில் 'நிகண்டு சூடாமணி' என ஒன்று சொல்வன்' என்று உரிச்சொற் பனுவல்களை 'நிகண்டு' என்னும் புதுப்பெயரால் முதன்முதலில் சுட்டியுள்ளார்.

உரிச்சொல் நிகண்டு

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் காங்கேயர் என்பவரால் 'உரிச் சொல் நிகண்டு' என்னும் நூல் பத்துத் தொகுதிகளில் வெளியானது. முந்தைய நிகண்டுகளைவிட இந்நிகண்டில் சொற்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது.

கயாதரம்

உரிச்சொல் நிகண்டினை அடுத்துக் கயாதரம் என்னும் நிகண்டு கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இதனைக் கயாதரர் என்பவர் உருவாக்கினார். 11,350 சொற்களைக் கொண்ட இந்நிகண்டு மனனம் செய்ய ஏற்ற வகையில் அந்தாதித் தொடை யில் அமைந்துள்ளது. இவ்வகையிலான சிறிய மாற்றங்கள் நிகண்டுகளின் அமைப்பு முறையிலான வளர்ச்சியைக் குறித்து நிற்கின்றன.

அகராதி நிகண்டு

அகராதி எனும் சொல்லை முதன்முதலில் தமிழில் அறிமுகப் படுத்தியது இவ்வகராதி நிகண்டுதான். திவாகரம், பிங்கலம் போன்றவற்றின் காலகட்டத்தில் உரிச்சொல், உரிச்சொல் பனுவல் என்றுதான் நிகண்டுகள் அழைக்கப்பட்டு வந்தன. பின்னர்ச் சூடாமணி நிகண்டில்தான் 'நிகண்டு' என்னும் பெயரினை இத் தொகுப்பு நூல்கள் பெற்றன. நிகண்டுப்பணி படிப்படியாக வளர்ச்சி அடைந்து அகராதி நிகண்டில் ஒரு பெரும் மாற்றத்தை எட்டியது. நிகண்டு மற்றும் அகராதியின் கூறுகள் காணப்பட்டதால் இதற்கு அகராதி நிகண்டு என்று பெயர் பெற்றது. இதில் சொற்களின் முதல் எழுத்து மட்டும் அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது. பிற எழுத்துக்கள் அகர வரிசைப்படுத்தப்படவில்லை.

அகராதி நிகண்டினை இரேவண சித்தர் என்பவர் தொகுத்துக் கி.பி. 1594இல் வெளியிட்டார். நிகண்டு மரபின் மூன்று பிரிவு களில் இரண்டாவது பிரிவாகிய ஒரு சொல் பல பொருள் பெயர்த் தொகுதியைச் சார்ந்து இந்நிகண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிகண்டின் சொற்கள் பத்துத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,

1. அகராதிப் பெயர்த் தொகுதி
2. ககராதிப் பெயர்த் தொகுதி
3. சகராதிப் பெயர்த் தொகுதி
4. ஞகராதிப் பெயர்த் தொகுதி
5. தகராதிப் பெயர்த் தொகுதி
6. நகராதிப் பெயர்த் தொகுதி
7. பகராதிப் பெயர்த் தொகுதி
8. மகராதிப் பெயர்த் தொகுதி
9. யகராதிப் பெயர்த் தொகுதி
10. வகராதிப் பெயர்த் தொகுதி

என்பனவாகும். இந்நிகண்டில் 'அ' முதல் 'ஔ' வரையிலுமுள்ள சொற்கள் அகராதிப் பெயர்த்தொகுதியிலும் 'க' முதல் 'கௌ' வரையிலான சொற்கள் ககராதிப் பெயர்த் தொகுதியிலும் 'ச' முதல் 'சௌ' வரையிலான சொற்கள் சகராதிப் பெயர்த்தொகுதியிலும் தரப் பட்டுள்ளன. இவை போலவே மற்ற எழுத்துச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

இந்த அகராதி நிகண்டில் பிற நிகண்டிலிருந்து பெறப்பட்ட சொற்களுடன் சங்க இலக்கியச் சொற்கள், உரைச்சொற்கள், அருஞ் சொற்கள், பிற்காலத் தமிழிலக்கியச் சொற்கள், உலக வழக்குச் சொற்கள், வடமொழி, தெலுங்கு, கன்னடம் முதலியவற்றினின்று திரிந்து வந்த சொற்களும் இடம் பெற்றுள்ளன. இந்நிகண்டில் பொருள் தரும் முறையிலுள்ள மற்றொரு சிறப்பு என்னவென்றால் 'அ' என்னும் எழுத்தைக் கொண்ட ஒரு பொருட்சொற்கள் முதலி லும் இருபொருட் சொற்கள் அடுத்தும் 'அ' என்னும் எழுத்து முதலாகக் கொண்ட நாற்பத்தாறு சொற்கள் வரைத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மற்ற எழுத்துக்களில் தொடங்கும் சொற்களும் இவ்வாறே வகை செய்யப்பட்டுள்ளன. பொருள்களின் எண்ணிக்கை யைத் தலைச்சொல் அமைப்பிற்குப் பயன்படுத்திக் கொள்ளுதல் இவ்வகராதியின் சிறப்பம்சமாகும்.

கைலாச நிகண்டு சூடாமணி

கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய நிகண்டு 'கைலாச நிகண்டு சூடாமணி' ஆகும். இதனைக் கைலாசம் என்பவர் தொகுத்து வெளியிட்டுள்ளார். இதில் ஓரெழுத்துதொரு மொழி, ஈரெழுத்து ஒருமொழி என்று சொற்கள் எழுத்து அடிப்படையில் வகை செய்யப்பட்டுள்ளன. இதில் 15,000 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன.

இதன்பின் எழுந்த பல்வேறு நிகண்டுகள் அமைப்பு முறையி லும் மனனம் முறையிலும் சில மாற்றங்களைச் செய்யும் முயற்சி யில் ஈடுபட்டுள்ளன. முப்பெரும் தொகுதிகளில் ஒன்றை மட்டும் தொகுத்து வழங்கிய நிகண்டுகள் சிறப்பகராதிகள் போன்று செயல் பட்டு வந்தன. தமிழில் இதுவரையில் 25க்கும் மேற்பட்ட நிகண்டு நூல்கள் தோன்றியுள்ளன.

மற்ற நிகண்டுகள்

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் 'பல்பொருள் சூடாமணி நிகண்டு' என்னும் நூல் ஈஸ்வர பாரதி என்பவரால் தொகுக்கப்பட்டது. மூன்று காண்டங்களைக் கொண்ட இதில் முதல் காண்டத்தில் ஒரு பொருட் சொற்களும் இரண்டாவது காண்டத்தில் பலபொருட் சொற்களும் மூன்றாவது காண்டத்தில் ஒருபொருட் பன்மொழி களும் தரப்பட்டுள்ளன. சொற்பொருளை எண்ணிக்கை முறையில் வகைப்படுத்தும் தன்மையை இந்நிகண்டிற்குப் பின்வந்த பல நிகண்டுகளில் காணமுடியும். இதனையடுத்துப் 'பாரதி தீபம்' என்னும் நிகண்டு மூன்று பிரிவுகளையும் 12 தொகுதிகளையும் கொண்டுள்ளது. இதனைத் திருவேங்கட பாரதி என்பவர் தொகுத்து வெளியிட்டார். கயாதர நிகண்டு போன்று கட்டளைக் கலித்துறையில் பாடல்கள் அமைந்துள்ளன. முதல் பத்துத் தொகுதிகளில் மட்டும் 13,000 சொற்கள் இடம்பெற்றுள்ளன.

ஆண்டிப்புலவர் மிக நீளமான அடிகளைக் கொண்ட ஆசிரிய விருத்தத்தால் ஆன நிகண்டு ஒன்றினை உருவாக்கினார். அதற்கு 'ஆசிரிய நிகண்டு' என்று பெயரிட்டார். இது ஒருசொல் பல பொருட் பெயர்த் தொகுதியைச் சார்ந்தது. இது கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது. இதே நூற்றாண்டைச் சேர்ந்த அருமருந்தைய தேசிகர் என்பவர் 'அரும்பொருள் விளக்க நிகண்டி'னைத் தொகுத்தளித்தார். ஒருசொல் பலபொருள் பெயர்த் தொகுதியின் விரிவான விளக்கமாக இந்நிகண்டு திகழ்கின்றது. இதில் ககர எதுகை முதல் னகர எதுகை ஈறாகப் பதினெட்டுத் தொகுதிகளில் 3200 சொற்கள் பொருள் விளக்கம் பெறுகின்றன. எதுகை அமைப்பு இந்நிகண்டில் சிறப்பாக அமைந்துள்ளதால் சூடாமணி நிகண்டைக் காட்டிலும் இந்நிகண்டில் சொற்களை எளிதில் கண்டுகொள்ள முடிகிறது.

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் சுப்பிரமணியக் கவிராயர் 'தொகை நிகண்டி'னைத் தொகுத்தளித்தார். இதில் திவாகரத்தின் மூன்றா வது பிரிவாகிய பல பொருள் கூட்டத்துப் பெயர்த்தொகுதி மட்டும் இடம் பெற்றுள்ளது. இதே நூற்றாண்டில் 'பொதிகை நிகண்டி னைச் சாமிநாத கவிராயர் இயற்றினார். சிதம்பர கவிராயர் என்பவர் உசித சூடாமணி நிகண்டினைத் தொகுத்து வெளியிட்டார்.

கி.பி. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிவசுப்பிரமணியக் கவிராயர் "நாமதீப நிகண்டு' என்னும் நூலைத் தொகுத்தளித்தார். நிகண்டின் முப்பெரும் பிரிவுகளுள் ஒன்றாகிய ஒருபொருள் பல பெயர்த் தொகுதியைச் சார்ந்ததாக இந்நிகண்டு உள்ளது. இந்நூல் நான்கு படலங்களையும் பதினாறு வர்க்கங்களையும் கொண்டுள்ளது. திவாகர நிகண்டில் தொகுதி எனப்படுவதை இங்கு வர்க்கம் என்றழைக்கப்படுகிறது. சங்ககாலச் சொற்கள் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வழக்காற்றுச் சொற்கள் வரையிலான அனைத்துச் சொற்களும் இதில் இடம்பெற்றுள்ளன. மலையாளப் பகுதியின் வழக்கிலுள்ள பல சொற்களும் இந்நிகண்டில் இடம் பெற்றுள்ளன. இதே நூற்றாண்டில் வேதகிரி முதலியார் எழுதிய 'வேதகிரியார் சூடாமணி நிகண்டு' வெளியனது. இதில் பல புதிய சொற்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. எதுகை முறை கையாளப் பெற்றுள்ளது. சுப்பிரமணிய தேசிகரின் 'கந்தசுவாமியம்' எனும் நிகண்டின் முதல் இரு தொகுதிகளும் கி.பி. 1844ல் அச்சாயின. முதல் தொகுதியில் 1318 சொற்களும் இரண்டாவது தொகுதியில் 1425 சொற்களும் இடம் பெற்றுள்ளன. கி.பி. 1874இல் 'அபிதான தனிச்செய்யுள் நிகண்டு' என்னும் நூல் உருவானது. இதனைக் கோபாலசாமி நாயகர் தொகுத்துள்ளார். இவ்வாறு ஒவ்வொரு நிகண்டும் ஒவ்வொரு நிலையில் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது. இதனடியில் பெயர் மட்டும் தெரிந்த நிகண்டுகள் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. சான்றாக, ஔவை நிகண்டு, அந்தாதித் தொடை நிகண்டு, அபிதான மணிமாலை, கயிலாய உரிச்சொல், சொற்கோவை, பொருட்கோவை, நேர்ச் சொல் நிகண்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை எண்ணற்ற நிகண்டுகள் வெளிவந்துள்ளன என்பதைக் காண முடிகின்றது. இந்நிகண்டுகள் தமக்கெனப் பல்வேறு தனிச் சிறப்பு களைப் பெற்றுத் திகழ்கின்றன என்பதை அறியமுடிகிறது. காலப் போக்கில் சொல், பொருள் ஆகியவற்றில் பெருக்கம் ஏற்பட்டது. மனனம் செய்வதற்கு ஏற்ற வகையில் பாவகையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக யாப்பில் சில மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. இவ்வெளிமையாக்க முயற்சியின் ஒரு படியாகத்தான்

சொற்களில் அகரவரிசை முறையும் பொருட்பகுதியில் பொருள் எண்ணிக்கை முறையும் பின்பற்றப்பட்டுள்ளன என்பதில் ஐயமில்லை.

வேதச்சொற்களின் பொருளை ஆராய்கின்ற துறை நிருத்தம் எனப்படும். இந்த நிருத்தத்தின் ஒரு பகுதியே நிகண்டு. இன்றுள்ள நிருத்தம் யாஸ்கர் என்பவரால் எழுதப்பட்டது. இது மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது.

மூன்று காண்டங்கள்

நைகண்டுகம் | **நைகமம்** | **தைவதம்**

நைகண்டும்: நிகண்டு என்னும் சொல்லிலிருந்து வந்ததே நைகண்டுகம் என்பர். பூமி, பொன், காற்று முதலிய பொதுப்பெயரின் கீழ், அவை தொடர்பான ஒரு பொருள் பல சொற்களைத் தொகுத்துத் தரும் பகுதியாக நைகண்டுகம் உள்ளது.

நைகமம்: நிகமம் என்னும் சொல்லிலிருந்து வந்ததே நைகமம் என்பர். இது ஒரு சொல் பலபொருளைக் கூறும் பகுதியாகும்.

தைவதம்: தெய்வம் என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர். வைதிக தேவதைகள் பற்றி உரைப்பதே இப்பகுதியாகும்.

சொல்லுக்குப் பொருள் கூறுவதற்காகப் பின்னர் எழுந்த தனி நூல்கள் 'நைகண்டுகம்' என்பதன் மூலச் சொல்லாகிய 'நிகண்டு' என்னும் பொதுப் பெயரால் வழங்கப்பட்டன. புராணம், பிரபந்தம் முதலான பெயர்களைப் போல, நிகண்டு என்னும் வடமொழிப் பெயரும் தமிழ் உலகில் வழங்கி நிலைபெற்றுவிட்டது. இருப்பினும் நிகண்டு என்பதனைத் தமிழ்ச்சொல் எனக்கொள்வோரும் உள்ளனர்.

உரிச்சொல், உரிச்சொல் பனுவல்

நிகண்டு என்னும் சொல் எப்பொழுது தோன்றியது? நிகண்டு நூல்களுக்கு நிகண்டு என்ற பெரையே வழங்கி வெளியிட்டனரா? என்றால் இல்லை. ஆரம்பகாலத்தில் உரிச்சொல், உரிச்சொல் பனுவல் என்ற பொதுப்பெயரால் தமிழ்ச் சொற்பொருள் கூறும்

துறை நூல்கள் (நிகண்டுகள்) வழங்கப்பட்டன. ஒருமொழி அகராதியின் தோற்றத்திற்கு அடிப்படையாக நிகண்டு இருக்கிறது. ஏனென்றால் நிகண்டும் சொல்லுக்குப் பொருள்கூறும் நூலாகும். தொல்காப்பியமும் நிகண்டுகளும்தான் அகராதி தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது.

தொல்காப்பியத்தின் இடையியல், உரியியல் என்னும் இரண்டு இயல்களில் மட்டுமன்றி மற்ற இயல்களிலும் அகராதிக்கான கூறுகள் உள்ளன என்பதை இதுவரை விளக்கிவந்த பகுதிகள் சுட்டுகின்றன. எனினும் வேற்றுமையியல், எச்சவியல், புறத்திணை யியல், செய்யுளியல், மரபியல் போன்றவற்றில் அகராதிக்கூறுடைய நூற்பாக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை எனலாம்.

இயல்-3
அமைப்பு மாற்றம்

எந்தப் பொருளாக இருந்தாலும் அதற்கென்று ஓர் அமைப்பு இருக்கும். இலக்கியம், இலக்கணம், காப்பியம், சிற்றிலக்கியம், கவிதை, சிறுகதை, நாடகம், புதினம் என எந்தவகை இலக்கியமாக இருந்தாலும் அதற்கு அமைப்பு என்ற ஒன்று இருக்கும். அப்படி இருக்கின்ற பொழுது அகராதிக்கென்றும் தனியே ஒரு அமைப்பு முறை உண்டு. ஒருமொழி அகராதிக்கான அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்று பார்ப்பதே இவண் நோக்கமாகும். 'சதுரகராதி' (1732) முதல் 'புதிய தமிழ் அகராதி' (2009) வரையுள்ள ஒருமொழி அகராதிகள் பற்றிய குறிப்பும் அமைப்பும் இங்கு விளக்கப்படுகின்றன.

ஒருமொழி அகராதிகளின் அமைப்பு

தமிழ் ஒருமொழி அகராதிகள் இரண்டு அமைப்புகளைப் பின்பற்றி வந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. அவை 1. அமைப்பு-1 அகராதி, 2. அமைப்பு-2 அகராதி என்பனவாகும்.

அமைப்பு -1 அகராதி

முன்னர் நிகண்டுகளில் பொருட்புல அடிப்படையில் 12 தொகுதிகளாக 3 பெரும் பிரிவுகளில் சொல்லுக்குப் பொருள்கூறும் நிலையினைக் காணமுடிந்தது. இந்நிகண்டுகளின் அடியாகச் சொற்றொகுதியைப் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பிரிவுகளில் தொகுத்துப் பொருள் கூறுவது முதல்வகை அகராதியாகும்.

பெயரகராதி → ஒருசொல் பலபொருள்

பொருளகராதி → ஒருபொருட் பன்மொழி

தொகையகராதி → தொகைச் சொற்கள்

தொடையகராதி → எதுகை மோனைச் சொற்கள்

இவ்வகையான அமைப்பைக் கொண்ட அகராதிகளில் தலைச்சொல்லின் பொருளைக் காணவேண்டுமாயின் இந்நான்கு பிரிவுகளையும் பார்க்க வேண்டும். சான்றாக 'அரி' என்னும் சொல்லின் பொருளைக் காணவேண்டின் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பிரிவுகளையும் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்த்தால்தான் அச்சொல்லுக்கு நமக்குத் தேவையான பொருளைப் பெறமுடியும். இரண்டோ அதற்கு மேற்பட்ட பகுதி களை (பிரிவுகளை) உடைய அகராதிகளும் அமைப்பு–1 வகையைச் சார்ந்தவைதான்.

அமைப்பு–2 அகராதி

இரண்டாவது வகை அகராதிகளில் சொற்றொகுதியின் எல்லாச் சொற்களுமே அகரவரிசையில் அமைக்கப்பட்டுப் பொருள் தரப்பட்டிருக்கும். இவ்வகை அகராதியில் அமைப்பு–1இல் சுட்டப்பட்ட நான்கு பிரிவுகள் இருப்பதில்லை. ஒரு சொல்லுக்குரிய பொருளைக் காண வேண்டுமானால் அந்தச் சொல்லை அதற்குரிய அகரவரிசையில் கண்டு பொருளை அங்கேயே எளிமையாகக் கண்டு கொள்ளலாம். மேலும் அச்சொல்லுக்குரிய ஒட்டுமொத்தப் பொருளையும் ஒரே இடத்தில் கண்டுகொள்ள முடியும். இன்றைக்கு நடைமுறையில் காணப்படும் அகராதிகள் இந்த இரண்டாம் வகை அகராதிகளாகும்.

இந்த இரண்டுவகை அமைப்பில்தான் அகராதிகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இந்த அமைப்பில் எந்த அகராதிகள் தோற்றம் பெற்றுள்ளன என்பதை அந்தந்த அகராதியைக் குறித்துப் பேசும் பகுதியில் கண்டுகொள்ளலாம்.

தமிழில் ஒருமொழி அகராதிகளின் வரலாறு கி.பி. 18ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. கி.பி. 1732இல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் (பெஸ்கி) சதுரகராதியை வெளி யிட்டார். இதுவே தமிழின் முதல் ஒருமொழி அகராதியாகும். அகராதியின் வளர்ச்சி ஐரோப்பியர்களால் ஏற்றம் பெற்றது. தங்களுடைய மதத்தினைப் பரப்புவதற்காகத் தமிழகம் வந்த இவர்கள் தமிழைக் கற்று, அரிய பல நூல்களை எழுதினர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஐரோப்பியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதில் ஐயமில்லை. வீரமாமுனிவரின் சதுரகராதி, பழைய நிகண்டுகளின் செய்யுள் அமைப்பை (நூற்பா வடிவை) மாற்றி உரைநடை வடிவில் சொல்லுக்குப் பொருள் தரும் முறையை அறிமுகப்படுத்தியது.

சதுர் என்றால் நான்கு என்று பொருள். பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பிரிவுகளில் சொற்களை அகர வரிசைப்படுத்திப் பொருள் கூறியபடி இவ்வகராதி அமைந்திருப்பதால் ‘சதுரகராதி’ எனப் பெயரிடப்பட்டது. இதனை வீரமாமுனிவரே கூறுவதாகச் சதுரகராதியின் இலத்தீன் முன்னுரையின் தமிழாக்கம் குறிப்பிடுகின்றது. சதுரகராதி 552 பக்கங்களைக் கொண்டது. நூலின் அளவு 28 x 19 செ.மீ. மர எழுத்துக்களால் அச்சிடப்பட்டுள்ளது. ஒற்றுக்களுக்கு மெய்யெழுத்துக்களின் மேல் புள்ளி வைக்கும் முறை சில இடங்களில் மட்டுமே காண முடிகின்றது. இதன் முதற்பதிப்பைக் கி.பி. 1819இல் எல்லீசு என்பவரின் அனுமதிப் படி, தமிழ்ச்சங்கத் தலைமைப் புலமைத் திருச்சிற்றம்பலையரால் பொருளகராதி பரிசோதிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது. இதன் முழுமையான பதிப்பு, கி.பி. 1824ல் நான்கு பிரிவுகளையும் கொண்டு வெளிவந்துள்ளது. தொடர்ந்து இவ் வகராதியின் பதிப்புகள் 1835, 1848, 1860, 1872, 1875 (சென்னை), 1928, 1978 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தன. சதுரகராதி அமைப்பு– 1 வகையைச் சார்ந்தது.

சூ. இன்னாசியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சதுரகராதி ஒன்று வெளிவந்தது. இவ்வகராதி மூலத்தை முழுமையாகக் கொண்டுள்ளது. ஆனால் உலகத் தமிழ்க் கல்வி இயக்கம் வெளி

யிட்டுள்ள சதுரகராதியில் மூல அகராதியிலுள்ள தொடையகராதிச் சொற்கள் சில விடுபட்டுள்ளன.

சூ. இன்னாசியின் பதிப்பு	உ.த.க.இ. பதிப்பு
கொப்பி—கொப்பி கொட்டல்	கொப்பி— கொப்பி கொட்டல்
சிப்பி—சிப்பி	திப்பி—கோது
திப்பி—கோது	திப்பி—கோது
இமிழ்—இனிதாகென்னுமேவல், ஒலி	இனிமை—இமிழ்—இனிதாகென்னு மேவல் இனிமை, ஒலி
குமிழ் — குமிழ்	சிமிழ்— சிமிழ், சிமிழென்னேவல்
சிமிழ் — சிமிழ், சிமிழென்னேவல்	
கதவு — கதவு, காவல்	கதவு—கபாடம், காவல்.

இவ்வாறு மேலும் சில சொற்கள் உ.த.க.இ. பதிப்பில் விடு பட்டுள்ளன என்பது இங்குச் சுட்டத்தக்கது.

பெயரகராதியில் ஒரு சொல்லுக்குரிய பல பொருட்கள் சுட்டப் பட்டுள்ளன. இப்பகுதியில் மொத்தம் 12,187 சொற்கள் உள்ளன. பொருளகராதியில் ஒருபொருள் தரும் பல சொற்கள் தரப் பட்டுள்ளன. நிகண்டுகளின் ஒருபொருள் பல பெயர்த் தொகுதியே பொருளகராதியாய் அமைந்துள்ளது. இப்பகுதியில் 2168 சொற்கள் இடம் பெற்றுள்ளன. 298 சொற்களுக்குத் தொகையகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. தொடையகராதி என்னும் இறுதிப் பகுதியில் குறிற்கீழெதுகையகராதி, நெடிற் கீழெதுகையகராதி எனும் இரு உட்பிரிவுகள் அமைந்துள்ளன. சதுரகராதியில் பொருளுறவு கவனத்தில் கொள்ளாமல் அகர வரிசை முறைக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1842ல் சந்திரசேகரப் பண்டிதர் மானிப்பாய் அகராதியை உருவாக்கினார். இவ்வகராதி யாழ்ப்பாணப் புத்தகக் கழகத்தார் மூலமாக ஸ்பால்டிங் என்பவரால் வெளியிடப்பட்டது. சதுரகராதியை அடுத்துத் தமிழில் தோன்றிய ஒருமொழி

அகராதியாக இது திகழ் கிறது. இவ்வகராதி A Manual Dictoinary of The Tamil Language என்ற தலைப்பில் வெளியானது. இதற்கு யாழ்ப்பாண அகராதி என்ற வேறு பெயரும் உண்டு. யாழ்ப்பாண அகராதி என்பதால் யாழ்ப்பாணத் தமிழுக்கான அகராதிதான் இது என்று நினைக்க வேண்டாம். எனினும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்களும் இதில் இடம் பெற்றுள்ளன என்பதை மறந்து விடுவதற்கில்லை. யாழ்ப்பாணத் தமிழுக்கென்றே, மலையகத் தமிழுக்கென்றே, ஒட்டுமொத்த இலங்கைத் தமிழுக்கென்றே அகராதி இல்லாத நிலையில், இவ்வகராதியில் இடம் பெற்றிருக்கும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் குறைவாக உள்ளன. எனினும் இது வரலாற்று நோக்கில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை மறுக்க முடியாது. யாழ்ப்பாணத் தமிழர்களின் பண் பாட்டுக் கூறுகளைக் குறிப்பிடும் சொற்களைக் காண முடிகின்றது.

இலங்கையில் திசரா, பெர்சிவல் ஆகியோரின் உதவியுடன் நைட் (Knight) தயாரித்த மூன்று அகராதிகளும் வெளியிட முடியாமல் போயின. இவற்றிற்கெனத் தொகுக்கப்பட்ட சொற்களை அடிப்படையாகக் கொண்டுதான் இதனாசிரியர் இவ் வகராதியை உருவாக்கியுள்ளார். சந்திரசேகரப் பண்டிதரை யாழ்ப்பாணத்துக் கிறித்துவ மடத்தைச் சேர்ந்த ஜோசப் நைட் சதுரகராதியைப் போலல்லாமல், எல்லாச் சொற்களும் அமைந்த சீரகராதி ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, இவ்வகராதி உருவாக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. சதுரகராதி, நிகண்டுகள், சங்க நூல்கள், பாசுரங்கள், ஐம்பெருங்காப்பியங்கள், உலக வழக்கு, வடமொழி நூல்கள் எனப் பல்துறை நூல்களின் துணைகொண்டு இவ்வகராதி இயற்றப் பட்டது.

மானிப்பாய் அகராதி பெயர், பொருள், தொகை என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. அதனால் அமைப்பு-1 வகையைச் சார்ந்தது என்று இவ்வகராதியைக் குறிக்கலாம். சதுரகராதியில் உள்ள சொற்களைப் போல, நான்கு மடங்கு அதிகமான சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழியிலேயே இதுதான் முதல் முழு அகராதி எனலாம்.

இந்நூலில் சில குறைபாடுகள் இருப்பினும் இடையிடையில் பல சொற்கள் சேர்க்கப்பட்டுப் பேரகராதி, விரிவகராதி எனும் பெயர் களில் வெளிவந்திருக்கின்றது. இதில் சிறப்புப் பாயிரம் ஒன்று அமைந்துள்ளது. இப்பாயிரத்தை அவையம்பதி தமிழ்ப்புலவர் வேலுப்பிள்ளை குமாரன் கனகசபா பிள்ளை இயற்றியுள்ளார். உடுவை நகர் முத்துக்குமார சிதம்பரப் பிள்ளை என்பவர் சிறப்புப் பாயிரம் ஒன்று இயற்றியுள்ளார். மானிப்பாய் அகராதிக்கு ஓர் அனுபந்த அகராதியைக் களத்தூர் வேதகிரி முதலியார் சேர்த்துள்ளார். இதில் 6500 சொற்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ் மண் பதிப்பகம் யாழ்ப்பாண அகராதி என்ற பெயரில் இதனை மறுபதிப்புச் செய்து 2005ல் வெளியிட்டது. இவ்வகராதி 163 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபதிப்பைக் கண்டுள்ளது. இது இண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இதன் முதல் பக்கத்தில் இதன் ஆசிரியர்களாகச் சந்திரசேகரப் பண்டிதர், சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இலக்கியச் சொற்களுக்கே பெரும்பாலும் பொருள் கூறப் பட்டிருப்பதால் இவ்வகராதிக்கு இலக்கியச் சொல்லகராதி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை அ. குமாரசுவாமிப் பிள்ளை வெளியிட்டுள்ளார். இதன் முதற்பதிப்பு 1878ஆம் ஆண்டு வெளி வந்தது. மறுபதிப்பு 1985இல் வெளிவந்தது. நிகண்டுகளிலும் அபிதானங்களிலும் பாரதம், இராமாயணம், கலித்தொகை, சிந்தாமணி முதலிய இலக்கியங்களிலிருந்தும் புதியனவாகப் பல சொற்கள் இந்நூலின் மறுபதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை 1500க்கு மேல் இருக்கும். சொற்கள் மட்டுமன்றிப் பொருட்களும் புதியனவாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில சில பொருட்கள் திருத்தப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

'இராமாயணம், பாரதம், இரகுவமிசம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்களிலுள்ள சொற்களுள்ளும் பல சொற்கள் பொருளுற வினால் இங்கே எழுதப்படவில்லை. இவ்வகராதியிலேயே வேண்டும் சொற்கள் பல வரவில்லை என்று வெறுப்பவர்கள், இங்கு வரும் புதுச் சொற்களையும் திருத்திச் சேர்க்கப்பட்ட பொருள்களையும்

இதன் விலையையும் நோக்குவாராயின்; ஒருகால் இதுவும் வேண்டற்பாலதென்றே உவப்பவராவர்' என்று அ. குமாரசுவாமிப் பிள்ளை இந்நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். இவ்வகராதி மொத்தம் 61 நூல்களிலுள்ள சொற்களுக்குப் பொருள் தருகிறது. 205 பக்கங்கள் கொண்ட அகராதியாய் விளங்குகிறது.

கி.பி. 1883இல் சி. விஜயரங்க முதலியார் ஓர் அகராதியைத் தொகுத்து வெளியிட்டார். அதற்கு அகராதிச் சுருக்கம் என்று பெயரிட்டார். இவ்வகராதியல் 3000 தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. பெயராகவும் வினையாகவும் வழங்கும் சொற்கள் இந்நூலின் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. மாணவர் களின் பயன்பாட்டிற்கென இவ்வகராதி உருவாக்கப் பட்டுள்ளது.

கி.பி. 1893இல் இராமசாமி நாயுடு 'தமிழ்ப் பேரகராதி'யைத் தொகுத்தளித்தார். இவ்வகராதி மானிப்பாய் அகராதி மற்றும் வேதகிரி முதலியாரின் அனுபந்த அகராதி ஆகிய இரண்டையும் சேர்த்துத் தொகுத்த அகராதியாகும். இதில் பல புதிய வடசொற்களையும் சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் இரண்டாம் பதிப்பில் வைத்தியச் சொற்கள், இலக்கியச் சொற்கள், வடசொற்கள், புதிய சொற்கள் என 6500க்கும் மேற்பட்ட சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வகராதி முருகேச முதலியார், குமாரசாமி முதலியார் ஆகியோரால் அச்சிட்டுப் பதிப்பிக்கப் பட்டது. இது அமைப்பு ஒன்று வகையைச் சார்ந்த அகராதியாகும்.

கி.பி. 1899இல் நா. கதிரைவேற்பிள்ளை என்பவர் தமிழ்ப் பேரகராதியைத் தொகுத்தளித்தார். இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர். சதுரகராதி, யாழ்ப்பாணத்து மானிப்பாய் அகராதி, விரிவகராதி முதலிய அகராதிகளில் இடம் பெற்றுள்ள சொற்களோடு, நூதனமாக அரிய பெரிய இலக்கிய இலக்கணங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட சொற்கள் முறைப்படிச் சேர்த்து, இவ்வகராதியில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வகராதியின் இரண்டாம் பதிப்பு, கி.பி. 1901ல் வெளிவந்தது. இதை வெளியிட்ட பி.வே. நமச்சிவாய முதலியார், காஞ்சி நாகலிங்க முதலியாரைக் கொண்டு மேலும் பல சொற்களை இணைத்துத் திருத்தியும் விளக்கியும் பேரகராதியை

வளமைப்படுத்திக் கி.பி. 1911இல் மீண்டும் ஒரு பதிப்பை வெளியிட்டார். இந்த அகராதிக்கு நாகலிங்க முதலியாரின் விருப்பப்படி, 'தமிழ் மொழியகராதி' எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் மேரி அரசியாரும் அந்த ஆண்டு டில்லியில் முடிசூட்டிக் கொண்டதை நினைவுகூறும் வண்ணம் இதற்கு 'கார்னேசன் தமிழ் டிக்சனரி' (The Cornation Tamil Dictionary) என்று பெயரிடப்பட்டது. இந்த அகராதியின் ஆறாவது பதிப்பைப் படப்பதிப்பாக டில்லி ஆசியன் நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர். 2002இல் பன்னிரண்டாவது பதிப்பு வெளிவந்தது. சதுரகராதியைப் போல இவ்வகராதியும் பெயர், பொருள், தொகை, தொடை எனும் நான்கு பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. எனவே, இது அமைப்பு–1 அகராதி வகையைச் சார்ந்ததாகும்.

கி.பி. 1904இல் கு. கதிரைவேற்பிள்ளை என்பவரால் தமிழ்ச் சொல்லகராதி உருவாக்கப்பட்டது. இது சதுரகராதியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அகராதியாகும். அதாவது தமிழ் ஒருமொழி அகராதியின் வரலாற்றில் உட்பிரிவின்றி முழுமையான முதல் முழு அகராதியாக இது விளங்குகின்றது. இன்றுள்ள அகராதிக்கெல்லாம் தோற்றுவாயாக இது உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் ஆசிரியர் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றபின் திட்டமிட்டு இவ்வகராதியை உருவாக்கியுள்ளார். இது மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல் தொகுதி 1904லும், இதன் இரண்டாவது பதிப்பு 1910லும், இரண்டாம் தொகுதி 1912லும், மூன்றாம் தொகுதி 1923லும் வெளிவந்தன. இந்நூலை மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளி யிட்டதால் 'சங்க அகராதி' என்றும் 'தமிழ்ச்சங்க அகராதி' என்றும் அழைக்கப்படும். முதல் தொகுதியில் 17600 சொற்களும் இரண்டாம் தொகுதியில் 18100 சொற்களும் மூன்றாம் தொகுதியில் 28200 சொற்களும் என மொத்தம் 63900 சொற்களுக்கு இவ் வகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. இந்நூல் 27x21 செ.மீ. அளவினையுடையது.

பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகைப்பட்ட தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் கூறுவதால் தமிழ்ச் சொல்லகராதி

எனப் பெயர் பெற்றது. இந்த அகராதியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1998இல் வெளியிட்டுள்ளது. இதில் ஆசிரியரின் பெயர் சி.டபிள்யூ. கதிரைவேற்பிள்ளை என்றுள்ளது. இதன் முன்னுரையில் இவ்வகராதியில் பயன்படுத்தப்பெறும் அகராதியில் நெறிமுறைகள் சிலவற்றினை ஆசிரியர் தெரிவித்துள்ளார் (1998: x-xi) அவற்றைக் கீழே காணலாம்.

1. நெடுங்கணக்கில் கிரமப்படி உயிர்மெய்க்கு முன்னே மெய்வருக்கம் எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு சொல்லுக்குப் பல பொருள் எழுதப்பட்டவையும் மாணவரின் நலனுக்காக முன்னகராதிகளில் சுட்டப்பட்டதுபோல நெடுங்கணக்குக் கிரமமாகவே எழுதினோம்.
2. வடமொழியிலிருந்து பிறந்தோ ஆரியத்தோடொத்தோ தமிழில் வழங்கும் சொற்களை இருமருங்கினும் பகர அடைப்பிட்டு ஆரிய வடிவில் எழுதிக் காட்டினோம்.
3. சொற்களின் பொருள் வரம்புபட விளங்குமாறு, காலம் இடந்தந்த அளவு முன்னை அகராதிச் சொற்கள் பலவற்றிற்கும் நாம் புதியனவாகச் சேர்த்துக் கொண்ட சொற்களெவற்றிற்கும் சான்றுகளும் காணப்பட்ட இடங்களும் குறிக்கப்பட்டன.
4. முன் அகராதிகளிலே னகர வர்க்கத்திலே கண்ட வட சொற்கள் இங்கு நகர வர்க்கத்தில் எழுதப்பட்டுள்ளன.
5. பெரும்பாலும் சொற்களுக்குச் சொல்மூலம் முதலியன பொருளுரை மொழிகளின் பின் எழுதியிருக்கின்றோம். அங்ஙனமாகச் சொல் மூலம் முதலியன பல வேறுபட வருங்கால் அவ்வெழுத்து இன்ன பொருட்கியைந்ததென்பது அந்தந்தப் பொருண்மொழியின் இலக்கத்தாற் காட்டப் பட்டிருக்கின்றது.
6. இந்துவிந்துவை விசர்க்கமென்று கொள்ளாதொழிக.

7. ஒருமைச்சொல்லுக்குத் தகுந்த விகுதி சேர்த்துப் பன்மைச் சொல்வருவிக்கும் முறையை மாணவர் அறிவாராதலால், அவற்றுள் ஒன்றையே எழுதியும் உபயோகமாகுமெனக் கண்ட இடங்கல் அவ்விரண்டையும் எழுதியுமிருக்கின் றோம்.

8. எட்டு வேற்றுமைகளிலும் வெவ்வேறு உருபு பெற்றும் ஒரு வேற்றுமையிறானே பல உருபு பெற்றும் வரும் பெயரின் விகார ரூபங்களையும் பகுதியின்றும் பல வேறு படப் பிறக்கும் வினையின் விகார ரூபங்களையும் தனித் தனியெழுதிப் பொருள் விளக்கிக் காட்டுதல் பயன்படும் ஆயினும் விரிவஞ்சி அங்ஙனங்காட்டாது விட்டோம். பயன் படும் எனக் கருதிச் சில இடங்களில் எச்ச வினைகளுக்கும் பொருள்கூறி உதாரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

9. முதனிலையினும் இறுதி நிலையினும் வராது என்ற எழுத்துக்கள் அந்நிலையில் வருதலும் இடைநிலையில் வேற்றுநிலை மயக்கமாய் வராது என விலக்கப்பட்ட எழுத்துக்கள் மயங்கி வருவதலும் வடநூலார் வியாகரணத் தில் விதித்தபடித் தமிழ் நூல்களில் சிறுபான்மை வரக்கண்டமை பற்றியென்க.

கி.பி. 1909இல் பி. இராமநாதன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ‘இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதி’ (The Twentieth Century Tamil Dictionary) ஒன்று வெளிவந்தது. இதனாசிரியரின் பெயரிலேயே இவ்வகராதி இராமநாதன் அகராதி’ என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வகராதியைச் சிறப்பித்துப் பத்தொன்பது அறிஞர்கள் கூறியுள்ளனர். இவ்வகராதி ஜான்சனின் ஆங்கில அகராதியுடன் ஒப்பிட்டுச் சுட்டப்பட்டுள்ளது. இதனைக் கீழே காணலாம்.

“The Tamil Dictionary compiled by Mr. P. Ramanathan Mudaliyar is the result of the many years of laborious work and aims at doing for Tamil what Johnson did for the English Language”

இந்த அகராதியின் மறுபதிப்பு 1991இல் 'இன்ஸ்டிடியூட் ஆஃப் சவுத் இன்டியன் ஸ்டடீஸ்' நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இது இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இவ்வகராதி பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி எனப் பழைய ஒருமொழி அகராதிகளின் அமைப்பினை ஒட்டியே நான்கு வகையான பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. தமிழ்ச் சொல்லகராதி பிரிவு இல்லாத அமைப்பு–2 வகையைச் சார்ந்து இருப்பினும் அதனைப் பின்பற்றாமல் இவ்வகராதி சதுரகராதியின் அமைப்பைப் பின்பற்றியுள்ளது. இவ்வகராதி மொத்தம் 1600 பக்கங்களையும் 14,341 சொற்களையும் கொண்டுள்ளது.

கி.பி. 1921இல் அனவரதநாயகம் பிள்ளை என்பவர் மாணவர் தமிழ் அகராதி என்னும் அகராதி ஒன்றினைத் தொகுத்தளித்தார். இருபதாம் நூற்றாண்டில் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட முதல் அகராதி என்னும் சிறப்பினைப் பெற்று இவ்வகராதி திகழ்கின்றது. சென்னை சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் புத்தக வெளியீட்டாளர் இந்நூலை வெளியிட்டுள்ளனர். இவ்வகராதியில் 26000 சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இது பெயரகராதி, தொகையகராதி என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டு திகழ்கின்றது. இது அமைப்பு 1 வகையைச் சார்ந்த அகராதி யாகும்.

கி.பி. 1925ஆம் ஆண்டு ச. பவானந்தம் பிள்ளையால் தொகுத்து வெளியிடப்பட்ட அகராதி என்பதால் 'பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி' எனப் பெயர் பெற்றது. இதனைத் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி என்றும் வழங்கப்பெறும். மாக்மில்லன் அன்டு கம்பெனி வெளியிட்ட அகராதி இது. இந்த அகராதி அக்காலத்தில் பெரிதும் உவந்து வரவேற்கப்பட்டது. நா. கதிரைவேற்பிள்ளையின் அகராதி, இராமநாதன் அகராதி ஆகியவற்றிலுள்ள சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வகராதியில் பதிப்பித்துள்ளார் ச. பவானந்தம் பிள்ளை. இவ்வகராதி 381 பக்கங்களைக் கொண்டுள்ளது. இதில் 25,000க்கும் மேற்பட்ட சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. இவ்வகராதியில் 1934, 1938,

1943, 1952 ஆகிய ஆண்டுகளில் நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளன. இதன் அண்மை மறுபதிப்பு 2004ல் வெளிவந்துள்ளது. பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி என்ற பெயரில் என்.சி.பி.எச். டிசம்பர் 2003ல் முதல் பதிப்பை வெளியிட்டுள்ளது. இது மொத்தம் 437 பக்கங்களைக் கொண்டு விளங்குகின்றது. அனுபந்தமானது 438 முதல் 469 வரையில் மூன்று உள்ளன. 470 முதல் இறுதி 476ஆம் பக்கம் வரை அச்சுப்பிரதியில் திருத்தம் செய்ய வேண்டிய விதத்தைப் பேசு கின்றது. அனுபந்தத்தில் உருது, போர்த்துகீசியம், தெலுங்கு, கிராமியம், வழக்கு, ஆங்கிலம் போன்ற பல மொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இது அமைப்பு–2 வகையைச் சார்ந்த அகராதி யாகும்.

மே.வி. வேணுகோபாலப் பிள்ளை 1928இல் இளைஞர் தமிழ்க் கையகராதி என்னும் சிறிய அகராதியை வெளியிட்டார். இந்த அகராதி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் எளிமையான நடையில் உருவாகியுள்ளது. இவ்வகராதி உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை இவ்வகராதியின் முன்னுரையில் ஆசிரியர் கூறியுள்ளார். அதாவது ‘இன்றைய காலங்களில் வெளிவந்துள்ள அகராதிகள், பெரிய நூல்களாகவும் (பல தொகுதிகளையுடையதாகவும்) அதிக மான விலையை உடையதாகவும் இருக்கின்றன. அதனால் மாணவர்கள் தாம் செல்லும் இடங்களெல்லாம் அகராதியையும் தூக்கிச் சென்று தமக்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளவும் முடியாது; நினைத்தவுடன் வாங்கவும் (பணம் அதிகம் கொடுத்து) முடியாது. ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள அகராதிகள் இத் துறையில் மாணவர்களுக்குப் பெரிதும் துணை புரிகின்றன. ஆதலின் இம்முறையில் மாணவர் கற்கும் தமிழ் இலக்கியங்களில் வரும் கடினச் சொற்களுக்குரிய பொருள்களை அவர்களே அகராதியின் உதவி கொண்டு அவ்வப்போது அறிந்து கொள்ளும்படி சிறிய வடிவில் குறைந்த விலையில் தொகுத்து வெளியிட்டேன்’ என்று கூறியுள்ளார். இவ்வகராதியில் 8500 சொற்கள் தொகுத்துப் பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது அமைப்பு–2 வகையைச் சார்ந்தது.

நிகண்டுகள் ஒருபொருட் பன்மொழிகளைச் செய்யுள் வடிவில் தந்துள்ளன. அதற்குப்பின் வந்த அகராதிகள் சொல்லுக்குரிய பொருட்களை மட்டும் தெரிவித்தன. ஆனால் ஒரே பொருளைத் தரும் பல சொற்களை அறிய வேண்டுமானால் அவை பயன் படாதுள்ளது. இக்குறையை நீக்கும் வகையில் சா. வை. ஸ்வாமி ஐயர் 1934இல் மணி அகராதியைத் தொகுத்து வெளியிட்டார். இது அமைப்பு–2 வகையைச் சேர்ந்தது. இது ஒரு பொருளைத்தரும் பல சொற்களைக் கூறும் அகராதியாகும்.

கி.பி. 1935இல் 'ஆனந்தவிகடன் சித்திரப் போட்டி அகராதி' வெளிவந்தது. பதிப்பகங்கள் பல்வேறு வகையான அகராதிகளை வெளியிட்டுள்ளன. அந்த வகையில் 'ஆனந்த விகடன்' நிறுவனம் இந்த அகராதியை உருவாக்கியுள்ளது. இந்த அகராதி ஆனந்த விகடன் இதழில் நடத்தப்பெறும் குறுக்கெழுத்துச் சித்திரப் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது. இது 2040 பக்கங்களைக் கொண்டுள்ளது. இது அமைப்பு–2 வகையைச் சார்ந்த அகராதியாகும். இதில் எந்த விதமான உத்திமுறைகளும் புதிதாகச் சுட்டப்படவில்லை. இதே ஆண்டில் 'ஆனந்த விகடன் அகராதி' என்னும் ஓர் அகராதி வெளியிடப்பட்டது. இந்த அகராதியையும் ஆனந்த விகடன் நிறுவனம்தான் உருவாக்கியுள்ளது.

கி.பி. 1935இல் சி. கிருஷ்ணசாமிப் பிள்ளை என்பவர் அகராதி ஒன்றினைத் தொகுத்தளித்தார். அதற்கு நவீன தமிழ் அகராதி எனப் பெயரிட்டார். தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியின் அமைப்பையும் போக்கையும் ஒத்து இவ்வகராதி அமைந்துள்ளது. இன்றியமையாத சொற்கள் அனைத்திற்கும் இவ்வகராதியில் பொருள் கூறப் பட்டுள்ளது. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் நிறுவனத்தால் இவ்வகராதி வெளியிடப்பட்டது.

கி.பி. 1935இல் நெல்லை எஸ். சங்கரலிங்க முதலியாரை ஆசிரியராகக் கொண்டு வெளியான அகராதிதான் ஜுபிலி தமிழ்ப் பேரகராதியாகும். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பட்டமேற்று

25 ஆண்டுகள் நிறைவுபெற்ற காலத்தில் வெளியானதால் ஜுபிலி (Silver Jubilee) அகராதி எனப் பெயர் சூட்டப்பட்டது. தமிழ்மண் பதிப்பகத்தார் ஜுபிலி என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச் சொல்லான 'வெள்ளிவிழா' என்பதை நூற்பெயராக்கி 'வெள்ளிவிழா தமிழ்ப் பேரகராதி' என்ற பெயரில் 2005ல் வெளியிட்டார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் இறுதித் தொகுதியின் இறுதிப் பகுதி வெளியாகும் முன் இந்த அகராதியின் முதல் பதிப்பு 4 தொகுதிகளாக வெளிவந்தது. இதன் மொத்தப் பக்கங்கள் 1386 ஆகும். இவ்வகராதிக்குப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் பதிப்பாசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை ஒரு சிறு முன்னுரை தந்துள்ளார். இவ்வகராதிக்குத் திரு. வி. கலியாண சுந்தரனார் முதலானவர்களால் சிறப்புப்பாயிரம் பாடப் பட்டுள்ளது. இந்த அகராதி யாழ்ப்பாண அகராதி முதலிய பல அகராதிகளைக் கொண்டு புதுக்கியும் திருத்தியும் விளக்கியும் செம்மை செய்யப்பட்டது. ஒரு புதிய பொருள் நாட்டில் அறிமுகப் படுத்தும்போது அந்தப் புதிய பொருளுக்குப் பெயரிட வேண்டிய தேவையும் இருக்கிறது. புதிய பொருள் பெயரிடப்பட்டு, அது மக்களிடம் வழங்கத் தொடங்கி நிலைபெற்று, அகராதியில் இடம் பெறுவதற்கு நீண்டகாலம் ஆகியிருக்கும் என்பதில் ஐயமில்லை எனலாம். இவ்வகராதி வெளிவந்த உடனே அடுத்தடுத்த இரண்டு ஆண்டுகளில் இரு மறுபதிப்புகள் வெளிவந்தன. சதுரகராதியைப் பின்பற்றிப் பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி எனும் நான்கு பிரிவுகளில் இவ்வகராதி அமைக்கப்பெற்றுள்ளது. இது அமைப்பு–1 வகையைச் சார்ந்த அகராதியாகும்.

கி.பி. 1937இல் மதுரைத் தமிழ்ப் பேரகராதி வெளிவந்தது. இதனை சி.மா. கோபாலகிருஷ்ணன் வெளியிட்டார். 1937இல் வெளி வந்த முதல் பதிப்பினை முழுமையாகப் பார்க்க முடியவில்லை. எனினும் முதல் பதிப்பிற்கு உ.வே. சாமிநாதையர் அளித்துள்ள சிறிய முன்னுரையே, கி.பி. 1956இல் வெளிவந்த இதன் இரண்டாம் பதிப்பிலும் முன்னுரையாக அமைந்துள்ளது. இந்த இரண்டாம் பதிப்பு இரு தொகுதிகளாக வெளிவந்தது. முதல் தொகுதி 1229

பக்கங்களுடனும் இரண்டாம் தொகுதி 1058 பக்கங்களுடனும் வெளிவந்தன. புதுச்சேரி இந்தியவியல் கழகத்தின் இயக்குநராக இருந்தவர் பேரா. மில்லியோசா. இவர் தமிழும் சமற்கிருதமும் நன்கு கற்றறிந்தவர். இந்த அகராதியின் இரண்டாம் பதிப்பை அடிப்படையாகக் கொண்டு சிறிய மதிப்புரை ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றார். இந்த அகராதி அமைப்பு–2 வகையைச் சார்ந்தது.

கி.பி. 1940இல் 'கழகத் தமிழ்க் கையகராதி' ஒன்றைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. சகாதேவ முதலியாரும், காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்களும் இந்த் அகராதியைத் தொகுத்துள்ளனர். இதில் மொத்தம் 12500 சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. இது அமைப்பு இரண்டு வகையைச் சார்ந்தது. இதில் அகராதி உத்திமுறைகள் எதுவும் புதிதாய்த் தோன்றவில்லை.

ஆனந்த விகடன் நிறுவனம் அகராதியை வெளியிட்டதைப் போல, தி. லிட்டில் பிளவர் கம்பெனி கி.பி. 1953இல் ஒரு அகராதியை வெளியிட்டது. அதற்கு 'லிப்கோ மாணவர் தமிழ் அகராதி' என்று பெயரிட்டுத் தொகுத்தது அக்கம்பெனி. இது மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டது. இந்த அகராதி அமைப்பு–2 வகையைச் சார்ந்தது. இதில் எந்த விதமான புதிய உத்திமுறையும் பயன்படுத்தப்படவில்லை.

கி.பி. 1955இல் வித்வான் ஐயன்பெருமான் கோனார் என்பவரால் 'கோனார் தமிழ்க் கையகராதி' ஒன்று தொகுக்கப்பட்டது. இதனைப் பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம் வெளியிட்டது. ஆசிரியர் ஐயன் பெருமாள் திருச்சியிலுள்ள பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். பள்ளியிறுதி வகுப்புப் பாடநூல்கள், கல்லூரித் தமிழ்ப் பாடநூல்கள் ஆகியவற்றிற்குப் பல ஆண்டுகளாய் இவர் உரைநூல் வெளியிட்டு வந்தார். பழனியப்பா சகோதரர்கள் மாணவர்களுக்கான பாடநூல்களில் பயின்றுவரும் சொற்பரப்பு இவருக்கு நன்கு தெரியும் என்பதை அறிந்தனர். அதனால் இவரைப் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் ஓர்

அகராதியைத் தொகுக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டனர். அதனால்தான் ஐயன்பெருமாள் இந்த அகராதியைத் தொகுத்தார். இந்த அகராதியில் மொத்தம் 16500 சொற்கள் இடம்பெற்றுள்ளன. இந்த அகராதியில் புதிதாய் எந்த உத்திமுறையும் காணப்படவில்லை.

கி.பி. 1964ல் கழகத் தமிழ் அகராதி ஒன்று வெளிவந்தது. கழகத் தமிழ்க் கையகராதியை வெளியிட்டது போல இந்த அகராதியையும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. இதனைக் கழகப் புலவர் குழு தொகுத்தளித்துள்ளது. இதன் பதினேழாம் பதிப்பு 2002ல் வெளிவந்தது. இவ்வகராதி தொகுப்பதற்கு முதற் காரணமாயிருந்தவர் கருப்பக்கிளர் க.அ. இராமசாமிப் புலவரா வார். தொல்காப்பியம், நன்னூல், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற பெருமை வாய்ந்த நூல்களிலும் அவற்றிற்கு எழுதப்பட்ட உரைகளிலும் மேற்கோட் செய்யுட்களிலும் பயின்று வந்துள்ள அருஞ்சொற் களை எல்லாம் ஆராய்ந்து, இந்திந்தச் சொல் வேண்டுமென்று கண்டெடுத்து அமைக்கப்பட்ட சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருவதாய் இவ்வகராதி அமைந்துள்ளது. இலக்கிய நூல் பயில் வோர்க்கு வேண்டுமெனக் கருதப்பட்ட சொற்களுக்குரிய பொருளை இதன் மூலம் கண்டு தெளியலாம். இந்த அகராதியில் அ முதல் வெளவுதல் வரையிலான சொற்கள் இடம் பெற்றுள்ளன. 884 பக்கங்களைக் கொண்டதாய் இவ்வகராதி விளங்குகிறது. இதில் கையகராதிச் சொற்களும் தமிழ்நாட்டு வழக்காற்றுச் சொற்களும் தமிழ் நூற்சொற்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால் ஓவியம், மருத்துவம், கணிதம், யோகம் முதலிய நூல்களில் காணப்படும் அருஞ்சொற்கள் இந்த அகராதியில் இடம்பெறவில்லை. இது அமைப்பு–2 வகையைச் சார்ந்த அகராதியாகும்.

கி.பி. 1985இல் மு. சண்முகம் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு தமிழ்–தமிழ் அகரமுதலி வெளிவந்தது. இந்த அகராதி யைத் தொகுப்பதற்கான திட்டப்பணி கி.பி. 1975லேயே தொடங்கி விட்டது. இந்த அகராதியின் சொல்தரவு மூலங்களாக அகராதிச் சுருக்கம், இளைஞர் தமிழ்க் கையகராதி, தற்காலத் தமிழ்ச்

சொல்லகராதி, கழகத் தமிழ்க் கையகராதி, கோனார் தமிழ்க் கையகராதி, கு. கதிரைவேற்பிள்ளையின் அகராதி, தமிழ்ப் பேரகராதி என்பன அமைகின்றன. சொல்லுக்கான பொருளைச் செப்பமுறச் செய்தும் இன்றைய வழக்கிற்கேற்பப் பயனுடைய புதிய சொற் பொருளைச் சேர்த்தும் இவ்வகராதி உருவாக்கப் பட்டுள்ளது. தமிழைக் கற்கின்ற அனைவருக்கும் பள்ளியில் பயிலும் மாணவர் முதல் பல்கலைக்கழகங்களில் படிக்கும் முதுகலை மாணவர், ஆசிரியர் முதலியோர்க் கெல்லாம் இது பயன்படத்தக்க வண்ணம் உருவாக்குவதை முதன்மை நோக்கமாக இவ்வகராதி கொண்டுள்ளது. இந்த அகராதி 1016 பக்கங்களையும், 64,048 சொற்களையும் கொண்டுள்ளது. 1 முதல் 1013 பக்கம் வரையில் சொல்லுக்குப் பொருள் கூறுகின்றது. 1014, 1015 ஆகிய பக்கங்களில் அகராதி களைக் காலவரிசைப் படுத்தித் தந்துள்ளது. இறுதிப் பக்கத்தில் நிகண்டுகளைக் காலவரிசையில் கொடுத்துள்ளது. இந்த அகராதி அமைப்பு–2 வகையைச் சார்ந்த தாகும். இந்த அகராதியைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

கி.பி. 1985இல் ‘மணிமேகலைத் தமிழ்–தமிழ் அகராதி’ என்ற பெயரில் ஒரு அகராதி வெளிவந்தது. லேனா தமிழ்வாணன் இந்த அகராதியைப் பதிப்பித்தார். மணிமேகலை பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது. இந்த அகராதி அமைப்பு–2 வகையைச் சார்ந்தது. இந்த அகராதி மிக எளிமையான நடையில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அகராதியில் புதிதாய் எந்த வளர் நிலையும் காணப்படவில்லை.

கி.பி. 1988ஆம் ஆண்டு புலவர் இரா. இளங்குமரனால் இலக்கிய வகை அகராதி வெளியிடப்பட்டது. இவர் பாவாணரின் முதல் வரிசை மாணவர்; தனித்தமிழ் பரப்பும் வன்தொண்டர். இந்த அகராதியை மணிவாசகர் நூலகம் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. இது 252 பக்கங்களைக் கொண்டுள்ளது. இவ்வகராதி, சிற்றிலக்கிய வகைகளை அகராதி முறையில் காண்பதற்கு வாய்ப்பாகவும், ஆய்வாளர்க்கும் ஆர்வலர்க்கும் எளிமையாகப் பயன் கொள்ளத் தக்கதாகவும் அமைந்துள்ளது. இந்நூல் அமைப்பு–2 வகை

அகராதியைச் சார்ந்தது.

கி.பி. 1988இல் தா.வே. வீராசாமியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பெருஞ்சொல்லகராதியின் முதல் தொகுதி வெளிவந்தது. இந்த அகராதியைத் தொகுப்பதற்கான திட்டமிடும் பணி 1983லேயே தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பெற்றது. இதுவரை நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன. 5, 6 ஆகிய இரண்டு தொகுதிகளும் அச்சில் உள்ளன. ஏழாம் தொகுதியைத் தொகுக்கும் பணியும் நடந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தொகுதிகள் முறையே மு. சண்முகம்பிள்ளை (1989), பழனி அரங்கசாமி (1992), பெ. மாதையன் (2002) ஆகியோரை முதன்மைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு வெளி வந்துள்ளன. இந்த அகராதியின் நான்கு தொகுதிகளும் முறையே 564, 648, 497, 476 ஆகிய பக்கங்களைக் கொண்டுள்ளன. இந்த அகராதி இதுவரை யில் வெளிவந்துள்ள தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள், நாட்டுப்புற இலக்கியங்கள், நாட்குறிப்புகள், ஆய்வு நூல்கள், இதழ்கள் ஆகியவற்றில் காணப்படும் சொற்கள் அனைத் தையும் திரட்டித் தந்துள்ளது. இவ்வகராதியின் முன்னுரைப் பகுதி யில் சொற்கள் எதிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன என்னும் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைக் கீழே காணலாம்.

- அனைத்துத் தமிழிலக்கியங்களிலும் காணும் சொற்கள்.
- இலக்கணம், உரை, நாட்டிலக்கியம், பிற சிறப்பிலக்கியங் கள் போன்றவற்றில் காணும் சொற்கள்.
- சைவம், வைணவம், சமணம், கிறித்துவம், இசுலாமியம் போன்ற சமயங்களில் காணும் சொற்கள்.
- எழுத்திலும் பேச்சிலும் காணப்படும் தமிழ்க் கலைச் சொற்கள்.
- இதழ்களில் காணும் தரமான சொற்கள்.
- மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முதலிய பிற நாடுகளில் வெளிவந்த நூல்களிலுள்ள சொற்கள்.

- இக்கால ஆட்சிக்குட்பட்டவையும் உலகம் ஏற்றுக் கொண்டவையுமான வட்டார வழக்குச் சொற்கள்.
- பிற நாடுகளில் வழங்கும் தமிழ்ச் சொற்களாம் வட்டார வழக்குச் சொற்கள்.
- கல்வெட்டு, நாட்குறிப்பு, கடித இலக்கியம், ஆவணங்கள் முதலியவற்றிலுள்ள சொற்கள்.
- சில ஒலிப்பு வேறுபாட்டுடனும் சொற்பிறப்பு ஊகங் களால் பெறும் வேறுபாட்டுடன் காணுகின்ற சொற்கள்.

இந்த அகராதி அமைப்பு–2 வகையைச் சார்ந்தது. ஒருமொழி அகராதிக்கான உத்திமுறைகள் இதில் முழுமையாகப் பயன் படுத்தப் பட்டுள்ளன.

கி.பி. 1999இல் தமிழரிமா வி.பொ.பழனிவேலனார் தமிழ் இலக்கியச் சொல் அகரமுதலியைத் தொகுத்து, வெளியிட்டார். இவ்வகரமுதலி மேற்கணக்கு, கீழ்க்கணக்கு ஆகிய முப்பத்தாறு பழந்தமிழ் நூல்களிலுமுள்ள அருந்தமிழ்ச் சொற்களுக்கு மட்டும் பொருள் தருவதாக அமைந்துள்ளது. ஏறத்தாழ 160 பக்க அளவில் அமைந்துள்ள இந்த அகரமுதலி, தனித்தமிழ்ச் சொற்களஞ்சிய மாகத் திகழ்கிறது. இது அமைப்பு–2 வகையைச் சேர்ந்த அகராதி யாகும். நாகை மாவட்டத்திலுள்ள முருகு வெளியீட்டகம் இதனை வெளியிட்டுள்ளது.

கி.பி. 2000இல் அரிமதிதென்னகன் என்பவரால் வசந்தா தமிழ் அகராதி தொகுக்கப்பட்டது. மாணவர் தமிழ் அகராதி போன்று மாணவர்களுக்காக வெளியிடப்பட்ட அகராதியாக, வசந்தா தமிழ் அகராதி விளங்குகிறது. இந்நூல் மொத்தம் 328 பக்கங்களைக் கொண்டுள்ளது. காலங்கருதியும் பயன்பாட்டைக் கருதியும் ஐயங் களை உடனுக்குடன் போக்கிக் கொள்ளவும் இலக்கிய வாழ்வில் மிகுதியும் தொடர்பு கொள்ளும் அரிய சொற்களின் பொருள்களை அறிந்துகொள்ளவும் இத்தொகுப்பு நூல் நல்ல நட்பாகத் துணை புரியும் என்று ஆசிரியர் இந்நூற் தொகுப்புரையில் கூறியுள்ளார். இது அமைப்பு–2 வகையைச் சார்ந்த அகராதியாகும்.

கி.பி. 2001இல் வ.த. இராமசுப்பிரமணியம் என்பவர் தொகுத்து வெளியிட்ட அகராதிதான் திருமகள் தமிழ் அகராதி. இந்த அகராதி ஆரம்பகால அகராதிகளைப் போன்று பிரிவுகளைக் கொண்டதாக விளங்குகின்றது. பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் சொற்களுக்கும் தற்கால நூல்களில் காணப்படும் சொற்களுக்கும் பொருள் காணும் வகையில் இவ்வகராதி தொகுக்கப்பட்டது. இது சொல்லகராதி, வழக்குச் சொல்லகராதி, தொகைச்சொல்லகராதி எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. அமைப்பு–1 வகையைச் சார்ந்த அகராதி என்பதை இதன் மூலம் அறியலாம். இது 942 பக்கங்களைக் கொண்டுள்ளது. இவ்வகராதியில் 39,000 சொற்கள் இடம்பெற்றுள்ளன.

கி.பி. 2003இல் எஸ். கௌமாரீஸ்வரியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கௌரா தமிழ் அகராதி வெளிவந்தது. இதனைச் சாரதா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதன் மூன்றாம் பதிப்பு 2006இல் வந்துள்ளது. இதில் முன்னுரை என்பதே இல்லை. "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்னும் புரட்சிக்கவிஞரின் கவிதையைச் சொல்லி, சொல்லிற்குப் பொருள் கூறுவதாய் இவ்வகராதி அமைந்துள்ளது. இது மொத்தம் 654 பக்கங்களைக் கொண்டுள்ளது. இது அமைப்பு–2 வகையைச் சார்ந்த அகராதியாகும்.

கி.பி. 2006இல் மெய்யப்பன் தமிழ் அகராதி வெளிவந்தது. ச.வே. சுப்பிரமணியன் மெய்யப்பன் தமிழ் அகராதியைப் பதிப்பித்தார். மணிவாசகர் பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது. இது அமைப்பு– 2 வகையைச் சார்ந்த அகராதியாகும். வரலாற்று அகரவரிசை என்ற நிலையில் இவ்வகராதி அமைந்துள்ளது. இது மொத்தம் 1114 பக்கங்களைக் கொண்டுள்ளது.

கி.பி. 2006இல் கோ. பெரியண்ணன் என்பவர் 'முத்தமிழ் அகராதி' என்ற பெயரில் தமிழ் ஒருமொழி அகராதி ஒன்றினைத் தொகுத்தார். இந்த அகராதி அ முதல் வௌவால் வரையிலான தமிழ்ச் சொற்களுக்கும் பொருள் விளக்கம் அளித்துள்ளது. இதனாசிரியர்

தேசிய விருது பெற்றவர். இது மொத்தம் 272 பக்கங்களைக் கொண்டுள்ளது. 1 முதல் 299ஆம் பக்கம் வரையில் பெயரகராதியும் 230 முதல் 272ஆம் பக்கம் வரையில் பொருளகராதியும் இடம் பெற்றுள்ளது. பிறமொழி எழுத்தை முதலாகவுடைய சொற்களுக்கும் பொருள் கூறியுள்ளது (ப. 229). எழுத்தின் அளவு 12 புள்ளிகளாகும். இவ்வகராதியை வனிதா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. முன்னுரை இதில் இடம்பெறவில்லை. இந்த அகராதி அமைப்பு–1 வகையைச் சார்ந்து அமைக்கப் பட்டுள்ளது.

கி.பி. 2008இல் 'லியோவின் தமிழ் அகராதி' என்ற ஒன்றை அ.கி.மூர்த்தி உருவாக்கியுள்ளார். இதன் முதல் பதிப்பானது ஜூன் 2008 இல் வந்தது. அதன் மறுபதிப்பு அதே ஆண்டில் (2008) டிசம்பர் மாதம் வெளி வந்தது. இதில் முன்னுரை I - X பக்கம் வரை யுள்ளது. சொல்லுக்குப் பொருள் கூறவதாய் 1 முதல் 606 பக்கங்கள் அமைந்துள்ளன. ஆக மொத்தம் 616 பக்கங்களைக் கொண்டதாய் இவ் வகராதி விளங்குகின்றது. எழுத்தின் அளவு 9 புள்ளிகளைக் கொண்டுள்ளது. இவ்வகராதி அமைப்பு–2 வகையைச் சார்ந்த தாகும்.

கி.பி. 2009இல் 'புதிய தமிழ் அகராதி' என்ற ஓர் ஒருமொழி அகராதி வெளிவந்தது. இந்த அகராதியை 'ஆசிரியர் குழு' தொகுத் துள்ளது. இதன் பதிப்பாசிரியர் ஆ. சோதிநாதன் ஆவார். கோலாலம்பூரிலுள்ள உமா பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது. இதில் பெயர்ச்சொற்களுக்கு மட்டுமல்லாமல், பெயராகவும் வினை யாகவும் வரும் சொற்கள், வேர்ச்(மூலச்) சொற்கள், எதிர்ச் சொற்கள், ஆண் பெண்பாற் சொற்கள், சுருக்கச் சொற்கள், இணை மொழி, மரபு, உவமை, மரபுத் தொடர்கள் போன்றவற்றிற்கும் பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல் இதுவரை 50,000 படிகளுக்கு மேல் விற்பனையாகிச் சாதனை படைத்துள்ளது. அ முதல் வெளவு வரையிலான சொற்களுக்கு 329 பக்கங்களில் பொருள் விளக்கம் தந்துள்ளது. இது அமைப்பு–2 வகையைச் சார்ந்த அகராதியாகும்.

தொகுப்புரை

ஆரம்பகால அகராதிகள் அமைப்பு ஒன்று என்ற முறையைப் பின்பற்றியே வந்துள்ளன. காலப்போக்கில் காலத்தின் நேரம் கருதி அமைப்பு இரண்டு என்னும் தற்கால வகையே நிலைபெற்று விட்டது. அமைப்பு இரண்டிற்கு அடிகோலியவர் கு. கதிரைவேற் பிள்ளையாவார். வருங்காலத்தில் இந்த இரண்டாம் அமைப்பே ஒருமொழி அகராதிகளில் இருக்குமா? என்பது ஐயமே. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கேற்ப நாளை புதிய ஓர் அமைப்பு அகராதிகளில் பயன்படுத்தப்படலாம்.

இயல்–4
சொற்பொருள் வளர்ச்சி

ஓர் அகராதியை உருவாக்குதல் என்பது காலத்தையும் உழைப்பையும் மிகுதியாக ஆட்கொண்டு, எக்காலத்திலும் பயன் படுமாறு நோக்கு நூல்களைப் படைத்தளிக்கும் பெரும்பணியாகும். அகராதியைக் குறிப்பிட்ட நெறிமுறையோடு உருவாக்கினால்தான் அது சிறந்த அகராதியாக வெளிவரும். சொல்வகைக் கேற்ப அகராதிப்பதிவு சொல்லுக்குச் சொல் வேறுபாடுடையதாக வும் அமையும். அகராதியின் சொற்பொருள் வளர்ச்சியினை அகராதிப் பதிவு கொண்டே அறியமுடியும்.

அகராதிப் பதிவு

அகராதியில் அகராதிப் பதிவுகள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. தலைச்சொல்லும் அதற்குரிய பொருளும்தான் அகராதிப் பதிவாகும். அதாவது தலைச்சொல் பகுதியும் பொருட் பகுதியும் சேர்ந்ததே அகராதிப் பதிவு. “அகராதிச் சொல் பற்றிய தகவல்கள் அடங்கிய பகுதி பதிவு (Entry) (அ) அகராதிப் பதிவு (Dictionary entry) எனப்பெறும். ஒவ்வொரு அகராதிச் சொல்லும் ஒலியனியல், உருபனியல், பொருண்மையியல் கூறுகளைக் கொண்டது. இவை அகராதிச் சொல்லை அடுத்து முறையாய்த் தரப்பெறும். இவ்வாறு அகராதிச் சொல்லையும் அதற்கான ஒலிப்பையும் இலக்கணக் குறிப்பையும் பொருளையும் கொண்ட அகராதிப் பகுதியே அகராதிப் பதிவு எனப்பெறும்” என்று பெ. மாதையன் கூறுகிறார் (1997:276). அகராதிப் பதிவான தலைச்சொல் பகுதி, பொருட்பகுதி ஆகிய இரண்டிலும் பல்வேறு உத்திமுறைகள் பயன் படுத்தப்படுகின்றன. அந்த உத்திமுறைகளைப் பற்றியும்

அவற்றின் வளர்ச்சிப் போக்கு ஒருமொழி அகராதிகளில் எப்படி இருக்கிறது? என்பதையும் ஆய்வதே இவண் நோக்கமாகும்.

தலைச்சொற் பகுதி

தலைச்சொற் பகுதி அகராதியில் இடது வரிசையில் இடம் பெறும். இந்தப் பகுதியில் தலைச்சொல் (அகராதிச் சொல்), ஒப்புருச் சொற்கள், தலைச்சொல் இணைப்பு, நட்சத்திரக் குறி, இலக்கணப் பொருள் போன்ற உத்திமுறைகள் பயன்படுத்தப்படும். இந்த உத்தி முறைகளைப் பயன்படுத்துவதிலும் பல்வேறு நெறி முறைகள் பின்பற்றப்படுகின்றன.

தலைச்சொல்

தலைச்சொல் பொதுவாகப் பொருள் பகுதியிலிருந்து எழுத்தின் வடிவிலும் அளவிலும் மாற்றம் பெற்றுக் காணப்படும். அகராதிச் சொல்லாகிய தலைச்சொல்லைத் தெரிவு செய்வதற்குப் பல நெறிமுறைகள் கையாளப்படுகின்றன. தலைச்சொல்லில் பல்வேறு வகையான சொற்கள் இடம்பெறுகின்றன. “அகராதியில் பதிவாய்த் தரப்பெறும் இச்சொல் ஒருபெயர் அல்லது வினையின் வேறுபட்ட சொல்விரிவுகள் அனைத்தையுமே உள்ளடக்கிய முதன்மை வடிவமாய் இருப்பதனால்தான் இது தலைச்சொல் எனப் பெறுகின்றது. இவ்வாறே ஏனைய சொல் விரிவுகளை எளிதில் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படைச் சொல்லாய் இருப்பதனால்தான் அடிப்படை வடிவம் எனவும் குறிப்பிடப் பெறுகின்றது” என்று தலைச் சொல்லைப் பற்றிப் பெ. மாதையன் கூறுகின்றார் (1997:281).

சொல் என்பது தனித்து இயங்கும் தன்மை உடையதாக இருத்தல் வேண்டும். அகராதிச்சொல் மொழிச் சொல்லைவிடப் பரந்தது. எல்லா அகராதிச் சொற்களும் மொழிச்சொற்கள் அல்ல. எல்லா அகராதிச் சொற்களும் அகராதியில் இடம்பெறுவதில்லை. சொற்களை அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

சொற்கள்

கட்டுடை வடிவம் (Bound Form) | கட்டிலா வடிவம் (Free Form)

கட்டுடை வடிவம்

ஒரு சொல் தனித்து நின்று இயங்கும் ஆற்றல் இன்றி அதாவது, தனித்து நின்று பொருள் தராமல் பிற சொற்களுடன் சேர்ந்து நின்று பொருள் தருமாயின் அச்சொல் கட்டுடை வடிவச் சொல் என்றழைக்கப்படும்.

இராமன் ஓடி வந்தான்

அவனைப் பார்க்கப் போனேன்

சுதா பாடச் சென்றாள்

மேலே கூறப்பட்ட தொடர்களில் 'ஓடி', 'அவனை', 'பார்க்க', 'பாட' எனும் சொற்களில் உள்ள -இ, - ஐ, -க்க, -அ என்பன மொழியில் தனித்து இயங்காத் தன்மையுடையன. இவை பிற சொற்களான பெயர் வினைகளைச் சார்ந்தே பொருள் தரவல்லன. இலக்கணப் பொருளை மட்டும் பெற்றுள்ள இச்சொற்கள் இலக்கணச் சொற்கள் என்று அழைக்கப்பெறும். தமிழ்ச் சொற்பிரிவில் இடம்பெறும் இடைச் சொற்கள் இவ்வகையைச் சார்ந்தவை.

கட்டுடை வடிவம் = –சொற்பொருள் + இலக்கணப்பொருள்

கட்டிலா வடிவம்

தனித்து நின்று இயங்கிப் பொருள்தரும் தன்மையைக் கொண்ட சொற்கள் கட்டிலா வடிவச் சொற்களாகும். இவ்வகைக் குப் பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றைச் சிறந்த சான்றாகக் கூறலாம். இவ்வகைச் சொற்கள் இலக்கணப் பொருளையும் சொற்பொருளையும் கொண்டுள்ளன. தொல்காப்பியம், பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் என்று விளக்கம்

கூறுவது இவண் குறிப்பிடத்தக்கது. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் வழித்தோன்றும் சொல்விரிவுகளும் கட்டிலா வடிவச் சொற்களுக்குச் சான்றுகளாகும்.

கட்டிலா வடிவம் = +சொற்பொருள்+இலக்கணப்பொருள்

மேலே குறிப்பிட்ட கட்டுடை வடிவச் சொற்கள் மற்றும் கட்டிலா வடிவச் சொற்கள் ஆகியன அகராதிச் சொற்களாகும். இவை இரண்டுமே அகராதியில் தலைச்சொற்களாக இடம் பெறுகின்றன. இவை தவிர 'தனி எழுத்து (அ, இ, உ), முன்னொட்டு (ஆபாக்கியம், அநீதி), பின்னொட்டு (விகுதிகள்), கூட்டுச் சொற்கள், மரபுத் தொடர், பழமொழி ஆகியனவும் அகராதிச் சொற்களாகப் பதிவுகளில் இடம்பெறுகின்றன' என்று அகராதிப் பதிவுகள் என்னும் நூலில் பெ. மாதையன் குறிப்பிடுகின்றார் (ப. 72).

பெயர், வினைச்சொற்களின் அடிகள் தலைச்சொல்லாய் இடம்பெறும். அவற்றின் சொல் விரிவுகள் பொதுவாகத் தலைச் சொல்லாய் அமைவதில்லை. சில குறிப்பிட்ட சூழல்களில் சொல் விரிவுகளும் தலைச்சொல்லாய் இடம்பெறுவதுண்டு.

சொல்விரிவு (Paradigms)

ஒரு சொல்லை அடியாகக் கொண்டு பல்வேறு இடைநிலைகள், உருபுகள், விகுதிகள் சேர்ந்து வரும் நிலையில் அச்சொல் பல்வேறு விரிவுகளைப் பெற்று வருகின்றது. இம்முறையே, சொல் விரிவு எனப்படும். 'செய் எனும் வினையின் அடியாகச் செய்தான், செய்தாள், செய்கிறான், செய்வான், செய்வாள், செய்கிறார், செய்தார், செய்கிறது, செய்தன, செய்கின்றது, செய்யும், செய்து, செய், செய்தால் என்பன போன்ற சொற்கள் விரிந்து பெருகி வழங்குகின்றன. இவை அனைத்தும் சொல்விரிவுகளாகும். சொல் விரிவுகளின் எண்ணிக்கை மொழிக்கு மொழி வேறுபடுகின்றது. கிரேக்க மொழியில் ஒரு சொல்லுக்கு 200 சொல் விரிவுகளும், வடமொழியில் ஒரு வினைக்கு 1350 சொல் விரிவுகளும் உள்ளன' என்று ஆர்.ஏ.சிங் கூறுகின்றார் (1982:111). இச்சொல் விரிவுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கும் வண்ணம் தலைச்சொற்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் தலைச்சொல் வடிவமே அடிப்படை வடிவம் எனப்படுகின்றது.

அடிப்படை வடிவம் (Canonical Form)

அடிப்படை வடிவம் முன்னர்க் கூறியது போன்று பரந்து பட்ட சொல் விரிவுகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இத்தகைய அடிப்படை வடிவத்தைத் தெரிவு செய்யும் போது அந்தந்த இலக்கண மரபு கருத்தில் கொள்ளப்படும். எனவே, அடிப்படை வடிவத்தைத் தெரிவு செய்வதில் சில வரையறுக்கப் பட்ட நெறிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன என்று எச். சித்திரபுத்திரன் சொற்பொருண்மையியல் என்னும் நூலில் கூறி யுள்ளார்(ப.3). சொல்விரிவுகள் அனைத்தையும் எளிதில் பெறத்தக்க வடிவம் ஒன்றே பதிவுச் சொல்லாய்த் தெரிவு செய்யப் பெறுகின்றது. இலக்கண வல்லுநர்கள் மொழியின் எல்லா வாய்ப் பாட்டையும் கணக்கிடுவர். ஆனால் அகராதியியலார் முழு வாய்ப்பாட்டிற்கான ஒரு வடிவத்தைத் தெரிவு செய்து கொள்வர். அடிப்படை வடிவத்தைத் தெரிவு செய்வதற்குப் பின்வரும் சில நெறி முறைகள் பின்பற்றப்படுகின்றன.

- மொழியில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் வடிவே அடிப்படை வடிவமாகக் கொள்ளப்பட வேண்டும்.
- அடிப்படை வடிவம் சொல்விரிவுகளை முழுமையும் விளக்குவதாக அமைய வேண்டும்.
- தனித்து இயங்கும் தன்மையுடையதாக இருக்க வேண்டும்.
- பொருள் காண்பதில் எவ்வித மயக்கமும் தராத வடிவமாக அமைதல் வேண்டும்.

மரபுவழி ஒவ்வொரு மொழிக்கும் ஓர் இலக்கண வடிவு அடிப்படை வடிவமாக உள்ளதைப் பின்வரும் சான்றுகள் மூலம் அறியலாம்.

வடமொழி – வினையின் வேர்ச்சொல் வடிவம்

கிரேக்கம் – தன்மை, ஒருமை தெரிநிலை வினைமுற்று வடிவம்.

இந்தி
பஞ்சாபி } செய எனும் எச்சவினை வடிவம்
குஜராத்தி

கன்னடம்
தமிழ் } ஏவல் முன்னிலை வடிவம்
மலையாளம்

மேற்கண்ட மொழிகளில் இவ்வடிப்படை வடிவங்களே தலைச் சொற்களாக உள்ளன. சொல்விரிவுகளில் சில பொருளிலும் வடிவிலும் வேறுபட்டு வரும் தன்மை கொண்டன. சொற்களின் தெளிவான பொருள் தருவதே அகராதியின் நோக்கம் என்பதாலும் சொல் விரிவில் காணும் வடிவ வேறுபாடு எந்த ஒரு நோக்காளரையும் குழப்பத்திற்கு இட்டுச் செல்லலாகாது என்பதாலும் சொல் விரிவுகளில் பொருள் மற்றும் வடிவ வேறுபாடுகள் ஆகிய இரண்டையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அகராதிக் கலைஞரின் கடமையாகும்.

ஒரு சொல்லின் அடியாகத் தோன்றும் சொல்விரிவுகள் அடிப்படை வடிவத்தின் பொருளிலிருந்து வேறுபட்டு வருதல் உண்டு. எடுத்துக்காட்டாக, 'ஆனால்', 'ஆயின்' என்னும் சொல்விரிவுகளைக் குறிப்பிடலாம். இச்சொல் விரிவுகள் 'ஆ' என்னும் வினையிலிருந்து தோன்றினாலும் பொருள்நிலையில் மாறுபட்டு வந்துள்ளன.

சூரியன் உதிக்குமானால் தாமரை மலரும்.

சூரியன் உதிக்கும் ஆனால் தாமரை மலராது

இந்த இரண்டு தொடர்களிலுள்ள 'ஆனால்' என்பது இரண்டு வேறுபட்ட பொருளைக் குறித்து நின்றது. தமிழில் வினையெச்ச வாய்ப்பாட்டுச் சொற்களுள் சில வினையடையாகச் செயல்படுகின்றன. இத்தகைய பொருள் வேறுபாட்டுச் சொற்கள் தனிப்பதிவுகளாய்த் தரப்படவேண்டும்.

சொல்விரிவுகள் வடிவத்தில் வேறுபட்டுப் பொருளில் ஒன்றாய் அமைந்திருக்கும் இடங்களும் உள்ளன.

குருவி : குரீஇ

தழுவி : தழீஇ

மேற்கூறிய இரண்டு சான்றுகளும் வடிவத்தில் வேறுபட்டிருந் தாலும் ஒரே பொருளையே குறித்து நிற்கின்றன. அதனால்தான் இச் சொற்களைத் தனிப்பதிவுகளாய்த் தருதல் வேண்டும். தமிழில் மூவிடப் பெயர்களின் வேற்றுமை உருபு ஏற்பு வடிவங்கள் வேறு பட்டு நிற்கின்றன. சான்றாக, நான், நீ என்பன முறையே எனக்கு உனக்கு என மாற்றம் பெற்றுள்ளன. இவற்றையும் தலைச்சொல்லாகத் தரப்பட வேண்டும். இச்சொல் விரிவுகளைப் போன்று ஆக்கச் சொற்களும் அகராதிப் பதிவாய் இடம்பெறுகின்றன. இவ்வாக்கச் சொற்கள் சொல்விரிவுகளினின்று வேறுபட்டவை. 'செய்' என்னும் வினையடியாகப் பிறந்த பல்வேறு சொல் விரிவுகளை முன்னர்ப் பார்த்தோம். இவ்வினையடியாகச் செய்கை, செயல் என்பன போன்ற ஆக்கச் சொற்களும் தோன்றுகின்றன.

இவை இயல்பான சொல் விரிவுகளைப் போலல்லாமல் தமக் கெனத் தனித்த பொருளையும் மொழிச் செயல்பாட்டையும் கொண்டுள்ளன. இவ்வகையில் 'அதிர்வு', 'பெயர்வு', 'தளர்வு', 'படிப்பு', 'நடிப்பு' என்ற ஆக்கச் சொற்களும் அடங்கும். இவை அனைத்தும் அகராதிகளில் தலைச்சொல்லாய் இடம்பெறு கின்றன.

தலைச்சொல் அமைப்பு

ஒரு தலைச்சொல் அமைப்பு–1 அகராதிகளில் நான்கு பிரிவு களிலும் இடம்பெறும். ஆனால் அமைப்பு–2 அகராதிகளில் ஒரு தலைச்சொல் ஒருமுறை மட்டுமே இடம்பெறும். தொடக்ககால ஒருமொழி அகராதிகளில் தலைச்சொல் தெரிவிற்குக் குறிப்பிட்ட நெறிமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. ஆனால் பிற்கால அகராதிகளில் தலைச்சொல்லைத் தெரிவு செய்வதில் அடிப்படை வடிவம் கருத்தில் கொள்ளப்பட்டுப் பல நெறிமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளதைத் தமிழ் ஒருமொழி அகராதிகளில் தலைச்சொல் பொதுவாகப் பெயர், வினை, பெயரெச்சம், வினை யெச்சம், பெயரடை, வினையடை எனும் பல வினைப்பிரிவு வடிவங் களாக அமைந்துள்ளது. பெயர்ச்சொற்கள் பெயர் அடியாகவும்,

வினைச்சொற்கள் தொழிற்பெயர் வடிவிலும் (செய்தல், பார்த்தல்) கொடுக்கப்பட்டுள்ளன.

சதுரகராதியில் தலைச்சொற்கள் வினையடி வடிவிலும் –தல், –த்தல் வடிவிலும் செயல்பாட்டுச் சொற்கள் வடிவிலும் ஆக்கச் சொல் வடிவிலும் இடம்பெற்றுள்ளன. இங்கு வினைச்சொல்லை வேறுபடுத்திக் காட்டத் தொழிற்பெயர் வடிவங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இவ்வடிப்படையில் 'அசை' என்னும் பதிவினையும் 'அதிர்ச்சி' என்னும் பதிவினையும் சான்றாகக் கொள்ளலாம்.

அசை – அசைநிலை, அசையென்னுமேவல், செய்யுளுறுப்பிலொன்று.

அசைதல் – ஆடல், உலாவல், சோம்பல், தங்கல், துவளல்

அசைத்தல் – ஆட்டல், கட்டல்

அதிர்ச்சி – ஆரவாரம் (சதுரகராதி)

சதுரகராதியை அடுத்துத் தோன்றிய மானிப்பாய் அகராதி யின் தலைச்சொல் அமைப்பிலும் எவ்வித மாற்றமும் இடம் பெற வில்லை. இதில் மட்டுமன்றித் தமிழ்ப் பேரகராதி, தமிழ்ச் சொல்லகராதி ஆகியவற்றிலும் மேற்கண்ட தொழிற்பெயர் வடிவங் கள்தான் தலைச்சொற்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் தமிழ்ப் பேரகராதி அவற்றுடன் கூடுதலாகப் பெயரச்ச வடிவங் களையும் வினையெச்ச வடிவங்களையும் அளபெடை வடிவங் களையும் தலைச்சொற்களாகத் தந்துள்ளது.

அசைத்த – கட்டிய

அசைஇ – இருந்து, இளைத்து, இளைப்பாறி, வருந்தி

அசைஇயது – கிடந்தது

மேற்கண்ட தலைச்சொல் அமைப்பு முறையானது 1925இல் மாற்றம் அடைகின்றது. அதாவது பவானந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியில் வினையடி தலைச்சொல்லாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வினைச்சொற்களின் பதிவமைப்பில் வினையடியைத் தலைச்சொல்லாகக் கொடுத்த பெருமை பவானந்தம்

பிள்ளையைச் சாரும்.

அகவு(வி) – அழை, 2.(வி.) ஆடு

அடு(வி.) – தீயிற்பாகமாக்கு. 2 சேர்

அகற்று(வி.) – நீக்கு

மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் வினைச்சொல் வினையடி வடிவத்தில் தரப்பட்டிருப்பதை விட, அதன் உடன்பாட்டு, எதிர்மறை வடிவங்களில் தரப்பட்டிருக்கும். அதனால் வினைச்சொற்களைக் கண்டறிவது சற்றுக்கடினமானதாகக் காணப்படும். சான்றாக 'நம்பு' என்னும் வினை நம்ப, நம்பல், நம்பான், நம்பு, நம்புதல் என்னும் வடிவங்களில் இடம்பெற்றிருக்கிறது. இதில் சென்னைப் பல்கலைக்கழக அகராதி முதலியவற்றில் இல்லாத சொற்கள் இந்த அகராதியில் பெரும்பாலும் சேர்க்கப்பட்டுள்ளன. இலக்கிய இலக்கண நூல்களின் பெயர்களும் நூலாசிரியர்களின் பெயர்களும் இந்த அகராதியில் தலைச்சொற்களாக இடம்பெற்றுள்ளன.

1988இல் வெளிவந்த இலக்கிய வகை அகராதியின் தலைச் சொற்கள் சிற்றிலக்கியங்களின் பெயர்களாகவே உள்ளன. இது 360க்கு மேலான சிற்றிலக்கியங்களின் பெயர்ப்பட்டியலைத் தொகுத்து அகரவரிசைப்படுத்திப் பொருள்கூறியுள்ளது.

ஏகாதசமாலை (பதினொருபா மாலை)

அகவல் விருத்தம் பதினொன்றால் முடி முதல் தொடை அமைவறப் பாடப்படுவது ஏகாதசமாலையாம்.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய 'திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை' இவ்வகைக்கு எடுத்துக்காட்டாம் (ப.62).

இவ்வகராதியில் தலைச்சொல் வடமொழிச் சொல்லாக இருந்தால் அடைப்புக்குறியில் அதற்கிணையான தமிழ்ச்சொல் தரப்பட்டுள்ளது.

ஒருமொழி அகராதிகளில் பல தொகுதிகளை உள்ளடக்கி வெளிவந்துள்ள அகராதி பெருஞ்சொல்லகராதியாகும். இதில் வினைப்பதிவுகளைத் தலைச்சொற்களாக வழங்கும் நிலையில்

வினையடியே தலைச்சொல்லாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பழைய அகராதிகளைப் போன்று தொழிற்பெயர் வடிவங்கள் இடம்பெறவில்லை. எனினும் தலைச்சொல்லின் பல்வேறு இலக்கணப் பொருளை விளக்கும் முகத்தான் -தல்; -த்தல் என்பன வினையடியுடன் சிறு கோடிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் வினையடியுடன் வினை வகைப்பாட்டு எண்களும் இவ்வகராதியில் தரப்பட்டுள்ளன.

அங்கீகரி –த்தல் 11வி. ஏற்றுக்கொள்ளுதல்...

அஞ்சு1 –தல் 5வி.பயப்படுதல்

அரி1 –தல் 4வி 1. அறுத்தல்...

2. கிள்ளுதல்...

பெருஞ்சொல்லகராதியில் ஒத்த பொருளும் இலக்கணச் செயல்பாடுமுடைய சொற்கள் சாய்வுக் கோட்டுடன் ஒரே பதிவில் தரப்பட்டுள்ளன. இந்த முறையில் இரண்டு சொற்களும் முழுமையாக இடம்பெறுவதில்லை. முதல் சொல் மட்டும் முழுமையாகப் பதிவு செய்து அடுத்த சொல்லின் விகுதியை மட்டும் பதிவு செய்வதாக இம்முறை உள்ளது.

உறுவன்/ர் பெ. சார்ந்தவன்; அடைந்தோன்...

வெற்றித்தமிழ் அகராதி (1993) தலைச்சொல்லைப் பிரித்து அடைப்புக்குறியில் கொடுத்துள்ளது.

அகக்காழ் (அகம்+காழ்) - உள்ளே உள்ள வயிரம்; மரம்.

இதன் தொகையகராதியில் தலைச்சொல்லும் தலைச்சொல்லுக்குரிய வகையை அடைப்புக்குறியிலும் தந்துள்ளது.

அசை (2) - நேர்; நிரை

மெய்யப்பன் அகராதி தலைச்சொல்லைப் பொருட்பகுதியில் பிரித்துப் பொருள் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

அகங்கை (அகம் - கை) - உள்ளங்கை

பிறமொழிச் சொற்களுக்கும் தமிழ் ஒருமொழி அகராதிகள் சில பொருள் விளக்கம் கொடுத்துள்ளன. இவ்வகை அகராதிகள் பிறமொழிச் சொற்களைத் தமிழ் மரபிற்கேற்ப வடிவத்தை மாற்றி எழுதுவதில்லை. மாறாக அச்சொற்களின் முதலெழுத்தை அப்படியே பயன்படுத்திப் பொருள் கூறியுள்ளது. இந்த வகையில் மதுரைத் தமிழ்ப் பேரகராதி முதலிடம் வகிக்கிறது. இவ்வகராதி ஜா, ஜா, ஜீ, ஜெ, ஜை, ஜோ, ஸ், ஸ்ரீ, ஷ, க்ஷ, க்ஷி, க்ஷீ, க்ஷு, க்ஷே, க்ஷௌ போன்ற 15 எழுத்துக்களையும் முதலாகக் கொண்ட சொற்களுக்குப் பொருள்விளக்கம் அளித்துள்ளது.

ஜ – ஸமஸ்கிருத எழுத்துக்களில் ஒன்று

ஸ்ரீகரம் – இலட்சுமீகரம், பாக்கியம்

இந்த அகராதியைப் போலவே கௌராவும் பிறமொழி எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளது. 1 முதல் 647ஆம் பக்கம் வரை அ–வ்ருத்தமல்லிகை வரையிலான சொற்களுக்கு இவ்வகராதி பொருள் தந்துள்ளது. 647 முதல் 654ஆம் பக்கம் வரை ஸ்ரீ ஹைஹயம் வரையிலான சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளது. இதில் ஸ்ரீ, ஸ், ஷ, ஹ, ஹா, ஹி, ஹீ, ஹே, ஹை ஆகிய 9 எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களுக்கும் பொருள்விளக்கம் தரப்பட்டுள்ளது. முத்தமிழ் அகராதியும் (2006) ஜ, ஜி, ஸ்ரீ, ஸ, ஹ என்னும் 5 எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களுக்குப் பொருள் வழங்கியுள்ளது.

இவ்வாறு தலைச்சொல் பல்வேறு காலங்களில் ஒருமொழி அகராதிகளில் மாற்றம் பெற்று வளர்ந்த நிலையைக் காணமுடிகிறது. நாளை புதியதொரு வடிவில் தலைச்சொல்லைத் தெரிவு செய்யும் நிலையும் ஏற்படலாம்.

ஒப்புருச்சொற்கள்

வடிவத்தால் ஒத்தும் சொற்பொருள் மூலத்தால் வேறுபட்டும் இருக்கக்கூடிய சொற்களுக்கு ஒப்புருச்சொற்கள் என்று பெயர். அதாவது வடிவமும் ஒலிப்பும் ஒத்து மாறுபட்ட பொருள்களையுடைய சொற்கள் ஒப்புருச்சொற்கள் ஆகும். ஒப்புருச்சொற்கள் அகராதிகளில் தனித்தனியாகத் தலைச்சொல் பதிவில் இடம்

பெற்றிருக்கும். தொடக்ககால அகராதிகளான சதுரகராதி, மானிப் பாய் அகராதி போன்றவற்றில் தலைச்சொல்லின் பொருட்கள் அகர வரிசை முறையில் கொடுக்கப்பட்டுள்ளதால் ஒப்புருச்சொற்கள் இடம்பெறாமல் போயின. அன்றைய காலத்தில் பொருள் பாகு பாட்டின் அடிப்படையில் ஒப்புருச்சொற்களைத் தனித்தனிப் பதிவில் அமைத்துக்காட்டும் எண்ணம் அகராதி வல்லுநர்க்கு எழ வில்லை என்று கூறலாம்.

ஒப்புருச்சொற்களை முதன்முதலாகத் தலைச்சொற்களாக அமைத்த பெருமை அனவரதநாயகம் பிள்ளையைச் சாரும். இவர் தமது அகராதியில் மாணவர்கள், சொற்பொருளைப் பொருள் பாகுபாட்டின் அடிப்படையில் எளிதில் அறிந்து கொள்ளும் வகை யில் பதிவுகளை அமைத்துள்ளார். அதனால்தான் ஒப்புருச் சொற் களைத் தலைச்சொல் பதிவில் தந்த முதல் அகராதி என்ற பெருமையை மாணவர் தமிழ் அகராதி (1921) பெற்றுள்ளது.

அரி– அடர்ப்பு, அரிசி, அரித்தல், அரியென்னேவல், ஆயுதப் பொது, ஈர்வாள், உட்டுளைப் பொருள், ஐமைவரவு, ஒளி, கடல், கட்டில், கண்வரி, கள், காற்று, கிள்ளை, குதிரை, குரங்கு, குற்றம், கூர்மை, சக்கரம், சந்திரன்...

(சதுரகராதி)

அரி– அரிசி, அரிதல், அழகு, ஐம்மை, கண்வரி, செவ்வரி, பன்னி, மூங்கில், வண்டு, கடல், தகடு, சோலை, தேர், உள்ளீடு மணி, பருக்கை, நெற்கதிர், யாழின் நரம்பு

அரி– பகை, பகைவன், யாயு

அரி– ஹரி, விஷ்ணு, இந்திரன், அக்கினி, யமன், சூரியன், சிங்கம், குதிரை, குரங்கு கிளி, தவளை, மயில், மரகதம் (மாணவர் தமிழ் அகராதி)

மேற்கண்ட சான்றுகளில் சதுரகராதியில் அரி என்னும் சொல்லுக்குப் பல்வேறுபட்ட பொருள்கள் இருப்பினும் அவையனைத்தும் ஒரே பதிவின்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மாணவர் தமிழ் அகராதியில் பொருள் பாகுபாட்டின்

அடிப்படையில் மூன்று பதிவுகளில் இச்சொல் பொருள் விளக்கம் கண்டுள்ளதை அறியமுடிகிறது. இதனையடுத்து வெளிவந்துள்ள தமிழ்–தமிழ் அகரமுதலியில் முன்னர்க் காட்டியதுபோல் வினையடியாய் வரும் ஒரு சொல்லும் அதே வடிவமுடைய பெயரும் தனித் தனிப் பதிவினில் காட்டப்பட்டுள்ளன.

வேற்றுமை உருபிற்குரிய பொருள்கள் பொருளுறவு அடிப் படையில் இருவேறு பதிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒப்புருச் சொற்களைப் பிரித்து, இலக்கணப் பொருள்தரும் தலைச்சொல்லை முதலிலும் சொற்பொருள் தரும் தலைச்சொல்லை இரண்டாம் பதிவிலும் கொடுத்துள்ளது.

கு– ஓரெழுத்து, 2. நான்கனுருபு, 3. ஒரு சாரிசை

கு– பூமி, 2. சிறுமை

இதுவரை சொல்லப்பட்ட அகராதிகளில் ஒப்புருச்சொற்களுக்கு எண் தரப்படவில்லை.

பொருள் வேறுபாட்டின் அடிப்படையில் ஒப்புருச்சொற் களைத் தலைச்சொற்களாக அமைப்பதில் பெருஞ்சொல்லகராதி சிறந்து விளங்குகிறது. இதில் ஒப்புருச் சொற்கள் முன்னர்க் கண்ட அகராதிகளைப் போல் இல்லாமல் தலைச்சொல் பகுதியில் ஒப்புருச்சொற்கள் எண்ணிட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஒப்புருச் சொற்களுக்கு எண் தந்த முதலகராதி பெருஞ்சொல்லகராதியாகும். சான்றாக, அரி என்னும் சொல் பொருள் வேறுபாட்டின் அடிப் படையில் 69 தலைச்சொற்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

அரி1-தல்	4.வி 1. அறுத்தல். அரவி ஆம்பல் நெய்த லொடு அரிந்து (பதிற்றுப். 71.2)...
அரி2-தல்	4வி.1 (குரல்) தழுதழுத்தல்...
அரி12	பெ. குடியிறை, அரிகிளிபுணரி...
அரி69	பெ. நவதாளங்களுள் ஒன்றான அரிதாளம், (சூடா.நி. 12,103)

தலைச்சொல் இணைப்பு

தமிழ் ஒருமொழி அகராதிகளில் ஒரு தலைச்சொல்லும் அதன் மாற்று வடிவங்களும் தலைச்சொல் பகுதியில் அடுத்தடுத்து இடம்பெற நேரின் அத்தலைச்சொற்கள் அனைத்தும் பொருள் தெளிவு, பொருள் விளக்கங்கருதி ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள நிலையைக் காணமுடிகின்றது. இம்முறைக்குத் தலைச்சொல் இணைப்பு என்று பெயர். அவ்வாறு தலைச்சொற்களை இணைப் பதற்குக் கோபுர அடைப்புக்குறி பயன்படுத்தப்பட்டுள்ளது. சதுரகராதியில் தலைச்சொற்கள் இணைப்பில்லாமல் தனித்தனி யாகக் கொடுக்கப்பட்ட நிலையைத்தான் காணமுடிகிறது. பின்வந்த மானிப்பாய் அகராதி முதல் தமிழ்–தமிழ் அகரமுதலி வரை தலைச்சொல் இணைப்பு முறையைக் காணலாம்.

கிசம் – தளிர்
கிசலம்– தளிர்
கிசலயம்– தளிர்
கிசலை– தளிர்
கிசாலம்– தளிர் (சதுரகராதி)

சட்டதிட்டம்
சட்ட பட்டம் } ஒழுங்கு, கட்டளைச் சட்டம், பூரணம்
சட்ட வட்டம் (மானிப்பாய் அகராதி)

அப்பொழுது
அப்போது } அக்காலத்தில்
அப்போழ்து (தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி)

கழுதாழி
கழுதிரதம் } பேய்த்தேர் (தமிழ்–தமிழ் அகரமுதலி)

இவ்வாறு கோபுர அடைப்புக் குறியுடன் இணைந்த தலைச் சொல்லினை மாற்றி நிறுத்தல் குறியீட்டுடன் வழங்கிய தன்மையை மாணவர் தமிழ் அகராதியில் காணமுடிகிறது. அதாவது தலைச் சொல்லை இணைக்கக் குறியீடு பயன்படுத்தாமல் ஒரே வரிசையில் தலைச்சொல் பதிவாய்த் தருவதாகும்.

அகங்கரித்தல்– அஹங்கரித்தல், கர்வம் கொள்ளுதல்

அகங்காறி– அஹங்காரி, கர்வி

(மாணவர் தமிழ் அகராதி)

கௌரா தமிழ் அகராதியும் இம்முறையைப் பின்பற்றியுள்ளது.

களரம், களரவம்– காட்டுப்புறா; புறா; குயில்
(கௌரா தமிழ் அகராதி)

இம்முறை புதிய தமிழ் அகராதியிலும் (2009) காணப்படுகின்றது.

அரமகள், அரமங்கை– தேவருலகப் பெண்

சஞ்சீவனி, சஞ்சீவி, சஞ்சீவினி– உயிர்ப்பிக்கும் மருந்து
(புதிய தமிழ் அகராதி)

தலைச்சொல்லின் மாற்று வடிவங்களிலும் ஆண்பால், பெண்பால் பெயர்களை வேறுபடுத்திக் காட்டும் நிலையிலும் தலைச் சொல் இணைப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையில் வேறுபடுத்திக் காட்டும் மாற்று வடிவ எழுத்து அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறை தமிழ்–தமிழ் அகரமுதலியில் இடம்பெற்றுள்ளது.

அங்கி(கீ)காரம் : சம்மதம், ஏற்றுக்கொள்ளுகை, உடன்பாடு

அரோச(சி)கம் : பசியின்மை, அருவருப்பு

ஏத(தி)லவன் : பகைவன்

ஏதில(லா)ர் : அயலார்; பகைவர்; பரத்தையர்

இம்முறையிலிருந்து பெருஞ்சொல்லகராதி மாறுபட்டுள்ளது. மற்ற அகராதிகள் கோபுரக்குறியில் இணைக்கப்பட்டதைப் போல, இதில் சொற்கள் அடைப்புக்குறியின் ( ) மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமன்றி ஒத்த பொருளும் இலக்கணச் செயற்பாடும் உடைய சொற்கள் சாய்வுக் கோட்டுடன் ஒரே பதிப்பில் இணைத்துத் தரப் பட்டுள்ளன.

அமுக்குரவி– (அமுக்குரா, அமுக்கனாங்கிழங்கு, அமுக்கிரா, அமுக்கிராக் கிழங்கு, அமுக்கிரி, அமுக்கினங் கிழங்கு, அமுக்கினாங்கிழங்கு, அமுக்குரவு,

அமுக்குரா) பெ. அசுவகந்திக் கிழங்கு.

ஈசானன்/ர் பெ.1 வடகீழ்த்திசையின் காவல் தெய்வம் (பெருஞ்சொல்லகராதி)

இவ்வாறு பொருள் விளக்கத்திற்காக இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தலைச்சொற்களை இணைத்து வழங்கும் முறை தமிழ் ஒருமொழி அகராதிகளில் பரவலாக வழங்கி வந்தமையை மேற்கண்ட இணைப்பு முறைகளின்வழி அறியமுடி கின்றது.

நட்சத்திரக் குறி

தலைச்சொல்லில் பெயர், வினை போன்ற பல சொற்கள் இடம்பெறுகின்றன. முதலகராதியில் காணப்படும் சொற்களைவிட அடுத்த அகராதியில் ஒருசில சொற்களேனும் புதிதாய்ச் சேர்க்கப் படும். அவ்வாறு புதியதாக அகராதியில் சேர்க்கப்பட்ட சொல்லைக் கண்டறிய இந்த நட்சத்திரக் குறி (*) பயன்படுத்தப்படும். இவ்வகை யைத் தொடங்கிவைத்த பெருமை இலக்கியச் சொல்லகராதியைச் சேரும். இவ்வகராதிதான் புதுச்சொல்லுக்கு முதன்முதலில் நட்சத்திரக் குறியைப் பயன்படுத்தி உள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழ்ப் பேரகராதி (1893), தமிழ்ப் பேரகராதி (1899), 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதி போன்ற பல அகராதிகளும் புதிதாய் அகராதியில் சேர்க்கப்பட்ட சொற்களுக்கு இக்குறியைப் பயன்படுத்தியுள்ளன.

தமிழ் ஒருமொழி அகராதிகளில் பேச்சு வழக்குச் சொற்கள், வட்டார வழக்குச் சொற்கள், பிறமொழிச் சொற்கள் போன்றனவும் தலைச்சொல்லாக இடம்பெற்றுள்ளன. அகராதிகளில் தன்மை மற்றும் அவை தோன்றிய காலத்திற்கேற்பப் பல்வேறு நிலைகளில் சொற்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறு தோன்றிய வழக்குச் சொற்களுக்கு நட்சத்திரக் குறியைக் கொடுக்கும் முறையினை 'நவீன தமிழ் அகராதி' முதன்முதலில் தோற்றுவித்துள்ளது.

இலக்கணப் பொருள் (இலக்கணக் குறிப்பு)

தலைச்சொல் பகுதியில் இறுதியாக இடம்பெறுவது இலக்கணப் பொருளாகும். சொல்லின் இலக்கணக் குறிப்பைச் சுட்டுவதே இம்முறையாகும். ஒருமொழி அகராதிகளில் இலக்கணச் சொற்கள் நன்கு விளக்கம் பெற்றுள்ளன. ஆரம்பகால அகராதிகளில் இலக்கணப் பொருள் மறைமுகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் தோன்றிய அகராதிகளில்தான் இலக்கணப்பொருள் வெளிப்படையாகச் சுட்டப்பட்டுள்ளது. சதுரகராதியில் தலைச்சொல்லின் பொருட்பகுதியில் வினைச்சொற்களின் இலக்கணப்பொருளும் அகரவரிசையில் இடம்பெற்றுள்ளது.

அகம் – இம், உள், ஏழனுருவு (உ–ம்) பல்லாரகத்து, பள்ளம், மரப்பொது

உலறல் – காய்தல், வியங்கோள் முற்று

உன்னி – குதிரை, வினையெச்சம் (சதுரகராதி)

சதுரகராதியை அடுத்து வந்த மானிப்பாய் அகராதியில் இம்மறைமுக இலக்கணப்பொருள் காணப்படவில்லை. நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்ப் பேரகராதியில்தான் தலைச் சொற்களின் இலக்கணக் குறிப்பைக் காட்ட பல குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. பெயரெச்சம் +
2. வினையெச்சம் $
3. வினைமுற்று #
4. ஏவல் வினைமுற்று o
5. வியங்கோள் வினைமுற்று ஏ
6. உரிச்சொல் ♁
7. குறிப்பு வினைமுற்று ÷

இக்குறியீடுகள் இவ்வகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையினைக் கீழே காணலாம்.

+ அடுத்த – சரியான, நெருங்கின

$ அசைஇ – இருந்து, இளைத்து, இளைப்பாறி

அளித்து – சமீபித்து

O இறக்கு – இறக்குகை

ஈக்க – தருக

÷ உண்டு – உள்ளது

இக்குறியீட்டு முயற்சி இவ்வகராதியின் முதற்பதிப்பில் மட்டுமே காணமுடிகின்றது. ஏனைய பதிப்புகளில் இம்முறை காணப்படவில்லை. உரிச்சொல்லிற்கான O̽ என்னும் குறியீடு முன்னுரை பகுதியில் இவ்வகராதி குறிப்பிட்டிருந்தாலும் பதிவுகளில் இக்குறியீட்டைக் காணமுடியவில்லை. இக்குறியீடுகள் எல்லா வினைச்சொற்களுக்கும் தரப்படாமல், ஒரு சில வினைச் சொற்களுக்கு மட்டும் காட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு குறியீடுகளைக் கொடுக்கும் முறை பின்னர் வந்த ஒருமொழி அகராதிகளில் காணப்படவில்லை.

இதனையடுத்துத் தலைச்சொற்களுக்கு இலக்கணக் குறிப்பான்களை வெளிப்படையாகத் தந்த முதல் அகராதி தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியாகும். இவ்வகராதி தலைச்சொற்களுக்குப் பெயர், வினை, தொழிற்பெயர் என இலக்கணக் குறிப்பான்களைக் கொடுத்துள்ளது.

அஃகான் (பெ) தானியம்

அரவணை (பெ) சேஷசயனம்

அரவணை (வி) தழுவிக்கொள்

அடு(வி) தீயிற்பாகமாக்கு, சேர்

அசைவு (தொ.பெ) ஆட்டம், 2. சஞ்சலம், 3. சோர்வு

அகைத்தல் (தொ.பெ) அடித்தல், 2. ஓட்டுதல், 3. முறித்தல், 4. வருத்தல்

இவ்வகராதிக்குப் பின்னர் வந்த இளைஞர் தமிழ் அகராதி, மணி அகராதி, நவீன தமிழ் அகராதி, ஜுபிலி தமிழ்ப் பேரகராதி போன்ற பல அகராதிகளிலும் இம்முறை பின்பற்றப்படவில்லை. தமிழ்–தமிழ் அகரமுதலியில் ஒரு தலைச்சொல் பெயராகவும் வினையாகவும் செயல்பட்டால் அவற்றை வேறுபடுத்திக் காட்ட வினைக்கு மட்டும் (வி) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருக்கு– வெள்ளம்; கடல்நீரேற்றம்; இரத்தவோட்டத்தின் மிகுதி; மிகுதி பப்பரப்புளி; ஓரெண்ணை மற்றோர் எண்ணால் கட்டிய மடங்கு அதிகப் படுத்துகை; காண்க: பெருக்குத்தொகை.

பெருக்கு(வி)– குணி பெருக்கச் செய்.

(தமிழ்–தமிழ் அகரமுதலி)

இதே முறையை வசந்தா தமிழ் அகராதியும் (2000) பின்பற்றியுள்ளது.

தலைச்சொல்லின் இலக்கணக் குறிப்புகளை முழுநிலையில் இலக்கணக் குறிப்பான்களாகத் தந்த பெருமை தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பெற்ற பெருஞ்சொல்லகராதியைச் சாரும். இவ்வகராதியில் வினைச்சொற்கள் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியைப் போன்று 13 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பதின்மூன்று வகைகளுக்குரிய எண்களும் தரப்பட்டுள்ளன. மேலும் வினைச்சொற்களின் தன்வினை, பிறவினை செயல்பாடு களைக் குறிக்கவும் இலக்கணக் குறிப்பான்கள் கையாளப் பட்டுள்ளன. இவ்வகராதியில் பெயர், வினை, பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை, குறிப்பு வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, இடைச்சொல், உரிச்சொல் போன்ற அனைத்து வகையான இலக்கணக் குறிப்பான்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்குக் காணலாம்.

அம்பணம்	பெ.- மரக்கால்
அஃகு -தல்	5வி.- 1..., 2...
அஃதே	இ.சொ. -...

அக்கக்காய் வி.அ. -...

அரிய பெ.அ. -...

அரிது[3] கு.வி.மு. -...

வினைச்சொற்கள் -தல், -த்தல் வடிவங்களுடனும் வினை வகைப்பாட்டு எண்களுடனும் தரப்பட்டுள்ளன.

எதிர்[14] -தல் வி.[11] கிட்டுதல் எல்லை ஏற்ற நெடுஞ் செல்வம் எதிர்ந்த ஞான்றும் (கம்பரா. 5458)

எதிர்[21] -த்தல் 11வி. சந்தித்தல், ...

இதுகாறும் மேலே கண்டவற்றுள் தலைச்சொல்லின் பல்வேறு நிலைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மாற்றத்தினைக் கண்டோம். அதாவது தலைச்சொல், தலைச்சொல் அமைப்பு, ஒப்புருச்சொல், தலைச்சொல் இணைப்பு, நட்சத்திரக் குறி, இலக்கணப்பொருள் என்பனவற்றுள் நிகழ்ந்துள்ள மாற்றமும் வளர்ச்சியும் சொற் பொருளின் எளிமை மற்றும் தெளிவு கருதியே அமைந்துள்ளன என்பதைக் காணமுடிகின்றது.

பொருட்பகுதி

தலைச்சொற்பகுதியை அடுத்து அமைந்திருக்கும் மற்றொரு அகராதிப் பதிவுதான் பொருட்பகுதியாகும். இப்பகுதியில் தலைச் சொல்லுக்குரிய பொருள் விளக்கம் இடம்பெறும். இது அகராதி களில் தலைச்சொல்லின் வலதுபுறமாக அமைந்திருக்கும். சொல்லுக்குரிய பொருளைத் தருவதுதான் அகராதியின் நோக்க மாயினும் அதை எளிமையாகவும் அறிவியல் அணுகுமுறையுடன் தருவது அகராதியின் தலையாய கடமையாகும். சொற்பொருளை விளக்குவதற்குப் பல உத்திகள் பின்பற்றப்படுகின்றன. பொதுவாக இவ்வுத்திகளை மொழித் தொடர்புடைய உத்திகள் (Linguistic Techniques) என்றும், மொழித் தொடர்பிலாப் பிற உத்திகள் (Extra-Linguistic Techniques) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். மொழி யின் பல்வேறு உட்கூறுகளைச் சார்ந்து அவற்றின் உதவியால் பொருள் விளக்கம் தருவது முதல்வகை, நிறுத்தற் குறிகள்,

குறியீடுகள், படங்கள், இடப்பகிர்வு, பத்தி அமைப்புப் போன்றவை இரண்டாம் வகையைச் சேர்ந்தனவாகும். நிறுத்தற் குறிகள், குறியீடுகள், இடப்பகிர்வு போன்றன பொது மொழியில் பல்வேறு பயன்பாடுகளைக் கொண்டிருப்பினும் அகராதிகளில் இவற்றின் பயன்பாடு சிறப்பாக நோக்கத்தக்கதாகும். ஒருமொழி அகராதியில் மூலமொழியும் இலக்குமொழியும் ஒரே மொழியில் அமைந்திருப்ப தாலும், பெரும்பாலான அகராதிகள் தாய்மொழியினருக்காகத் தொகுக்கப் பட்டிருப்பதாலும் இவ்வகராதிகளில் பொருள்விளக்க உத்திகளின் பயன்பாடு குறைவாகவே காணப்படுகிறது.

பெரும்பாலான தமிழ் ஒருமொழி அகராதிகளின் பொருட் பகுதியில் சில பொதுப்பண்புகளையும் காணமுடிகின்றது. பழைய ஒருமொழி அகராதிகளில் பொருட்கள் அகரவரிசையில் கொடுக்கப் பட்டுள்ளன.

பெரும்பாலும் ஒருமொழி அகராதிகளில் காணப்படும் பொதுப் பண்புகளைக் கீழே காணலாம்.

- எல்லா அகராதிகளிலும் மறைமுகக் குறுக்கு நோக்கீடு அமைந்துள்ளது.
- மரம், விலங்கு, சிறப்புப் பெயர், ஊர், பறவை போன்றவை சார்ந்த சொற்களை விளக்குகின்ற பொழுது பொதுவிளக்கம் மட்டுமே அதிகமாகக் காணப்படுகின்றது.
- இலக்கணச்சொல் எடுத்துக்காட்டுகளுடன் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
- பொருள் சுழற்சிமுறை பெரும்பாலான அகராதிகளில் காணப்படுகின்றது.
- பண்பாட்டுச் சொற்களை விளக்கிடக் கலைக்களஞ்சிய விளக்கம் இடம்பெற்றுள்ளது.

பொருட்பகுதியில் பொருள் வரிசை, பொருள் விளக்கம், எடுத்துக்காட்டு, குறிப்பான், குறுக்கு நோக்கீடு, விளக்கக் குறிப்பு, சொல்மூலம், நிறுத்தற் குறிகள், குறியீடுகள், விளக்கப் படங்கள் போன்றவை பொருள் விளக்கத்திற்காகப் பயன்படும் உத்திகளாகும்.

இவ்வுத்தி முறைகள் காலத்திற்கேற்பத் தோன்றிய ஒருமொழி அகராதிகளில் எவ்வாறு மாற்றமடைந்து வளர்ந்துள்ளன என்பதை இவண் பல்வேறு தலைப்புகளில் ஆராயப்படுகிறது.

பொருள் வரிசைமுறை

ஒரு மொழி அகராதிகளின் பொருட்பகுதியில் பொருள்களை அகரவரிசையில் கொள்ளும் மரபு. அமைப்பு–1, அமைப்பு–2, என்னும் இரண்டு வகை அகராதிகளிலும் காணப்படுகின்றது. இந்தப் பொருள் அகரவரிசை முறை, பின்னர் வந்த அகராதிகளில் சொற் பொருள் மாறுபாட்டால் பல மாற்றங்களைப் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. தொடக்ககால அகராதிகள் அகரவரிசைக்கு முக்கியத்துவம் கொடுத்தன. ஆனால் பிற்கால அகராதிகள் சொற் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

சதுரகராதியின் பெயரகராதி, பொருளகராதி போன்றவற்றிலும் பொருளை அகரவரிசைப்படுத்திக் கூறும் முறை பின்பற்றப் பட்டுள்ளது.

இல்லாள் – தரித்திரி, தலைவி, மனைவி

குழம்பு – ஓர் தேசம், கஞ்சி, குழம்பென்னேவல், குழை சேறு (பெயரகராதி)

அசுரர் – அவுணர், தகுவர், தஙசர், திதிமைந்தர், தைத்தியர், நிசாசரர், வானோர் மற்றவர். (பொருளகராதி)

சதுரகராதியை அடுத்து வந்த மானிப்பாய் அகராதி, தமிழ்ப் பேரகராதி போன்றவற்றிலும் இவ்வரிசை முறையே காணப்படு கின்றது.

அம்மை – அழகு, தவப்பெண், தாய், வசூரி, வருபிறப்பு (மானிப்பாய் அகராதி)

அகழி – அகழ், ஆடு, ஓடை, கயம், கிடங்கு, கேணி, பரிகம், பரிகை, பாம்புரி, அகப்பா. (தமிழ்ப் பேரகராதி)

தமிழ்ப் பேரகராதியை அடுத்து வந்த சி.டபிள்யூ. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதியில் இம்முறை பின்பற்றப் பட்டுள்ளது. இருப்பினும் இம்முறையோடு பொருட்களின் வரிசை எண்ணும் கொடுக்கப்பட்டிருப்பது பொருள்கூறும் முறையில் காணப் படும் புதிய முறையாகும்.

அகமநம் – 1. அடையாளம், 2. நடவாமை, 3. புணராமை (சி), 4. போகாமை.

அரி – 1. குதிரறுக்கும் பருவம்... ..., 2. நெற்கதிர்... ...
3. கதிற்குவியல்... ..., 4. நெல்... ...,
5. அரிசி... ..., 6. மூங்கிலரிசி... ...,
7. மூங்கில்... ..., 8. பனங்கருக்கு.
(தமிழ்ச் சொல்லகராதி)

இவற்றுள் தலைச்சொற்களுக்குப் பொருள் வரிசை எண் (1, 2, 3, ...) கொடுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

இதனையடுத்து வெளிவந்த மாணவர் தமிழ் அகராதியில் மேற்சுட்டப்பட்ட இரண்டு முறைகளும் காணப்படவில்லை. இவ்வகராதியில் வேறுபாட்டின் அடிப்படையில் பொருள்கள் வரிசைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவேதான் இவ் வகராதியில் ஒப்புருச் சொற்கள் தலைச்சொல்லாக இடம்பெறு கின்றன.

அரி – அரிசி, அரிதல், அழகு, ஐம்மை...

அரி – பகை, பகைவன், வாயு.

அரி – ஹரி, விஷ்ணு, இந்திரன், அக்கினி யமன், சூரியன்...

இச்சான்றினைப் போன்ற ஒப்புருச்சொற்களின் பதிவுகள் முன்னர்க் கண்ட அகராதிகளில் இடம்பெறவில்லை.

தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியில் பொருட்கள் அகரவரிசை யில் கொடுக்கப்படாமல் எண்ணிட்டு மட்டும் கொடுக்கப் பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

பாம்பு – நாகம், 2. நாகப்பூச்சி, 3. ஆயிலிய நாள், 4. கரை.

இதற்கடுத்து வெளிவந்துள்ள இளைஞர் தமிழ்க் கையகராதி, மணி அகராதி, நவீன தமிழ் அகராதி, ஜூபிலி தமிழ்ப் பேரகராதி போன்ற பலவற்றின் பொருள் வரிசை முறையில் புதிய உத்தி முறைகள் பின்பற்றப்படவில்லை.

தமிழ்–தமிழ் அகரமுதலியில் மேலே கண்ட அகரவரிசை முறையும் எண் இடும் முறையும் பின்பற்றப்படாமல், பொருள்கள் நேர்பொருள், தொடர்ப்பொருள், கருத்துப்பொருள் என்ற அடிப் படையில் பாகுபாடு செய்யப்பட்டு விளக்கப்பட்டிருப்பது வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது.

அழைத்தல் – கூப்பிடுதல், பெயரிட்டுக் கூப்பிடுதல், வரச் செய்தல்

அளகம் – பெண்மயிர், மயிர்க்குழற்சி, பன்றிமுள், மழை நீர், நீர்.

கி.பி. 1988இல் வெளிவந்த பெருஞ்சொல்லகராதியில் பொருட்கள் அகரவரிசை முறையில் கொடுக்கப்படவில்லை. ஆனால் பொருளுக்கு வரிசை எண் வழங்கப்பட்டுள்ளது. இவ்வகராதி பெரிய அளவிலான அகராதி என்பதால் பொருள் உறவின் அடிப்படையில் மொழி வரலாறு கருத்தில் கொள்ளப்பட்டுப் பொருள் கூறப்பட்டிருப்பது, பொருள் தரும் நிலையில் முதிர்ந்த வளர்ச்சியைக் காட்டுகின்றது.

பிற்காலத்தில் வெளிவந்த வசந்தா தமிழ் அகராதி, முத்தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி போன்ற பலவற்றிலும் பொருள் அகரவரிசை முறை பின்பற்றப்படவில்லை. பொருளுக்கு எண்ணும் வழங்கப்படவில்லை.

கீற்று : வரி, சிறுதுண்டுப் பகுதி, தென்னங்கீற்று
(வசந்தா தமிழ் அகராதி)

வண்டலம் : சேறு, அளறு, இழைவு (முத்தமிழ் அகராதி)

நிலயம் : தங்குமிடம்; கோயில்; இலக்கு; கூத்து.
(புதிய தமிழ் அகராதி)

இதுவரையில் கண்டவற்றால் பழைய ஒருமொழி அகராதிகளின் பொருட்கள் அகரவரிசை முறையில் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது. இதையடுத்த நிலையில் அகரவரிசையோடு பொருளுக்கு வரிசை எண்ணைக் கொடுக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மேற்கொண்ட இரண்டு முறைகளும் பின்பற்றப்படாமல் சொற்பொருள் உறவு மற்றும் வேறுபாட்டு அடிப்படையில் பொருட்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அடுத்ததாகச் சொற் பொருள் உறவுடன் வரலாற்று அடிப்படையில் எண்கள் கொடுக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ள வளர்ச்சி நிலையை அறியமுடிகின்றது. இறுதியில் அகரவரிசையும் எண்ணும் இல்லாமல் பொருள் கூறப்பட்டுள்ள நிலையை உணரமுடிகின்றது.

பொருள் விளக்கம்

அகராதியில் பொருள் விளக்கம் ஓர் அடிப்படையான உத்தி முறையாகும். இந்தப் பொருள் விளக்கமானது சொல்லுக்குப் பொருள் கூறும் முறையைக் குறிப்பதாகும். இது தருக்கவியல் விளக்கம். அகராதியியல் வரையறை என இரண்டு நிலைகளில் செயல் படுகின்றது. பொருள் வரையறையானது பகுப்பு முறை, இணைப்பாக்கம், விதிமுறை, ஒருபொருட் பன்மொழி என்னும் நான்கு வகைகளைப் பெற்றுள்ளது. தமிழ் ஒருமொழி அகராதி களில் காணப்படுகின்ற பொருள் விளக்கத்தினை இனிக் காண் போம்.

தருக்கவியல் விளக்கம்

பொதுவாக அகராதிகளில் தாவரம், விலங்கு, ஊர், நாடு, நதி போன்றவற்றை விளக்குவதற்கு மீச்சொல், கீழ்ச்சொல் ஆகிய வற்றின் அடிப்படையிலான தருக்கவியல் விளக்கங்களே கொடுக்கப்படுகின்றன எனலாம். தமிழ் ஒருமொழி அகராதிகளில் குறிப்பாகச் சதுரகராதி, மானிப்பாய் அகராதி, தமிழ்ச் சொல்லகராதி போன்ற அகராதிகளில் மேற்கண்ட சொற்கள் பொதுப்பொருள் அடிப்படையில் மட்டுமே விளக்கப்பட்டுள்ளன. இப்பண்பிணைக் கீழ்வரும் சான்றுகளில் கண்டு தெளியலாம்.

அகத்தி – ஓர் மரம்

அவந்தி – ஓர் நகர், ஓர் நாடு

கேரளம் – ஓர் தேசம்

உள்ளான் – ஓர் குருவி

புலி – ஓர் மிருகம் (சதுரகராதி)

இத்தி – ஓர் மரம்... (மானிப்பாய் அகராதி)

இவ்வாறு பொதுவிளக்கமுறை உத்தியே இவ்வகராதிகளின் பெரும்பாலான சொற்களில் காணமுடிகின்றது. எனினும் ஒன்றிரண்டு சொற்களுக்குத் தருக்கவியல் அடிப்படையிலான விளக்கங்களை இவ்வகராதிகள் தந்திருப்பது சிறப்பாக நோக்கத் தக்கது. இம்முறையினைக் கீழே பார்க்கலாம்.

அண்டசம் – முட்டையில் பிறப்பன, அவையாவன அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓணான், தவளை, நண்டு, பல்லி, பறவை, பாம்பு, மீன், முதலை, பிறவும்.

குருளை – இளமை, நரி, நாய், பன்னி, புலி, மான், முசு, முயல், யாளியிவற்றின் குட்டி.

பொதுநிலை விளக்கத்தை மாற்றிச் சொல்லின் வகைகளையும் பொருட்பகுதியில் விளக்கிச் செல்லும் தன்மையைத் தமிழ்ப் பேரகராதியில் காணமுடிகின்றது. இவ்வகராதியில் அகத்தி, அத்தி என்னும் சொற்கள் பின்வருமாறு பொருள் விளக்கம் பெற்றுள்ளன.

அகத்தி – ஓர் மரம், இது சாழையகத்தி, சிற்றகத்தி, செவ்வகத்தி என மூவகை.

அத்தி – கல்லத்தி, காட்டத்தி, கொடியத்தி, பேயத்தி, மலையத்தி, விழலத்தி என ஆறு விதம்.

இவற்றையடுத்து வந்த இராமநாதன் அகராதி, மாணவர் தமிழ் அகராதி, தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, தமிழ்–தமிழ் அகரமுதலி, பெருஞ்சொல்லகராதி, வசந்தா தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி போன்ற அனைத்து அகராதிகளிலும் பொதுவாகப்

பொது விளக்கமே இடம்பெற்றுள்ளது. பெருஞ்சொல்லகராதியில் பின்வரும் பதிவுகள் இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றன.

அத்தி (பெ.) : ஒரு மரவகை

அவந்தி (பெ.) : அவந்தி என்னும் நாடு

ஒருமொழி அகராதிகள் பெரும்பாலும் தாவரம், விலங்கு, பறவை போன்ற சொற்களுக்குப் பொதுநிலையிலான விளக்கத்தினையே அளித்துள்ளன என்பது இங்குச் சுட்டத்தக்கது.

கலைக்களஞ்சிய விளக்கம்

ஒருமொழிஅகராதிகளில் குறிப்பாக அமைப்பு–1 அகராதிகளில் தொகையகராதி என்னும் பிரிவில் பெரும்பாலான சொற்களுக்குக் கலைக்களஞ்சிய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. சான்றாகச் சதுரகராதியின் தொகையகராதியில் 'இராசி' என்னும் சொல்லுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கலைக்களஞ்சிய விளக்கம் இங்குச் சுட்டப்பட்டுள்ளது.

இராசி – மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் இவற்றுள் முன்னாறு முத்தராயனராசி, இடையாறு மிறங்குமிராசி, அன்றி முதன் மூன்றுங் கடைசி மூன்று மேறுமிராசி, இடையாறு மிறங்கு மிராசி.

இதில் 'இராசி' என்ற சொல்லிற்கு 12 வகையான பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விளக்கும் முறையே கலைக் களஞ் சிய விளக்க முறையாகும். மானிப்பாய் அகராதியிலும் இம் முறை காணப்படுகின்றது.

தமிழ்ப் பேரகராதியின் பெயரகராதியில் பல சொற்களுக்குக் கலைக்களஞ்சிய விளக்கம் அமைந்துள்ளது. இவ்வகராதியில் இடம் பெறும் அகலிகை என்ற சொல்லின் கலைக்களஞ்சிய விளக்கத்தினைக் கீழே காணலாம்.

அகலிகை – கௌதமர் பத்தினி, பஞ்ச கன்னிகைகளி லொருத்தி, இவளை தேவேந்திரன் மோகித்து கௌதமரை வஞ்சகமாய் ஸ்நாநத்துப் போக்கிப் புணர கௌதமரறிந்து கல்லாய் சபிக்க. இராமர் விஸ்வாமித்திரரோடு மிதிலைக்குப் போம்போதவர் காற்றூசுபட சாபவிமோசனமானாள்.

இதனையடுத்து வந்த தமிழ்ச் சொல்லகராதியில் கலைக் களஞ் சிய விளக்கம் முழுநிலையில் அமைந்துள்ளதைக் காணலாம். இதில் 'அகப்பை' என்ற சொல்லுக்கு இரண்டு பக்க அளவில் விரிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது. இது இவ்வகராதியின் பொருள் சிறப்பைக் காட்டுகின்றது. மாணவர் தமிழ் அகராதி, தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, மதுரைத் தமிழ்ப் பேரகராதி, தமிழ்–தமிழ் அகரமுதலி, பெருஞ்சொல்லகராதி, கௌரா தமிழ் அகராதி போன்றவற்றிலும் கலைக்களஞ்சிய விளக்கம் இடம் பெற்றுள்ளது.

விதிமுறை

இலக்கணச் சொற்களுக்கு அவற்றின் பயன்பாடு குறித்த பல்வேறு விதிமுறைகளைக் கூறி விளக்குவது, பொருள் விளக்கத் தில் காணப்படும் மற்றொரு உத்தியாகும். இவ்வுத்தியில் இலக் கணச் சொற்களும் இலக்கணக் கலைச்சொற்களும் வரையறை யுடன் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ள தன்மையை ஒருமொழி அகராதிகளில் காணமுடிகின்றது. ஒருமொழி அகராதிகளில் முன்னர்க் கூறியது போல் பொதுச் சொற்களுக்கு விரிவான விளக்கங்கள் அளிக்கப் படாத நிலையில் அனைத்து இலக்கணச் சொற்களும் விரிவான பொருள் விளக்கம் பெற்றுள்ளன. இது தமிழ் ஒருமொழி அகராதிகளில் விதிமுறைப் பொருள் வளர்ச்சி பெற்றுள்ள நிலையினைக் காட்டுகின்றது.

தொடக்கத்தில் தோன்றிய சதுரகராதி, மானிப்பாய் அகராதி போன்றவற்றில் விதிமுறை விளக்கம் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. சான்றாக மானிப்பாய் அகராதியில் 'அ', 'ஏ' எனும் சொற்கள் பெற்றுள்ள விளக்கத்தினை இங்குக் கூறலாம்.

அ – அஃறிணைப் பன்மையீறு, ஆறாவதன் பன்மையுருபு, சாரியை, சுட்டு.

ஏ – அடே, இசைநிறை, இற்றசை, எண்ணின் குறிப்பு (உ.ம்) நிலனே நீரே, எதிர்மறை (உ.ம்) பொய்யே, ஓரெழுத்து, தேற்றக்குறிப்பு (உ.ம்) நானே வந்தது, பாணம், பிரிவின் குறிப்பு (உ.ம்) இவற்றுளொன்றே நன்று, வினாக் குறிப்பு (உ.ம்) தாவே வந்தது.

தமிழ்ப் பேரகராதியில் இலக்கணக் கலைச்சொல்லுக்கு விதிமுறையுடன் கூடிய பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. இவ்வகராதியில் இடம்பெற்றுள்ள 'அகவற்பா' எனும் சொல்லுக் குரிய பொருள் விளக்கம் இம்முறைக்குச் சான்றாக இருக்கும்.

அகவற்பா – ஐந்து பாவினொன்று அது நாற்சீரான் வருமளபடியாயும் இயற்சீர் பயின்றும் அயர்சீர் விரவியுந் தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும் கருவிளங்கனியென்று மிருசீர் கலவாது மூன்று முதலிய பல வடிவங்கொண்டு முடிவது.

தமிழ்–தமிழ் அகரமுதலியும் 'ஏ' என்னும் சொல்லுக்கு இவ்வகையிலான விளக்கத்தைத் தருகின்றது (ப.206). தமிழில் தோன்றிய ஒருமொழி அகராதிகளில் முத்தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி போன்றவற்றைத் தவிர பெரும்பாலான அகராதி களில் இவ்வுத்திமுறை பயின்று வந்துள்ளது.

ஒருபொருட் பன்மொழி

அகராதியின் பொருள் விளக்க உத்திகளுள் ஒருபொருட் பன்மொழிகளின் பயன்பாடும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் ஒருமொழி அகராதிகளில் இவ்வுத்தி பெரிதும் பின்பற்றப்படு வதைக் காணமுடிகின்றது. பொதுவாகவே அமைப்பு–1 வகை அகராதிகளில் ஒருபொருட் பன்மொழிக்கென்றே ஒரு பிரிவு காணப்படும். இது ஒருபொருட் பன்மொழியின் சிறப்பினை

உணர்த்துவதாக அமைந்துள்ளது. பின்னர் வந்த அமைப்பு–2 அகராதிகளில் ஒரு சொல்லுக்குரிய பல பொருட்களைக் கொடுக்கும் பொழுது, ஒருபொருட் பன்மொழிகளையும் சேர்த்துப் பொருட் பகுதியில் கொடுக்கும் நிலையைக் காணலாம். மறைமுகக் குறுக்கு நோக்கீட்டிற்கு ஒருபொருட் பன்மொழிகள் கொடுக்கப் படுகின்றன. ஒருமொழி அகராதிகள் பெரும்பாலும் தாய்மொழி யினருக்காகத் தொகுக்கப்பட்டிருப்பதால் அவற்றில் பிற சொற் பொருள் விளக்கங்கள் காணப்படாத நிலையில் ஒருபொருட் பன் மொழிகளின் பயன்பாடு மிகுதியாக உள்ளதை உணரமுடிகின்றது. பொதுவாகத் தமிழ் ஒருமொழி அகராதிகளில் பொருள் விளங்காத கடின சொற்களின் பொருள் விளக்கத்திற்காக, எளிமையான ஒரு பொருட் பன்மொழிகள் பொருளாகக் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இதற்குக் கீழ்வரும் சொற்களைச் சான்றுகளாகக் கொள்ளலாம்.

அமடு : பொல்லாங்கு

அகவிதழ் : அல்லி

அரிமணி : மரகதம்

ஈகம் : சந்தனம்

சொற்பொருள் விளக்கத்தில் ஒருபொருட் பன்மொழிகளைக் கையாளும் நிலையில் சுழற்சி முறையையும் பெரும்பாலான அகராதிகளில் காணமுடிகிறது. இதற்குச் சான்றாகச் சதுரகராதி யின் பதிவுகளைக் குறிப்பிடலாம்.

உமை : பார்வதி

பார்வதி : உமை

இதில் உமை என்ற சொல்லுக்குப் பார்வதி என்ற பொருள் வழங்கப்பட்டுள்ளது. பார்வதி என்ற சொல்லுக்கு உமை என்னும் பொருள் கூறப்பட்டிருப்பது இச்சுழற்சி முறைக்குச் சரியான சான்றாக அமைந்துள்ளது. கடின சொற்களுக்கு எளிய சொற் களால் பொருள் கொடுக்கும் முறை முன்பு காணப்பட்டது. ஆனால் எளிய சொற்களுக்கு அச்சொல்லாலே பொருள் கொடுக்கும் முறை

யும் சதுரகராதியில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளது.

குதிரை : குதிரை

குமிழ் : குமிழ்

சிப்பி : சிப்பி

இவற்றுள் குதிரை, குமிழ், சிப்பி என்னும் தலைச்சொற் களுக்கு அச்சொற்களே பொருளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இம்முறை பிற்காலத்து அகராதிகளில் காணப்படவில்லை.

மேலே கண்டவற்றுள் ஒருமொழி அகராதிகளில் தருக்கவியல் விளக்கம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான அகராதிகளில் பொருள் விளக்கமே காட்டப்படுகின்றது. கலைக் களஞ்சிய விளக்கம் அமைப்பு–1 அகராதிகளின் தொகையகராதி யில் காணப்படுகின்றது. அதனால் மற்ற பிரிவுகளில் இவ்விளக்கம் இடம்பெற முடியாத நிலை ஏற்படுகின்றது. எல்லா அகராதி களிலும் இலக்கணச்சொல்லை விளக்குகின்ற நிலையில் விதிமுறை விளக்கம் சான்றுகளுடன் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடி கின்றது. ஆரம்ப காலத்தில் தனியாக இடம்பெற்ற ஒருபொருட் பன்மொழிகள் பிற்கால அகராதிகளின் அகராதிப் பிரிவில் இடம் பெற்றுள்ளன. முன்னர்க் கூறியதுபோல் ஒருமொழி அகராதிகள் தாய்மொழி பேசுபவர்களின் பயன்பாட்டிற்காகக் கொடுக்கப் பட்டிருப்பதாலும் அமைப்பு முறையில் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளதாலும் சொற்களுக்கு விரிவான விளக்கம் கொடுக்க வேண்டியதன் தேவை ஏற்படவில்லை.

எடுத்துக்காட்டு

பொருள் விளக்கத்தில் எடுத்துக்காட்டுகள் சிறந்த பங்கினை ஆற்றிவருகின்றன. இவை தலைச்சொல்லின் பல்வேறு மொழிச் சூழல்களையும் குறிப்பிடுகின்றன. மேலும் தலைச்சொல்லின் பொருளை உறுதி செய்யவும் பொருள் மயக்கத்தைத் தீர்க்கவும் இவை பயன்படுகின்றன. வரலாற்று அகராதிகளில் இந்த எடுத்துக் காட்டுகள் மொழியின் வரலாற்றையும் வளர்ச்சியினையும் கண்டு

கொள்ள பெரிதும் துணை செய்கின்றன. இந்த எடுத்துக்காட்டு மூன்று வகைகளில் அகராதிகளில் இடம்பெறுகின்றது.

1. எழுத்துருப்பெற்ற (அ) அச்சுவடிவ நூற்களிலிருந்து தொகுத்தளிக்கப்படுவது.
2. பழமொழி, நாட்டுப்புற வழக்கு, பேச்சு மொழியிலிருந்து தெரிவு செய்யப்படுவது.
3. ஆசிரியர் (அ) தொகுப்புக் குழுவினரால் படைத்தளிக்கப் பெறும் ஆசிரியர் கூற்று.

இவற்றுள் முதல்வகை எடுத்துக்காட்டுகள் மேற்கோள்கள் என்று அழைக்கப்படுகின்றன. மேற்கோள்களாயின் மொழிச் சூழலின் முழுச் செய்தியும் வழங்கப்படும். சொல் இடம் பெறும் நூலின் பெயர், பாடல் அடி, பக்க எண், வரி எண் முதலியன மேற் கோளை அடுத்து வழங்கப்படும். மேற்கோளில் நூற்பெயரை மட்டும் குறிப்பிடும் அகராதிகளும் உள்ளன. ஒரு சொல்லின் பல்வேறு பொருட்கள் இலக்கிய ஆசிரியர்களின் மொழிப் பயன் பாடு, பயன் பாட்டு வரையறையுடைய சொற்கள், வீழ்ச்சொல், பழஞ் சொல், இலக்கண மாற்று வடிவங்கள், அடைகள் முதலியன முதல் வகை எடுத்துக்காட்டுகளின் மூலம் சிறப்பாக அகராதிகளில் விளக்கம் பெறுகின்றன. எடுத்துக்காட்டுகள் தேவைக்கு ஏற்ப ஒரு சொல்லிலிருந்து தொகைச்சொல், தொடர், பத்தி, வாக்கியம் என்ற நிலையில் வழங்கப்படலாம்.

பொருள் வரையறையில் எல்லாப் பொருள் கூறுகளையும் எடுத்துக்காட்டுகள் விளக்கி நிற்பதில்லை. மாறாகப் பொருளின் சில பொருட்கூறுகளை மட்டும் விளக்கி நிற்கின்றன. எடுத்துக் காட்டுகள் அகராதிப் பொருள் விளக்கத்தை விஞ்சி நிற்பதில்லை. மாறாக அவற்றைப் புரிந்து கொள்வதற்குத் துணைநிற்கின்றன. மூன்று வகையான எடுத்துக்காட்டுகளில் முதல்வகையே சிறந்ததாக வும் முழுமையாக நம்பத்தக்கதாகவும் உள்ளது.

தமிழ் ஒருமொழி அகராதிகளில் குறிப்பாகப் பழைய அகராதி களில் இலக்கணச் சொற்கள் மட்டும் எடுத்துக்காட்டுகளுடன்

விளக்கம் பெற்றுள்ளன. சதுரகராதி, மானிப்பாய் அகராதி போன்ற அகராதிகளில் மூன்றாம் வகை எடுத்துக்காட்டுகளே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையை மாற்றித் தலைச் சொல்லின் எல்லாப் பொருள்களுக்கும் 374 இலக்கியங்களில் இருந்து எடுத்துக் காட்டுகளைக் கொடுத்த பெருமை சி.டபிள்யூ. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதியைச் சாரும். இவ்வகராதியை அடுத்து வந்த சிறிய அகராதிகளில் இவ்வுத்தி முறை பெருமளவிற்குப் பின்பற்றப்படவில்லை. எனினும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான பெருஞ்சொல்லகராதியில் மூன்று வகையான எடுத்துக் காட்டுகளும் இடம்பெற்றுள்ளன.

முதல் ஒருமொழி அகராதியான சதுரகராதியிலும் அதனை அடுத்து வெளிவந்த மானிப்பாய் அகராதியிலும் இலக்கணச் சொற்களுக்கு எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டிருப்பதைக் கீழ்வரும் பதிவுகளின் வழி அறிந்து கொள்ளலாம்.

குரை : அசைச்சொல்(உ.ம்) அது பெறவருங் குரைத்தே ஒலி, குதிரை.

ஏ : அடே, இசைநிறை, இற்றசை, எண்ணின் குறிப்பு (உ.ம்) நிலனே நீரே, எதிர்மறை (உ.ம்) பொய்யே, ஒரெழுத்து...

இவ்வகராதிகள் மட்டுமன்றி இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதி, ஜுபிலி தமிழ்ப் பேரகராதி, கழகத் தமிழ்க் கையகராதி போன்ற பலவற்றிலும் இலக்கணச் சொற்களுக்கு மட்டும் எடுத்துக் காட்டுகள் தரப்பட்டுள்ளன.

தமிழ்ச் சொல்லகராதியில் எடுத்துக்காட்டுகள் வழங்கும் போது அவை இடம்பெற்ற நூல், பாடல் எண், வரி போன்ற செய்திகளும் சேர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கும். இது தமிழ் ஒரு மொழி அகராதிகளில் ஏற்பட்டுள்ள பொருள் வளர்ச்சியினைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அந்தரங்கம் : 1.அதிகம் நேசிக்கப்பட்டது. அருமையானது (ஆப்நகூ) 2. ஆலோசனை (மா.) 3. இரகசியம்

(உ.ம்) அந்தரங்கத்திற் பொருந்துமாறு புருடனோடு மாசநத்திற் பொருந்துதல் (நல். பார. உமாம். நூ.எ) 4. உள்ளம் (ஆப்.நு.கூ). உள்ளானது...

தமிழ்ச் சொல்லகராதிக்குப் பின்னர் வந்த பெருஞ் சொல்லகராதியில் இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, ஆவணம், பொது அகராதிகள், சிறப்பு அகராதிகள், பாட நூல்கள் போன்ற வற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள் இடம் பெற்றுள்ளன. இலக்கியங்களிலிருந்து காட்டப்படும் எடுத்துக் காட்டுகளில் அவை இடம்பெற்றுள்ள நூல், உட்பிரிவு, பாடல் எண், பக்க எண் போன்றவை தரப்பட்டுள்ளன.

அகம்படி வீரர் (பெ.) : மன்னன் மெய்க்காப்பாளர் அகம்படி வீரர்கள் ஐயிரு வெள்ளம் (கம்பரா. 5, 11, 27)

அங்குணம் (பெ.) : வெங்காரம் (வைத்.விரி.அக. ப.4)

அகதேசி (பெ.) : பிறந்த ஊரிலேயே பிச்சையெடுப் பவன் அகதேசியைக் கெடுக்க வந்த பரதேசி (பழமொழி)

அகலக்கால் வை-த்தல்[11] வி. -செலவு முதலியன அளவு கடந்து செய்தல், வியாபாரத்தில் அகலக் கால் வைத்து முதலையும் இழந்து விடாதே (ஆசிரியர் தொகுப்பு)

பெருஞ்சொல்லகராதியில் மேற்சுட்டியவாறு மேற்கோள்கள் காணப்பெறுகின்றன. ஒரே சொல்லிற்குப் பல மேற்கொள்கள் தரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அகராதியில் மேற்கோள்களும் பொருளும் எழுத்தளவில் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. மேற்கோளானது 10 புள்ளி மெல்லிய எழுத்திலும் பொருள் 10 புள்ளி தடித்த எழுத்திலும் நூல் சுருக்கம் அடைப்புக் குறியில் 8 புள்ளி மெல்லிய எழுத்திலும் தரப் பட்டுள்ளன. இன்றைய அகராதிகளில் இம்மூன்று எடுத்துக்காட்டு

களும் இடம்பெறுவதில்லை.

குறிப்பான்கள்

தலைச்சொல் மற்றும் பொருள் ஆகியவற்றின் சிறப்புத் தன்மையைக் குறிப்பிடப் பயன்படுத்தும் உத்திகளுள் ஒன்றுதான் குறிப்பான். இந்தக் குறிப்பான் தலைச்சொல் மற்றும் பொருளுடன் நேரடித் தொடர்பு கொள்ளாவிட்டாலும் அவற்றிற்குக் கூடுதலான விளக்கங்களைத் தருகின்றது. குறிப்பான்கள் இல்லாமலும் சொற் பொருளைப் புரிந்துகொள்ள முடியும். இருப்பினும் அவை தலைச் சொல், பொருள் குறித்த இலக்கணம், பயன்பாடு போன்ற பல்வேறு செய்திகளை அறிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றன. சொல்–பொருள் என்ற நிலையில்லாமல் சொல்லை அதன் வரலாறு, சமுதாயப் பண்பாட்டுப் பின்புலம்/நுண்கலைத்துறை ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயும்பொழுதே குறிப்பான்களின் பயன்பாடு மிக இன்றியமையாத ஒன்றாகிறது. குறிப்பான்கள் சொல்லின் இலக்கணக்கூறு, சொற்பொருள் சார்ந்துள்ள துறை, இடம், காலம் போன்றவற்றின் குறுக்கங்களாகும். இவை பெரும்பாலும் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்படுகின்றன.

குறிப்பான்களைக் கொடுப்பதன் மூலம் ஓர் அகராதியிய லாளர் வாசகர்களுக்குச் சரியான சொற்பொருள் பயன்பாட்டைக் கொடுப்பதுடன் சொற்பொருளைத் தெரிந்து கொள்வதற்குச் செல விடும் நேரத்தையும் மிச்சப்படுத்துகிறார். ஒவ்வொரு சொல்லுக்கும் செலவிடும் நேரத்தையும் மிச்சப்படுத்துகிறார். ஒவ்வொரு சொல்லுக்கும் பொருளுக்கும் முழு விளக்கங்கள் அளிக்கப் பட்டால் குறிப்பான்கள் கொடுக்கப்படவேண்டிய அவசியமில்லை எனலாம். குறிப்பான்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

குறிப்பான்

இலக்கணக்குறிபான் (Grammatical Label) | துறைக்குறிப்பான் (Field Label) | நிலைக்குறிப்பான் (Status Label)

இலக்கணக் குறிப்பான்

தலைச்சொல்லின் இலக்கணப் பண்புகளைக் குறிக்கப் பயன் படுத்தப்படும் குறிப்பான்கள் இலக்கணக் குறிப்பான்கள் எனப்படும். இலக்கணக் குறிப்பானை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. தலைச்சொல்லின் அடிப்படை இலக்கணப் பண்பைக் குறிக்கும் குறிப்பான்.
2. தலைச்சொல்லின் சொற்றொடருக்குரிய பண்புகளைக் குறிக்கும் குறிப்பான்.

தலைச்சொல்லின் அடிப்படை இலக்கணக் கூறுகளான பெயர் (பெ.), வினை(வி.), பெயரடை (பெ.அ.), வினையடை (வி.அ.) என்பன முதல்வகைக் குறிப்பானில் அடங்கும். தலைச்சொல்லின் தொடரியல் பண்புகளான செயப்படுபொருள் குன்றிய / குன்றா வினை, காரண வினை, வேற்றுமை, வினை உறவு என்பன இரண்டாம் வகையில் அடங்கும். முதல்வகைக் குறிப்பான்கள் தலைச்சொல்லைப் பிற சொற்களிலிருந்து இனம் கண்டுகொள்ளும் நோக்கையுடையன என்பதால் இவை இனமறி குறிப்பான்களாகும். இரண்டாம் வகைக் குறிப்பான்கள் தலைச்சொல்லின் இலக்கணப் பயன்பாட்டை அல்லது பயன்பாட்டு எல்லையை வரையறுத்துக் கூறுகின்றன. எனவேதான் இவை வரையறைக் குறிப்பான்களாகும். இவை விளக்கக் குறிப்புகளாகக் கருதப் பெறுவதும் உண்டு.

ஒருமொழி அகராதிகளில் குறிப்பான்களை அறிமுகப்படுத்திய பெருமை பவானந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ்ச் சொல்லக-ராதியைச் சாரும். இவ்வகராதியில் இலக்கணக் குறிப்பான்கள்

மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையைக் காணமுடிகின்றது.

அகற்று(வி.)	:	நீக்கு
அகைத்தல் (தொ.பெ.)	:	அடித்தல், 2. ஓட்டுதல், 3. முறித்தல், 4. வருந்தல்
அகவு(வி.)	:	அழை, 2.(வி.) ஆடு
அஃகான் (பெ.)	:	தானியம்

இச்சான்றுகளில் தலைச்சொல்லின் இலக்கணப்பொருள் குறுக்கங்களாக (பெ.வி.) இவ்வகராதியில் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது சான்றின் 'அகவு' என்பது வினைச்சொல் என்று கூறி விட்டு, பொருட்பகுதியில் ஒப்புருச்சொற்களால் ஏற்படும் குழப்பத்தை நீக்க வினை (வி.) என்று குறிப்பிட்டிருப்பது, பொருளைத் தெளிவு படுத்தும் நோக்கத்தில் அமைந்துள்ளது.

தமிழ்-தமிழ் அகரமுதலியில் வினை (வி.) என்னும் இலக்கணக் குறிப்பான் மட்டும் மிகச்சில இடங்களில் ஒப்புருச் சொற்களைப் பிரித்துக் காட்டும் நோக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். வசந்தா தமிழ் அகராதியிலும் 'வினை' என்னும் இலக்கணக் குறிப்பான் மட்டும் இடம்பெற்றுள்ளது.

அனைத்துக் குறிப்பான்களையும் முழுநிலையில் விரிவாகப் பயன்படுத்தியுள்ள அகராதி பெருஞ்சொல்லகராதியாகும். இவ்வகராதியின் முதல் தொகுதியில் குறிப்புவினைமுற்று, பெயர், வினை, பெயரடை, வினையடை, தன்மை ஒருமைப்பெயர், வியங் கோள் ஆகியன இடம்பெற்றுள்ளன. இதன் இரண்டாம் தொகுதி யில் இடைச்சொல், செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை, வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, சுட்டுப்பெயர் என்பனவும் அவற்றோடு சேர்த்து வழங்கப் பெற்றுள்ளன. செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றாவினை ஆகிய இரண்டு இலக்கணக் குறிப்பான்களும் இரண்டாம் தொகுதியில் மட்டும் இடம்பெற்றுள்ளன. மற்ற தொகுதிகளில் இடம்பெறவில்லை. அவற்றுள் சில சான்றுகளை மட்டும் கீழே காணலாம்.

ஆக்கியா பெ. → ஆக்கியம் (மதுரை. அக.)

அங்குமிங்கும் வி.அ. – அவ்விடத்தும் இவ்விடத்தும்

ஆக்குதல் செ.குன்றா.வி.– வளர்த்தல்

பிற்காலத்தில் தோன்றிய முத்தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி போன்றவற்றில் குறிப்பான்களே இடம்பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

துறைக்குறிப்பான்

பல்வேறு துறைகளுக்குரிய சொற்களையும் பொருட்களையும் துறைக்குறிப்பான்கள் காட்டுகின்றன. தொகுக்கப்படும் அகராதி யின் நோக்கத்திற்கும் வகைக்கும் ஏற்பத் துறைக்குறிப்பான்கள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் அகராதியில் தலைச்சொல்லானது சிறப்புச் சொல்லாக இருந்தால் பொருளின் முன்னால் அச்சொல் பயன் படுத்தப்பெறும் துறை கொடுக்கப்படும். தலைச்சொல் பொதுச் சொல்லாக இருந்தால் சிறப்புப் பொருளைத் தருகின்ற இடத்தில் சிறப்புப் பொருளுக்கு முன்னால் துறைக்குறிப்பான்கள் இடம் பெறும். பெரிய நிலையிலான வரலாற்று அகராதிகளிலும், விளக்க அகராதிகளிலும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்போரின் அகராதிகளிலும் துறைக்குறிப்பான்களின் பங்கு இன்றியமையாததா கிறது.

அகப்பொருள், அலங்காரம், இசை நூல், இருக்கு வேதம், இலக்கணம், கணக்கதிகாரம், காந்தருவேதம், கீழ்வாய்க்கணக்கு, சரநூல், சித்தாந்தம், சுத்தசித்தாந்தம், சோதிடம், தர்க்கம், நிருத்தம், பஞ்சாங்கம், பரதம், புறப்பொருள், பௌத்தம், மதநூல், யாப்பு, வருஷாதி நூல், வியாக்கரணம், வேதாந்தம் ஆகியன துறைக் குறிப்பான்களாகத் தமிழ்ச் சொல்லகராதியில் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் சில பதிவுகள் மட்டும் சான்றாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அகநிட்டலோகம் : (பௌத்தம்) பிரமலோகம் இருபதினுள்ளே பதினாறாம் லோகம்.

அட்ட நிக்கிரகங்கள் : (தர்க்கம்) எட்டுத்தோல் வித்தாநங்கள்.

பெருஞ்சொல்லகராதியின் முதல் தொகுதியில் அணியிலக் கணம், அறிவியல், இசை, இதழியல், இலக்கணம், சித்த மருத்துவம், சிற்பம், தத்துவம், தொல்பொருளியல், புராணம், யாப்பிலக்கணம், வரலாறு, வியாக்கியானம் என்பன துறைக்குறிப்பான்களாக அமைந்துள்ளன. நான்காம் தொகுதியில் அரசியல், அளவையியல், உளவியல், உழவியல், கனிமவியல், சட்டவியல், தாவரவியல், நாட்டியம், பௌதீகவியல், மனைவியல், மின்னியல், வணிகவியல், வானவியல், பொறியியல் ஆகியவை புதியனவாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

அகநிலைப்பாசம் பெ. : (நாட்டியம்) சுட்டுவிரல் நுனியும் பெருவிரல் நுனியும் பொருந்தி ஏனைய விரல்கள் நிமிர்ந்து நிற்கும் கை அடையாளம்.

அங்கதன் பெ. (காப்.) : வாலியின் மகன்.

இவ்வாறு பெருஞ்சொல்லகராதியில் துறைக்குறிப்பான்கள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. பிற்கால அகராதிகளில் இக்குறிப்பானைக் காணமுடியவில்லை.

நிலைக்குறிப்பான்

நிலைக்குறிப்பான்கள் சொல், பொருள் ஆகிய இரண்டு பகுதி களிலும் பயன்படுத்தப்படுகின்றன. நிலைக்குறிப்பான்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

நிலைக்குறிப்பான்

காலக்குறிப்பான்	இடக்குறிப்பான்	நடைக்குறிப்பான்
(Temporal Label)	(Regional Label)	(Stylistic Label)

சொல், பொருள் வழங்கப்படும் காலத்தைக் குறிப்பன காலக் குறிப்பான்களாகும். காலக்குறிப்பான் தொல்வழக்கு (தொல்), வீழ் வழக்கு (வீழ்), இக்கால வழக்கு (இக்), புத்தாக்கம் (புத்.), அருகிய வழக்கு (அரு.) என்னும் ஐந்து வகைகளாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. தமிழ்ச் சொல்லகராதியில் இம்மூன்று வகையான நிலைக்குறிப்பான்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வகராதியில் பிற்கால வழக்கு' என்னும் காலக்குறிப்பான் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அபேநம் 1 அபின் (இப்பொருள் பிற்கால வழக்கு)

பெருஞ்சொல்லகராதியில் அருகிய வழக்கு, இக்கால வழக்கு, புதிய வழக்கு, பேச்சு வழக்கு, தொன்ம வழக்கு என்பன போன்ற காலக்குறிப்பான்களும் தரப்பட்டுள்ளன.

அஞ்சலகம் பெ. : தபால் நிலையம் (புதிய.வ.)

அகிற்கட்டை பெ. : அகில் மரத்துண்டு (தொ.வ.)

குறிப்பிட்ட ஒரு சில வட்டாரத்திற்குரிய சொல்லும் பொருளும் இடக்குறிப்பான்கள் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன. தமிழ்ச் சொல்லகராதியில் ஒரு தேச வழக்கு, சிங்கள நாட்டு வழக்கு, சோழ நாட்டு வழக்கு, வடநாட்டார் வழக்கு என்பன இடக்குறிப்பான் களாகச் சுட்டப்பட்டுள்ளன.

அந்தழள் : குறிஞ்சா (இது வடநாட்டார் வழக்கு)

தானியராசன் : கோதுமை (இது தேச வழக்கு)

இடக்குறிப்பான்களாகப் பெருஞ்சொல்லகராதியில் இராமநாதபுரம் வழக்கு, இலங்கை வழக்கு, கொங்கு நாட்டு வழக்கு, கோயம்புத்தூர் வழக்கு, செங்கல்பட்டு வழக்கு, செட்டி நாட்டு வழக்கு, சென்னை வழக்கு, சேலம் வழக்கு, தஞ்சை வழக்கு, தருமபுரி வழக்கு, திருச்சி வழக்கு, திருநெல்வேலி வழக்கு, தென்னார்க்காடு வழக்கு, நாஞ்சில் நாட்டு வழக்கு, நாட்டு வழக்கு, நீலகிரி வழக்கு, புதுச்சேரி வழக்கு, மதுரை வழக்கு, மலாய் வழக்கு, வடஆர்க்காடு வழக்கு என்பன இடம்பெற்றுள்ளன. அவற்றுக் குரிய சில

சான்றுகளைக் கீழே காணலாம்.

அடிக்கடிக்கு வி.அ. : அடிக்கடி 2 (சென்னை வ.)

அச்சுயந்திரசாலை பெ.: நூல் முதலியன அச்சிடுமிடம் (நாட்.வ.)

ஒரு மொழி காலத்தின் வளர்ச்சியாலும் பல்வேறு புறச் சூழல்களாலும் நடைவேறுபாடுகளைப் பெறுகின்றது. சாதி, சமுதாயம் போன்றவற்றால் மொழி சுட்டப்படும்போது நடைவேறுபாடுகள் ஏற்படுகின்றன. மொழி அன்றாட வழக்கில் முக்கியத்துவம் பெறுவதால் இவ்வகை நடைகளும் மாற்றங்களும் மொழியில் குறிப்பிடத் தக்கனவாக மாறுகின்றன. இவ்வகையான மாற்றங்களை நடைக் குறிப்பான்கள் காட்டுகின்றன. பல்வேறு வகையான பொருள் மாற்றங்களைக் குறிக்கவும் இந்நடைக் குறிப்பான்கள் உதவுகின்றன.

தமிழ்ச் சொல்லகராதியில் நடைக்குறிப்பான்களாக ஆடலர், இழிசனர், கம்மியர், கடலர், கிறிஸ்து, தட்டார், திசைச்சொல், நுழையர், நெய்வார், பரதவர், வைத்தியர் போன்ற வழக்குகள் இடம்பெற்றுள்ளன.

நங்குரம் : நங்கூரம் (கடலர் வழக்கு)

நகரை : ஒரு மீன் (பரதவர் வழக்குப் போலும்)

பெருஞ்சொல்லகராதியில் அலுவலகம், கல்வி, கோயில், சமயம், செய்தி, செய்தித்தாள், சோதிடம், மருத்துவம், வட்டாரம் போன்ற வழக்குகள் நடைக்குறிப்பான்களாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன.

அட்டைப் பிரயோகம் பெ. : ...(மருத்துவ வ.)

அசுவினி பெ. : இருபத்தேழு நட்சத்திரங் களுள் முதலாவது (சோதி.வ.)

குறிப்பான்கள் சொற்றொகுதியைச் சார்ந்தவை. இவை அகராதித் தொகுப்பின் முதல் கட்டப் பணியிலேயே தெரிவு செய்யப்படுகின்றன. இவை குறிப்புப் பொருளைக் கொண்டுள்ளன; சிறுசிறு குறுக்கங்களாகவும் உள்ளன. குறிப்பான்கள் தலைச் சொற்களுக்காகவே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன

என்பதை அறியமுடிகிறது. பிற்காலத்தில் தோன்றிய அகராதிகளில் குறிப்பான்கள் இடம்பெறாமல் போய்விட்டன.

குறுக்கு நோக்கீடு

சொற்களிடையே காணப்படும் உறவு, பொருள் வேறுபாடு முதலியன அகராதிகளில் குறுக்கு நோக்கீடு மூலம் காட்டப்படு கின்றன. குறுக்கு நோக்கீடு இரண்டு வகைகளில் காணப்படுகின்றது.

குறுக்கு நோக்கீடு (Cross Reference)

வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு (Explicit Cross Reference)

மறைமுகக் குறுக்கு நோக்கீடு (Implicit Cross Reference)

வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு

வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டில் பொருளை அடுத்துக் 'காண்க', 'மேலும்', 'பார்', 'பார்க்க', 'போல', 'ஒப்புநோக்கு' எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்குறுக்கு நோக்கீடு தலைச்சொல்லின் பொருளை மேலும் விளக்கும் வகையில் அமை யும். ஒருமுறை பொருள் விளக்கம் பெற்ற சொற்கள் ஒருபொருட் பன்மொழியாகப் பொருட்பகுதியில் மீண்டும் இடம்பெறும் பொழுது, வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு பயன்படுத்தப்படு கிறது. சதுரகராதியின் சில பதிவுகளில் வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டைக் காணமுடிகின்றது. எனினும் அதை நெறியாகப் பின்பற்றவில்லை.

அரும்பாலை: ஓரிராகமதையெழு பாலையிற் காண்க.

வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டை முறையாக முதன்முதலில் தமிழ்ச் சொல்லகராதியில் காணமுடிகின்றது. இம்முறைக்குப் 'பார்' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது.

அகப்படல் : அகப்படுதல் பார்.

மேற்கோள் தரும்போதும் இக்குறுக்கு நோக்கீட்டின் பயன்பாட்டைக் காணமுடிகின்றது. தமிழ்ச் சொல்லகராதியில் காண்க, அறிக என்னும் சொற்களும் குறுக்கு நோக்கீட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் 'பார்' என்னும் சொல்லே அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கழகத் தமிழகராதியில் 'காண்க' என்னும் நோக்கீடு ஒருசில பதிவுகளில் மட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்–தமிழ் அகரமுதலியில் 'காண்க' என்னும் சொல் வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சந்திரவாள் : காண்க; சந்திரகாசம்.

சொருணை : காண்க; கரணை.

இக்குறுக்கு நோக்கீட்டிற்கு அம்புக்குறி(→)யும் பயன்படுத்தப் படுவதுண்டு. இம்முறை பெருஞ்சொல்லகராதியில் இடம் பெற்றுள்ளது.

அடைப்பனார் பெ. → அடப்பான்2

அப்பிரட்சிணம் பெ. → அப்பிரதீக்கிணம் (பே.வ.)

பிற்காலத்தில் தோன்றிய முத்தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி போன்ற அகராதிகளில் இக்குறுக்கு நோக்கீடு பயன் படுத்தப்படவில்லை.

மறைமுகக் குறுக்கு நோக்கீடு

ஒருமொழி அகராதிகளில் ஒருபொருட் பன்மொழி, எதிர்ச் சொற்கள் என்பன மறைமுகக் குறுக்கு நோக்கீடாகத் தரப்பெறு கின்றன. இந்த வகையில் எவ்விதமான குறுக்கு நோக்கீட்டுச் சொற்களும் குறியீடுகளும் இடம்பெறுவதில்லை. சதுரகராதியில் மறை முகக்குறுக்கு நோக்கீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் சான்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அகரு : அகில்

அகில் : ஓர்மரம்.

மானிப்பாய் அகராதி, தமிழ்மொழி அகராதி, தமிழ்ப் பேரகராதி போன்றவற்றிலும் மறைமுகக் குறுக்கு நோக்கீடு பயன்படுத்தப் பட்டுள்ளது. பழைய தமிழ் ஒருமொழி அகராதிகளின் பெயர், பொருள் அகராதிகளில் இடம்பெற்றுள்ள சொற்கள் இம் மறைமுகக் குறுக்கு நோக்கீடு மூலம் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

அகங்காழ் : அகக்காழ்

அகக்காழ் :ஆண்மரம்– உள்வயிரம், வச்சிரக்கல். (தமிழ்ப் பேரகராதி) இதனையடுத்து வந்த இராமநாதன் அகராதி, ஜுபிலி தமிழ்ப் பேரகராதி, கழகத் தமிழகராதி, மணிமேகலை அகராதி போன்ற பலவற்றிலும் மறைமுகக் குறுக்கு நோக்கீடு பயன்படுத்தப் பட்டுள்ளது.

விளக்கக் குறிப்பு

அகராதியில் பொருள் விளக்கம் தரும் நிலையில் பொருளின் தெளிவிற்குச் சில குறிப்புகளும் தரப்படுகின்றன. இம்முறைக்கு விளக்கக் குறிப்பு என்று பெயர். இவ்விளக்கக் குறிப்புகள் தலைச் சொல்லிற்குரியன. இவை சொல்லாகவும் தொடராகவும் வாக்கிய மாகவும் வரும். இம்மாதிரியான விளக்கக் குறிப்புகள் பொருட் பகுதியில் இடம்பெறும். பொதுவாகவே விளக்கக் குறிப்புகள் அடைப்புக் குறியில் தரப்படும். இவை அகராதியில் இடச்சிக்கனத் தைத் தருவதில் பெரும்பங்கு ஆற்றுகின்றன. இவை மூன்று வகை களில் பயன்படுத்தப்படுகின்றன.



இலக்கண விளக்கக் குறிப்பு

இலக்கண விளக்கக் குறிப்புகள் தலைச்சொல்லின் தனித் தன்மையைக் காட்டுகின்றன. இவை இலக்கணச் செய்திகளை அளிப்பது மட்டுமின்றித் தலைச்சொல்லின் இலக்கணச் செயல்

பாட்டையும் விளக்கி நிற்கின்றன. மாணவர் தமிழ் அகராதியில் தான் இலக்கண விளக்கக் குறிப்பு முதன்முதலில் இடம் பெற்றுள்ளது.

அப்படி எஜமாட்டி (ஆண்பால்) அப்பன்

பெருஞ்சொல்லகராதியில் மூன்று வகையான விளக்கக் குறிப்புகளும் இடம்பெறுகின்றன. இம்முறையை இப்பகுதியின் இறுதியில் காண்போம்.

பொருண்மை விளக்கக் குறிப்பு

பொருளின் பொதுப் பண்பிலிருந்து சிறப்புத் தன்மைகளை எடுத்துக்காட்டப் பொருண்மை விளக்கக் குறிப்புகள் உதவுகின்றன. சில நேரங்களில் ஒத்த சொற்களும் எதிர்மறைச் சொற்களும் தலைச்சொல்லின் பொருளோடு பொருண்மை விளக்கக் குறிப்புகள் தரப்படுவதுண்டு. விளக்கக் குறிப்புகள் முதன்முதலில் தமிழ்ச் சொல்லகராதியில்தான் இடம்பெற்றுள்ளன.

அக்கடி– கடுங்காற்றாற் கயிறடியுண்டு (மரக்கலம்)
அலைதல்...

இதில் பொருள் விளக்கத்திற்காக மரக்கலம் என்னும் பொருள் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. மாணவர் தமிழ் அகராதியில் பொருள் விளக்கக் குறிப்பும் இடம் பெற்றுள்ளது.

அசினம், அஜினம்– (மிருகங்களின்) தோல்.

கலைக்களஞ்சிய விளக்கக் குறிப்பு

கலைக்களஞ்சியங்களில் காணப்படும் பொருள் கூறுகள் சொல்லின் விளக்கமாக இடம்பெறின் அது கலைக்களஞ்சிய விளக்கக் குறிப்பாகும். மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் இவ்வகையான விளக்கக் குறிப்புகள் பெரிதும் கையாளப்பட்டுள்ளன. இதனையடுத்துப் பெருஞ்சொல்லகராதியில் கலைக்களஞ்சிய விளக்கக் குறிப்பொடு இலக்கண விளக்கக் குறிப்பு, பொருண்மை விளக்கக் குறிப்பு ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. இவ்வகராதி

யில் உள்ள இம்மூன்று வகையான விளக்கக் குறிப்புகளைக் கீழே காணலாம்.

அ[7] இ.சொ. : 1. ஆறாம் வேற்றுமை. பன்மை உருபு... 4. ஒரு (தெரிநிலை குறிப்பு) பெயரெச்ச விகுதி, 5. செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்ச விகுதி

(இலக்கண விளக்கக் குறிப்பு)

அகினவரி பெ. : 1. (பாம்பிற்குப் பகையாகிய) கருடன்

அசை[14] பெ. : ஆடுமாடுகள் (உண்ட தீனியை இரைப்பையிலிருந்து வாய்க்கு மீண்டும் கொண்டு வந்து) மெல்லுகை.

(பொருண்மை விளக்கக் குறிப்பு)

அசையாமணி பெ. : (மக்கள் தம் குறைகளை அரசருக்கு அறிவிக்க நிறுவப்பட்டுங்கூட நீதி வழுவாத நாடாகையால் அசைப் படாத) ஆராய்ச்சி மணி.

அகற்பம்[2] பெ. : (மந்திரமின்றிச் செய்யும்) திருநீறு...

தொடக்ககால அகராதிகளில் விளக்கக் குறிப்புகள் இடம்பெற வில்லை. இடைக்காலத்தில் தோன்றிய அகராதிகளில் அவை தோன்றி வளர்ச்சியடைந்தன. எனினும் இன்றைய முத்தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி போன்றவற்றில் இக்குறிப்புகளைக் காணமுடியவில்லை.

சொல்மூலம்

பொருள் விளக்க உத்திகளுள் சொல்மூலமும் ஒன்று. சொல்லின் மூல வரலாற்றினைக் காண்பதற்கு இவ்வுத்திமுறை பெரிதும் பயன்படுகிறது. சொற்பொருளை இவ்வுத்தியின் வழி நன்கு விளக்க முடிகின்றது. தமிழ் ஒருமொழி அகராதிகளின் வரலாற்றில் சொல்மூலம் முதன்முதலில் தமிழ்ச் சொல்லகராதியில் தான் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியில் சொல்மூலம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

அகப்பூ : இதயக்கமலம் (உ.ம்) பெருவெண்டிங் கண்மாலகப் பூ மலைந்து பெட்ப நகுகின்ற (சிந்தா.கங்க)

(அகம்–மனம், பூ– புட்பம்

இச்சான்றில் அகப்பூ என்ற சொல் அகம்பூ என்று பிரிக்கப் பட்டுச் சொல் மூலம் தரப்பட்டுள்ளது. பிறமொழிச் சொற்களும் இவ்வகராதியின் சொல் மூலங்களாகக் காணப்படுகின்றன.

அகந்தை : 1. அகங்கார தத்துவம் (உ.ம்). . . 2. செருக்கு (உ.ம்)... 3. நான் எனதென்னுந் தன்மை (உ.ம்) (அஹந்தா; அஹம்– நாம், தா– தன்மை)

இதில் அகந்தை என்னும் சொல் அஹந்தா என்னும் வட சொல்லில் இருந்து வந்தது என்ற செய்தியும் இடம் பெற்றுள்ளது.

பெருஞ்சொல்லகராதியில் சொல்மூலம் இடம்பெற்றுள்ளது. இதில் இரண்டு வகைகளில் சொல்லுக்கு மூலம் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வகராதி முன்னகராதிகளிலிருந்து மாறுபட்டுச் சொல்மூலத்திற்குக் குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ளது.

1. தலைச்சொல்லைப் பிரித்துக் காட்டக் கூட்டல் குறியைப் (+) பயன்படுத்தியுள்ளது.

   அக்குருக்கு பெ. – (அக்கு+உருக்கு)...

2. சொல் வரலாற்றை அம்புக்குறியின் மூலம் காட்டுதல்

   அணா[5]பெ. அண்ணன் (அண்ணா > அணா)...

வடமொழிச் சொற்கள் இடம்பெறும் நிலையில் அவற்றின் முன்னொட்டும், சொல்லும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டப் பட்டுள்ளன.

அசாரம்[1] பெ. (அ+சாரம்)...

இவற்றால் தமிழ் ஒருமொழி அகராதிகளில் இரண்டு வகையாகச் சொல்மூலத்தைக் கொடுக்கும் நிலையினை அறியமுடிகிறது. ஒன்று சொல்லைப் பிரித்து அதன் வரலாறும் மூலமும் காட்டுதல். மற்றொன்று பிறமொழிச் சொல் என்று குறிப்பிட்டுக் காட்டுதல்.

நிறுத்தற் குறிகள்

நிறுத்தற் குறிகள் அகராதிப் பொருள் விளக்கத்திற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. நிறுத்தற் குறிகள் மரபுவழியாக வழங்கப்பட்டு வருகின்றன. பொதுவாக இவை தொடரியல் தொடர்பான பல்வேறு சூழல்களில் வழங்கப்பெறினும் அகராதிகளில் இவற்றின் பயன்பாடு வேறுபட்டது. இக்குறிகள் பொருளின் வேறுபாட்டையும் தொடர்ச்சியையும் காட்டப் பயன்படுகின்றன. காற்புள்ளி(,) அரைப்புள்(;), முக்காற்புள்ளி (:), முற்றுப்புள்ளி (அ) முழுப்புள்ளி (.) என்னும் நான்கு நிறுத்தற் குறிகளும் சில அகராதிகளில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இவை தலைச்சொற்களின் பொருளைத் தொகுத்தளிக்கப் பயன்படுகின்றன. பழைய அகராதிகளில் சொற்பொருள் உறவுகள் கவனிக்கப்படவில்லை; ஒப்புருச் சொற்களும் அகரவரிசையுமே கவனத்தில் கொள்ளப்பட்டன. பொருள்கள் நிறுத்தற் குறிகளின் உதவியுடனே வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் அகராதிகளில் நிறுத்தற் குறிகள் இரண்டு முக்கிய செயல்பாடுகளைப் பெற்றுள்ளன.

1. தலைச்சொல்லிற்கும் பொருளுக்கும் இடையே இணைப்பாகச் செயல்படுதல்.

2. தலைச்சொல்லின் பொருளை வரிசைப்படுத்தப் பயன்படுதல்.

இவ்வாறு தலைச்சொல்லிற்கும் பொருளுக்கும் இடையே நிறுத்தற் குறிகளைக் கையாளுவது ஒருமொழி அகராதி மரபில்

ஓர் இன்றியமையாத பண்பாகும்.

நிறுத்தற் குறிகளுள் காற்புள்ளி பொருள்களை வேறுபடுத்திக் காட்டவும் முற்றுப்புள்ளி பொருளின் இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ளன. இவ்விரண்டு குறிகளும் சதுரகராதி, மானிப்பாய் அகராதி முதலான அனைத்து ஒருமொழி அகராதிகளிலும் முழுமை யாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பின்னர் வந்த அகராதிகளில் பொருளுக்கு வரிசை எண் (1, 2, 3) கொடுக்கப்பட்டுள்ளதால் காற் புள்ளியின் தேவை எழவில்லை. மானிப்பாய் அகராதியில் தலைச் சொல்லையும் பொருளையும் வேறுபடுத்திக் காட்டவும் காற்புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது.

அழலிக்கை, பொறாமை (மானிப்பாய் அகராதி)

தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியில் பொருளின் வரிசை எண் கொடுத்திருந்தாலும் காற்புள்ளியிடும் வழக்கத்தைக் காண முடி கின்றது.

சௌதம் : மலிவு, 2. அரண்மனை

நேர்பு : நீளம், 2. எழுச்சி, 3. சந்திப்பு, 4. போக்கு.
(தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி)

தமிழ்–தமிழ் அகரமுதலியில் பொருள் வகைப்பாடு செய்யப் பட்டுள்ளதால் ஒவ்வொரு பொருளின் இறுதியிலும் அரைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது. இப்புள்ளியின் மூலம் பொருளின் வேறு பாட்டை அறிந்து கொள்ளலாம். இவ்வகராதியில் வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டைக் காட்டும்போது முக்காற்புள்ளி பயன் படுத்தப்பட்டுள்ளது.

திக்காரம் : நிந்தை; இகழ்ச்சி; பிடிவாதம்

திசையானை : காண்க; திக்கசம்.

இவற்றுள் முதல் சான்றில் அரைப்புள்ளியும் இரண்டாவது சான்றில் முக்காற்புள்ளியும் இடம்பெற்றுள்ளதைக் காணமுடி கின்றது. பெருஞ்சொல் அகராதியிலும் இக்குறிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவற்றிற்கு முன் தோன்றிய அகராதிகளில் இவ்

விரண்டு குறியீடுகளையும் காண்பது அரியதாகின்றது.

வெற்றித்தமிழ் அகராதி, கௌரா தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி போன்றவற்றிலும் இக்குறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முத்தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி ஆகியவற்றில் தலைச் சொல்லையும் பொருளையும் பிரித்துக் காட்ட முக்காற்புள்ளி பயன் படுத்தப்பட்டுள்ளது.

செண் : கொண்டை (முத்தமிழ் அகராதி)

கைமரம்: வீட்டுக் கூரை மரம். (புதிய தமிழ் அகராதி)

குறியீடுகள்

ஒருமொழி அகராதிகளில் பல குறியீடுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இக்குறியீடுகளாக அடைப்புக்குறி, அம்புக்குறி, உடுக்குறி, கூட்டல் குறி, இடைக்குறியீடு போன்றவற்றைக் கூறலாம். ஒரு மொழி அகராதிகளில் மூன்று வகையான அடைப்புக்குறிகள் பயன் படுத்தப்படுகின்றன.

அடைப்புக்குறி

கோபுர அடைப்புக்குறி	பகர அடைப்புக்குறி	பிறை அடைப்புக்குறி
{}	[]	()

மானிப்பாய் அகராதியில் ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் தலைச்சொற் பகுதியில் இடம்பெறும்போது அவற்றை இணைத்துக் காட்ட கோபுர அடைப்புக்குறி பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனைப் பின்வரும் சான்று விளக்கும்.

சட்ட திட்டம்
சட்ட பட்டம் } ஒழுங்கு, கட்டளைச் சட்டம், பூரணம்
சட்ட வட்டம்

தமிழ்ச் சொல்லகராதியில் சொல்மூலம் காட்டப்படும் இடங்களில் பகர அடைப்புக் குறியைக் காணமுடிகின்றது.

இதனைக் கீழ் வரும் சான்றின் மூலம் அறியலாம்.

அக்கட : அவ்விடம் (உம்) "அக்கட போவெனும்...
[ஒரு தெலுங்குச்-சொல்]

பிறை அடைப்புக்குறியைக் குறிப்பான், விளக்கக் குறிப்பு, உதாரணம், சொல்பிரிப்பு, மாற்று வடிவம் போன்றவற்றை அடையாளம் கண்டுகொள்ளும் வகையில் தமிழ்ச் சொல்லகராதி, மாணவர் தமிழ் அகராதி, தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, பெருஞ் சொல்லகராதி, புதிய தமிழ் அகராதி போன்றவற்றில் காணமுடி கின்றது.

அரி : 1. அக்கிநி (ஆப்.கூஅஅ.) 2. அக்கிநிவேதன் (உம்)...
(தமிழ்ச் சொல்லகராதி)

தொடர்ந்து புதிய சொற்களையும் புதுப்பொருள்களையும் கொடுக்கும் இடத்தில் உடுக்குறியீட்டைப் (*) பயன்படுத்தும் உத்தியை மானிப்பாய் அகராதியிலும், நா. கதிரைவேற்பிள்ளையின் அகராதியிலும் காணமுடிகின்றது.

*அமடு: பொல்லாங்கு

அகழி : அகழ், உடு, ஓடை, கயம், கிடங்கு, கேணி, பரிகம், பரிகை, பாம்புரி* அகப்பா.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதியில் புதுச் சொற்களைக் காட்டும் இடத்தில் உடுக் குறிக்குப் பதிலாகக் கூட்டல் குறி (+) பயன்படுத்தப்பட்டுள்ளது.

அநுநாதம் - எதிரொலி+ஒலி

அடுத்துத் தலைச்சொல்லையும் பொருளையும் பிரித்துக் காட்டவும், வினைச்சொற்களில் வினையடியுடன் –தல், –த்தல் விகுதிகளைக் கொடுக்கும் போதும் இடைக்குறியீடு (–) பயன் படுத்தப்பட்டுள்ளது. இம்முறை பல அகராதிகளில் இடம் பெற்றுள்ளது.

மேற்கோள் குறியீடானது தமிழ்ச் சொல்லகராதியில் இடம் பெற்றுள்ளது. இதற்குச் சான்றாகப் பின்வருவதைக் கொள்ளலாம்.

அரி 1. அக்கிநி...

2. ... (உம்) "அரியுமற் றெனது கூறுநிலனென்

றறைந்திட் டானால்" (இராமா. திருவவ. உஎ)...

தமிழ் ஒருமொழி அகராதிகளில் பெருஞ்சொல்லகராதிதான் அதிகமான குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ளது.

1 வலமுறை அம்புக்குறி (→) 'காண்க' எனும் பொருளுடையது.

ஆக்கியா பெ. → ஆக்கியம் (மதுரை. அக.)

2. இடமுறை அம்புக்குறி(←)'இதிலிருந்து' எனும் பொருளுடையது.

அஃகடி பெ. துன்பம் (ராட்.அக. அக்கடி ← அஃகடி)

3. கூட்டல் (+) முன்னொட்டு அல்லது நிலைமொழியுடன் தொடர்ந்து வரும் மொழியைக் குறிப்பது.

அஃகேனம்[2]பெ. (அஃகு+ஏனம்) முள்ளில்லாப் பன்றி...

4. இடைவைப்புக்குறி (–) சொல்லுக்குப் பொருள் சுட்டல், வினை முதனிலையைப் பிரித்துக் காட்டல், மேற்கோள் ஆசிரியரைக் காட்டல் என்னும் மூன்று சூழல்களில் பயன்பட்டுள்ளது.

5. விடுபாட்டுக் குறி (. . .) மேற்கோள்கள் இடையே விடுபட்ட பகுதியைக் குறிப்பது.

6. பிறையடைப்புக் குறி () விளக்கக் குறிப்புகள், எழுத்து மாற்றங்கள், குறுக்கங்கள், மாற்று வடிவங்கள் போன்றவற்றைச் சுட்டுவது.

எதிர்த்து நில் (ல்) - த(ற) 10வி...

7. மேல்சாய்வுக் கோடு (/) அல்லது என்னும் பொருளுடையது.

அற்றுப்போ2 தல் 4வி/5வி. முழுதுங்கைவருதல்.
(செ.ப. அக.)

இந்த அகராதியில் மேற்கோள் குறி (" "), காற்புள்ளி (,), அரைப் புள்ளி (;), முக்காற்புள்ளி (:) போன்ற குறிகளும் சுருக்கக் குறியீட்டு விளக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

புதிய தமிழ் அகராதியில் பகர அடைப்புக் குறியும் பிறை அடைப்புக் குறியும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இதற்குமுன் தோன்றிய இன்றைய அகராதிகளில் இம்முறை பின்பற்றப்பட வில்லை.

கொத்து: குத்திக் கடி; மண்ணைக் கிண்டு;வெட்டு; செதுக்கு (கொத்துதல்).

சேர்த்துவைத்தல் (சொத்து); திரட்டி வைத்தல்; சமாதானப் படுத்துதல். இவ்வகராதியின் ஒரே பதிவில் இவ்விரு குறியீடுகளும் இடம்பெற்றுள்ளன.

சேந்து: (கயிறு) இழு. (சேந்துதல்)

இவ்வாறு நிறுத்தற் குறிகளும் குறியீடுகளும் ஒருமொழி அகராதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளமை அறியமுடிகின்றது.

விளக்கப் படங்கள்

அகராதிகளில் சொற்பொருளைத் தெளிவாக விளக்குவதற்குக் கையாளப்படும் உத்திமுறைகளில் விளக்கப்படமும் ஒன்றாகும். இவ்வுத்தியைப் பயன்படுத்தி அரிய, வழக்கிழந்த பொருட்கள், விலங்கு, பறவை, தாவரம் போன்ற சொற்களைத் தெளிவாகக் காட்டமுடியும். இவ்வகையான உத்தியைப் பழைய ஒருமொழி அகராதிகளில் காணமுடியவில்லை. தமிழ் அகராதிகளின் பொருள் விளக்கத்தில் படத்தின் இன்றியமையாமையினை உணர்ந்த முதல் அகராதி இராமநாதனின் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதியாகும். இவ்வகராதியில் பல அரிய உலகப் பொருட் களுக்குப் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அகடுரி : பாம்பு

அமிர்தாகரணன் : கருடன்

போன்ற சான்றுகளில் காணப்படும் சொற்களைக் கொண்டு வரை படத்தினைக் காணலாம்.

இவ்வகராதிக்குப் பின் நெடுங்காலத்திற்குப் பிறகு வந்த முத்தமிழ் அகராதியில் வரைபடங்கள் இடம் பெற்றுள்ளன. புதிய தமிழ் அகராதியிலும் இவ்விளக்கப் படங்களைக் காணமுடி கின்றது. தொடக்கத்தில் அரிய பொருட்களை அறிய வரைபடம் பயன் படுத்தப்பட்டது. ஆனால் இவ்விரு அகராதிகளில் அறிந்த பொருட்களை அறியவே விளக்கப்படங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

கண்விழி : கண்மணி (முத்தமிழ் அகராதி)

வீணை : யாழ் (புதிய தமிழ் அகராதி)

முத்தமிழ் அகராதியில் பொருட்பகுதியின் ஓரத்திலேயே வரைபடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் புதிய தமிழ் அகராதி யில் தலைச்சொல்லிற்கும் மேலே வரைபடம் கொடுக்கப் பட்டுள்ளது. இது வரைபடத்தின் கீழ் எதுக்குரிய வரைபடம் என்பதனைக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் புதிய தமிழ் அகராதியின் எந்தச் சொல்லுக்குரிய வரை படம் என்பதில் ஐயம் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

தொகுப்புரை

ஒருமொழி அகராதிகளின் சொற்பொருள் வளர்ச்சியானது இரண்டு பிரிவுகளின்கீழ் ஆராயப்பட்டுள்ளது. தலைச்சொல் பகுதியி லுள்ள பதிவு அமைப்புகளின் விளக்கத்தையும் வளர்ச்சி நிலை யினையும் இங்குக் கண்டோம். பொருட்பகுதியில் கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான உத்திமுறைகள் காலத்திற்கேற்ப மாற்றம் அடைந்து வளர்ந்து வந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. இன்று வெளிவந்துள்ள புதிய தமிழ் அகராதி (2009) வரைக்கு முள்ள ஒருமொழி அகராதிகளின் சொற்பொருள் வளர்ச்சியினை இதன் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது.

முடிவுரை

உலக மொழிகளில் அகராதிகளின் தோற்றம் காலத்தால் பிந்தியதாக இருக்கிறது. எனினும் சொல்லுக்குப் பொருள் வழங்கும் முறையானது பண்டைக் காலந்தொட்டே இருந்து வந்துள்ளது.

வடமொழியில் சொற்பொருள் கூறும் முறை வேதத்தின் ஒரு பகுதியாகவே வளர்ந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் கடின சொற்களுக்குப் பொருள் கூறும் முறையே காணப்பட்டது. காலப்போக்கில் அம்முறை மாறி இன்றைய நிலைக்கு வளர்ச்சியடைந்துவிட்டது.

திராவிட மொழிகளில் அகராதிகளின் தோற்றத்திற்கு ஐரோப்பியர்களே அடிப்படையாக அமைந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

திராவிட மொழிகளில் குறிப்பாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் மரபிலக்கணத்தின் ஒரு கூறாகவே அகராதிகள் தோற்றம் பெற்றுள்ளன. மரபிலக்கணங்களை அடுத்துச் சொற்பொருள் கூறும் நூல்களாக நிகண்டுகளும் கோசங்களும் தொகுக்கப்பெற்றன. நிகண்டுகள் நூற்பா வடிவில் பொருள் கூறுகின்றன என்பதை அறியமுடிகிறது.

தொல்காப்பியத்தின் இடையியல், உரியியல் ஆகியவற்றுள் அகராதிக்கான கூறுகள் அதிகம் உள்ளன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதனால்தான் அவ்விரண்டு இயல்களிலு முள்ள செய்திகளைக் கூறாமல் ஏனைய இயல்களில் அகராதிக் கூறுடைய நூற்பாக்களும் அவற்றோடு பொருந்திப் போகும் அகராதியின் பொருட்சான்றுகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.

வேற்றுமையியல், எச்சவியல், புறத்திணையியல், செய்யுளியல், மரபியல் போன்றவற்றில் அகராதிக் கூறுடைய நூற்பாக்கள் மிகுதி

யாகக் காணப்படுகின்றன. செய்யுளியலில் மட்டும் 50க்கும் மேற்பட்ட நூற்பாக்கள் சொற்பொருள் கூறும் முறையில் அமைந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது.

தொல்காப்பியத்திலே சொற்பொருள் குறித்த செய்திகளில் குறிப்பாக அகரவரிசை முறை, பொருள் வகை, பொருள் கூறும் முறை, சொல்வகை, அகராதி வடிவமைப்பு ஆகியன இடம் பெற்றுள்ளன என்பதை மறுக்க முடியாது.

பல்வேறு பொருட்புலங்களைக் கொண்ட நிகண்டுகள் முப் பெரும் பிரிவுகளாகக் காணப்படினும் ஒவ்வொரு பிரிவும் பிற் காலத்தில் தனித்தனி அகராதியாக உருவெடுத்துள்ளது.

நிகண்டுகள் ஆரம்பத்தில் மனனம் செய்வதற்குக் கடினமாக இருந்தன. பிற்காலத்தில் சந்தங்களாலும் எதுகை, மோனை போன்றவற்றைப் பயன்படுத்தியும் மனனம் செய்வதற்கு எளிமை யான முறையில் நிகண்டுகள் தோற்றம் பெற்றுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

அமைப்பு–1 வகை அகராதிகள்தான் ஆரம்பத்தில் தோற்றம் பெற்றன. 1904இல் பிரிவுகள் இல்லாத அமைப்பு–2 வகை அகராதி தோன்றியது. இன்று வெளிவரும் அகராதிகள் பலவும் அமைப்பு–1லிருந்து மாறி அமைப்பு–2 அகராதிகளாக வளர்ச்சியடைந் துள்ளன.

அமைப்பு–1 அகராதிகளில் ஒரு சொல்லின் பொருளை அறிய நான்கு இடங்களிலும் பார்க்க வேண்டும். இந்தப் பழைய நிலை மாறி ஒரு சொல்லின் எல்லாப் பொருளையும் ஒரே இடத்தில் காணும் நிலை பிற்காலத்தில்தான் உருவாகியுள்ளது.

முற்கால மரபு அகராதிகளில் சொல்லுக்குப் பொருள் என்ற நிலை மட்டும் காணப்பட்டது. இடைக்கால அகராதிகளில் பல்வேறு பொருள் விளக்க உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பகால அகராதிகளில் பெயர்சொல், தொழிற்பெயர் ஆகியவையே தலைச்சொல்லாக இடம் பெற்றன. காலப்போக்கில் வினையடியே தலைச்சொல்லாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதனோடு வினை வகைப்பாட்டு எண் தரும் முறையும் பின்பற்றப் பட்டுள்ளது. இன்றுள்ள புதிய அகராதிகளில் வினை வகைப் பாட்டு எண் காணப்படுவதில்லை.

ஒப்புருச் சொல்லைத் தனித்தனிப் பதிவில் ஆரம்பகாலத்தில் தராமல், பிற்கால அகராதிகள்தான் தனித்தனிப் பதிவில் அமைத் துள்ளன. அதன்பின் ஒப்புருச் சொற்கள் எண்ணிட்டுக் காட்டப் பட்டுள்ளன.

தலைச்சொல் இணைப்புப் பிற்கால அகராதிகளில்தான் கோபுர அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண முடி கிறது.

இலக்கணப் பொருளுக்குக் குறியீடு தரும் முறையிலிருந்து மாறி இலக்கணக் குறிப்பான்கள் மூலம் பின்வந்த அகராதிகள் சுட்டிக் காட்டின.

புதுச்சொற்களையோ பொருளையோ சேர்க்கும்போது நட்சத்திரக்குறி கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறை இன்றைய அகராதிகளில் காணப்படவில்லை.

பொருளை வரிசைப்படுத்திக் கூறும் முறை பண்டைக்கால அகராதிகளில் காணப்பட்டது. பின்னர் வந்த அகராதிகள் பொருளை அகரவரிசைப்படுத்தாமல் பொருள் விளக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. பொருள் வரிசை எண் தரும் முறையும் ஏற்பட்டுள்ளது.

சொல்லுக்குத் தருக்கவியல் விளக்கமும் கலைக்களஞ்சிய விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டுக்களை முதன்முதலில் தமிழ் ஒருமொழி அகராதிகளில் வழங்கிய பெருமை தமிழ்ச் சொல்லகராதியைச் சாரும். பிற்காலத்தில் தோன்றிய பெருஞ்சொல்லகராதியில் மூன்று வகையான எடுத்துக்காட்டுகளும் இடம்பெற்றுள்ளன.

குறிப்பான்களின் வகைகளும் அவை அகராதிகளில் இடம் பெற்ற விதமும் விளக்கப்பட்டுள்ளன.

விளக்கக் குறிப்பின் வகைகளுள் முதன்முதலில் பொருண்மை விளக்கக் குறிப்பே அகராதிகளில் பயன்படுத்தப்பட்டது. அதன் பின் தான் இலக்கண விளக்கக் குறிப்பு, கலைக்களஞ்சிய விளக்கக் குறிப்பும் அகராதிகளில் இடம்பெற்றுள்ளன.

பெரும்பாலான ஒருமொழி அகராதிகளில் மறைமுகக் குறுக்கு நோக்கீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டிற்குக் குறியீட்டைப் பயன்படுத்திய அகராதியாகப் பெருஞ்சொல்லகராதி விளங்குகின்றது.

காற்புள்ளியும், முழுப்புள்ளியுமே ஆரம்பகால அகராதிகளில் இருந்துள்ளன. பின்னர் வந்த அகராதிகளில்தான் அனைத்து நிறுத்தற் குறிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறியீடுகளை அதிகமாகப் பயன்படுத்திய அகராதியாகப் பெருஞ்சொல்லகராதி விளங்குவதைச் சான்றுடன் எடுத்தாளப் பட்டுள்ளது.

வரைபடங்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதி யில் அரிய பொருட்களை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் முத்தமிழ் அகராதி, புதிய தமிழ் அகராதி ஆகியன தெரிந்த பொருள்களை விளக்கவே வரைபடங்களைப் பயன்படுத்தியுள்ளன. எனினும் நீண்டகால இடைவெளிக்குப் பிறகு விளக்கப்படங் களைக் கொடுத்துள்ள அகராதிகளாக இவை விளங்குகின்றன.

பெருஞ்சொல்லகராதியில் அனைத்து உத்திமுறைகளும் இருக்கின்றன. சொல்மூலத்தின் இரண்டு வகைகளும் இவ்வகராதி யில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருமொழி அகராதி மரபு ஐரோப்பியர் வருகையினால் தொகுக்கப்பட்ட இருமொழி அகராதிகளுக்குப் பிறகும் தொடர்ந்து வந்துள்ளமை தமிழ் ஒருமொழி அகராதியின் வலுவான மரபினை உணர்த்துவதாக உள்ளது.

இன்றைய ஒருமொழி அகராதிகள் பல்வேறு அகராதியியல் கூறுகளையும், பொருள்விளக்க உத்திமுறைகளையும் பழைய

அகராதிகளைவிட அதிகமாகக் கையாளும் தன்மையும் பெற்று விளங்குகின்றன.

தமிழ் ஒருமொழி அகராதிகளின் தோற்றமானது தொல்காப்பியத்தில் பொருள்கூறும் வகையில் தொடங்கியது. தொல்காப்பியத்தைப் பின்பற்றிச் சொல்லுக்குப் பொருள் கூறுவதையே நோக்கமாகக் கொண்டு நூற்பா வடிவில் நிகண்டுகள் தோன்றின. இவற்றின் வழியாகச் சொற்களை அகரவரிசையில் அமைத்து நான்கு பிரிவுகளில் பொருள்கூறும் முறையை 1732இல் சதுரகராதியில் வீரமாமுனிவர் மேற்கொண்டார். அதிலிருந்து வளர்ச்சியடைந்து அமைப்பும் மாற்றம் பெற்று இன்றைய முழு நிலையிலான அகராதி தோன்றுவதற்கு சி.டபிள்யூ. கதிரைவேற்பிள்ளையின் அகராதி அடித்தளமாக அமைந்தது. இன்றைய அகராதியியலின் வளர்ச்சிக்கு இவையெல்லாம் அடிப்படையாக அமைகின்றன என்பதில் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்

முதன்மை நூல்கள்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதி	1909	பி. இராமநாதன் த.கோபால அன்ட் கோ சென்னை.
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரகராதி (இரண்டு தொகுதிகள்)	1991	பி. இராமநாதன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சவுத் இன்டியன் ஸ்டடீஸ், சென்னை.
இலக்கியச் சொல்லகராதி	1985	அ.குமாரசாமிப் பிள்ளை பயனீர் புக் சர்வீஸ் சென்னை.
இலக்கிய வகை அகராதி	1988	இரா. இளங்குமரனார் மணிவாசகர் நூலகம் சென்னை.
இளைஞர் தமிழ்க் கையகராதி	1928	மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை இந்தியன் பப்ளிக் ஹவுஸ் லிட். சென்னை.
கழகத் தமிழ் அகராதி	1969	கழகப் புலவர்கள் கழக வெளியீடு சென்னை.
கோனார் தமிழ் அகராதி	1955	ஐயம்பெருமாள் கோனார் பழனியப்பா பிரதர்ஸ் சென்னை.

கௌரா தமிழ் அகராதி	2006	எஸ். கௌமாரீஸ்வரி சாரதா பதிப்பகம் சென்னை.
சதுரகராதி	1824	வீரமாமுனிவர் சென்னைச் சங்கம் சென்னை.
சதுரகராதி	1979	வீரமாமுனிவர் வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம் பாளையங்கோட்டை.
,,	2002	வீரமாமுனிவர் உலகத் தமிழ்க் கல்வி இயக்கம் சென்னை.
,,	2005	சூ. இன்னாசி (பதிப்பாசிரியர்) சந்தியா பதிப்பகம் சென்னை.
தமிழ் இலக்கியச் சொல் அகரமுதலி	1999	வி.பொ. பழனிவேலனார் முருகு வெளியீட்டகம் நாகை.
தமிழ்ச் சொல்லகராதி (மூன்று தொகுதிகள்)	1998	சி.டபிள்யூ. கதிரைவேற்பிள்ளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.
தமிழ்–தமிழ் அகரமுதலி	1985	மு. சண்முகம்பிள்ளை தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் சென்னை.
தமிழ்ப் பேரகராதி	1899	நா. கதிரைவேற்பிள்ளை வித்யாரத் நாகரம் அச்சுக்கூடம், சென்னை.
தமிழ் மொழியகராதி	1981	நா. கதிரைவேற்பிள்ளை ஏசியன் எஜுகேஷனல் சர்வீசஸ் சென்னை.

தமிழ் மொழி அகராதி	2003	நா. கதிரைவேற்பிள்ளை சாரதா பதிப்பகம் சென்னை.
தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி	1925	ச. பவானந்தம் பிள்ளை திருமகள் நிலையம் சென்னை.
திருமகள் அகராதி	2001	வ.த. இராமசுப்பிரமணியம் திருமகள் நிலையம் சென்னை.
பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி	2005	ச. பவானந்தம் பிள்ளை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.
புதிய தமிழ் அகராதி	2009	ஆசிரியர் குழு உமா பதிப்பகம் சென்னை.
பெருஞ்சொல்லகராதி (தொகுதி 1)	1981	தா.வே. வீராசாமி (முதன்மைப் பதிப்பாசிரியர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
பெருஞ்சொல்லகராதி (தொகுதி 2)	1989	பழனி. அரங்கசாமி (முதன்மைப் பதிப்பாசிரியர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
பெருஞ்சொல்லகராதி (தொகுதி 3)	1992	முத்து. சண்முகம் பிள்ளை (முதன்மைப் பதிப்பாசிரியர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
பெருஞ்சொல்லகராதி (தொகுதி 4)	2002	பெ. மாதையன் (முதன்மைப் பதிப்பாசிரியர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

மணிமேகலை தமிழ்–தமிழ் அகராதி	1985	லேனா தமிழ்வாணன் (பதிப்பாசிரியர்) மணிமேகலைப் பிரசுரம் சென்னை.
மதுரைத் தமிழ்ப் பேரகராதி (2 தொகுதிகள்)	2004	சந்தியா நடராஜன் சந்தியா பதிப்பகம் சென்னை.
மாணவர் தமிழ் அகராதி	1921	எஸ். அனவரதநாயகம் பிள்ளை சி. குமாரசாமி நாயுடு அன்ட் சன்ஸ் சென்னை.
மானிப்பாய் அகராதி	1842	சந்திரசேகரப் பண்டிதர் அமெரிக்கன் மிஷன் பிரஸ் கொழும்பு.
முத்தமிழ் அகராதி	2006	கோ. பெரியண்ணன் வனிதா பதிப்பகம் சென்னை.
மெய்யப்பன் தமிழ் அகராதி	2006	ச.வே. சுப்பிரமணியன் மணிவாசகர் பதிப்பகம் சென்னை.
யாழ்ப்பாண அகராதி	2005	சந்திரசேக்ரப் பண்டிதர் சரவணமுத்துப் பிள்ளை தமிழ்மண் பதிப்பகம் சென்னை.
லிப்கோ தமிழ் அகராதி	1953	தி லிட்டில் பிளவர் கம்பெனி சென்னை.
வசந்தா தமிழ் அகராதி	2000	அரிமதி தென்னகன் வசந்தா பதிப்பகம் சென்னை.
வர்த்தமானன் தமிழ் அகராதி	1953	வர்த்தமானன் பதிப்பகம் சென்னை.

வெள்ளிவிழா தமிழ் பேரகராதி 2005 எஸ். சங்கரலிங்க முதலியார்
தமிழ்மண் பதிப்பகம்
சென்னை.

வெற்றித் தமிழ் அகராதி 1993 ச. மெய்யப்பன் (பதிப்பாசிரியர்)
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை.

ஜுபிலி தமிழ்ப் பேரகராதி 1935 எஸ். சங்கரலிங்க முதலியார்
பி. அரங்கசாமி நாயகர்
வெளியீடு
சென்னை.

துணை நூல்கள்

இராமராசன், எஸ்.கே. 1989 அகராதியின் வளர்ச்சி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இலட்சுமணசாமி, கோ. 1989 பேரகராதியும் திட்டமிடுதலும்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இளம்பூரணர் (உரையாசிரியர்) 2007 தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
சாரதா பதிப்பகம்
சென்னை.

" 2005 தொல்காப்பியம் சொல்லதிகாரம்
சாரதா பதிப்பகம்
சென்னை.

" 2006 தொல்காப்பியம் பொருளதிகாரம்
சாரதா பதிப்பகம்
சென்னை.

இன்னாசி, சூ. 1989 சதுரகராதியின் சிறப்புக் கூறுகள்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சண்முகம் பிள்ளை, மு.	1959	நிகண்டு கலைக்களஞ்சியம், தொகுதி. 6 தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்னை.
சண்முகம் பிள்ளை, மு.	1984	சதுரகராதி முதல் தமிழ்ச்சங்க அகராதி வரை அகராதிக்கலைக் கருத்தரங்கு தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
சண்முகம்பிள்ளை, மு.	1990	நிகண்டுகளின் தோற்றமும் வளர்ச்சியும் திவாகரம் முதல் தொகுதி சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை.
சித்திரபுத்திரன், எச்.	1989	அகராதிகளில் குறிப்பான்களும் விளக்கக் குறிப்புகளும் அகராதிக்கலைக் கருத்தரங்கு தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
,,	1989	அறிவியல் சிறப்பகராதிகள் வளர்தமிழில் அறிவியல் அனைத்திந்திய தமிழ் அறிவியல் கழகம் தஞ்சாவூர்.
,,	1991	தமிழ் அகராதிக்கலை இந்திய தமிழாசிரியர் மன்றம் புது தில்லை.
சுந்தரசண்முகனார்	1965	தமிழ் அகராதிக்கலை பைந்தமிழ்ப் பதிப்பகம் புதுவை.

சுப்பிரமணியன், பா.ரா. 1984 ஒருசொல் பல்பொருள் வளர்ச்சியை அகராதியில் காட்டும் முறை
அகராதிக்கலைக் கருத்தரங்கு
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சுப்பிரமணியன், பா.ரா. 1989 வரலாற்று அகராதியும் இக்கால அகராதியும்
அகராதிக்கலைக் கருத்தரங்கு
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

திருநாவுக்கரசு, இரா. 2008 தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

நச்சினார்கினியர் (உரை.ஆ.) 2006 இறையனார் அகப்பொருள்
வசந்தா பதிப்பகம்
சென்னை.

மதிவாணன், இரா. 1985 சொற்பிறப்பும் அகராதிக் கலையும்
அகராதிக்கலைக் கருத்தரங்கு
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மாதையன், பெ. 1987 அகராதியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

" 2005 தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை
(உருவ உள்ளடக்க ஆய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மீனாட்சிசுந்தரம், கா. 1977 அகராதிக்கு அப்பால்
மங்கை நூலகம்
சென்னை.

வரதராசன், மு. 1995 மொழி வரலாறு
கழக வெளியீடு
சென்னை.

வீராசாமி, தா.வே. 1986 வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 1
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

,, 1989 அகராதிக்கலை
தமிழ்ப் புத்தகாலயம்
சென்னை.

வையாபுரிப்பிள்ளை, எஸ். 1989 தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி 2
வையாபுரிப்பிள்ளை
நினைவு மன்றம்
சென்னை.

ஜெயதேவன், வ. 1977 தமிழ் அகராதியியல்
அன்பு நூலகம்
சென்னை.

,, 1985 தமிழ் அகராதியியல்
வளர்ச்சி வரலாறு
ஐந்திணைப் பதிப்பகம்
சென்னை.

நிகண்டுகள்

அகராதி நிகண்டு 1921 சிதம்பர இரேவணசித்தர்
தமிழ்ச் சங்கம்
மதுரை.

அரும்பொருள் விளக்க நிகண்டு 1931 அருமருந்தைய தேசிகர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை.

ஆசிரிய நிகண்டு	1975	ஆண்டிப்புலவர் சரசுவதி மகால் நூலக வெளியீடு தஞ்சாவூர்.
உரிச்சொல் நிகண்டு	1914	காங்கேயர் மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை சென்னை.
கயாதர நிகண்டு	1939	கயாதரர் சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை.
சூடாமணி நிகண்டு	1957	மண்டலபுருடர் கலாநிதி அச்சுக்கூடம் சென்னை.
,,	2005	மண்டலபுருடர் வசந்தா பதிப்பகம் சென்னை.
சேந்தன் திவாகரம் (தொகுதி.1,2)	1993	திவாகரர் சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை.
தமிழுரிச்சொல் பனுவல்	1984	இராமசுப்பிரமணிய நாவலர் செந்தமிழ் நிலையம் நாகர்கோவில்.
நாநார்த்த தீபிகை	1936	முத்துச்சாமி பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை.
நாமதீப நிகண்டு	1985	சிவசுப்பிரமணியக் கவிராயர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
பிங்கல நிகண்டு	1917	பிங்கலர் ரிப்பன் அச்சியந்திர சாலை சென்னை.

பிங்கல நிகண்டு	2005	பிங்கல முனிவர் வசந்தா பதிப்பகம் சென்னை.
பொதிகை நிகண்டு	1934	சாமிநாதக் கவிராயர் பி.என்.பிரஸ் சென்னை.
பொருட்டொகை நிகண்டு	1920	சுப்பிரமணிய பாரதி தமிழ்ச் சங்கம் மதுரை.
வடமலை நிகண்டு	1983	ஈசுரபாரதி உ.வே.சா. நூலகம் சென்னை.

இருமொழி அகராதிகள்

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி	1992	பா.ரா. சுப்பிரமணியன் க்ரியா பதிப்பகம் சென்னை.
கழகத் தமிழ்-ஆங்கில அகராதி	1975	இரா. பாலகிருட்டிண முதலியார் கழக வெளியீடு சென்னை.
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி	1985	ஞா.தேவநேயப் பாவாணர் தமிழ் இயக்க வெளியீடு சென்னை.
நர்மதாவின் தமிழ் அகராதி	2000	நர்மதா பதிப்பகம் சென்னை.
முனைவர் பட்ட ஆய்வேடுகள் தமிழ் அகராதிகளில் சொற்பொருள் வளர்ச்சி	1995	இரா. திருநாவுக்கரசு பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி.

தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும்	2005	கு.ர. சரளா தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

இதழ்

அரிமா நோக்கு (காலாண்டிதழ்)	2009	ஈரோடு தமிழன்பன் (ஆசிரியர்) (ஏப்பிரல்) அரிமா நோக்கு சென்னை.

ஆங்கில நூல்கள்

Agestiyalingom, S. Kumaraswamy Raja	1980	Dictionary Making in Tamil Region *Lexicography In India* Central Institute of Indian Languages Mysore.
Annamalai, E.	1985	*Nature of Lexicography* Seminar on Lexicography Tamil University Thanjavur .
Athithan	1986	Problems in Lexicography Ayvukovai 18, Part - 2 All India University Teachers Association Annamalai Nagar.
Chithiraputhiran, H.	1986	Polysemy and Homonyms in Tamil Seminar on Dravidian Linguistics Tamil University Thanjavur.
,,	1989	Homonyms in Tamil *Ayvukovai* 18, Part - 2 All India University Teachers Association Annamalai Nagar.
Chithiraputhiran, H.	1992	*Meaning of Meaning* Seminar on Theory and Meaning Tamil University Thanjavur.
Hartmann, R.R.K. (Ed.)	1983	Lexicography: Principles and Practice Academic Press, Inc. London.

James, Gregory. 1991 Tamil Lexicography
Max Niemeyer Verlag
Tubingen.

Jayadevan, V. 1974 The Development of
Alphabetization in Tamil Dictionaries
Ayvukovai 18, Part - 2
All India University Teachers
Association
Annamalai Nagar.

" 1980 A Brief Survey of Text
Directionaries in Tamil
Annals of Oriental Research
University of Madras
Madras.

" 1981 Problems in Tamil Lexicography
Tamilayvu, Vol. 12.
University of Madas
Madras.

Katre, S.M. 1965 *Lexicography*
Annamalai University
Annamalai Nagar.

Ladilav Zgusta 1971 *Manual of Lexicography*
Mouton, The Hague
Paris.

Mathaiyan, P. 1991 Conjugational Indication in Tamil
Dictionaries
National Seminar on
Lexicography
Madurai Kamaraj University
Madurai.

Misra, B.G. 1980 *Lexicography in India*
Central Institute of Indian
Languages
Mysore.

Palmer, F.R. 1981 Semantics
Cambridge University Press
Cambridge.

Ram Adhar Sing 1982 An Introduction to Lexicography
Central Institute of Indian
Languages
Mysore.

Srinivasacharyulu, B. 1980 Dictionary Making in Telugu
Lexicography in India
Central Institute of Indian
Languages
Mysore.

Stephan Ullmann 1983 Semantics: An Introduction to the
Science of Meaning
Basil Blackwell
Oxford.

Suranadu Kunjan Pillai Vol.I 1965 'Introduction' Malayalam Lexicon,
University of Kerala
Trivandrum.

Upadhyaya, U.P. 1989 'Introduction' Tulu Lexicon, Vol.I
Rastrakavi Govinda Pai Research
Centre
M.G.M. College, Udupi,
Karnataka.

Vaiyapuraipillai, S. 1924 History of Tamil Lexicography
Tamil Lexicon, Vol.I
University of Madras
Madras.

--- 1982 Encyclopaedia Britannica
Britannica Inc.
New York.